ஆழ்வார் அமுது

★

தொகுப்பும் உரையும்:

தமிழ்க்கடல், இராய. சொ.

★

வெளியீடு:

சா. நா. அ. சொ. அ.

காரைக்குடி.

ஆனந்த - ஆனி - கஎ

1-7-1974

4-2

உ

சிவமயம்

ஆழ்வார் அமுது

விசாலாட்சி – இராமனுதன்

திருமண அன்பளிப்பு

ஆனந்த - ஆனி - கஎ

1 -7—1974

தொகுப்பும் உரையும்:

தமிழ்க்கடல், இராய. சொ.

வெளியீடு:

சா. நா. அ. சொ. அ.

காரைக்குடி.

உ
சிவமயம்

வா ழ் த் து

"ஆடகப் பொருப்பினால் கடலைக் கடைந்து அமுது அளித்த கருணையங் கட"லாகிய நாராயணப் பெருமான் பள்ளிகொண்டிருக்கின்ற திருப்பாற்கடலை, அப்பெருமானோடு ஒன்றி, ஆழ்ந்த ஆழ்வார்கள் பன்னிருவர் கடைந்து அருளிய அமுதத்தை அன்பர் சா. நா. அ. சொ.அண்ணாமலை,தம்மகள் விசாலாட்சியின் திருமண வைபவத்தில் இன்று வழங்கும் சிறந்த அறுசுவை உணவுடன், வழங்கி மகிழ்கின்றார்.

அன்பர் அண்ணாமலை முன்னர், தம் மக்கள் விசுவநாதன், சொக்கலிங்கன், இராமசாமி ஆகியவர்கள் திருமணங்களில் "அண்ணாமலை மாலை", "பூசைப் பாமாலை", "மலர் வணக்கத் தமிழ் மாலை" ஆகிய மாலைகளை நல்கியும், தம் மகள் மீனாட்சி திருமணத்தில் "மீனாட்சி திருமணம்" நூலை ஈந்தும் பேறு பெற்றார்.

திருமணங்கள் தோறும் கடவுளோடு தொடர்புடைய இவ் அரிய படைப்புக்களை நல்கி, அன்பர் அண்ணாமலை அடையும் பயனைப் பாராட்டுகின்றேன்.

அன்பர் அண்ணாமலை, என்னிடம் தமிழ் பயின்ற மாணாக்கர்; ஆசிரியரைப் பழைய இலக்கணங்கள் கூறிய முறையில் போற்றும் இயல்பினர்; அடக்கமே வடிவமானவர்; செல்வத்துப் பயன் ஈதல் என்பதை உணர்ந்தவர்.

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து."

என்றகுறளுக்குஎடுத்துக்காட்டாகவிளங்குபவர்அண்ணாமலை.

விசாலாட்சி உடனாய எங்கும் நிறைந்த,காசிமாநகரில் எழுந்தருளி இருக்கின்ற விசுவேசப் பெருமான் திருக்கோயிலின் உச்சியிலே அண்ணாமலையின் தந்தையாரால் நிறுவப் பெற்று, ஒளிவீசிக்கொண்டிருக்கும் நீல ரச விளக்கைப்போல் தம்மகள் விசாலாட்சியின் திருமணத்தில் இவ் அமுதத்தை நல்கும் அண்ணாமலையும், அவர்தம் வழித்தோன்றல்களும், மணமக்களாகிய விசாலாட்சியும் இராமனாதனும் எல்லா நலனும் பெற்று ஒளி பரப்பிப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்

1—7—74
காரைக்குடி.

இராய. சொ.

4—2

நூல் முகம்

ஆழ்வார்கள் அருளிய அமுதை இந் நூல் எடுத்து வழங்குகிறது. ஆழ்வார்கள் பன்னிருவர். அவர் திருமால் அடியார். பன்னிருஆழ்வாரும் பாமாலை தொடுத்திருக் கின்றனர். அவருள் பதினொருவர் திருமாலைப் பாடினர். மதுர கவி ஆழ்வார் என்ற ஒரே ஒருவர் கடவுளைவிட, அவர் அடியாரே சிறந்தவர் எனக் கொண்டு, கடவுளைப் பாடாது, அவர் அடியாருள் தலைசிறந்தவர் என்றும் 'வேதம் தமிழ் செய்த வித்தகர்' என்றும் அனைவராலும் போற்றப்பெறும் நம் ஆழ்வாரையே பாடினார்.

"தேவு மற்றறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே"

எனப் பாடினார் மதுரகவியார்.

ஆழ்வார் பன்னிருவர் பாடிய மொத்தப் பாசுரங்கள் நாலாயிரம். அப்பாசுரங்கள் திவ்வியமான கவிகள் ஆதலின் ஆழ்வார்களின் பாடல் தொகுதிக்கு "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்" என்று பெயர்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் மிக அரிய பாடல்கள் கொண்ட நூல். இப் பாசுரங்களில் தமிழ் மணம் பெருகிப் பாய்கிறது வைணவ அன்பர்கள் இப் பாக்களை உச்சிமேல் வைத்துப் போற்றுகின்றனர். ஒவ்வொரு தமிழனுமே தலைமேல் கொண்டு பாராட்டத் தக்க தனிச் சிறப்பு வாய்ந் தன இப் பாசுரங்கள் திருமால், ஆழ்வார் பாசுரங்களின் பின்னே செல்கின்றதைச் சுவாமி புறப்பாட்டின்போது, யாண்டும் காணலாம். "பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே!" என்றார் குமர குருபர அடிகள்.

ஆழ்வார் என்ற சொல்லுக்கு மூழ்கியவர் என்பது பொருள். இறைவனிடம் ஆழ்ந்தவர்களாகிய அடியார் களே ஆழ்வார் என்று பெயரைப் பெறுகின்றனர். ஆழ்வார் பன்னிருவரில் ஒருவர் மட்டுமே பெண். அவர் தாம்

ஆண்டாள். அவர் பெரியாழ்வாரின் மகள். ஆழ்வாருள் பல வகுப்பினரும் இருக்கின்றனர். ஆழ்வார்களுள் உள்ள ஒரு பெருஞ் சிறப்பு என்ன என்றால் பார்ப்பனர் அல்லாதார் குலத்துப் பிறந்த நம் ஆழ்வாரையே எல்லோரும் முதல்வ ராகக் கொள்வதே. இதனால் அந்த நாளில் அறிவுக்கும் பக்திக்கும் தூய்மைக்கும் எவ்வளவு சிறப்புக் கொடுக்கப் பெற்றது என்பது தெரிகின்றது.

க. பெரியாழ்வார்

இவர் திருவில்லிபுத்தூரில் பிறந்தார். இவர் பாடிய பாசுரங்கள்-சஎங .இவ் ஆழ்வார்பெரும்பாலும்கண்ணனைப் பற்றியே பாடினர். கிருஷ்ணாவதாரத்தில் இவர் பெரிதும் ஈடுபட்டிருந்தார். கண்ணனைக் குழந்தையாக இவர் பாடிய பாடல்களைப் படிக்கும்போது மெய்ம்மறந்து கண்ணனே நம்மை வந்து கட்டிக் கொள்வதாக நாம் உணர்வோம். இவர் பாடலுக்குப் 'பெரியாழ்வார் திருமொழி' என்று பெயர்.

உ. ஆண்டாள்

இந் நாச்சியார் பெரியாழ்வாரின் மகள். "பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே'' என்று ஓர் அன்பர் கூறினர். ஆண்டாள் உலக வாழ்வை வெறுத்துத் திருமாலையே காதலித்துப் பக்தி கலந்த காதலும் வீரமும் ததும்பப் பாக்கள் பாடினர். இவர் பாடிய பாசுரங்கள் 'திருப்பாவை' ௩0; 'நாச்சியார் திருமொழி' கசங; ஆக, கஎங.

ங. குலசேகர ஆழ்வார்

இவர் மலைநாட்டை ஆண்ட மன்னர்; இராமாவதாரத் தில் மிகவும் ஈடுபாடுள்ளவர். இராமனைப் பற்றி உள்ளம் உருக்கும் பாசுரங்களை இவ் ஆழ்வார் பாடியிருக்கின்றார். இவர் பாடிய பாடல்-ᾳ0ரு. இவர் பாடலுக்கு, 'பெருமாள் திருமொழி' என்று பெயர்.

ச. திருமழிசை ஆழ்வார்

இவர் பாடிய பாசுரம் உகசு. இவற்றுள் 'திருச் சந்த விருத்தம்' கஉ0; 'நான்முகன் திருவந்தாதி' சுசு. இவர் உறைத்த கொள்கை உள்ளவர் என்றும் சந்தப் பாப் பாடுவதில் வல்லவர் என்றும் தெரிகிறது.

ரு. தொண்டர் அடிப் பொடி ஆழ்வார்

இவ் ஆழ்வார் பாடியபாசுரம்-ருரு. இவற்றுள் 'திருமாலை' சரு. 'திருப்பள்ளி எழுச்சி' க0. இவருடைய திருமாலைப் பாசுரம் ஒவ்வொன்றும் எலும்பை நெக்கு நெக்கு உருகச் செய்யும் இயல்பு கொண்டது.

சு. பொய்கை ஆழ்வார்
எ. பேய் ஆழ்வார்
அ. பூதத்து ஆழ்வார்

இம் மூவரும் முதல் ஆழ்வார் எனப் பெறுவர். இவர், காலத்தினுல் முற்பட்டவராதலின் முதல் ஆழ்வார் எனப் பெற்றனர். இம்மூவரும் ஒரே சமயத்தில் "மொழி விளக்கு ஏற்றி முகுந்தனைத் தொழுத"னர். இவர் ஒவ்வொருவரும் பாடிய வெண்பாக்கள் நூறு, நூறு. இவ் ஆழ்வார்கள் பாசுரங்கட்கு முறையே 'முதல் திரு அந்தாதி' 'இரண்டாம் திருஅந்தாதி' 'மூன்ரும் திரு அந்தாதி' என்று பெயர். இவர்கள் பாசுரங்களுள் பல, சமய சமரசக் கொள்கையுடையவை.

கூ. திருப்பாண் ஆழ்வார்

இவ் ஆழ்வார் தாழ்த்தப்பட்ட வகுப்பினர். இவர் பாடிய பாசுரம் க0. குறைந்த அளவு கொண்டதெனினும் திருமாலின் திருமேனி அழகை அப்படியே அள்ளி உண்டு விட்டார் இவர். இவ் ஆழ்வார் பாடலுக்கு 'அமலன் ஆதி பிரான்' எனப் பெயர்,

ச0. மதுரகவி ஆழ்வார்

இவ் ஆழ்வார் திருமாலைப் பாடவில்லை. அவர் அடியாராகிய நம்மாழ்வார்மீது 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற

பதிஞெரு பாடல்பாடி, அடியார்க்கு அடியாராகி, ஆழ்வாராகி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும் இடம் பெற்ருர். இவர் பிறப்பில் 'சாதி அந்தணர்.'

கக. திருமங்கை ஆழ்வார்

இவ் ஆழ்வாரே நாலாயிரப் பிரபந்தத்திலேயே அதிக மான பாசுரங்கள் பாடியவர். இவருடைய பாடல் கஉசூக. இவர் பாடல் தொகுதிக்கு 'பெரிய திருமொழி' என்று பெயர்.

திருமங்கை ஆழ்வார் பாடல் வகை.

பெரிய திருமொழி	—	க0அசு
திருக்குறுந்தாண்டகம்	—	உ0
திருநெடுந்தாண்டகம்	—	௩0
திருவெழுகூற்றிருக்கை	—	க
சிறிய திருமடல் கண்ணி	—	எஎஇ
பெரிய திருமடல் கண்ணி	—	கசஅஇ
		கஉசூக

இவ் ஆழ்வார் ஏராளமான திருப்பதிகட்குச் சென்று, இறைவனைப் பாடியிருக்கின்ருர். நல்ல பெரும் புலமை வாய்ந்தவர். இவர் பாசுரங்கள் தேனுக இனிப்பவை.

கஉ. நம் ஆழ்வார்

இவ் ஆழ்வார் நம் எல்லோருக்குமே சொந்தமானவர் ஆதலின் இவருக்கு நம் ஆழ்வார் என்று பெயர். இவர் பாடிய பாசுரங்கட்கு மட்டுமே 'திருவாய் மொழி' எனப் பெயர். திருவாய் மொழி வேதத்தின் சாரம் எனப் பெரியோர் கூறுவர்.

நம் ஆழ்வாரைப் பற்றிய சிறப்புப் பாடல் பல. நம் ஆழ்வார் பிறந்த குருகூருக்கு ஆழ்வார் பிறந்த காரணத்தால், ஆழ்வார் திருநகரி என்று பெயர். இத் தலம் தென் பாண்டி நாட்டில் இருக்கிறது.

ஆழ்வார் திருநகரியைக் கண்டு களிக்க ஓர் அடியார் புறப்பட்டு வந்தார். ஊரை நெருங்கியதும் ஓர் அரிய பாடல் அவ் அடியார் உள்ளத்தினின்றும் தோன்றியது.

"இதுவோ திருநகரி! ஈதோ பொருநை!
இதுவோ பரமபதத்து எல்லை!—இதுவோதான்
வேதம் பகர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை
ஓதும் சடகோபன் ஊர்"

என்பதே அவ் அருமை வெண்பா.

நம் ஆழ்வார் பாசுர வகை.

திருவாய் மொழி	—	கக0உ
திருவிருத்தம்	—	க00
பெரிய திரு அந்தாதி	—	அஎ
திரு ஆசிரியம்	—	எ
		கஉ௬௬

மொத்தம் நம் ஆழ்வார் பாடல் கஉ௬௬. நம்ஆழ்வார் பாசுரங்கள் சிறந்த கருத்துக்கள் கொண்டன. அத்துணை பாடல்களும் அந்தாதித் தொடையாக அமைந்திருக்கின்றன.

ஆழ்வார் பாசுரங்களோடு பெரிதும் ஒப்புமை கொண்ட பாடல் பல, தேவாரம், திருவாசகம், இராம காதை முதலிய வற்றில் விரவிக் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இந்நூலில் தொடர்புடைய பாடல்களோடு காணலாம்.

ஆழ்வார்கள் பாடல்கள் பக்திக்கு வரம்பாக அமைந்திருக்கின்றன. பாலாக, தேனாக, கருப்பஞ்சாறாக, அமுதாக, இனிக்கும் பாசுரங்கள் அவை.

அவ் அமுதினின்றும் சுவைத்துத் தேர்தெடுக்கப் பெற்ற வடித்த அமுது கொண்டது இந்நூல்.

இந்நூல் தரும் ஆழ்வார் அமுதை அள்ளிப் பருகித் தமிழ் மக்கள் இன்பக் கடலாட வேண்டும் என்பதே அடியேன் ஆசை.

வணக்கம்

ஆனந்த
ஆனி கஎ } இராய. சொ.

உள்ளுறை

ஆழ்வார் அமுது

ஆழ்வார் அமுது

பெரியாழ்வார்

காப்பு

வெண் செந்துறை

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி
ரத்தாண்டு பல்கோடிநூ ருயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணு!உன்
சேவடி செவ்விதிருக் காப்பு

கருத்து: மல்போரில் வெற்றிகொண்ட வலிய தோள்களைப் பெற்ற நீல மேனியனே!

பல ஆண்டு பல ஆயிரம் ஆண்டு பல கோடி கோடி பல ஆண்டு நினது செம்மையான திருவடி, சிறப்பும் திருவும் பொருந்தக் காப்பதாக.

நூறு ஆயிரம், ஒரு கோடி. 1

கலி விருத்தம்

பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம்புகு வார்;புக்குப் போதுவார்;
"ஆணொப் பார்இவன் நேர்இல்லை காண்!''திரு
"ஓணத் தான்உலகு ஆளும்''என் பார்களே

கருத்து : சிறப்பான பிள்ளை பிறந்த இனிய வீட்டைப் பேணிக் காண்பதற்கு அவ்வீட்டினுள் செல்வார்; சென்று திரும்புவார் ஊரார் எல்லோரும். அவர்கள் என்ன சொல்லுகின்றனர் :-

''ஆண்களிலே இவனுக்கு இணையானவர் இலர்; திருவோண நட்சத்திரத்திலே பிறந்தவன் உலகத்தை ஆளுவான்" என்கின்றனர்.

''ஓணத்தான் உலகு ஆளும்" என்பது பழமொழி.

பிள்ளை, கண்ணன். பிறந்த-இன்-இல் என்பது பிறந்தினில் என ஆயிற்று.

நாள்கள் இருபத்தேழுள்ளும் திரு என்னும் சிறப்புப் பெற்றவை இரண்டே. ஒன்று கண்ணன் பிறந்த திருவோணம்; மற்றொன்று சிவபிரான் பிறந்த திருவாதிரை. 2

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய ஆட்டி, பசும்சிறு மஞ்சளால்,
ஐய நாவழித் தாளுக்குஅங் காந்திட
வையம் ஏழும்கண் டாள்;பிள்ளை வாயுளே.

கருத்து: கைகளையும் கால்களையும் நிமிர்த்திவிட்டுக் குடத்தின் நீரை மொண்டு மெதுவாகக் குளிப்பாட்டி, பசுமையான மஞ்சள் துணுக்கால் பிள்ளையின் மெல்லிய நாவை வழித்தாள் தாய்; அப்போது திறக்கப் பெற்ற கண்ணனின் வாய்க்குள்ளே ஏழு உலகத்தையுமே கண்டாள் அவள்.
வாயினுள்ளே கண்ட பொருள்களையெல்லாம் பாகவதம் விரித்துப் பல பாடல்களால் பகரும்.

அரும் சொல் பொருள்: கடாரம்: குடம். ஐய: மென்மையான, அங்காத்தல்: வாய் திறத்தல். 3

வாயுள் வையகம் கண்ட மடநல்லார்,
ஆயர் புத்திரன் அல்லன்; அருந்தெய்வம்;
பாய சீர்உடைப் பண்புடைப் பாலகன்,
மாயன், என்று மகிழ்ந்தனர் மாதரே.

கருத்து: வாயினுள்ளே உலகம் முழுதையும் பார்த்த இளம் மங்கையர் இக்கண்ணன் இடையர் மகன் அல்லன்; அரிய தெய்வமே என்றனர். பரந்த பெருமையுடைய குணமான இப்பிள்ளை திருமாலே எனக் களித்தனர் எல்லாப் பெண்களும்.

அரும் சொல் பொருள்: மடம்: இளமை. ஆயர்: இடையர். பாய: பரவிய. 4

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்;
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்;
மிடுக்குஇ லாமையால் நான்மெலிந் தேன்;நங்காய்!

கருத்து: தோழியிடம் சொல்லுகின்றாள் யசோதை:- "பெண்ணே! கிடக்கும்போது தொட்டில் துணி கிழிய உதைக்கின்றான்; எடுத்து வைத்துக் கொண்டால் இடுப்பை ஒடிக்கின்றான்; ஒடுங்குமாறு கட்டி அணைத்துக் கொண்டால் வயிற்றிலே பாய்கின்றான்; வலிமையின்மையாலே நான் தளர்ந்து விட்டேன்."

அரும் சொல் பொருள்: மருங்கு: இடுப்பு. இறுத்தல்: ஒடித்தல். புல்குதல்: அணைத்தல். உதரம்: வயிறு மிடுக்கு: வலி. 5

மின்அனைய நுண்இடையார்
விரிகுழல்மேல் நுழைந்தவண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்
இனிதுஅமர்ந்தாய்! உனைக்கண்டார்
"என்னநோன்பு நோற்ருள்கொல்
இவனைப்பெற்ற வயிறுடையாள்''
என்னும்வார்த்தை எய்துவித்த
இருடிகேசா! முலைஉணாயே.

கருத்து: மின்னலை ஒத்த நொய்மையான இடுப்பையுடைய மகளிரின் விரிந்த கூந்தலிலே புகுந்த வண்டானது, இனிய ஓசையை எழுப்புகின்ற திருவில்லிபுத்தூரிலே இனிமையாக இருக்கின்றவனே! - உன்னைப் பார்த்தவர், 'என்ன தவம் செய்தாளோ இவனைப் பெற்ற வயிறு உடையவள்' என்று சொல்லத்தக்க பேச்சை உண்டாக்கிய கண்ணா! முலையமுதம் பருகுவாயாக!

அரும் சொல் பொருள்: நோன்பு: தவம். நோற்றல்: செய்தல். 6

மைத்தகுமா மலர்க்குழலாய்!
வைதேவீ! விண்ணப்பம்,
ஒத்தபுகழ் வானரக்கோன்
உடனிருந்து நினைத்தேட,
அத்தகுசீர் அயோத்தியர்கோன்
அடையாளம் இவைமொழிந்தான்;
இத்தகையால் அடையாளம்;
ஈதுஅவன்கைம் மோதிரமே.

கருத்து: மை போன்ற சிறந்த பூ அணிந்த கூந்தலை உடையவளே! சீதாதேவி! என் விண்ணப்பத்தை ஏற்றருள்க. தன்னை ஒத்த சீர் உடைய குரக்கினத் தலைவனான சுக்கிரீவன் கூடவிருந்து உன்னைத் தேட, அந்தத் தக்க சிறப்புடைய அயோத்தியின் தலைவனாகிய இராமன், அடையாளங்களாகிய இவற்றைச் சொன்னான்; அடையாளங்கள் இவை; இஃது அவனுடைய கைம் மோதிரம். அநுமான் சீதையிடம் சொல்லுவதாக ஆழ்வார் பாடுகிருர். 7

கூன்தொழுத்தை சிதகுஉரைப்பக்
　　கொடியவள்வாய்க் கடியசொற்கேட்டு
ஈன்றுஎடுத்த தாயரையும்
　　இராச்சியமும் ஆங்குஒழியக்
கான்தொடுத்த நெறிபோகிக்
　　கண்டகரைக் களைந்தான்ஊர்,
தேன்தொடுத்த மலர்ச்சோலைத்
　　திருவரங்கம் என்பதுவே.

கருத்து : கூனலையுடைய அடிமைப் பெண் கோள் சொல்ல, அந்த "உள்ளமும் கோடிய கொடியாள்" வாயினின்றும் வந்த கடுமையான பேச்சைக்கேட்டு, பெற்றெடுத்த அன்னையரையும் அரசாட்சியையும் விட்டு, காட்டு வழிச் சென்று, இழிந்தவர்களை அழித்தவனுடைய ஊர் எது? அதுதான், தேன் ஒழுகும் பூக்கள் மல்கிய சோலை சூழ்ந்த திருவரங்கம் என்பது.

அரும் சொல் பொருள் : சிதகு: கோள். 8

வல்எயிற்றுக் கேழலுமாய்
　　வாள்எயிற்றுச் சீயமுமாய்
எல்லையில்லாத் தரணியையும்
　　அவுணனையும் இடந்தான்ஊர்,
எல்லியம்போது இரும்சிறைவண்டு
　　எம்பெருமான் குணம்பாடி,
மல்லிகைவெண் சங்குஊதும்
　　மதிள்அரங்கம் என்பதுவே.

கருத்து : வலிய பற்களைப் பெற்ற பன்றியாகி எல்லையில்லா நிலத்தைத் தோண்டியவனும், ஒளி கொண்ட பற்களையுடைய சிங்கமாகிக் கணக்கற்ற வலியுடைய இரணியனைப் பிளந்தவனும் ஆகிய திருமால் ஊர் எது?
இராப்பொழுதிலே பெரிய சிறகுகள் கொண்ட வண்டுகள் எம்பிரான் சிறப்பைப் பாடி மல்லிகைகளை வெள்ளிய சங்கங்களாக ஊதுகின்ற மதில்களைப் பெற்ற திருவரங்கம் என்பதே. "மல்லிகையே வெண் சங்கா வண்டூத" என்பது நளவெண்பா.

அரும் சொல் பொருள் : எயிறு: பல். கேழல்: பன்றி. சீயம்: சிங்கம். ஏல்லி: இருட்டு. 9

பெரியாழ்வார்

குன்றுஆடு கொழுமுகில்போல்
குவளைகள்போல் குரைகடல்போல்
நின்றுஆடு கணமயில்போல்
நிறம்உடைய நெடுமால்ஊர்,
குன்றுஊடு பொழில்நுழைந்து
கொடிஇடையார் முலைஅணவி,
மன்றுஊடு தென்றல்உலாம்
மதிள்அரங்கம் என்பதுவே.

கருத்து : மலையிலே தோன்றுகின்ற கொழுகொழுத்த மேகம் போலவும் நீலோத்பலப் பூக்களை ஒப்பவும் கத்துகின்ற கடலை நிகர்ப்பவும் தோகையை விரித்து நின்று ஆடுகின்ற மயில் கூட்டம் கடுப்பவும் நிறங்கொண்ட நீண்ட திருமால் ஊர் எது? மலை நடுவேயுள்ள சோலையிலே புகுந்து, வல்லி போன்ற இடையையுடைய பெண்களின் தனங்களைத் தடவி, வீதிகளின் நடுவிலே, தென்றல் உலவி வருகின்ற மதில் சூழ்ந்த திருவரங்கம் என்ற ஊரே அது.

கொழுமுகில், குவளைகள், குரைகடல், கணமயில் என்பன நிறத்தின் மிகுதியைக் காட்டுவன. 10

கலித் தாழிசை

சீதக் கடலுள் அமுதன்ன தேவகி,
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி, பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே!
பவளவா யீர்!வந்து காணீரே!

கருத்து : குளிர்ந்த கடலினின்றும் தோன்றிய அமுதத்தை ஒத்த தேவகி நங்கையானவள், மாலையணிந்த கூந்தலுடையாளாகிய அசோதைப் பிராட்டிக்குக் கொடுத்த சிறு குழந்தையானது, கையால் பிடித்து வாயில் வைத்து உண்டு சுவை காணும் திருவடித் தாமரைகளைப் பாருங்கள்; பவளம் போன்ற சிவந்த வாயையுடைய மங்கையீர்! வந்து பாருங்கள்!

தேவகி கண்ணனைப் பெற்ற தாய் அசோதை, கண்ணனை வளர்த்த தாய். குழவி, கண்ணன். காலைப் பிடித்து வாயில் வைத்துச் சுவைப்பது நல்ல குழந்தையின் இயல்பு.

‘‘தொழுதகு சிற்றடிப் பெரிய விரல் சுவைத்து" என்றார் பரஞ்சோதி முனிவர். 11

மத்தக் களிற்று வசுதேவர் தம்உடைச்
சித்தம் பிரியாத தேவகி தன்வயிற்றில்,
அத்தத்தின் பத்தாம்நாள் தோன்றிய அச்சுதன்
முத்தம் இருந்தவா காணீரே!
முகிழ்நகை யீர்!வந்து காணீரே!

கருத்து: மதயானையைக் கொண்ட வசுதேவருடைய உள்ளத்தைவிட்டு நீங்காத தேவகியின் வயிற்றில் அத்த நட்சத்திரத்தின் பத்தாம் நாளாகிய திருவோண நட்சத்திரத்திலே பிறந்த கண்ணன் முத்தம் இருந்த விதத்தைப் பாருங்கள்; மந்தகாசமுடையீர்! வந்து பாருங்கள்.

வசுதேவர், கண்ணனைப் பெற்ற தந்தை: "தேவரெலாம் குறை இரப்பத் தேவகிதன் திருவயிற்றில் வசுதேவற்கு, மூஉலகும் தொழ நெடுமால் முன்ஒருநாள் அவதாரம் செய்தபின்னை" என்பது கலிங்கத்துப் பரணி. 12

மைத்தடங் கண்ணி யசோதை வளர்க்கின்ற
செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளை,
நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய
கைத்தலங் கள்வந்து காணீரே!
கனங்குழை யீர்!வந்து காணீரே!

கருத்து: மை தீட்டிய பெரிய கண்களைப் பெற்ற அசோதை மாது வளர்க்கின்ற, வயலினிடத்துத் தோன்றும் நீலப் பூப் போன்ற நிறத்தைப் பெற்ற, சின்னக் குழந்தையாகிய கண்ணனுடைய, கொழுப்புப் பூசிய சக்கரமும் சங்கும் விளங்கிய கைகளை வந்து காணுங்கள்; கனத்த நகையணிந்த காதுகளையுடையவர்களே! போந்து பாருங்கள். 13

நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்
நாக்கு வழித்து,நீர் ஆட்டும்இந் நம்பிக்கு,
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்
மூக்கும் இருந்தவா காணீரே!
மொய்குழ லீர்!வந்து காணீரே!

கருத்து: அசோதைப் பிராட்டியானவள், தேர்ந்தெடுத்த சிறு மஞ்சள் துண்டினால் நாக்கு வழித்துக் குளிப்பாட்டுகின்ற இந்த நம்பியாகிய கண்ணனுக்கு, பேச்சும் கண்களும் வாயும் பற்களும் மூக்கும் இருக்கின்ற மாதிரியைப் பாருங்கள்; அடர்ந்த கூந்தலைப் பெற்ற அணங்குகளே! வந்து பாருங்கள். 14

உடையார் கனமணியோடு ஒள்மா துளம்பூ
இடைவிரவிக் கோத்த எழில்தெழ்கி னோடு
விடையேறு காபாலி ஈசன் விடுதந்தான்;
உடையாய்! அழேல்!அழேல்! தாலேலோ;
உலகம் அளந்தானே! தாலேலோ.

கருத்து: சிறப்புடைய நிறைந்த உறுநிறை இரத்தினங்களோடு ஒளிமிக்க மாதுளம்பூக்கள் போல் இடையிடையே கலந்து கோக்கப்பெற்ற அழகிய இடைக்கு அணியும் சலங்கையை, விடையேறும் "ஊன் பாயும் முடைதலை கொண்டு ஊர்ஊரின் பலிக்கு உழலும் உமையாள் பங்க" னாகிய சிவபெருமான் கொடுத்தனுப்பியிருக்கிறான்; என்னை ஆளுடையவனே! அழாதே, அழாதே, உலகத்தை அளந்தவனே! உன்னைத் தாலாட்டுகின்றேன்.

"மூஉலகும் ஈர் அடியால் முறைநிரம்பா வகைமுடியத் தாவிய சேவடி" என்றார் இளங்கோ அடிகள். தெழ்கு-சலங்கை. தால்: நாக்கு.

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்
அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்;
செங்கட் கருமுகிலே! தாலேலோ;
தேவகி சிங்கமே! தாலேலோ.

கருத்து: வலம்புரிச் சங்கும் சிவந்த திருவடிக்குச் சிலம்பும் அழகுக் கைக்கு மேலும் கீழும் ஓடும் காப்பும் சங்கிலியும் அரைஞாணும் அழகிய பெருவானினின்றும் தேவர்கள் அனுப்பியிருக்கின்றார். சிவந்த கண்களைக் கொண்ட கரிய மேகமே! உன்னைத் தாலாட்டுகின்றேன்; தேவகி பெற்றெடுத்த சிங்கமே! உனக்குத் தாலாட்டு. 16

குரக்குஇனத் தாலே குரைகடல் தன்னை
நெருக்கி அணைகட்டி நீள்நீர் இலங்கை
அரக்கர் அவிய அடுகணை யாலே
நெருக்கிய கைகளால் சப்பாணி;
நேமியங் கையனே! சப்பாணி.

கருத்து: குரங்குக் கூட்டங்களைக் கொண்டு இரைகின்ற கடலின் இரு புறத்தையும் நெருக்கி அணைகட்டி கடல்சூழ் இலங்கையிலுள்ள நீண்ட அரக்கர் மாளக் கொல்லும் அம்புகள் கோத்த கைகளால் சப்பாணி கொட்டுக; ஆழி தாங்கிய அழகிய கையனே! கொட்டுக சப்பாணி. 17

செங்கமலப் பூவில் தேனுண்ணும் வண்டேபோல்
பங்கிகள் வந்துஉன் பவளவாய் மொய்ப்ப,
சங்கு,வில், வாள்,தண்டு சக்கரம் ஏந்திய
அங்கைக ளாலேவந்து அச்சோஅச்சோ!
ஆரத் தழுவாய்வந்து அச்சோஅச்சோ!

கருத்து: செந்தாமரை மலரிலே தேனைக் குடிக்கும் வண்டைப்போல உன் தலைமயிர் வந்து வீழ்ந்து உன்னுடைய பவளம் போன்ற வாயைச் சூழ, சங்கம் சாரங்கம் வாளாயுதம் கதை ஆழி ஆகிய ஐம்படை தாங்கிய அழகிய கைகளாலே வந்து அணைத்துக்கொள். என்னை நன்றாகக் கட்டித் தழுவிக்கொள்.

அரும் சொல் பொருள்: பங்கி - ஆண் தலைமயிர். அச்சோ - அணைத்துக் கொள்.
18

நாந்தகம் ஏந்திய நம்பி சரண்என்று
தாழ்ந்த தனஞ்சயற் காகித் தரணியில்
வேந்தர்கள் உட்க விசயன் மணித்திண்தேர்
ஊர்ந்தவன் என்னைப் புறம்புல்குவான்;
உம்பர்கோன் என்னைப் புறம்புல்குவான்.

கருத்து: வாள் தாங்கிய நம்பியாகிய கண்ணா! நீயே அடைக்கலம் என்று கும்பிட்டு வீழ்ந்த விசயனுக்காக, உலகின் மன்னரெல்லாம் அஞ்சுமாறு அந்த அருச்சுனனின் மணி ஒலிக்கும் வலிய தேரை ஓட்டிய வனாகிய பார்த்தசாரதி என் முதுகைக் கட்டித் தழுவுவான்; அத் தேவர் தலைவன் என் முதுகை அணைவான்.

அரும் சொல் பொருள்: நாந்தகம்: வாள். சரண்: அடைக்கலம். தனஞ்சயன்: பார்த்தன். உட்குதல்: அஞ்சுதல். புறம்: முதுகு. புல்குதல்: அணைத்தல்.
19

தத்துக்கொண்டாள்கொலோ? தானேபெற்ருள்கொலோ?
சித்தம் அனையாள் அசோதைஇளம் சிங்கம்,
கொத்தார் கருங்குழல் கோபால கோளரி,
அத்தன்வந்து அப்பூச்சி காட்டுகின்ருன்;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்ருன்.

கருத்து : அசோதைப் பிராட்டி கண்ணனைத் தத்தாக எடுத்துக் கொண்டாளா? அன்றித் தானே வயிற்றில் பெற்றாளா? மனம் ஒத்த அவளுடைய இளம் சிங்கமும், மலர் நிறைந்த கரிய குழலுடைய இடையரின் வலிய சீயமும் ஆகிய என் அப்பன் வந்து பயங்காட்டுகின்றான்; ஐயையோ! அச்சங் காட்டுகின்றானே.

அரும் சொல் பொருள் : தத்துக்கொள்ளல்: பிள்ளை எடுத்துக் கொள்ளல். கொத்து: பூங்கொத்து. கோபாலர்: பசுக்களைப் பரிபாலிப்போர்; இடையர், அப்பூச்சி காட்டுதல்: பயங்காட்டுதல். அம்மனே: வியப்புச் சொல். 20

பதக முதலைவாய்ப் பட்ட களிறு,
கதறிக்கை கூப்பி“என் கண்ணா!கண் ணா!''என்ன
உதவப்புள் ஊர்ந்துஅங்கு உறுதுயர் தீர்த்த
அதகன்வந்து அப்பூச்சி காட்டுகின்றான்;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்.

கருத்து : பாதகம் செய்த முதலையின் வாயிலே அகப்பட்டுக்கொண்ட யானை யானது, கண்ணா கண்ணா எனக்கை தூக்கி அலற, அவ் வேழத்திற்கு அருள் சுரக்கக் கலுழன் மீதேறிச் சென்று துயர் துடைத்த வலியோன் வந்து பயங்காட்டுகின்றான்; ஐயோ! அவன் அச்சுறுத்துகின்றனன்.

அரும் சொல் பொருள் : பாதகம்: குறுகி பதகம் ஆயது களிறு: ஆண்யானை. அதகன்: வலியுடையான். 21

பின்னை மணாளனைப், பேர்இல் கிடந்தானை,
முன்னை அமரர் முதல்தனி வித்தினை,
என்னையும் எங்கள் குடிமுழுது ஆட்கொண்ட
மன்னனை, வந்துகுழல் வாராய்,அக்காக்காய்!
மாதவன் தன்குழல் வாராய்,அக்காக்காய்!

கருத்து : நப்பின்னைப் பிராட்டியின் நாயகனை, பெரிய இல்லத்திலே பள்ளி கொண்டவனை, பழைய வானவர்க்கு ஆதியான ஒப்பற்ற விதையை, என்னையும் எங்கள் குடி முழுதையும் ஆண்டு கொண்ட வேந்தனை வந்து தலைவாரிமுடிப்பாயாக, ஆ! காக்கையே!மாதவனுடைய குழலை வாருவாயாக

இது குழல் வாரக் காக்கையை அழைக்கும் முறையில் கூறுவது. 22

தென்இலங் கைமன்னன் சிரம்தோள் துணிசெய்து
மின்இ லங்குபூண் விபீடண நம்பிக்கு
என்இ லங்குநாமத் தளவும் அரசுஎன்ற
மின்அலங் காரற்குஓர் கோல்கொண்டுவா;
வேங்கட வாணற்குஓர் கோல்கொண்டுவா.

கருத்து: தென்னிலங்கை ஆண்ட இராவணன் தலைகளையும் தோள்களையும் அறுத்து, ஒளிவிடுகின்ற நகையணிந்த வீடணப் பெரியோனுக்கு "என்னுடை நாமம் நிற்கும் அளவெலாம் இலங்கை மூதூர் மன்னவன் நீயே" என்று சொல்லிய, திருமகளை அலங்காரமாக மார்பில் வைத்தவனுக்கு விளையாட ஓர் கம்பு கொண்டுவா; திருவேங்கடமலையிலே வாழ்வானுக்கு ஓர் கோலைக் கொண்டுவா.

அரும் சொல் பொருள்: இரண்டாவது மின்: ஈண்டுத் திருமகள். முதல் மின்: ஒளி. 23

மாற்றுத்தாய் சென்று வனம்போகே என்றிட,
ஈற்றுத்தாய் பின்தொடர்ந்து எம்பிரான் என்றுஅழ,
கூற்றுத்தாய் சொல்லக் கொடிய வனம்போன
சீற்றமி லாதானைப் பாடிப்பற;
சீதைம ணாளனைப் பாடிப்பற;

கருத்து: மறுதாய் போய் காடு போகாதே என்று கூறவும் ஈன்ற தாய் பின் தொடர்ந்தே எம்பிரானே போகாதே என்று அழவும் காலனைப் போன்ற தாயின் பேச்சைக் கேட்டுக் கொடுமையான கானம் சென்ற, கோபம் இல்லாதவனான இராமனைப் பாடிப் பறப்பாயாக. சீதையின் கணவனைப் பாடிப் பறப்பாயாக. மாற்றுத் தாய், சுமித்திரை. ஈற்றுத்தாய், கோசலை. கூற்றுத்தாய், கைகேயி.

கைக்கருவியை மேலே எறிந்து விளையாடுங்கால் மகளிர் கூறும் முறையில் வருவது இப்பாசுரம். 24

கலி நிலைத் துறை

சக்கரக் கையன் தடங்கண்ணால்
மலர விழித்தே
ஒக்கலை மேல்இருந்து உன்னையே
சுட்டிக் காட்டுங்காண்;
தக்கது அறிதியேல் சந்தி
ரா!சலம் செய்யாதே;
மக்கள் பெறாத மலடன்
அல்லையேல் வாகண்டாய்!

கருத்து : சக்கரத்தைக் கையில் பிடித்த கண்ணன், பெரிய கண்களால் அகல விழித்து என் இடுப்பில் அமர்ந்து, உன்னையே குறித்துக் காட்டு கின்றான்; செய்யத் தக்கது அறிவாயானால், திங்களே! சினத்தை மூட்டாதே. பிள்ளைகளைப் பெறாத மலடனாக நீ இல்லையானால் வந்துவிடு.

அரும் சொல் பொருள் : ஒக்கலை: இடை. சலம்: கோபம்.
அம்புலியைப் பிள்ளையொடு விளையாட அழைப்பது இப்பாடல். 25

சிறியன்என்று என்இளம் சிங்கத்
தைஇக ழேல்கண்டாய்!
சிறுமையின் வார்த்தை யை,மா
வலியிடைச் சென்றுகேள்!
சிறுமைப் பிழைகொள்ளில் நீயும்உன்
தேவைக்கு உரியைகாண்!
நிறைம தீ!நெடு மால்விரைந்து
உன்னைக் கூவுகின்றான்.

கருத்து : சின்னப் பிள்ளை என என்னுடை இளம் சிங்கமாகிய கண்ணனைப் பழிக்காதே. சிறுமை என்ற சொல்லின் பொருளை மாவலிச் சக்கரவர்த்தியிடம் சென்று கேட்பாயாக. சிறுமையாக உன்னை நினைத்தது குற்றம் என நீ கொள்வாயானால் நீயும் அடிமைத் தொழிலுக்கு உரியை யாவாய்! முழுத் திங்களே! நெடுமால் அவசர மாக உன்னை அழைக்கின்றான்.

மாவலியிடம் மூன்றடி மண் கேட்க வந்தபோது சிறிய குள்ளனாக வந்தானல்லவா திருமால். அந்தச் சிறுமையின் பொருள் மாவலிக்கல்லவா தெரியும்.

அரும் சொல் பொருள் : தேவை: அடிமைத்தனம்.
இது நிலாவை அழைக்கும் பாசுரம். 26

தாழியில் வெண்ணெய் தடங்கை
　　ஆர விழுங்கிய
பேழை வயிற்றுஎம் பிரான்கண்
　　டாய்உன்னைக் கூவுகின்றான்;
ஆழிகொண்டு உன்னை எறியும்;
　　ஐயுறவு இல்லைகாண்!
வாழ உறுதியேல் மாம
　　தீ!மகிழ்ந்து ஓடிவா!

கருத்து : பாண்டத்திலிருந்த வெண்ணெயை அள்ளிக் கைநிறைய உண்ட, பெட்டகம் போன்ற வயிற்றைக் கொண்ட எம்பெருமான் உன்னைக் கூப்பிடுகின்றான்; நீ வராவிட்டால் சக்கரத்தால் எறிந்து உன்னைத் தொலைத்து விடுவான்; இதில் சந்தேகம் இல்லை; நீ வாழ வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால், சிறந்த சந்திரனே! மகிழ்ச்சியோடு ஓடோடி வந்து விடுக.
இதுவும் அம்புலியை அழைத்தல். 27

பன்னிரு திங்கள் வயிற்றில்
　　கொண்டஅப் பாங்கினால்
என்இளங் கொங்கை அமுதம்
　　ஊட்டி எடுத்துயான்,
பொன்னடி நோவப் புலரியே
　　கானில் கன்றின்பின்
என்இளஞ் சிங்கத்தைப் போக்கினேன்;
　　எல்லே பாவமே!

கருத்து : பன்னிரண்டு மாதங்கள் வயிற்றிலே சுமந்த அந்தப் பரிசினால் என்னுடைய இளைய முலைப்பால் கொடுத்து எடுத்தணைத்த யான், பொன் போன்ற திருவடி வருந்த விடிபொழுதிலேயே கானிலே கன்றின் பின்னே என் இளஞ்சிங்கமாகிய கண்ணனை அனுப்பினேனே; என்ன பாவம் இது! கண்ணனுக்குத் தாயும் தந்தையுமாக இருந்து பெரியாழ்வார் இவ்வாறு வருந்துகின்றார். தந்தை பால் இரண்டு மாதங்கள், தாய்பால் பத்து மாதங்கள், ஆகப் பன்னிரு திங்கள் குழவி கருவில் இருப்பதைப் பன்னிரு திங்கள் என்றார்.
''பத்திரு மாதம் கருவையின் ஊறிய பாழ் உடம்பு'' என்றார் நல்லைச் சின்னத்தம்பி நாவலர்.

அரும் சொல் பொருள் : புலரி - புலர்பொழுது. 28

மன்னர் மறுக மைத்துனன்
மார்க்குஒரு தேரின்மேல்
முன்னங்கு நின்று மோழை
எழுவித் தவன்மலை,
கொன்னவில் கூர்வேல் கோன்நெடு
மாறன்தென் கூடற்கோன்
தென்னன்கொண் டாடும் தென்திரு
மால்இருஞ் சோலையே.

கருத்து : பகையரசர் வருந்த, தன் மைத்துனன்மாராகிய பாண்டவர்க்காகப் பார்த்தனின் ஒப்பற்ற தேரின்மேல், அந்நாளிலே அவ்விடத்து நின்று கீழே இரத்த ஆறு உண்டாகுமாறு செய்தவனுடைய மலை எது? கொல்லுந்தொழில் கொண்ட கூர்மையான வேலைப் பெற்ற தலைவனும் நீண்ட பாண்டியனும் தென் மதுரை அரசனுமாகிய தென்னவன் பாராட்டும் தென் 'திருமால் இருஞ்சோலை என்னும் அழகர் மலையே.

அரும்சொல் பொருள் : மோழை எழுவித்தல் - கீழே ஆறு உண்டாக்குதல்: மோழை - கீழ் ஆறு. 29

ஆயிரம் தோள்பரப் பி,முடி
ஆயிரம், மின்இலக
ஆயிரம் பைந்தலைய அனந்த
சயனன் ஆளும்மலை,
ஆயிரம் ஆறுக ளும்சுனை
கள்பல ஆயிரமும்
ஆயிரம் பூம்பொழி லும்உடை
மால்இருஞ் சோலையதே.

கருத்து : ஆயிரம் தோள்களை விரித்துக்கொண்டு, ஆயிரம் முடிகளும் ஒளி விடும் ஆயிரம் பசுமையான தலைகளையுடைய அனந்தன் என்னும பாம்பணையில் பள்ளிகொண்ட பரந்தாமன் ஆளும் மலை எது? ஆயிரம் ஆறுகளும் பல ஆயிரம் நீர்ச்சுனைகளும் ஆயிரம் மலர்ச் சோலைகளும் உடைய திருமால் இரும் சோலை மலையே ஆம். 30

அறு சீர் விருத்தம்

அடியோ மோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு;
வடிவாய் நின்வல மார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு;
வடிவார் சோதி வலத்துறை
யும்சுடர் ஆழியும் பல்லாண்டு;
படைபோர் புக்கு முழங்கும்அப்
பாஞ்ச சனியமும் பல்லாண்டே.

கருத்து: அடியேமும் நீயும் பிரியாமல் ஆயிரம் பல்லாண்டு வாழ்வேமாக. அழகான நின் மார்பின் வலப்பக்கத்திலே வாழ்கின்ற திருமகளும் பல்லாண்டு வாழ்வாளாக!

கூர்மை நிறைந்த ஒளி பெற்ற வெற்றிகொண்ட சுடர்ச் சக்கரமும் பல்லாண்டு வாழ்வதாக!

படைப் போரிலே புகுந்து முழக்கம் செய்யும் அந்தப் பாஞ்சசனியம் என்னும் சங்கமும் பல்லாண்டு வாழட்டும். 31

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர்
ஆழி திகழ்திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு
நின்று குடிகுடிஆட் செய்கின்றோம்;
மாயப் பொருபடை வாணனை
ஆயிரம் தோளும் பொழிகுருதி
பாயச் சுழற்றிய ஆழிவல்
லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

கருத்து: நெருப்பிலே விளங்குகின்ற சிவந்த ஒளியுடைய உருவை வடிவுடைய திருச்சக்கரக் கோயில் அடையாளம் இடப்பெற்று நின்று உனக்குக் குடி குடியாக அடிமை செய்கின்றோம்; வஞ்சகனாகிய போர்ப்படையுடைய வாணாசுரனை ஆயிரம் தோள்களிலும் இரத்தம் பெருகிப் பாய்ந்தோடவீசிய சக்கரத்தானுக்குப் பல்லாண்டு பாடுவோமாக. 32

ஒருகாலில் சங்குஒரு காலில்
சக்கரம் உள்ளடி பொறித்துஅமைந்த
இருகாலும் கொண்டு,அங்கு அங்குஎழுதி
னல்போல் இலச்சினை படநடந்து,
பெருகா நின்ற இன்பவெள்
ளத்தின்மேல் பின்னையும் பெய்துபெய்து,
கருகார்க் கடல்வண்ணன் காமர்
தாதை தளர்நடை நடவானோ.

கருத்து: ஒரு காலிலே சங்குக் குறியும் ஒரு காலிலே சக்கரக் குறியும் உள்ளங் கால் அடியிலே தீட்டிப் பொருந்திய இரண்டு கால்களையும் கொண்டு, அங்கு அங்கு எழுதினல் போல, சங்கு சக்கர அடையாளம் உண்டாகுமாறு நடந்து பெருகிய இன்பக் கடலிலே பின்னையும் அடையாளம் செய்து, கருமையான மேகத்தையும் கடலையும் ஒத்த நிறத்தை யுடையவனை, காமனர் தந்தை, தளர்ந்த நடை நடந்து வரமாட்டானே? 33

கன்றுகள் ஓடச் செவியில்
கட்டெறும் பு,பிடித் திட்டால்
தென்றிக் கெடுமாகில் வெண்ணெய்
திரட்டி விழுங்குமா காண்பன்;
நின்ற மராமரம் சாய்த்தாய்!
நீபிறந் ததிரு வோணம்
இன்று,நீ நீராட வேண்டும்,
எம்பிரான்! ஓடாதே வாராய்.

கருத்து: கன்றுக் குட்டிகள் ஓட அவற்றின் காதுகளிலே கட்டெறும்பைப் பிடித்துப் போட்டால் சிதறிக் கெட்டுவிடுமானல் வெண்ணெய் எடுத்து விழுங்குவது எப்படி என்று பார்ப்பேன். நின்ற மரா மரங் களைச் சாய்த்தவனே! நீ பிறந்த திருவோண நாள் இன்று; நீ இன்று நீர் ஆடல் வேண்டும்; எம்பெருமானே! ஓடாதே, வந்துவிடுக! 34

அரும் சொல் பொருள்: தென்றி: சிதறி.

ஆன்நிரை மேய்க்கநீ போதி!
அருமருந்து ஆவது அறியாய்,
கானகம் எல்லாம் திரிந்துஉன்
கரிய திருமேனி வாட;
பானையில் பாலைப் பருகிப்
பற்றுதார் எல்லாம் சிரிப்ப,
தேனில் இனிய பிரானே!
செண்பகப் பூச்சூட்ட வாராய்.

கருத்து: காடு முழுதும் அலைந்து உன் கருமையான திருமேனி வருந்தப் பசுக் கூட்டங்களை மேய்க்க நீ செல்கின்றாய்; நீ அரிய அமிழ்தம் என்பதை அறியமாட்டாய்! பானைப் பாலைக் குடித்து எதிரிகளைச் சிரிக்கச் செய்யும் தேனைவிட இனிமையான தலைவனே! உனக்குச் செண்பகப்பூச் சூட்டுகின்றேன், வா. 35

தன்அடியார் திறத்தகத்துத் தாமரையாள்
ஆகிலும் சிதகு உரைக்குமேல்,
என்அடியார் அதுசெய்யார்; செய்தாரேல்
நன்றுசெய்தார் என்பர் போலும்!
மன்உடைய விபீடணற்காய் மதில்இலங்கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த
என்உடைய திருவரங்கற்கு அன்றியும்
மற்றுஒருவர்க்கு ஆளா வாரே?

கருத்து: தன்னுடைய அடியார்களிடத்திலே தாமரைக் கிழத்தியாகிய தனது காதலியே குற்றம் சொன்னாலும், 'என்னுடைய அடியார் எவரும் குற்றம் செய்யமாட்டார்; அவர் செய்யும் எதுவும் நன்றேயாம்' என்பர் திருமால். நிலை பெற்ற வீடணனுக்காக மதில் சூழ்ந்த இலங்கைத் திக்கை நோக்கி, மலர்க்கண் வைத்துத் தென்பக்கம் பார்த்துப் பள்ளி கொண்டிருக்கின்ற அந்த எனக்குச் சொந்தமான திருவரங்கப் பெருமானுக்கன்றி வேறொருவர்க்கு அடிமைப்படுவார் யாரே?

அரும் சொல் பொருள்: சிதகு: குற்றம். 36

மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்து,
அவர்களையே மன்னர் ஆக்கி,
உத்தரைதன் சிறுவனையும் உய்யக்கொண்ட
உயிராளன் உறையும் கோயில்,
பத்தர்களும், பகவர்களும், பழமொழிவாய்
முனிவர்களும், பரந்த நாடும்,
சித்தர்களும் தொழுதுஇறைஞ்சத் திசைவிளக்காய்
நிற்கின்ற திருவ ரங்கமே.

கருத்து : மைத்துனர்களாகிய பாண்டவரின் காதலியாகிய துரோபதையின் அவிழ்ந்த கூந்தலை முடிக்கச் செய்து, அப்பாண்டவர்களை அரசாள வைத்து, உத்தரை பெற்ற சிறுவனை உயிர்ப்பித்து வைத்து உயிரை ஆளுகின்ற திருமால் உறையும் கோயில் எது? பக்தர்களும் பாகவதர்களும் பழமொழி வாயினராகிய துறவிகளும் பரவிய நாட்டு மக்களும் சித்தர்களும் போற்றி வணங்கும் கலங்கரை விளக்காக அமைந்து நிற்கும் திருவரங்கமே.

உத்தரை, அருச்சுனன் மகன் அபிமனின் மனைவி; அவள் மகன் பெயர் பரிச்சித்து. 37

ஏதங்கள் ஆயின எல்லாம்
இறங்கல் இடுவித்துஎன் உள்ளே,
பீதக ஆடைப் பிரானர்
பிரம குருவாகி வந்து,
போதுஇல் கமல,வன் நெஞ்சம்
புகுந்தும்,என் சென்னித் திடரில்
பாத இலச்சினை வைத்தார்,
பண்டுஅன்று பட்டினம் காப்பே.

கருத்து : குற்றங்களான எல்லாவற்றையும் இறங்கிப் போமாறு செய்து, என் உள்ளுக்குள்ளே, பொன்னுடை அணிந்த தலைவனர், பிரமத்தை அறிவிக்கும் ஆசானாக வந்து பூப்போலல்லாத தாமரையனைய வலிய என் நெஞ்சினுள்ளே நுழைந்தும் என் தலையாகிய திட்டில் திருவடி முத்திரையை வைத்தார் பண்டு. அன்று பட்டினம் காப்பதாக.

அரும் சொல் பொருள் : ஏதம்: குற்றம். பீதகம்: தங்கம். போது இல் கமலம்: மலர் போன்ற மென்மையில்லாத தாமரை. 38

உனக்குப் பணிசெய்து இருக்கும்
தவம்உடை யேன்,இனிப் போய்ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை
நிற்கை,நின் சாயை அழிவுகண்டாய்;
புனத்தினைக் கிள்ளிப் புதுஅவிக்
காட்டி,உன் பொன்னடி வாழ்கஎன்று
இனக்குற வர்புதிய துண்ணும்எழில்
மால்இரும் சோலை எந்தாய்!

கருத்து: உனக்குத் தொண்டு செய்து வாழும் பேறு பெற்றேனாகிய நான், இனிச் சென்று வேறு ஒருவனை வணங்கி, அவன் தலைவாயிலிலே நிற்பேனானால், அது நின் புகழுக்கு அழிவல்லவா?

புனத்தில் உள்ள தினையைப் பறித்துப் புதிதாக அவித்து உனக்குப் படைத்து உன் பொன்னடி வாழ்க எனக் குறவர் கூட்டம் அப் புதியதை உண்ணும் அழகிய சோலைமலையாளும் எந்தையே!

அரும் சொல் பொருள்: சாயை: கீர்த்தி. 39

பொன்னைக் கொண்டுஉரை கல்மீதே
நிறம்எ ழுஉரைத் தாற்போல்
உன்னைக் கொண்டுஎன் நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்;
உன்னைக்கொண்டு என்னைஉள் வைத்தனன்;
என்னையும் உன்னில் இட்டேன்;
என்அப் பா!என் இருடீ
கேசா! என்உயிர்கா வலனே.

கருத்து: தங்கத்தைக் கொண்டு உரைகல் மேல் நிறம் தோன்ற உரைத்ததைப் போல, உன்னைக் கொண்டு என் நாவினுள்ளிடத்தே மாற்று இல்லாமல் உரைத்துக்கொண்டேன்; உன்னை எடுத்துக் கொண்டு எனக்குள்ளே இட்டேன்; என்னையும் உனக்குள் புகுத்தினேன். என் அப்பனே! என் திருமாலே! என் உயிர்க்குக் காவலாக அமைந்தவனே.

"வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும் இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்" என்பர் கம்பர். 40

வேயர் தங்கள் குலத்துஉதித்த
விட்டு சித்தன் மனத்தே
கோயில் கொண்ட கோவலனை,
கொழுங்கு ளிர்முகில் வண்ணனை,
ஆயர் ஏற்றை, அமரர்கோவை,
அந்த ணர்தம் அமுதத்தினை,
சாயை போலப் பாட
வல்லார் தாமும்அணுக் கர்களே.

கருத்து : பார்ப்பனக் குலத்திலே பிறந்த விட்டு சித்தனுடைய உள்ளத்தே கோயில் கொண்டு குடியிருந்த கோபாலனை, கொழுத்த குளிர்ந்த மேக நிறத்தானை, இடையர் சிங்கத்தை, தேவர் தேவனை, அந்தணர்களின் அமுதமானவனை, நிழல் போலத் தொடர்ந்து பாடவல்லார் தாமும் அணுக்கத் தொண்டர்கள் ஆவர்.

விட்டு சித்தன், பெரியாழ்வார். 41

குன்றுஎடுத்து ஆநிரை காத்தபிரான்
கோலவ னாய்க்குழல் ஊதிஊதி,
கன்றுகள் மேய்த்துத்தன் தோழரொடு
கலந்துஉடன் வருவானைத் தெருவில்கண்டு
என்றும் இவனைஒப் பாரைநங்காய்!
கண்டறி யேன்,ஏடி! வந்துகாணாய்;
ஒன்றும்நில் லாவளை; கழன்றுதுகில்
ஏந்தின முலையும்என் வசமலவே.

கருத்து : கோவர்த்தனம் எனும் மலையை எடுத்துப் பசுக் கூட்டங்களைக் காப்பாற்றிய தலைவன் இடையனாயிருந்து புல்லாங்குழலை ஊதி ஊதி, கன்றுகளை மேய்த்துக் கொண்டு, தனது தோழர்களோடு கூடி வரும்போது, வீதியில் அக்கண்ணனைக் கண்டேன்; ஏ! பெண் பிள்ளாய்! இவனை ஒத்தவர்களை என்றும் நான் கண்டதில்லையடி; அடியே! நீ வந்து பாரேண்டீ; ஒரு வளையல் கூட கையில் தங்கவில்லை; ஆடை அவிழ்ந்து விழுகின்றது; நிமிர்ந்த இளங் கொங்கையும் என் வயமாக இல்லை.

இது கண்ணனைக் காதலித்த ஒருத்தியின் கூற்று. 42

உனக்குப் பணிசெய்து இருக்கும்
தவம்உடை யேன்,இனிப் போய்ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை
நிற்கை,நின் சாயை அழிவுகண்டாய்;
புனத்தினைக் கிள்ளிப் புதுஅவிக்
காட்டி,உன் பொன்னடி வாழ்களன்று
இனக்குற வர்புதிய துண்ணும்எழில்
மால்இரும் சோலை எந்தாய்!

கருத்து: உனக்குத் தொண்டு செய்து வாழும் பேறு பெற்றேனாகிய நான், இனிச் சென்று வேறு ஒருவனை வணங்கி, அவன் தலைவாயிலிலே நிற்பேனானால், அது நின் புகழுக்கு அழிவல்லவா?

புனத்தில் உள்ள தினையைப் பறித்துப் புதிதாக அவித்து உனக்குப் படைத்து உன் பொன்னடி வாழ்க எனக் குறவர் கூட்டம் அப் புதியதை உண்ணும் அழகிய சோலைமலையாளும் எந்தையே!

அரும் சொல் பொருள்: சாயை: கீர்த்தி. 39

பொன்னைக் கொண்டுஉரை கல்மீதே
நிறம்எ ழஉரைத் தாற்போல்
உன்னைக் கொண்டுஎன் நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்;
உன்னைக்கொண்டு என்னைஉள் வைத்தனன்;
என்னையும் உன்னில் இட்டேன்;
என்அப் பா!என் இருடீ
கேசா! என்உயிர்கா வலனே.

கருத்து: தங்கத்தைக் கொண்டு உரைகல் மேல் நிறம் தோன்ற உரைத்ததைப் போல, உன்னைக் கொண்டு என் நாவினுள்ளிடத்தே மாற்று இல்லாமல் உரைத்துக்கொண்டேன்; உன்னை எடுத்துக் கொண்டு எனக்குள்ளே இட்டேன்; என்னையும் உனக்குள் புகுத்தினேன். என் அப்பனே! என் திருமாலே! என் உயிர்க்குக் காவலாக அமைந்தவனே.

"வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும் இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்" என்பர் கம்பர். 40

வேயர் தங்கள் குலத்துஉதித்த
விட்டு சித்தன் மனத்தே
கோயில் கொண்ட கோவலனை,
கொழுங்கு ளிர்முகில் வண்ணனை,
ஆயர் ஏற்றை, அமரர்கோவை,
அந்த ணர்தம் அமுதத்தினை,
சாயை போலப் பாட
வல்லார் தாமும்அணுக் கர்களே.

கருத்து: பார்ப்பனக் குலத்திலே பிறந்த விட்டு சித்தனுடைய உள்ளத்தே கோயில் கொண்டு குடியிருந்த கோபாலனை, கொழுத்த குளிர்ந்த மேக நிறத்தானை, இடையர் சிங்கத்தை, தேவர் தேவனை, அந்தணர்களின் அமுதமானவனை, நிழல் போலத் தொடர்ந்து பாடவல்லார் தாமும் அணுக்கத் தொண்டர்கள் ஆவர்.

விட்டு சித்தன், பெரியாழ்வார். 41

குன்றுஎடுத்து ஆநிரை காத்தபிரான்
கோலவ னாய்க்குழல் ஊதிஊதி,
கன்றுகள் மேய்த்துத்தன் தோழரொடு
கலந்துஉடன் வருவானைத் தெருவில்கண்டு
என்றும் இவனைஒப் பாரைநங்காய்!
கண்டறி யேன்,ஏடி! வந்துகாணாய்;
ஒன்றும்நில் லாவளை; கழன்றுதுகில்
ஏந்தின முலையும்என் வசமலவே.

கருத்து: கோவர்த்தனம் எனும் மலையை எடுத்துப் பசுக் கூட்டங்களைக் காப்பாற்றிய தலைவன் இடையனாயிருந்து புல்லாங்குழலை ஊதி ஊதி, கன்றுகளை மேய்த்துக் கொண்டு, தனது தோழர்களோடு கூடி வரும்போது, வீதியில் அக்கண்ணனைக் கண்டேன்; ஏ! பெண் பிள்ளாய்! இவனை ஒத்தவர்களை என்றும் நான் கண்டதில்லையடி; அடியே! நீ வந்து பாரேண்டி; ஒரு வளையல் கூட கையில் தங்க வில்லை; ஆடை அவிழ்ந்து விழுகின்றது; நிமிர்ந்த இளங் கொங்கையும் என் வயமாக இல்லை.

இது கண்ணனைக் காதலித்த ஒருத்தியின் கூற்று. 43

காறை பூணும்; கண்ணுடி
காணும்;தன் கையில் வளைகுலுக்கும்;
கூறை உடுக்கும்; அயர்க்கும்;தன்
கொவ்வைச் செவ்வாய் திருத்தும்;
தேறித் தேறிநின்று ஆயி
ரம்பேர்த் தேவன் திறம்பிதற்றும்;
மாறில் மாமணி வண்ணன்
மேல்இவள் மால்உறு கின்ருளே.

கருத்து: நகை அணிவாள்; கண்ணுடி முன் நின்று அழகைக் காண்பாள்; கைவளையைக் குலுக்குவாள்; நல்ல ஆடை உடுப்பாள்; பிறவற்றை மறப்பாள்: கொவ்வைக்கனி போன்ற வாயை அழகு செய்வாள்; தெளிந்து தெளிந்து நின்று ஆயிரம் பேரையுடைய திருமாலின் திறத்தைப் புலம்புவாள். மாறுதல் இல்லாத சிறந்த நீல மேனி நெடியோன் மேல் இப் பெண் மையல் கொண்டு மயங்குகின்ருள்.

இது கண்ணனைக் காதலித்த மகள் திறத்தைத் தாய் கூறுவது. இதனைத் தாயார் பாசுரம் என்பது வைணவ மரபு. நல்தாய் இரங்கல் துறை என்பர் இலக்கண நூலார்.

அரும் சொல் பொருள்: காறை: பெண்கள் கழுத்தில் அணியும் ஒருவகை அணி. கூறை: உடை. 43

ஒருமகள் தன்னை உடையேன்;
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்;
செங்கண்மால் தான்கொண்டு போனுன்;
பெருமகள் ஆய்க்குடி வாழ்ந்து
பெரும்பிள்ளை பெற்ற அசோதை
மருமக ளைக்கண்டு உகந்து
மணாட்டுப் புறம்செய்யும் கொல்லோ,

கருத்து: ஒரே ஒருமகளைப் பெற்றேன்; உலகத்திலே அவள் அடைந்த நிறை புகழ் காரணமாகத் திருமகளைப் போல அவளை வளர்த்தேன்; செங்கண்மால் அவளைக் கொண்டு போய் விட்டான்.

பெருமகளாய் இடைக்குடியிலே வாழ்ந்து சிறப்பான பெரிய பிள்ளையைப் பெற்ற அசோதா தேவி, என் ஒரு மகளாகிய அவள் மருமகளைக் கண்டு மகிழ்ந்து மணமகளாகச் செய்வாளா? இதுவும் தாயார் பாசுரமே. இப்பாசுரத்தைத் தந்தையார் பாசுரமாகவும் கொள்ளலாம். பெரியாழ்வார் தன் ஒரே மகளாகிய ஆண்டாளைச் செங்கண்மால் கொண்டுபோன நிலையை நினைந்து உருகிக் கூறுவது இப் பாசுரம். 44

எழு சீர் விருத்தம்

கண்ணைக் குளிரக் கலந்துஎங்கும் நோக்கிக்
கடிகமழ் பூங்குழ லார்கள்
எண்ணத்துள் என்றும் இருந்து;தித் திக்கும்
பெருமானே! எங்கள் அமுதே!
உண்ணக் கனிகள் தருவன்; கடிப்பொன்றும்
நோவாமே காதுக்கு இடுவன்;
பண்ணைக் கிழியச் சகடம் உதைத்திட்ட
பற்பநா பா!இங்கே வாராய்.

கருத்து: கண் குளிரக் கூடிக் கலந்து எங்கும் பார்த்து மணம் வீசும் மலர்க் குழலார்தம் மனத்துள் என்றும் அமர்ந்து இனிக்கும் எம் பெருமானே! எங்கள் மருந்தே! தின்பதற்கு உனக்குப் பழம் தருவேன்; வலிக்காமல் காதுக்குக் கடுக்கன் போடுவேன்; நிலம் பிளப்ப வண்டி வடிவமாக வந்த அசுரனை உதைத்துத் தள்ளிய திருமாலே! இங்கே வருவாயாக.

அரும் சொல் பொருள்: கடி: மணம். கடிப்பு: காதணி. பண்ணை: நிலம். 45

சீலைக் குதம்பை ஒருகாது; ஒருகாது
செந்நிற மேல்தோன் றிப்பூ;
கோலப் பணைக்கச்சும் கூறை உடையும்
குளிர்முத் தின்கோ டாலமும்
காலிப்பின் னேவரு கின்ற கடல்வண்ணன்
வேடத்தை வந்து காணீர்;
ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கையீர்!
நானே;மற் றாரும் இல்லை.

கருத்து: ஒரு காதிலே துணியைச் சுருட்டி வைத்திருக்கிறான்; இன்னொரு காதிலே சிவப்பு நிறமாக மேலே தோன்ற ஒரு பூவை அணிந்திருக்கிறான்; அழகிய பருத்த இடைக்கட்டியும் ஆடையும் குளிர்ந்த முத்துமாலையும் போட்டுக்கொண்டு பசுக்கள் பின்னே வருகின்ற கடல்நிறக் கடவுள் வேடத்தை வந்து பாருங்கள்! இவ் உலகத்திலே பிள்ளையைப் பெற்றவள் நானே; வேறு யாரும் இலர் நங்கையரே! இது அசோதைப் பிராட்டியின் பெருமிதப் பேச்சு.

அரும் சொல் பொருள்: குதம்பை: காதணி. கூறை: உடை, இருமொழி: ஒரு பொருள். கோடாலம்: மாலை. 46

குற்றம் இன்றிக் குணம்பெ ருக்கிக்
குருக்க ளுக்குஅநு கூலராய்,
செற்றம் ஒன்றும் இலாத வண்கையி
ஞர்கள் வாழ்திருக் கோட்டியூர்
துற்றி, ஏழ்உலகு உண்ட தூமணி
வண்ணன் தன்னைத் தொழாதவர்,
பெற்ற தாயர் வயிற்றி னைப்பெரு
நோய்செய் வான்பிறந் தார்களே.

கருத்து: குற்றம் இல்லாமல் குணத்தைப் பெருக்கி ஆசாரியர்கட்கு அநுகூலம் செய்பவராய் தகாத எதுவும் செய்யாத வள்ளன்மை மிக்க கையினர் வாழுகின்ற திருக்கோட்டியூரை அடைந்து, ஏழு உலகத்தையும் உண்ட தூய நீல மேனி நெடுமாலை வணங்காதவர், தங்களைப் பெற்ற அன்னைமார் வயிற்றை வருத்தப் பிறந்தவர்களே. அன்னார் பிறப்பால் ஒரு பயனும் இல்லை. 47

சலம்பொதி உடம்பில் தழல்உமிழ் பேழ்வாய்ச்
சந்திரன் வெங்கதிர் அஞ்ச
மலர்ந்தெழுந்து அணவி மணிவண்ண உருவின்
மால்புரு டோத்தமன் வாழ்வு,
நலம்திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும்
நாரணன் பாதத்து ழாயும்
கலந்துஇழி புனலால் புகர்படு கங்கைக்
கண்டம்என் னும்கடி நகரே.

கருத்து: நீர்மயமான (கங்கையின்) உடலிலே நெருப்பைக் கக்குகின்ற பிளந்த வாயையுடைய சந்திரனும் சூரியனும் அஞ்ச, மலர்ந்து எழுந்து அணையும் நீல நிற வண்ண வடிவுடைய திருமாலாகிய புருடோத்தமன் வாழ்வு கூர்வது எங்கு? அழகு பொருந்திய சடையைப் பெற்ற சிவபெருமான் முடியில் சூடிய கொன்றைப் பூவையும், நாராயண மூர்த்தி அடியில் கிடந்த துளசியையும் விரவி அரித்து வருகின்ற கங்கை நீரினால் வனப்பொடு விளங்குகின்ற கங்கைக் கண்டம் என்னும் காவல் நகரமே.

அரும் சொல் பொருள் : சலம்: நீர்: வெங்கதிர்: இரவி. அணவுதல்: பொருந்துதல். புகர்: அழகு. 48

எண்சீர் விருத்தம்

புவியுள்நான் கண்டதோர் அற்புதம் கேளீர்!
பூணி மேய்க்கும்இளம் கோவலர் கூட்டத்து
அவையுள்,நா கத்தணை, யான்குழல் ஊத,
அமரலோ கத்துஅள வும்சென்று இசைப்ப,
அவிஉணு மறந்து வானவர் எல்லாம்
ஆயர் பாடிநிறை யப்புகுந்து ஈண்டி,
செவியுள்நா வின்சுவை கொண்டு மகிழ்ந்து,
கோவிந்த னைத்தொடர்ந்து என்றும் விடாரே.

கருத்து : உலகிலே நான் கண்ட ஓர் அதிசயத்தைக் கேளுங்கள். மாடு மேய்க்கும் இடைச் சிறுவர் கூட்டத்துள்ளே பாம்பணையானாகிய கண்ணன் வேய்ங்குழல் ஊத, அவ் ஓசையானது வானுலகம் வரை போய் முழங்க, அதனைக் கேட்டுத் தேவரெலாம் வேள்வி உண்டியை மறந்து இடையர் ஊர் நிறையும்படி போந்து நெருக்கி, காதுகளிலே கண்ணன் நாவோசைச் சுவைத்தேன் பாய்தலால் களித்து, அக்கோவிந்தனை விடாது என்றும் பின் தொடர்ந்து திரிவார் ஆயினர்.

அரும் சொல் பொருள் : பூணி: மாடு.

இக்கருத்தைச் சேக்கிழார் அடிகள் ஆனாய நாயனார் புராணத்திலே பின் வரும் பாடலால் கூறுகிறார்.

"சுரமகளிர் கற்பகப்பூஞ் சோலைகளின் மருங்குஇருந்து
கரமலரின் அமுதுஊட்டும் கனிவாய்மென் கிள்ளையுடன்
விரவுநறும் குழல் அலைய விமானங்கள் விரைந்தேறிப்
பரவியஏழு இசையமுதம் செவிமடுத்துப் பருகினார்." 49

சிறுவிரல் கள்தட விப்பரி மாறச்
செங்கண்கோ டச்செய்ய வாய்கொப்ப ளிப்ப,
குறுவெயர் புருவம் கூட லிப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதின போது,
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்துபடு காடு கிடப்ப,
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந்திறங் கிச்செவி ஆட்டகில் லாவே.

கருத்து : சின்ன விரல்கள் குழல் துவாரத்தை மாறி மாறித் தடவ, செங்கண் வளைய, சிவந்த வாய் விம்ம, சிறு வியர்வை அரும்ப, புருவம் நிமிர்ந்து மேல் ஏற, கோவிந்தன் குழல் ஊதியபோது, பறவைக் கூட்டங்கள் எல்லாம் கூட்டைவிட்டு வந்து படுகாட்டிலே கிடந்துவிட்டன; பசுக் கூட்டங்கள் தன்வயம் இழந்து கால்களைப் பரப்பிக்கொண்டு குனிந்து காதுகளைக் கூட ஆட்டாமல் கிடந்தன. 50

சோர்வி னுல்பொருள் வைத்ததுஉண் டாகில்
சொல்லு சொல்என்று சுற்றும் இருந்தே
ஆர்வி னவிலும் வாய்திற வாதே
அந்த காலம் அடைவதன் முன்னம்,
மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூஇட வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே.

கருத்து: தளர்ச்சியினுல் பொருளை எங்கேனும் வைத்திருந்தால் சொல்லி விடு சொல்லிவிடு எனச் சுற்றிலும் இருந்து யார் கேட்டாலும் வாய் திறந்து பேச முடியாத முடிவுகாலம் வருவதற்கு முன், நெஞ்சம் என்ற ஒரு கோவிலை உண்டாக்கித் திருமால் என்னும் கடவுளை அதனுள் வைத்து, அன்பு என்ற பூப் போட்டு வணங்க வல்லவர், எம தண்டனையிலின்றும் தப்பிப் பிழைப்பர்.

அரும் சொல் பொருள் : அரவதண்டம்: எமதண்டனை. 51

துப்புஉடை யாரை அடைவது எல்லாம்
சோர்வுஇடத் துத்துணை யாவர் என்றே;
ஒப்புஇலேன், ஆகிலும் நின்அ டைந்தேன்,
ஆனைக்கு நீஅருள் செய்த மையால்,
எய்ப்புஎன்னை வந்து நலியும் போதுஅங்கு
ஏதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்:
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்;
அரங்கத்து அரவணைப் பள்ளி யானே.

கருத்து: சிறப்பு உடையாரைச் சேர்வதெல்லாம் எதற்கு? தளர்ந்த காலத்து உதவுவர் என்றுதானே? இழிவில் நான் எனக்கு ஈடே இல்லாதவன்; என்றுலும் நின்னை அடைக்கலம் புகுந்தேன்; ஏன்? யானைக்குக்கூட நீ அருள் செய்ததை அறிந்தமையால். அயர்ச்சி வந்து என்னை வாட்டும்போது உன்னை நினைக்கும் அறிவு எனக்கு எங்கே இருக்கப் போகிறது? ஆதலால் அந்தக் காலத்துக்கு வேண்டியதை இப் பொழுதே சொல்லிவைக்கிறேன்: திருவரங்கப் பெருநகரிலே பாம்புப் படுக்கையில் பள்ளிகொண்ட பெருமானே. 52

செஞ்சொல் மறைப்பொருள் ஆகி நின்ற
தேவர்கள் நாயக னே'எம் மானே!
எஞ்சலில் என்னுடை இன்அமு தேயோ!
ஏல்உல கும்உடை யாய்!என் அப்பா!
வஞ்ச உருவின் நமன்த மர்கள்
வலிந்து நலிந்துஎன்னைப் பற்றும் போது
அஞ்சலை என்றுஎன்னைக் காக்க வேண்டும்;
அரங்கத்து அரவணைப் பள்ளி யானே.

கருத்து: செம்மையான சொற்களைக் கொண்ட வேதங்களின் பொருளாகி நின்ற அமரர்தம் தலைவனே! எம்பெருமானே! எடுக்கக் குறையாத எனது இனிய அமுதமே! ஏழு உலகையும் ஆள் உடையவனே! என் தந்தையே! வஞ்சக வடிவம் கொண்ட எம படர்கள் வலி கொண்டு என்னைப் பிடித்து வருத்தும்போது, அஞ்சாதே என்று அபயம் அளித்து என்னைக் காப்பாற்றவேண்டும். அரங்கமாநகரிலே அரவுப் பாயலில் அறிதுயில் கொண்டவனே 53

வாக்குத் தூய்மையி லாமையி னாலே
மாத வா!உன்னை வாய்க்கொள்ள மாட்டேன்;
நாக்கு நின்னைஅல் லால்அறி யாது;
நான்அது அஞ்சுவன்; என்வசம் அன்று;
மூர்க்குப் பேசுகின் றான்இவன் என்று
முனிவா யேலும்என் நாவினுக்கு ஆற்றேன்;
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்
கார ணா!கரு ளக்கொடி யானே!

கருத்து: என் வார்த்தையில் புனிதத்தன்மை யில்லாமையால், மாதவனே! நின்னை வாயில் வைத்துப் போற்றமாட்டேன்; ஆனால் என் நாக்கு உன்னைத் தவிர வேறு எவரையும் சொல்லி அறியாது; நான் அந்த நாவுக்குப் பயப்படுவேன்; அது என் வசமாக இல்லை; மூர்க்கத் தனமாகப் பேசுகின்றான் இவன் எனக் கோபிப்பாயானாலும் என் நாவுக்கு நான் ஈடுகொடுக்க மாட்டேன்; காக்கை வாயினின்று வரும் கட்டுரையையும் ஏற்றுக்கொள்வார் உலகத்தார்; உலகிற்குக் காரணமானவனே! கருடக்கொடி யுடையவனே! 54

நெடுமை யால்உலகு ஏழும் அளந்தாய்,
    நின்ம லா!நெடி யாய்!அடி யேனைக்
குடிமை கொள்வதற்கு ஐயுற வேண்டா,
    கூறை சோறிவை வேண்டுவ தில்லை;
அடிமை என்னும்அக் கோயின்மை யாலே
    அங்குஅங் கேஅவை போதருங் கண்டாய்!
கொடுமைக் கஞ்சனைக் கொன்று,நின் தாதை
    கோத்த வன்தளைக் கோள்விடுத் தானே!

கருத்து: நீண்டு உலகு ஏழையும் அளந்தவனே! மலமற்றவனே! நெடியவனே! அடிமையைக் குடியாளாக ஏற்றுக்கொள்ள ஐயம் வேண்டா; அடிமைக்கு ஆடையும் சோறும் வேண்டுவதில்லை; அடிமை என்று சொல்லும் கோயில் முறையினால் அங்கங்கே அவை கிடைத்து விடும்; கொடுமை மிக்க கஞ்ச மாமனைக் கொன்று, உன் தந்தையாகிய வாசுதேவனை வலிய தளையிட்டு அக் கஞ்சன் வைத்த சிறையினின்றும் விடுவித்த கண்ணா! 55

ஆண்டாள்

திருப்பாவை

கொச்சகக் கலிப்பா

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நல்நாளால்;
நீர்ஆடப் போதுவீர்! போதுமினோ, நேர்இழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன், நந்தகோ பன்குமரன்,
ஏர்ஆர்ந்த கண்ணி யசோதை இளம்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்,
நாரா யணனே நமக்கே பறைதருவான்;
பாரோர் புகழப் படிந்தேல்,ஓர் எம்பாவாய்!

மாணிக்க வாசகர், கடைசிப் பாட்டில், "மார்கழி நீர் ஆடேல் ஓர் எம்பாவாய்" என முடிக்கின்றார். ஆண்டாள், முதற் பாட்டில், "மார்கழித் திங்கள்" என்று தொடங்குகின்றார்.

நேரான நகையை அணிந்த பெண்களே! சிறப்பு நிறைந்த ஆயர்பாடியிலே உள்ள செல்வச் சிறுமிகளே!

கூர்மையான வேலைக் கொண்ட கொடுந் தொழிலுடையவனான நந்தகோபன் மகனும், எழில் நிறைந்த கண்களையுடைய யசோதைப் பிராட்டியின் இளஞ் சிங்கமும், கரிய திருமேனியும் சிவந்த கண்களும் ஒளிமிக்க சந்திரன் போன்ற முகமும் பெற்றவனாகிய நாராயணனானவன், நாம் விரும்பிய பொருளையெல்லாம் தருவான்; இம் மார்கழி மாதத்தில் முழுமதி விளங்கித் தோன்றும் பௌர்ணமி நாளாகிய இன்று, உலகத்தாரெல்லாம் புகழுமாறு குடைந்து நீராடப் போகின்றவர்களே! வாருங்கள். 56

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்கு,
செய்யும் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்உண்ணோம்; பால்உண்ணோம்; நாட்காலே நீர்ஆடி,
மையிட்டு எழுதோம்; மலர்இட்டு நாம்முடியோம்,
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றுஓதோம்;
ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி,
உய்யுமாறு எண்ணி உகந்தேல்,ஓர் எம்பாவாய்!

பூமியில் வாழுகின்றவர்களே! நாங்கள் நமது நோன்புக்குச் செய்கின்ற காரியங்களைச் சொல்லுகின்றோம்; கேளுங்கள்.

திருப்பாற் கடலிலே மெதுவாகக் கண்வளர்கின்ற கடவுளது திருவடிகளைப் பாடிக்கொண்டிருப்போம்; நெய் சாப்பிடமாட்டோம்; பால் பருக மாட்டோம்; அதிகாலையில் நீராடுவோம்; கண்கட்கு மைப்பூச மாட்டோம்; கூந்தலுக்குப் பூ முடிக்க மாட்டோம்; செய்யத்தகாத எதையும் செய்ய மாட்டோம்; தீமை தரும் பொய்களை எங்கும் சென்று பேசமாட்டோம்; ஐயமும் பிச்சையும் எவ்வளவு முடியுமோ, அவ்வளவும் கொடுப்போம்; இவ்வாறு அனைத்தும் செய்து கடைத்தேறும் வகையை எண்ணி மகிழ்வோம்.

ஐயம், பிச்சை இரண்டும் வேறாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஐயம் இல்லறத்தார்க்கும், பிச்சை, மற்றவர்க்கும் இடப்படுவது என்று இங்குக் கருதப்பட்டிருப்பதாக நினைக்கலாம்.

கைகாட்டுதல், எடுத்துக் கொடுத்தல் என்னும் பொருளது.

''வையத்து வாழ்வீர்காள்'' என்று கூறுங்கால், ''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்'' என்ற குறட்பகுதி ஆண்டாள் மனத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். 57

ஓங்கி உலகுஅளந்த உத்தமன் பேர்பாடி,
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்குஇன்றி நாடுஎல்லாம் திங்கள்மும் மாரிபெய்து,
ஓங்கு பெரும்செந்நெல் ஊடு கயல்உகள,
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்குஇருந்து சீர்த்த முலைபற்றி,
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேல்,ஓர் எம்பாவாய்!

நீண்டு உலகத்தை அளந்த உத்தமனாகிய திருமாலின் பெயரைப்பாடி, நாம் நமது நோன்பிற்கு வேண்டியவற்றைச் சொல்லி நீராடினோமானால், தீமையில்லாமல் நாடு முழுதும் மாதம் மூன்று மழை பொழியும்; அதனால் செந்நெல் பருத்து ஓங்கி வளரும்; அதன் நடுவிலே கயல் மீன்கள் துள்ளி விளையாடும்; அவ் வயல் நீரிலே முளைத்திருக்கின்ற அழகிய நீலோற்பலப் பூவிலே, புள்ளிகளையுடைய வண்டுகள் மதுவைக் குடித்து மறந்து உறங்கும்; கட்டுத்துறையுள் புகுந்து அங்கு அமர்ந்து, பருத்துச் சிறப்பாக அமைந்திருக்கின்ற காம்பைப் பிடித்து இழுக்க, தேக்கி ஒளித்து வைத்துக் கொள்ளாமல் குடங்களை நிறைக்கும், வள்ளல் தன்மை வாய்ந்த பெரிய பசுக்கள். இத்தகைய நீங்காத சம்பத்துப் பெருகும். 58

ஆழி மழைக்கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்;
ஆழியுள் புக்கு, முகந்து கொடு, ஆர்த்துஏறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து,
பாழிஅம் தோள்உடைப் பத்மநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றுஅதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய்; நாங்களும்
மார்கழிநீர் ஆட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!

ஆழி மழைக் கண்ணா!: கடலனைய பெருமை வாய்ந்த மழையாகிய கருணையாளனே! கொஞ்சம்கூட மறைக்காதே; கடலுக்குள் புகுவாயாக; கடல் நீரை அள்ளிக்கொள்; ஆரவாரத்தோடு மேலே எழு; ஊழிக் காலத்தும் அழியாது நிற்கும் முதல்வனாகிய திருமாலின் உருவத்தைப் போலக் கறுப்பு நிறத்தைப் பெறு; பருத்த அழகான தோள்களையுடைய அப் பதுமநாபன் கையில் பிடித்திருக்கின்ற சக்கரத்தைப் போல மின்னு; அப்பெருமானது வலம் புரிச் சங்கை ஒப்பப் பெரு முழக்கம் செய்; அந் நாராயணனது சாரங்கம் என்னும் வில்லினின்றும் உதைபட்டுக் கிளம்பிய அம்பு மாரி போல உலகெலாம் வாழக் காலந் தாழ்க்காமல் பெய்பி; நாங்களெல்லோரும் மகிழ்ந்து மார்கழி நீர் ஆடவேண்டும்.

இங்கு ஆண்டாள், திருமாலை "ஊழி முதல்வன்" என்று உரைக்கின்றார்; அங்கு மணிவாசகர், சிவனை "ஊழி முதல்வன்" எனக்கூறினார். "மார்கழிநீர் ஆட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்" என்பது திருப்பாவை; "போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்" என்பது திருவெம்பாவை.

இந்த நாச்சியாரின் நான்காவது திருப்பாவையும், அடிகளின் "முன் இக் கடலைச் சுருக்கி" என்ற பதினாறும் திருவெம்பாவையும் ஒத்த கருத்துடையன. இரண்டும் மழைவேண்டும் பாடல்கள். அது சைவ மழைப்பாட்டு; இது வைணவ மழைப்பாட்டு.

அங்கு மழைக்கு உமையவள் நிறம் உரைக்கப்பெற்றது; இங்கு, திருமால் நிறம் செப்பப்பட்டது. ஆண்டு மின்னலுக்குத் தேவியின் இடை உவமிக்கப்பட்டது; ஈண்டு மாலின் சக்கரத்தாழ்வார் உவமை கூறப்படுகிறார். அவ்விடத்து மேக முழக்கத்துக்கு அம்பிகையின் கிண் கிணி ஓசை ஒப்பிடப் பெற்றது; இவ்விடத்து நெடுமால் கையில் பிடித்து ஊதும் பாஞ்சசன்ய ஒலி உவமையாக்கப்பெற்றது. திருவெம்பாவை, பார்வதியின் இன் அருளைப் போல மழை பொழிய வேண்டுகிறது; திருப்பாவை. நாராயணனின் வில்லினின்று கிளம்பும் பாணங்களைப்போல மழை கொட்டக் கேட்கிறது,

சைவ மழை பொழிந்தாலும் சரி; வைணவ மழை பொழிந்தாலும் சரி. மழை வேண்டும்.

"விசும்பில் துளிவீழின் அல்லால் மற்றுஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது"

மாயனை, மன்னும் வடமதுரை மைந்தனை,
தூயபெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை,
தூயோம்ஆய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது,
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும்; செப்பேல்,ஓர் எம்பாவாய்!

மாயனை, நிலைபேறுடைய வடமதுரையில் பிறந்த மைந்தனை, பரிசுத்த மான நிறை நீரைப் பெற்ற யமுனை யாற்றின் கரையில் வளர்ந்தவனை, இடையர் குலத்திலே தோன்றிய அழகான விளக்குப் போன்றவனை, பெற்ற தாயின் குடல் எங்கும் விளங்கித் தோன்றுமாறு செய்த தாமோதரனை, தூய உடலும் உள்ளமும் கொண்டு வந்து நல்ல பூக்களைத் தூவி வணங்கி, வாயினால் அம்மூர்த்தியின் புகழ் பேசி, மனத்தினால் அப் பெருமான் திறத்தை நினைப்போமானால், முன் செய்த தவறுகளும் இனிச் செய்ய இருக்கும் பிழைகளும் நெருப்பில் இட்ட பஞ்சாக அழியும். ஆதலால் அவன் புகழைப்பாடு. 60

புள்ளும் சிலம்பினகாண், புள்அரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேர்அரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய்! பேய்முலை நஞ்சுஉண்டு,
கள்ளச் சகடம் கலக்கு அழியக் கால்ஓச்சி,
வெள்ளத்து அரவில் துயில்அமர்ந்த வித்தினை,
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்தே அரிஎன்ற பேர்அரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேல்,ஓர் எம்பாவாய்!

இது முதல் பத்துப் பாடல்கள் தூங்குபவர்களை எழுப்புவன.

பறவைகள் கத்துகின்றன; கருடனை வாகனமாகக் கொண்ட தலைவனது கோயிலிலே, விடிவதை உணர்த்தித் துயில் எழுப்பும் வெண் சங்கின் பேரோசை உன் காதுகளில் விழவில்லையா? பெண்பிள்ளாய்! எழுந்திரு; பூதகியின் நச்சுப்பாலைக் குடித்து, வஞ்சகமாக வண்டி வடிவமாக வந்த அசுரன் கட்டு அழியுமாறு காலால் உதைத்து, பாற்கடலிலே பாம்பணை மீது அறிதுயில் கொண்ட, எல்லாப் பொருட்கும் விதையாக அமைந்தவனை, மனத்திலே இருத்தி, முனிவர்களும் யோகிகளும் மெதுவாக எழுந்தே, "அரி அரி" எனக் கூறும் பெருமுழக்கமானது எங்கள் உள்ளத்திலே புக, நாங்கள் குளிர்ச்சி அடைந்திருக்கின்றோம். இதனை ஏற்றுக் கொள்: ஆராய்ந்து பார்: எம்பாவையே! 61

"கீசுகீசு'' என்றுஎங்கும் ஆனைச்சாத் தன்,கலந்து
பேசின பேச்சுஅரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து,
வாச நறும்குழல் ஆய்ச்சியர், மத்தினால்
ஓசைப் படுத்த தயிர்அரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராய ணன்மூர்த்தி,
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேசம் உடையாய்! திறவேல்,ஓர் எம்பாவாய்!

"கீசுகீசு'' என இரைந்து கொண்டு கரிக் குருவிகள் சேர்ந்து கத்துகின்ற ஓசை கேட்கவில்லையா உனக்கு? தூக்கப் பேய் பிடித்த பெண்ணே!

அச்சுத் தாலியும் முளைத்தாலியும் கலகல என ஒலிக்க, கையைத் திரட்டி மாற்றி மாற்றி, மணம் வீசும் நல்ல கூந்தலையுடைய இடையர் பெண்கள், மத்தினாலே கடைகிற தயிர் ஓசையும் கேட்க வில்லையா? பெண்கள், தலைவியே! நாராயணனாகிய மூர்த்தியை-கேசவனை-நாங்கள் பாடுகின்றோம்; நீ கேட்டுக்கொண்டேபடுக்கையில்கிடக்கின்றாயா?ஒளியுடையவளே!திறகதவை.

கீசுகீசு: ஒலிக்குறிப்பு. ஆனைச்சாத்தன்: கரிக்குருவி; காசு: அச்சுத் தாலி. பிறப்பு: முளைத்தாலி. 62

கீழ்வானம் "வெள்''என்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்; மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்து,உன்னைக்
கூவுவான் வந்துநின்றோம்; கோது குலம்உடைய
பாவாய்! எழுந்திராய்; பாடிப் பறைகொண்டு,
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்,
ஆவாஎன்று ஆராய்ந்து அருளேல்,ஓர் எம்பாவாய்!

கீழ் வானமானது வெளுத்ததாக, எருமைகள் காலையில் சிறு விடுதலை பெற்று, மேயும் பொருட்டு, பரவியிருக்கின்றன. வழிபாட்டுக்குச் சென்றவர்கள் தவிர, மிச்சப் பேர் போகின்றவரையும் போகாமல் காத்துக் கொண்டு வந்து வாசலில் உன்னைக் கூப்பிடுதற்கு நின்றோம்: உள்ளக் களிப்பு வாய்ந்த பெண்ணே! எழுந்திருப்பாயாக.

குதிரை வடிவமாக வந்த அசுரனுடைய வாயைப்பிளந்தவனை, மல்லர்களை அழித்த, இறைவர்கட்கெல்லாம் இறைவனை அடைந்து, பாடி. பறையைப் பெற்றுக்கொண்டு, நாம் சேவை செய்வோமானால். 'ஆ! வா', என்று அழைத்து, நம் காரியத்தை ஆராய்ந்து அருள் சுரப்பான்,

காலையில் பால் கறப்பதற்கு முன் சிறிது நேரம் அவிழ்த்து விடப்படுவது "சிறு வீடு'' என்று கூறப்பட்டது.

சிறு வீடு இளமேய்ச்சல்.

கடைசி அடியில் அருளும் என்பது குறைந்து அருள் என நின்றது 63

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்குஎரிய,
தூபம் கமழத் துயில்அணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்,
மாமீர்! அவளை எழுப்பீரோ, உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றுஎன்று
நாமம் பலவும் நவின்றேல்,ஓர் எம்பாவாய்!

பரிசுத்தமான இரத்தினங்கள் இழைக்கப்பட்ட மாடியிலே, சுற்றிலும் விளக்குகள் எரியவும், அகில், சந்தனம் முதலியவற்றின் புகை மணக்கவும், தூங்குவதற்கென்றே அமைக்கப் பெற்ற படுக்கையின் மீது கண் உறங்குகின்ற அம்மான் பெண்ணே! மாணிக்கம் பதித்த கதவின் தாளைத் திற,

இவ்வளவு அருமையாக மாமன் மகளை எழுப்பியும் அத்தூங்குமூஞ்சி எழுந்திருக்கவில்லை, பக்கத்தில் அவள் அன்னை—வந்தவர்களின் மாமி படுத்திருப்பாள் என்பது தெரியும்.

மாமியாரே! தங்கள் மகள் எங்கட்குப் பதிலே சொல்லாததால் ஊமையா? அல்லது, நாங்கள் அழைப்பது காதில் ஏருத செவிடா? உண்மையிலேயே உறக்கந்தானு? ஒருகால் நீங்கள் ஏதும் பாதுகாப்புச் செய்துவிட்டீர்களா? அன்றி, பெரிய தூக்கமாகிய மந்திரத்தில் கட்டுப்பட்டு விட்டாளா? எப்படியிருந்தாலும் சரி,

மாமாயன், மாதவன், வைகுந்தன் என்று என்று, அவனுடைய ஆயிரம் பெயரையும் சொல்லி, அவளை எழுப்ப மாட்டீர்களா? 64

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ, வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாராய ணன்,நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால், பண்டுஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேல்,ஓர் எம்பாவாய்!

ஒரு நங்கை; தவசிபோல் காணப்படுவாள்; விரதமெல்லாம் அநுட்டிப்பாள்; சுவர்க்கத்தை எட்டிப் பிடிப்பவள் போல் பேசுவாள்; அத்தகையவள் விடிந்த பிறகும் நன்றாகத் தூங்குகின்றாள்; அவள் வீட்டு வாசலில் நின்று பேசுகின்றனர் ஒரு கூட்டத்தார்.

நோன்பு இருந்து சுவர்க்கம் செல்லுகின்ற தாயே! நீ வாசல் கதவைத் தான் திறக்கவில்லை என்றால், உள்ளே இருந்தபடியே ஒரு வார்த்தையாவது பேசக் கூடாதோ?

மணக்கின்ற துளசி மாலையை முடியிற் சூடிய நாராயணனும் நாம் போற்ற, நமது விருப்பத்தை முடித்து வைக்கின்றவனுமாகிய, ‘‘நவையறு குணங்கள் என்னும் பூண் எலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி” யாம் இராமபிரானால், முன்னொரு காலத்தில் எமன் வாயிலே தள்ளப்பட்ட கும்பகருணன் என்பவன், உன்னிடத்திலே உறக்கப் போட்டியில் தோல்வியடைந்து, அவனுடைய பெருந் தூக்கத்தை உனக்குத் தந்துவிட்டுப் போனானோ?

நல்ல தூக்கம் தூங்குகின்றாய்; எங்கட்கெல்லாம் அருமையான ஆபரணமாக அமைந்திருப்பவளே! தெளிந்து எழுந்து வந்து கதவைத் திற, அம்மா! 65

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து,
செற்றார் திறல்அழியச் சென்று செருச்செய்யும்
குற்றம்ஒன்று இல்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றுஅரவு அல்குல் புனமயிலே! போதராய்,
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து,நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி,நீ
எற்றுக்கு உறங்கும் பொருள்ஏல்,ஓர் எம்பாவாய்!

கன்றுக் குட்டிகளையுடைய பசுக்கூட்டங்கள் பலவற்றைப் பால் கறந்து, பகைவரது வலிமை தொலைய, அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று, போர் செய்ய வல்ல, குற்றம் எதுவும் இல்லாத இடையர்களது தங்கக் கொடி போன்ற நங்கையே!

புற்றில் வாழ் அரவு போன்ற அல்குலையுடைய, புனத்தில் திரியும் மயிலனையவளே! எழுந்துவா; உனக்கு உறவினராகிய தோழிமார் அனைவரும் வந்து, நின் வாசலிலே புகுந்து, நீலமேனி நெடுமாலின் பெயரைப் பாட, செல்வப் பெண்டாட்டியாகிய நீ, அசையாமல், மூச்சு விடாமல் எதற்காக இப்படி உறங்குகின்றாய்? இதன் பொருள்தான் என்ன?

கற்று, கன்று என்பதன் விகாரம். கறவை: பசு. கணம்: கூட்டம். கன்றையுடைய பசுக் கூட்டங்களைக் கறந்தார்கள் என்றமையால், கன்றைப் பறிகொடுத்த பசுக்களைக் கறக்கவில்லை என்பது கிடைக்கின்றது. ஒவ்வொருவரும் பல பசுக் கூட்டங்களை உடையவராக இருந்தனர் என்று தெரிகின்றது. “பல் ஆன் கோவலர் இல்லம்” என்று சிலப்பதிகார ஆசிரியர் கூறுவது இங்குப் பொருந்துவது.

ஆயர்கள் பசுவும் கறப்பார், போரும் வல்லார் என்பது சிறப்பான அமைப்பு. 66

கனைத்துஇளம் கற்றுஎருமை கன்றுக்கு இரங்கி,
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்து,இல்லம் சேறுஆக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசல்கடை பற்றி,
சினத்தினால் தென்இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடத் திறவாய்;
இனித்தான் எழுந்திராய்; ஈதென் உறக்கம்?
அனைத்துஇல்லத் தாரும் அறிந்தேல்,ஓர் எம்பாவாய்!

இப்பாவில் எருமையின் வளம் இயம்பப்படுகிறது.

ஒரு செல்வச் சீமானின் தங்கை உறங்குகின்றாள்; அவளைப் பார்த்துக் கூறுகின்றனர்.

இளம் கன்றுடைய எருமையானது, கனைத்துக்கொண்டு, தம் கன்றுக்காக இரக்கமுற்று, கன்றை நினைத்து, முலைகளின் வழியே இடைவிடாமல் பால் பெருக, நனைத்து வீடு முழுதும் சகதியாக்குகின்ற நல்ல செல்வனுடைய தங்கையே!

பனியானது எங்கள் தலையிலே விழ, உன்னுடைய கடை வாசலில் வந்து நின்று, கோபங்கொண்டு தென்னிலங்கை மன்னனாகிய இராவணனைத் தொலைத்த, நம் மனத்திற்கினியவனான இரகுராமனை, நாங்கள் பாடுகின்றோம். நீ திறக்கமாட்டேன் என்கிறாய்; இனியாவது எழுவாயாக! என்ன உறக்கம் இது? எல்லா வீட்டாரும் எழுந்துவிட்டனரே! 67

புள்ளின்வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானை, கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்;
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று;
புள்ளும் சிலம்பினகாண்; போதுஅரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீர் ஆடாதே,
பள்ளிக் கிடத்தியோ; பாவாய்! நீ நல்நாளால்;
கள்ளம் தவிர்ந்து கலந்தேல்,ஓர் எம்பாவாய்!

பகாசுரனுடைய வாயைக் கிழித்தவனை, பொல்லாத இராவணனுடைய தலைகள் பத்தையும் கிள்ளியெறிந்து தொலைத்தவனை, புகழ்ந்து பாடிக் கொண்டு பிள்ளைகள் எல்லோரும், பாவை நோற்கும் இடத்தை அடைந்து விட்டார்கள்; விடிவதை உணர்த்தும் வெள்ளிமீன் தோன்றிவிட்டது; வியாழமும் சென்றுவிட்டது; பறவைகள் ஒலமிடுகின்றன; மலர் போன்ற ரேகை பொருத்திய விழிகளைப் பெற்றவளே! பதுமை போன்றவளே! நல்ல நாளாகிய இன்று கபடத்தை விட்டு எங்களோடு சேர்ந்து, நன்றாகக் குளிருமாறு குடைந்து நீராடாமல், படுக்கையிலே கிடக்கின்றாயா? எழுந்திரு.

"புள்ளும் சிலம்பினகாண்" என்ற இதே சொல்-தொடர், திருப்பாவை 6 - ஆம் பாட்டிலும் அப்படியே இருக்கின்றது. 68

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்;
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்குஇடுவான் போதந்தார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நாஉடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணனைப் பாடேல்,ஓர் எம்பாவாய்!

உங்களுடைய வீட்டின் பின்பக்கம் உள்ள தோட்டத்தில் இருக்கிற குளத்திலே செங்கழுநீர்ப் பூக்கள் மலர்ந்துவிட்டன; அல்லி மலர்கள் இதழ் மூடிவிட்டன; காவியாடை தரித்த வெள்ளிய பற்களையுடைய துறவிகள், தங்கட்கு உரிமையுடைய கோயில்களிலே விடிவதை உணர்த்தும் சங்கை ஊதுவதற்கு வந்துவிட்டார்கள்,

எங்களை முன்னமே எழுப்புவதாக வாய்ப்பேச்சுப் பேசிய பெண்ணே! எழுந்திரு; உனக்கு வெட்கமில்லையா? நாக்குத்தான் இருக்கிறது!

சங்கு சக்கரத்தைத் தாங்கிய விசாலமான கைகளையுடைய எம்பெருமானை-தாமரை போன்ற மலர்ந்த கருணைக் கண் உடையானைப் பாடு.

இப்பாடல் "மானே நீ நென்னலே" என்ற 6-ஆவது திருவெம்பாவை
யோடு ஒப்பது 69

எல்லே! இளம்கிளியே!
இன்னம் உறங்குதியோ?
"சில்" என்று அழையேன்மின்,
நங்கைமீர்! போதர்கின்றேன்;
வல்லை,உன் கட்டுரைகள்
பண்டேஉன் வாய்அறிதும்;
வல்லீர்கள் நீங்களே,
நானேதான் ஆயிடுக;
ஒல்லைநீ போதாய்,
உனக்கென்ன வேறுஉடையை;
"எல்லாரும் போந்தாரோ?"
"போந்தார்,போந்து எண்ணிக்கொள்"
வல்ஆனை கொன்றானை;
மாற்றாரை மாற்றுஅழிக்க
வல்லானை மாயனைப்
பாடேல்,ஓர் எம்பாவாய்!

உறங்குபவளுக்கும் எழுப்புபவர்கட்கும் தர்க்கம்.

எழுப்புபவர் : இந்தா! சின்னக்கிளியே' இன்னமா தூங்குகின்றாய்?

உறங்குபவள் : "சில்" என்று சத்தம் போட்டுக் கூப்பிட வேண்டாம்; அம்மாக்களா! வந்து விடுகின்றேன்.

எழுப்புபவர் : நீ பெரிய கெட்டிக்காரி; உன் பேச்சு முன்னமே எங்கட்குத் தெரியாதா? உன் வாயை நாங்கள் அறிவோம்.

உறங்குபவள் : சாமர்த்தியம் வாய்ந்தவர்கள் நீங்களாளுலும் சரி, நானாக இருந்தாலும் சரி.

வந்தவர்கள்; விரைந்து எழுந்துவா; நீ மட்டும் என்ன எங்களைவிட உயர்ந்தவள்? நாங்கள் நிற்பது, நீ, தூங்குவதா?

வீட்டுக்காரி : வர வேண்டியவர் எல்லாரும் வந்து விட்டார்களா?

வந்த கூட்டத்தார் : ஆம் வந்து, விட்டார்கள்; வந்து எண்ணிப்பார்.

குவலயாபீடம் என்னும் வலிய யானையைக் கொன்றவனை, மாறுபட்டவரின் பெருமையைத் தொலைக்கும் வலியுடையவனை, மாயனைப் பாடு.

"ஒள் நித்தில நகையாய்' என்னும் நான்காம் திருவெம்பாவையுடன் இத் திருப்பாவை பெரிதும் பொருந்துவது. 70

நாயக னாய்நின்ற நந்தகோ பன்உடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்;
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம், துயில்எழப் பாடுவான்;
வாயால்முன் னம்முன்னம் மாற்றாதே, அம்மா, நீ
நேய நிலைக்கதவம் நீக்கேல்,ஓர் எம்பாவாய்!

கூடவேண்டிய அனைவரும் சேர்ந்து விட்டனர். இடையர் சிறுமியர் எல்லோரும் ஒன்றாக நந்தகோபன் மாளிகையை நோக்கிச் செல்கின்றனர். அங்கும் கதவு தாளிடப்பட்டிருக்கிறது. காவலாளிகளை நோக்கிக் கூறுகின்றனர்.

தலைவனாய் இருக்கின்ற நந்தகோபனுடைய அரண்மனையைக் காவல் புரிகின்றவனே! கொடிக் கட்டிய தோரண வாசலைக் காப்பவனே! இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற கதவின் தாளைத் திறப்பாயாக! இடையர் சிறுமியராகிய எங்கட்கு அலறுகின்ற பறை வாத்தியத்தை அளிப்பதாக மாயனாகிய மணிவண்ணன் நேற்றே திருவாய் மலர்ந்தருளினான்.

புனிதமாக நாங்கள் அவனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாட வந்திருக்கிறோம். உன் வாயினாலே முதல் முதலில் மறுத்துச் சொல்லி விடாமல், ஐயனே! நீ ஒன்றோடொன்று நேசமாக இணைந்திருக்கும் தன்மை கொண்ட கதவை நீக்குக. 71

அம்பரமே; தண்நீரே, சோறே, அறம்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்!
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடுஅறுத்து ஓங்கி உலகுஅளந்த
உம்பர்கோ மானே! உறங்காது, எழுந்திராய்;
செம்பொன் கழல்அடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேல்,ஓர் எம்பாவாய்!

கதவு திறக்கப்பட்டது; உள்ளே சென்று விட்டனர் சிறுமியர்; அங்கு உறங்குகின்றவர்களை எழுப்புகின்றனர்.

ஆடை, நீர், சோறு ஆகிய மூன்றையும் வேண்டுமளவு ஈந்து உவக்கும் எம்பெருமானாகிய நந்தகோபாலா! எழுந்திருப்பாயாக.

கொம்பனைய நங்கையர்க் கெல்லாம் கொழுந்தாக இருப்பவளே! குலத்துக்கு விளக்கே! எங்கள் பெருமாட்டி! யசோதையம்மா! துயில் எழுவாயாக!

வானை ஊடுருவிப் பிளந்து, நிமிர்ந்து உலகத்தை அளந்த, தேவாதி தேவனே! உறங்காதே, எழுந்திரு.

செவ்விய தங்கத்தாற் செய்யப்பட்ட வீரகண்டாமணியை அணிந்த திருவடியை யுடைய செல்வனே! பலராமா! உன் தம்பியாகிய கண்ணபிரானும் நீயும் உறங்காதீர்கள். 72

உந்து மதகளிற்றன், ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்!
வந்துஎங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவினகாண்;
பந்தார் விரலி!உன் மைத்துனன் பேர்பாட
செந்தா மரைக்கையால் சீரார் வளைஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேல்,ஓர் எம்பாவாய்!

நந்தன் அரண்மனையுள்ளே அந்தப்புரத்திலே புகுந்துவிட்டனர், ஆயர் சிறுமியர்; கதவைத் தட்டுகின்றனர்.

இனி வரும் பாடல்களில் கண்ணனும் அவன் காதலி நப்பின்னைப் பிராட்டியும் துயில் எழுப்பப் பெறுகின்றனர்.

மதத்தைப் பொழிகின்ற யானைகளையுடையவனும், எவர்க்கும் தோற்காத தோள் ஆற்றல் பெற்றவனும் ஆகிய, நந்தகோபாலனுடைய மருகியாகிய நப்பின்னை நங்காய்! மணம் வீசுகின்ற கூந்தலை உடையவளே! கதவைத் திற கோழிகள் எங்கும் வந்து கூவுகின்றன; மாதவிக் கொடிகள் படர்ந்த பந்தலின் மீது குயில் கூட்டங்கள் பன்முறையும் இனிய ஓசையை எழுப்புகின்றன.

பந்து பயில்கின்ற விரல்களை உடையவளே! உன் கணவன் பெயரை நாங்கள் பாட, செந்தாமரை போன்ற உன் கைகளால் சிறந்த வளையல்கள் குலுங்க நீ வந்து மகிழ்ந்து கதவைத் திறப்பாயாக.

இங்கு, "பந்தார் விரலி" என்றபடி "பந்தணை விரலாள்" என்று திருவாசகம் கூறும். 73

குத்து விளக்குஎரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
"மெத்''என்ற பஞ்ச சயனத்தின் மேல்ஏறி,
கொத்துஅலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை,மேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;
மைத்தடம் கண்ணினாய்! நீஉன் மணாளனை,
எத்தனை போதும் துயில்எழ ஒட்டாய்காண்!
எத்தனை ஏலும் பிரிவுஆற்ற கில்லாயால்;
தத்துவம் அன்று, தகவேல்,ஓர் எம்பாவாய்!

கண்ணன் கோலாகலமாக ஆனந்த இன்பத் துயில் கொள்கின்றான், அவன் காதுகளில் விழுகின்றது சிறுமிகள் பேச்சு.

குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது; யானைத் தந்தத்தில் வேலைப்பாடு அமைத்த கால்களையுடைய கட்டிலின்மேல். "மெத்" என்று இருக்கும் பஞ்ச சயனம் அலங்காரமாக விளங்கித் தோன்றுகிறது.

அம்மெத்தையின் மேல் ஏறி, கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கின்ற பூ முடித்த கூந்தலையுடைய பின்னைப் பிராட்டியின் கொங்கைகளை, மேலே வைத்துக் கிடக்கின்ற மலர் மார்புடைய கண்ணபிரானே! வாயைத் திறப்பாயாக.

மை தீட்டிய பெருங்கண்ணைப் பெற்ற நப்பின்னாய்! நீ உன் நாயகனைக் கொஞ்ச நேரங்கூடத் துயில் எழ விடமாட்டாய் போல் இருக்கிறதே; சிறிதேனும் அவனைப் பிரிந்து ஆற்ற மாட்டாய் போலும்! இது இயல்பான அமைப்பு அன்று; தகுதியுமாகாது.

கோடு: யானைத் தந்தம் "மெத்" என்று இருப்பதாலேயே "மெத்தை" என்ற பெயர் பெற்றது. பஞ்ச சயனம் என்பது ஐந்து விதமான தன்மை கொண்ட படுக்கை அவ் ஐந்து தன்மைகள் வருமாறு: 1. அழகு 2. குளிர்ச்சி; 3. மென்மை; 4. வெண்மை; 5. மணம். 74

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று,
கப்பம் தவிர்க்கும் கலியே! துயில்எழாய்;
செப்பம் உடையாய்! திறல்உடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில்எழாய்;
செப்புஅன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயில்எழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை,
இப்போதே எம்மைநீர் ஆட்டேல்,ஓர் எம்பாவாய்!

முப்பத்து மூன்று அமரர் தலைவர்க்கும் முன்னே போய் அவர்கள் நடுக்கத்தைப் போக்கும் வலிபடைத்தவனே! படுக்கையை விட்டு எழு.

ஒழுங்கு உடையவனே! ஆற்றல் வாய்ந்தவனே! பகைவர்க்குச் சூடு தரும் மேலானவனே! உறக்கத்தினின்றும் எழு.

செப்புப் போன்ற மெல்லிய கொங்கைகளையும், சிவந்த வாயையும், சிறிய இடையையும் கொண்ட நப்பின்னைப் பிராட்டியே! திருமகளே! நித்திரை தெளிந்து எழு.

ஆலவட்டமும் கண்ணாடியும் தந்து உன் மணவாளனையும் எம்மையும் இப்போதே நீராட்டு.

கப்பம்: நடுக்கம்; கம்பம் என்ற சொல்லின் வலித்தல். கலி; வல்லமை. உக்கம்: ஆலவட்டம். தட்டொளி: கண்ணாடி.

முப்பத்து முக்கோடி தேவர்க்கும், கோடிக்கு ஒருவர் வீதம் முப்பத்து மூன்று பேர் தலைவர். இங்கே அத்தலைவர்களே "முப்பத்து மூவர் அமரர்;' என்று கூறப்படுவதாகக் கொள்ளவேண்டும். "மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த தேவரும்" என்ற திருவாசகம் இதனை வலியுறுத்தும். முப்பத்து மூன்று தலைவராவார், பதினொரு உருத்திரர். பன்னிரு சூரியர், எட்டு வசுக்கள். இரண்டு அசுவினி தேவர் என்ப. 75

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதுஅளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்;
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயில்எழாய்;
மாற்றார், உனக்கு வலிதொலைந்துஉன் வாசல்கண்
ஆற்றாது வந்துஉன் அடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேல்,ஓர் எம்பாவாய்!

பால் கறக்க எடுத்துக் கொண்ட பாத்திரங்களெல்லாம் நிறைந்து எதிர்த்துப் பொங்கி மேலே வழியும்படியாக, இடைவிடாமல் பாலைப் பொழிகின்ற கொடைக்குணம் கொண்ட பெரிய பசுமாடுகளை ஏராளமாக உடைய நந்தகோபனுடைய மைந்தனே! துயில் உணர்வாயாக. திண்மை வாய்ந்தவனே! பெருமை பெற்றவனே! உலகத்தார் கண்கட்குப் புலனாகும்படி நின்ற விளக்குப் போன்றவனே! தூக்கத்தை விடு. பகைவர் உனக்குத் தோற்று எய்த்துப்போய் உன் வீட்டு வாசலிலே வந்து உன் அடிகளை வணங்குவதுபோல, உன்னைப் புகழ்ந்து போற்றி நாங்கள் வந்திருக்கின்றோம். "தோற்றச் சுடர் ஒளியாய்!'' என்ற திருவாசகச் சிவபுராணம், "தோற்றமாய் நின்ற சுடரே!'' என்பதோடு ஒக்கும். 76

அங்கண்மா ஞாலத்து அரசர், அபிமான
பங்கமாய் வந்து,நின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்;
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்,
அங்கண் இரண்டும்கொண்டு எங்கள்மேல்நோக்குதியேல்,
எங்கள்மேல் சாபம் இழிந்தேல்,ஓர் எம்பாவாய்!

அழகிய பெரிய உலகத்திலேயுள்ள மன்னரெல்லாம் தங்களின் மேம்பட்டாரிலர் என்ற அபிமானத்தைக் கைவிட்டு வந்து; உன்னுடைய சிங்காதனத்தின் அடியிலே கூட்டமாக இருப்பதுபோல, நாங்கள் வந்து கூடியிருக்கின்றோம்.

சதங்கையிலுள்ள சிறு மணிகளால் செய்யப்பட்ட, தாமரைப் பூப் போன்ற சிவந்த கண்களைச் சிறுகச் சிறுக எங்கள் மீது பரப்ப மாட்டாயா?

சந்திரனும் சூரியனும் உதித்தது போலக் கருணைக் கண்கள் இரண்டையும் கொண்டு, எங்கட்கு ஏற்பட்ட துக்கத்தைப் போக்க எங்கள் மீது கடைக்கண் பார்வையைச் செலுத்துவாயாக. 77

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துஉறங்கும்
சீரிய சிங்கம், அறிவுற்றுத் தீவிழித்து,
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துஉதறி,
மூரி நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டு,
போதருமா போலேநீ, பூவைப்பூ வண்ணா!உன்
கோயில்நின்று இங்ஙனே போந்தருளி, கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்து அருளேல்,ஓர் எம்பாவாய்!

காயாம் பூப்போன்ற திருமேனி உடையவனே! மழைக்காலத்திலே, மலைக்குகையிலே பொருந்திக் கிடந்து, தூங்குகின்ற சிறந்த சிங்கமானது, உணர்ச்சியடைந்து, அனல் பறக்கக் கண் திறந்து, பிடரி மயிர் சிலிர்க்கும்படி எல்லாப் பக்கமும் திரும்பி உதறி, சோம்பல் முறித்து, கர்ச்சித்துப் பாய்ந்து வருவதுபோல, நீ உன் கோவிலினின்றும் இங்கு எழுந்தருளி, அலங்கரிக்கப் பெற்ற பெருமை மிக்க அரியாசனத்தமர்ந்து, நாங்கள் வந்த வேலையைக் கேட்டு ஆராய்ந்து எங்கட்கு அருள்புரிய வேண்டும்.

பூவைப் பூ, காயாம் பூ, அப்பூவின் நிறம் நீலம். பூவை என்று நாகணவாய்ப்புள் (மைனா) என்ற ஒரு பறவைக்கும் பெயர் உண்டு இரண்டு பூவைக்கும் உள்ள வேறுபாட்டைப் பிரித்துக் காட்ட, சிறந்த நூலாகிய அழகர் கலம்பகம் இயற்றிய ஆசிரியர் காயாம் பூவைச் சொல்லும் போது. "மணம் கமழ் பூவை" என்பார். வாசனை வீசுகின்ற பூவை எனவே, அப் பூவை பறவையல்ல, காயாம் பூவே என ஏற்படுகிறது. சங்க இலக்கியமாகிய பரிபாடலில் காயாவைக் குறிக்குங்கால் ''பறவாப் பூவை" எனக் கூறப் படுகிறது பறக்கும் பூவை நாகணவாய்ப்புள். இங்குப் ''பூவைப் பூ'' எனக் காயாம் பூவே உணர்த்தப்பட்டது. 78

அன்றுஇவ் உலகம் அளந்தாய்! அடிபோற்றி;
சென்றுஅங்குத் தென்இலங்கை செற்றாய்! திறல்போற்றி;
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி;
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி;
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி;
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி;
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்,
இன்றுயாம் வந்தோம்; இரங்கேல்,ஓர் எம்பாவாய்!

அந்த நாளில் இந்த உலகத்தை அளந்தவனே! உன் திருவடிகட்கு வணக்கம்.

தெற்கேயுள்ள இலங்கைக்குச் சென்று அங்குள்ள அரக்கர்களைத் தொலைத்தவனே! உன் வலிமைக்கு வணக்கம்

சகடாசுரன் அழிந்து விழ உதைத்தவனே! உன் புகழுக்கு வணக்கம்.

கன்றுக் குட்டியாக வந்த ஓர் அசுரனைக் குறுந்தடியாகக் கொண்டு. விளாமரமாக நின்ற ஓர் அசுரன் மீது தூக்கி எறிந்து, இரண்டு அசுரர்களையும் முடித்தவனே! உன் பொன்னடிகட்கு வணக்கம்.

கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகத் தூக்கி மழையைத் தடுத்து மக்களைக் காத்தவனே! உன் நல்ல குணத்துக்கு வணக்கம்.

வெற்றி கொண்டு பகையைத் தொலைக்கும் உன் கையில் பொருந்திய வேலுக்கு வணக்கம்.

இவ்வாறாக உன் வீரச் செயல்களைப் புகழ்ந்து எங்கள் விருப்பத்தைப் பெற இன்று நாங்கள் வந்திருக்கின்றோம்; எங்கட்கு அருள் புரிவாயாக. 79

ஒருத்தி மகனாய்ப் பிறந்துஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலான் ஆகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்புஎன்ன நின்ற நெடுமாலே! உன்னை,
அருத்தித்து வந்தோம்; பறைதருதி ஆகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும் பாடி,
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேல்ஓர் எம்பாவாய்!

தேவகியென்னும் ஒருத்திக்கு மகனாகப் பிறந்து, ஓர் இரவிலேயே யசோதை என்னும் ஒருத்திக்த மகனாகி மறைந்து வளர, இதனை அறிந்ததும் பொறுனாகி, தனக்குக் கேடு நினைத்த கஞ்சனது எண்ணத்தை அழித்து, அவன் வயிற்றில் தீப்பிடித்து எரியும்படி நின்ற நீண்டமாலே! உன்னை விரும்பி வந்தோம்; நாங்கள் விரும்பியதைத் தருவாயானால், உனது பெருஞ் செல்வத்தையும் வீரத்தையும் பாடி, துயரமும் நீங்கி மகிழ்ந்திருப்போம் 80

மாலே! மணிவண்ணா! மார்கழிநீர் ஆடுவான்,
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்,
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன,
பால்அன்ன வண்ணத்துஉன் பாஞ்ச சனியமே,
போல்வன சங்கங்கள், போய்ப்பாடு உடையனவே,
சாலப் பெரும்பறையே, பல்லாண்டு இசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே,
ஆலின் இலையாய்! அருளேல்ஓர் எம்பாவாய்!

திருமாலே! நீலமணி போன்ற நிறமுடையவனே! மார்கழி நீராடும் பொருட்டு முன்னோர்கள் செய்த காரியங்களில் வேண்டியவற்றைக் கேட்பாயாகில், (சொல்லுவோம்) உலகத்தையெல்லாம் நடுங்கச் செய்யுமாறு ஒலிக்கின்ற பால் போன்ற நிறமுடைய உனது பாஞ்ச சன்னியத்தை ஒத்த சங்குகளும், தொலைவிலும் போய், செவியிற் படுதலையுடையனவாகிய மிகப் பெரிய பறை வாத்தியங்களும், பல்லாண்டு பாடுபவர்களும் அழகிய விளக்குகளும், கொடிகளும், மேற்கட்டிகளும் (வேண்டும்).

ஆலின் இலைமேல் பள்ளி கொண்ட கண்ணபிரானே! இவற்றை எங்கட்கு அருள்வாயாக! 81

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்;
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே,
பாடகமே, என்றனைய பல்கலனும் யாம்அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து, முழங்கை வழிவார,
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்!

எதிரிகளை வெற்றி கொள்ளும் சிறப்புடைய கோவிந்தா! உன்னைப் பாடி, பறையைப் பெற்று, நாங்கள் அடைகின்ற பரிசில் எது?

நாடு புகழும் தகுதியோடு வளையல், வங்கி, காதுத்தோடு, காதுப்பூ, சிலம்பு என்பன வாதி பலவகை நகைகளையும் நாங்கள் நன்கு பூட்டிக் கொள்வோம்; நல்ல உடை உடுத்திக்கொள்வோம்; அதன் பிறகு பாலில் வேகவைத்த சோறு முழுதும் மறையுமாறு நெய்யைக் கொட்டி, சோற்றைக் கையில் எடுக்கும் பொழுது முழங்கை வழியாக அந்நெய்யானது ஒழுகும் படியாக, எல்லோரும் கூடியிருந்து உண்டு களித்திருப்போம்.

'யாம் பெறும் சம்மானம்" இவையே என்பது கருத்து.

இப்பாட்டு, திருப்பாவையின் இருபத்தேழாவது பாடலாதலால், மார்கழி மாதங்களில் இருபத்தேழாம் நாள் திருப்பள்ளி எழுச்சிக் காலத்தில் பெருமான் கோவில்களில் திவ்யமான அக்கார அடிசில் செய்வதை இன்றும் காணலாம். அன்று செய்யும் சாதத்திற்கு "கூடாரை வெல்லும் சீர்ச் சர்க்கரைப் பொங்கல்" என்பது பெயர்.

82

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந்து உண்போம்;
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்துஉன் தன்னைப்
பிறவி பெறும்புண் ணியம்யாம் உடையோம்;
குறைவுஒன்றும் இல்லாத கோவிந்தா! உன்றனோடு
உறவேல் நமக்குஇங்கு ஒழிக்க ஒழியாது;
அறியாத பிள்ளைகளோம், அன்பினால்உன் தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறிஅரு ளாதே
இறைவா!நீ தாராய், பறையேல்,ஓர் எம்பாவாய்!

பசுக்களுக்குப் பின்னே போய், காட்டை அடைந்து, அங்கே சாப்பிடுவோம்.

அறிவு சிறிதும் இல்லாத இடையர் குலத்திலே, உன்னைப் பிள்ளையாகப் பெறத்தக்க புண்ணியத்தை நாங்கள் உடைத்தாயிருக்கின்றோம்

ஒரு குறையும் இல்லாத கோவிந்தா! உனக்கும் எங்கட்கும் உள்ள தொடர்பு ஒழிக்க முடியாதது.

நாங்கள் அறியாப்பிள்ளைகள்; அன்புகொண்டு உன்னைச் சிறு பெயரைச் சொல்லி, கண்ணா! என்று அழைப்பதற்காகச் சினந்து அருளாதே.

தலைவா! நாங்கள் விரும்புவதைத் தருவாயாக. 83

சிற்றம் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து,உன்
பொற்ரு மரைஅடியே போற்றும் பொருள்கேளாய்,
பெற்றம்மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து,நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாதே;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்றேல்,ஓர் எம்பாவாய்!

வைகறையிலே வந்து உன்னை வணங்கி, உன்னுடைய தாமரை போன்ற பொன்னடிகளைப் போற்றுதற்குப் பொருளைக் கேட்பாயாக.

மாடு மேய்த்துச் சாப்பிடும் வகுப்பிலே நீ பிறந்தும் எங்களைச் சிற்றடிமைகளாகக் கொள்ளாமல் போய்விடாதே.

நாங்கள் உன்னை அடைந்தது இன்றைக்குப் பறையைப் பெற்றுக் கொண்டு போய்விட அல்ல.

கோபாலா! எந்தக் காலத்தும் ஏழ் ஏழு பிறவிகளிலும் உன்னோடு பொருந்தியே வாழ்வோம்; உனக்குத்தான் நாங்கள் தொண்டு செய்வோம்.

எங்கட்கு வேறு ஆசைகள் தோன்றுமானால் அவற்றை நீ மாற்றியருளல் வேண்டும்.

இத்திருப்பாவைக் கருத்து, "முன்னைப்பழம் பொருட்கும்" என்ற திருவெம்பாவைக் கருத்தோடும் "உங்கையிற் பிள்ளை" என்ற திருவெம்பாவைக் கருத்தோடும் ஒருவாறு ஒத்தது. 84

வங்கக் கடல்கடைந்த மாதவனை, கேசவனை,
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றுஇறைஞ்சி,
அங்குஅப் பறைகொண்ட ஆற்றை, அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே,
இங்குஇப் பரிசுஉரைப்பார், ஈர்இரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர் எம்பாவாய்!

கப்பல்கள் ஓடும் கடலைக் கடந்து அமரர்க்கு அமுதம் ஈந்த மாதவனை, கேசவனை, சந்திரன் போன்ற அழகிய முகத்தைப்பெற்ற. செவ்விய ஆபரணம் அணிந்த பெண்கள், சென்று வணங்கி, அவ் ஆய்ப்பாடியில் பறைகொண்ட வரலாற்றை, அழகிய திரு வில்லிபுத்தூரிலே பிறந்த குளிர்ந்த பசுமையான தாமரை மாலையையுடைய பெரியாழ்வாரின் மகளாகிய ஆண்டாள் சொன்ன, யாவரும் கூடிப்பாடி சுவைக்கத்தக்க தமிழ்ப் பாமாலையாகிய இத்திருப்பாவை முப்பதையும் தவருமல், இவ்விடத்து இவ்வகையாகச் சொல்லுபவர், நான்கு பெரிய மலைபோன்ற தோள்களையுடைய, செந்தாமரைக் கண்களைத் திருமுகத்திலே பெற்ற, செல்வத் திருமாலாலே, எங்கும் திருவருள் நோக்கம் பெற்று இன்பத்தை எய்துவர். 85

நாச்சியார் திருமொழி

கலி விருத்தம்

நாளை வதுவை மணம்என்று நாள்இட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோள்அரி மாதவன் கோவிந்தன் என்பான்ஓர்
காளை புகுதக் கனக்கண்டேன் தோழீ நான்

கருத்து: நாளைக்கு எனக்குத் திருமணம் என்று சொல்லி நாள் வைத்து, பாளையொடு கொண்டு நடப்பெற்ற பாக்கு மரத்தால் அலங்கரிக்கப் பெற்ற சிங்காரக் கொட்டகையில் வலிய சிங்கம் போன்றவனாகிய திருமகளால் தவம் செய்து அடையப் பெற்றவனான கோவிந்தன் என்ற ஒப்பற்ற காளை மணமகனாக வரக் கனவு கண்டேனடி தோழி நான்

அரும் சொல் பொருள்: வதுவையும் மணமும் ஒரே பொருளன, கோள்: வலிமை. அரி: சிம்மம்
இது தோழியொடு கனத் திறம் சொல்லல். 86

இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம்எல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து,
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனக்கண்டேன் தோழீ நான்.

கருத்து: தேவேந்திரன் முதலான அமரர் கூட்டம் முழுதும் நம் வீட்டுக்கு வந்திருந்து எனக்குத் திருமணம் பேசி மந்திரம் செய்து மந்திரிக்கப் பட்ட புத்தாடை கட்டி மணமாலையை எனக்குப் பார்வதி தேவி அணியக் கனவு கண்டேன் தோழி நான்.

அரும் சொல் பொருள்: மகட்பேசுதல்: பெண்ணைப் பேசுவது. அந்தரி: பார்வதி. மணமகனின் உடன் பிறந்தாள் மணமாலை சூட்டுதல் மரபு. 87

மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றுஊத,
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்,
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

கருத்து : மத்தளம் முழங்க, ரேகைகளையுடைய சங்கு ஒலிப்ப முத்துச் சரங்களால் பின்னப்பெற்ற மாலைகள் வரிசையாகத் தொங்குகின்ற காவணத்திலே, என் மைத்துனனும் ஆணிற் சிறந்தானுமாகிய கண்ணன் வந்து என்னைக் கைப்பிடிக்கக் கனாக் கண்டேனடி தோழி நான்.

அரும் சொல் பொருள் : தாமநிரை: மாலை வரிசை. 88

வாய்நல்லார் நல்ல மறைஓதி, மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து,
காய்சின மாகளிறு அன்னான்என் கைப்பற்றித்
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீநான்.

கருத்து : நல்ல வாயை உடையவர், நன்மை தரும் வேதத்தைச் சொல்லி மந்திரப்படி பச்சிலையாலாகிய புல்லைப் பரப்பி சமித்தை இட, கோபம் மிக்க பெரிய ஆண் யானை போன்ற திருமால் என்னுடைய கையைப் பிடித்துக்கொண்டு நெருப்பை வலம் சுற்றி வரக் கனவு கண்டேன் தோழி நான்.

அரும் சொல் பொருள் : மறை பயிலும் வாயுடையாராதலின் வாய் நல்லார் என்றார். பாசிலை: பசிய இலை. நாணல்: புல். பரிதி: சமித்து. காய் சினம்: கடும் கோபம் 89

இம்மைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் பற்றுஆவான்
நம்மை உடையவன் நாராய ணன்நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்.

கருத்து : இப்பிறப்புக்கும் இனி வரும் ஏழு ஏழு பிறவிக்கும் பற்றுக்கோடானவனும் நம்மை ஆட்கொண்டவனுமான நம்பி நாராயணன், அவனுடைய செவ்விய திருக் கரத்தால் என் காலைப் பிடித்து அம்மிமேல் மிதிக்கச் செய்யக் கனவு கண்டேன் தோழி நான்.

அம்மி மிதித்தல், திருமணச் சடங்குகளில் ஒன்று. கல்லான அகலிகையைப் போல வாழமாட்டேன் என்பதற்காக அம்மிக் கல்லை மிதித்தல் என்று கூறுவர். 90

மின்ஆகத்து எழுகின்ற மேகங்காள்! வேங்கடத்துத்
தன்ஆகத் திருமங்கை தங்கியசீர் மார்வற்கு,
என்ஆகத்து இளங்கொங்கை விரும்பித்தாம் நாள்தோறும்
பொன்ஆகம் புல்குதற்குஎன் புரிவுஉடைமை செப்புமினே.

கருத்து : மின்னலை உடம்பிலே கொண்டு எழுகின்ற முகில்களே! திருப்பதி மலையிலே, தன்னுடைய உடலிலே திருமகள் வாழும் சிறப்புடைய மார்பைப் பெற்ற திருமாலுக்கு, என் உடம்பிலுள்ள இளமுலைகளை இச்சித்து அவர் நாள் எல்லாம் என் பொன்னனைய உடலை அணைவதற்கு என்னுடைய சம்மதத்தைச் சொல்லுங்கள். ஆகம் நான்கும் உடம்பே. இது மேக விடு தூது. ஆண்டாள் தான் காதலித்த திருவேங்கடம் உடையானிடம் மேகத்தைத் தூதாக அனுப்புகின்றார். 91

வான்கொண்டு கிளர்ந்துஎழுந்த
மாமுகில்காள்! வேங்கடத்துத்
தேன்கொண்ட மலர்சிதறத்
திரண்டுஏறிப் பொழிவீர்காள்!
ஊன்கொண்ட வள்உகிரால்
இரணியனை உடல்இடந்தான்,
தான்கொண்ட சரிவளைகள்
தருமாகில் சாற்றுமினே.

கருத்து : விண்ணை முட்டிக் கொண்டு திமிறிப் புறப்படும் சிறந்த மேகங்களே! வேங்கட மலையிலே தேன் பொதிந்த பூக்களெல்லாம் சிதறுண்டு போமாறு ஒன்று கூடி மேல் ஏறிப் பொழிகின்றவர்களே! தசை நாற்றமுடைய கூரிய நகங்களால் இரணியனின் உடலைப் பிளந்தானாகிய நாராயணனவன் என்னிடம் கவர்ந்து கொண்ட கழன்ற கைக் காப்புகளைத் தருகின்றானா எனக் கேட்டுச் சொல்லுங்கள்.

அரும் சொல் பொருள் : ஊன்: மாமிசம். வள் உகிர்: கூர்மையான நகம் 92
இதுவும் முகில் விடு தூதே.

சங்கமா கடல்கடைந்தான்,
தண்முகில்காள்! வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ்
அடிவீழ்ச்சி விண்ணப்பம்;

கொங்கைமேல் குங்குமத்தின்
குழம்புஅழியப் புகுந்து,ஒருநாள்
தங்குமேல் என்ஆவி
தங்கும்என்று உரையீரே.

கருத்து : குளிர்ந்த மேகங்களே! சங்குகளை உடைய பெரிய கடலைக் கடைந்த வனுகிய திருவேங்கடத்திலே வாழும் செங்கண்மாலின் செவ்விய திருவடிக்கு அடியாள் விடுக்கும் வேண்டுகோள் இது; என் கொங்கை மீது பூசிய குங்குமச் சேறு அழியுமாறு என் வீட்டில் புகுந்து ஒரு நாள் தங்குவானுனல் என் உயிர் உடலிலே இருக்கும் என்பதை அவனுக்குச் சொல்லுங்கள்.

அரும் சொல் பொருள் : அடிவீழ்ச்சி: அடியாள்.

இதுவும் எழிலி விடு தூதே. 93

மதயானை போல்எழுந்த மாமுகில்காள்! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! பாம்பணையான்வார்த்தைஎன்னே?
"கதிஎன்றும் தானுவான் கருதாதுஓர் பெண்கொடியை
வதைசெய்தான்'' என்னும்சொல் வையகத்தார்மதியாரே.

கருத்து : மதம் கொண்ட யானைகளைப் போல எழுந்து புறப்படும் பெரிய மேகங்களே! திருவேங்கட மலையை இடமாகக் கொண்டு வாழ்கின்ற வர்களே! பாம்பில் படுத்திருக்கும் பரந்தாமன் என்னதான் சொன்னுன்?

உலகம் அனைத்துக்கும் ஆதாரமாக என்றும் இருக்கின்ற அத் திருமாலானவன், எண்ணுமல் ஒரு மங்கை நல்லாளைக் கொலை செய்து விட்டான் என்ற பேச்சு எழுமாளுல் உலகத்தார் அவனை மதிக்க மாட்டார். இவ் உண்மையை அவனுக்கு உணர்த்துங்கள்.

இதுவும் மஞ்சு விடு தூதே. 94

எழில்உடைய அம்மனையீர்! என்அரங்கத்து இன்அமுதர்,
குழல்அழகர், வாய்அழகர், கண்அழகர், கொப்பூழில்
எழுகமலப் பூஅழகர், எம்மானுர் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே ஆக்கினரே.

கருத்து : அழகிய அன்னைமார்களே! என்னுடைய திருவரங்கத்திலே வாழ்கின்ற இனிய அமுதத்தை ஒத்தவர், சிகை அலங்காரம் உடையவர், அழகிய வாய் பெற்றவர், எழில் விழியினர், உந்திச் சுழியிலே தோன்றும் பிரமனைப் படைத்த தாமரை மலரை அழகாகப் பெற்றவர்; அத்தகைய என் தலைவரானவர், எனது கழல் வளையைக் கழன்று விழ்கின்ற வளையாக ஆக்கி விட்டார்.

அரும் சொல் பொருள் : கழல் வளை என்பது கழற்றி இடுகின்ற காப்பு என்னும் பொருள் கொண்டது. அக் கழல் வளையை கழன்றே ஒழிகின்ற காப்பாக ஆக்கி விட்டார் என்பது கருத்து.
இது காதல் கொண்ட தலைவி கூற்று

ஆண்டாள் ''என் அரங்கத்து இன் அமுதர்'' எனக் கூறுமாப் போலப் பெரியாழ்வார் ''என்னுடைய திருவரங்கர்'' என்பர். 95

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்து இருக்குமோ?
மருப்புஒசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்; சொல், ஆழி வெண்சங்கே!

கருத்து : ''கடலில் பிறந்த வெள்ளைச் சங்கே! பெரிய யானையின் தந்தத்தை ஒடித்த திருமாலின் வாய்ச் சுவையும் அதன் மணமும் எத்தகையன? ஆசையோடு கேட்கின்றேன், சொல்வாயாக! அதில் கற்பூர மணம் உண்டா? தாமரை மலர் மணம் வீசுமா? அந்தத் திருப் பவளச் சிவந்த வாயின் இனிப்பு எப்படி இருக்கும்? அவ் வாயோடு எப்போதும் ஒட்டி இருக்கும் நீ அதன் நீர்மையை எனக்குச் சொல்லக்கூடாதா?'' என்று ஏங்கிக் கேட்கின்றார் வலம்புரிச் சங்கைப் பார்த்து ஆண்டாள். 96

உன்னோடு உடனே ஒருகடலில் வாழ்வாரை
இன்னார் இனையார்என்று எண்ணுவார் இல்லைகாண்!
மன்னாகி நின்ற மதுசூதன் வாய்அமுதம்
பன்னாளும் உண்கின்றாய்; பாஞ்ச சன்னியமே!

கருத்து : ஏ, வலம்புரிச் சங்கே! உன்னோடு கூடவே ஒரு கடலில் வாழ்கின்ற பிறரை இவர் இன்னார் இத் தகையார் என நினைப்பார் எவரும் இலர்; அரசனாக நிற்கின்ற திருமாலின் வாய் அமுதத்தைப் பல நாளும் நீ குடித்துக்கொண்டே இருக்கின்றாய்.

நீ பெற்ற பெருந் தவப்பேறு நின்னையன்றி இரு நிலத்தில் பிறந்தாரில் யார் பெற்றார் எனச் சங்கொடு சாற்றுகின்றாள் தையல். 97

பதினாறும் ஆயிரவர் தேவிமார் பார்த்திருப்ப,
மதுவாயில் கொண்டாற்போல் மாதவன்தன்வாய்அமுதம்,
பொதுவாக உண்பதனைப் புக்குநீ உண்டக்கால்
சிதையாரோ உன்னோடு, செல்வப் பெருஞ்சங்கே!

கருத்து : பதினாறு ஆயிரம் மனைவிமாராகிய கோபிகைகள் கண்காண, தேனை வண்டு குடிப்பது போலக் கண்ணபிரானது திருவாய் அமுதத்தை, எல்லோரும் பொதுவாக உண்ண வேண்டிய அதனை, நீயாகத் தனியே புகுந்து குடித்தாயானால் உன்னோடு அவரெல்லாம் வம்புக்கு ஏன் வரமாட்டார்? ஏ, செல்வப் பெரும் சங்கே! 98

போய்த்தீர்த்தம் ஆடாதே, நின்ற புணர்மருதம்
சாய்த்துஈர்த்தான் கைத்தலத்தே ஏறிக் குடிகொண்டு,
சேய்த்தீர்த்தம் ஆய்நின்ற செங்கண்மால் தன்உடைய
வாய்த்தீர்த்தம் பாய்ந்துஆட வல்லாய் வலம்புரியே!

கருத்து : நெடுந்தூரம் சென்று நீர் ஆடாமல், நின்ற இரட்டை மருத மரத்தைத் தள்ளிப் பிளந்த நாராயணனின் கைமீது ஏறிக் குடியிருந்து, தூரத்தே சென்று ஆடும் புனலாய் அமைந்த செங்கண் மாலின் திருவாய் நீரிலே குடைந்து ஆடும் பேறு பெற்றனை நீ, வலம்புரிச் சங்கே! 99

கலி நிலைத் துறை

நாறு நறும்பொழில் மாலிருஞ்
சோலைநம் பிக்கு,நான்
நூறு தடாவில் வெண்ணெய்வாய்
நேர்ந்துப ராவிவைத்தேன்;
நூறு தடாநிறைந்த அக்கார
அடிசில் சொன்னேன்;
ஏறு திருஉடை யான்இன்று
வந்துஇவை கொள்ளுங்கொலோ.

கருத்து : மணக்கின்ற நல்ல சோலையையுடைய அழகர்மலை அண்ணலுக்கு, யான் நூறு பாண்டங்களில் வெண்ணெயைத் தருவதாகச் சொல்லிச் சேர்த்து வைத்தேன்; நூறு சட்டிகளில நிறைக்கப்பெற்ற சருக்கரைப் பொங்கல் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டேன்; ஏறும் திருவைப் பெற்ற அக்கடல் வண்ணன் இன்று போந்து இவற்றை ஏற்றுக்கொள்வானு?

அரும் சொல் பொருள் : வாய் நேர்தல்: சொல்லிக் கொள்ளுதல் பராவி வைத்தல்: சேர்த்து வைத்து வணங்குதல். அக்கார அடிசில்: சருக்கரைச் சோறு, சொல்லுதல்: பிரார்த்தனை செய்தல். 100

அறு சீர் விருத்தம்

மாலாய்ப் பிறந்தநம்பியை,
மாலே செய்யும் மணாளனை,
ஏலாப் பொய்கள் உரைப்பானை,
இங்கே போதக் கண்டீரே?
மேலால் பரந்த வெயில்காப்பான்
வினதை சிறுவன் சிறகுஎன்னும்
மேலாப் பின்கீழ் வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே;

கருத்து : இப் பாடல் வினாவும் விடையுமாக வருவது. திருமாலே அவதாரமாக வந்து பிறந்த கண்ணபிரானை, அவனிடம் எல்லோர்க்கும் போதையையே உண்டாக்குகின்ற காதலனை, பொருந்தாத பொய்களைப் பேசுகின்ற அக் கிருட்டினனை இங்கே வரக் கண்டீர்களா?

மேலே பரவின வெய்யிலைத் தன்மீது விழாமல் காக்கும் பொருட்டு வினதையின் மகனாகிய, கருடனுடைய சிறகாகிய மேற்கட்டியின் கீழே வருகின்ற அப் பெருமானைப் பிருந்தாவனத்திலே கண்டோம்.

அரும் சொல் பொருள் : மால்: மயக்கம். பரந்த: பரவிய. வினதை: கருடனின் தாய். மேலாப்பு: விதானம்.

101

தந்தையும் தாயும்உற் றாரும்நிற்கத்
தனிவழி போயினாள் என்னும்சொல்லு
வந்தபின் னைப்பழி காப்புஅரிது;
மாயவன் வந்துருக் காட்டுகின்றான்;
கொந்தளம் ஆக்கிப் பரக்கழித்துக்
குறும்புசெய் வான்ஓர் மகனைப்பெற்ற
நந்தகோ பாலன் கடைத்தலைக்கே
நள்இருட்கண் என்னை உய்த்திடுமின்.

கருத்து : தந்தையும் தாயும் உறவினரும் இருக்கத் தானே தனியாகத் தெரு வழி சென்றனள் என்ற பேச்சுக் கிளம்பிய பிறகு, அப் பழிச் சொல்லைத் தடுத்தல் முடியாத தொன்றாம். கண்ணன் வந்து அவன் வடிவத்தைக் காட்டி என்னை இழுக்கின்றான். எனக்குக் குழப்பத்தைத் தந்து, பழியை உண்டாக்கிச் சேட்டை பண்ணுகின்ற அந்த இடையற்ற மகனைப் பெற்ற நந்தகோபனுடைய மாளிகை வாயிலிலே நடு இரவிலே என்னைக் கொண்டு சேர்த்து விடுங்கள்.

கண்ணனைக் காதலித்த ஆண்டாள் நாச்சியார், தோழிகளிடம் இவ்வாறு கூறுகின்றார்

அரும் சொல் பொருள் : கொந்தளம்: குழப்பம் பரக்கழித்தல்: பழியை உண்டாக்குதல். நந்தகோபன் : கண்ணனின் வளர்ப்புத் தந்தை. 102

பால்ஆல் இலையில் துயில்கொண்ட
பரமன் வலைப்பட்டு இருந்தேனை.
வேலால் துன்னம் பெய்தாற்போல்
வேண்டிற்று எல்லாம் பேசாதே,
கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க்
குடந்தைக் கிடந்த குடமாடி
நீல்ஆர் தண்ணந் துழாய்கொண்டுஎன்
நெறிமென் குழல்மேல் சூட்டீரே.

கருத்து : பால் வடியும் ஆலந்தளிரிலே கண் வளர்ந்த பரந்தாமனுடைய வலையிலே அகப்பட்டுக் கிடந்த என்னை, வேலாயுதத்தைக் கொண்டு துளை செய்ததைப் போல, நினைத்தபடியெல்லாம் நீங்கள் பேசிக் கேலி செய்வதால் பயன் இல்லை. நீங்கள் செய்ய வேண்டியது என்ன, தெரியுமா!

கம்பு கொண்டு பசுக்களை மேய்த்த கோபாலனும் குடந்தை நகரிலே பள்ளி கொண்டவனுமாகிய குடக்கூத்து ஆடிய கண்ணனுடைய பசுமை நிறைந்த குளிர்ந்த அழகான துழாய் மாலையைக் கொணர்ந்து, என்னுடைய அடர்ந்த மெல்லிய கூந்தலிலே சூட்டுங்கள்.

இப்படிக் கூறுகின்றாள் தோழிமார்களைப் பார்த்துத் தலைவி

அரும் சொல் பொருள் : துன்னம்: துவாரம். நிரை: பசுக்கூட்டம். குடந்தை: கும்பகோணம். நீல்: பசுமை. 103

அழிலும் தொழிலும் உருக்காட்டான்!
அஞ்சேல் என்னான்! அவன்ஒருவன்;
தழுவி முழுசிப் புகுந்துஎன்னைச்
சுற்றிச் சுழன்று போகானால்;
தழையின் பொழில்வாய் நிரைப்பின்னே
நெடுமால் ஊதி வருகின்ற
குழலின் தொளைவாய் நீர்கொண்டு
குளிர முகத்துத் தடவீரே.

கருத்து : அழுதாலும் தன் மேனியைக் காட்டமாட்டான்; வணங்கினாலும் காட்சி கொடுக்க மாட்டான்; பயப்படாதே என்று சொல்லவும் மாட்டான்; அந்த ஒப்பற்றவன். ஆனால் அவன் என்ன செய்கின்றான்? என் உள்ளே புகுகின்றான்; என்னைக் கட்டியணைக்கின்றான்; என்னை முத்தம் இடுகிறான்; என்னையே சுழன்று சுற்றித் திரிகின்றான்; என்னை விட்டுப் போகமாட்டேன் என்கின்றான். குழைகள் மல்கிய சோலையினிடத்தே பசுக்களின் பின்னே அந்த நீண்ட திருமால் ஊதி வருகின்ற புல்லாங்குழலின் துளையிலே வழிகின்ற நீரைக் கொணர்ந்து குளிருமாறு என் முகத்திலே பூசுங்கள்.

இது தோழிகளைப் பார்த்துச் சொல்லுவது.

அரும் சொல் பொருள் : அழிலும்: அழுதாலும் தொழிலும்: தொழுதாலும். முழுசுதல்: முத்தம் இடுதல். தொளை: துவாரம். நீர் இங்கு எச்சில். 104

வெற்றிக் கருளக் கொடியான்தன்
மீமீது ஆடா உலகத்து,
வெற்ற வெறிதே பெற்றதாய்
வேம்பே யாக வளர்த்தாளே;
குற்றம் அற்ற முலைதன்னைக்
குமரன் கோலப் பணைத்தோளோடு
அற்ற குற்றம் அவை,தீர
அணைய அமுக்கிக் கட்டீரே,

கருத்து : வெற்றி கொள்ளும் கருடக்கொடியுடையானாகிய திருமாலின் ஆணை வழி நிற்கும் உலகத்திலே. வீணாக என்னைப் பெற்ற அன்னையானவள், வேப்பங்காயாக என்னை வளர்த்து விட்டாள்

என்னுடைய தனங்கள் வேறு எந்தக் குற்றமும் செய்தில; அவை செய்தது ஒரே ஒரு குற்றமே. அது தான் அவ் அழகிய கண்ணனின் பருத்த தோள்களை அணையாத குற்றம். அக் குற்றம் நீங்குமாறு அத்தனங்களை அவன் தோள்களில் அழுந்துமாறு அமுக்கிக் கட்டி விடுங்கள், தோழிகளே!

இது தோழிகளை நோக்கி நுவலும் அருமைப் பாசுரம்.

அரும் சொல் பொருள் : மீமீது ஆடா ஆணை மேற் செல்லாநின்ற, வெற்ற வெறிதே: மிகவும் வீணாக. குமரன்: இளமை வீரனாகிய கண்ணன். பணை: பருத்த. அற்ற: அணையாத. அவை: அக் கொங்கைகள். 105

உள்ளே உருகி நைவேனை
“உளளோ இலளோ?” என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்
கோவர்த் தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயன்ஒன்று இல்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன்மார்வில்
எறிந்துஎன் அழலைத் தீர்வேனே.

கருத்து: உள்ளுக்குள்ளே இளகி நொந்து கொண்டிருக்கின்ற என்னை, இவள் இருக்கின்றாளா இல்லையா என்றுகூடக் கேளாத, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் குறும்புக்காரனாகிய, மலையைக் குடையாகப் பிடித்த கண்ணனைக் கண்டேனானால் என்ன செய்வேன், தெரியுமா? அடைய வேண்டிய பயனைப் பெறாத என் தனங்களை வேரோடும் கல்லிப் பிடுங்கி, அவனுடைய நெஞ்சிலே வீசி எறிந்து, என் கோபத்தைத் தீர்த்துக் கொள்வேன்.
இது காதல் கொண்ட தலைவி கூற்று. கொங்கை சேரவேண்டிய இடம் மார்பாகலின் முகத்தில் வீசி எறியாமல் மார்வில் எறிவேன் என்றார். 106

வானிடை வாழும்அவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தஅவி,
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வ்துஒப்ப,
ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கென்று
உன்னித்து எழுந்தஎன் தடமுலைகள்
மானிட வர்க்குஎன்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே!

கருத்து: விண்ணிலே வாழுகின்ற அந்தத் தேவர்கட்கு அந்தணர் வேள்வியிலே கொடுத்த உணவை, காட்டிலே திரிகின்ற ஒரு நரி வந்து எடுத்துக் கொள்வதையும் மோந்து பார்ப்பதையும் போல இருக்கிறது என்னை மானிடர்க்கு மணம் பேசுவது.
தசை படிந்த சக்கரத்தையும் சங்கையும் தாங்கிய உத்தமனாகிய கண்ணனுக்காகவே ஒங்கிப் புறப்பட்டிருக்கும் என் பெரிய கொங்கைகள் மனிதர்க்கு உரியன என்ற பேச்சு உண்டாகுமானால் நான் உயிர் வைத்துக் கொண்டிருக்கமாட்டேன். மன்மதா!
ஆண்டாள் தனக்குத் திருமணம் பேசப்படுவதை அறிந்து இவ்வாறு கூறுவதாகக் கொள்ளவேண்டும்! 107

மாமிமார் மக்களே அல்லோம்,
மற்றும்இங்கு எல்லாரும் போந்தார்,
தூமலர்க் கண்கள் வளரத்
தொல்லை இராத்துயில் வானே!
சேமமேல் அன்றிது சால;
சிக்கென நாம்இது சொன்னோம்;
கோமள ஆயர் கொழுந்தே
குருந்திடைக் கூறை பணியாய்.

கருத்து: நாங்கள் மாமியின் மக்கள் ஆகமாட்டோம்; இங்கு எல்லோருமே வந்திருக்கின்றனர். பரிசுத்தமான மலர்போன்ற கண்கள் வளருமாறு இராப்பொழுதிலே, துயில்கின்றவனே! இது சிறிதும் தகுதியாக மாட்டாது நாம் இதை உறுதியாகச் சொல்லுகின்றோம்; இடையர்களின் அழகிய கொழுந்தாக இருப்பவனே! குருந்த மரத்தினின்றும் கீழே இறங்கி ஆடையைத் தந்து விடுக. 108

எழு சீர் விருத்தம்

பேதம் நன்குஅறி வார்க ளோடுஇவை
பேசினால்பெரிது இன்சுவை;
யாதும் ஒன்றறி யாத பிள்ளைக
ளோமை நீநலிந்து என்பயன்?
ஓத மாகடல் வண்ணா! உன்மண
வாட்டி மாரொடு சூழறும்;
சேது பந்தம் திருத்தினாய்!எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே.

கருத்து: ஓசையையுடைய பெரிய கடல் போன்ற நிறத்தையுடையவனே! கடலில் திரு அணை எழுப்பியவனே! தராதரத்தை நன்கு அறிந்த வயதுவந்தவர்களோடு, உன் எண்ணங்களையெல்லாம் சொன்னால், மிகவும் இனிய சுவையை அடையலாம். ஏதொன்றும் தெரியாத சிறு பிள்ளைகளாகிய எங்களை நீ வருத்தி என்ன பயன்? உன் மனைவிமார்மீது ஆணையிட்டுச் சொல்லுகின்றோம்; எங்கள் சிறிய வீட்டை அழிக்காதே.

அரும் சொல் பொருள்: நலிதல்: வருத்துதல். ஓதம்: ஓசை. சூழ்: ஆணை. சேது: அணை, சிற்றில்: மகளிர் கட்டி விளையாடும் மணல் வீடு. 109

மென்நடை அன்னம் பரந்து விளையாடும்
    வில்லிபுத் தூர்உறை வான்தன்
பொன்அடி காண்பதோர் ஆசையி னால்என்
    பொருகயற் கண்இணை துஞ்சா;
இன்அடி சில்லொடு பாலமுது ஊட்டி
    எடுத்தஎன் கோலக் கிளியை,
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே!
    உலகுஅளந் தான்வரக் கூவாய்.

கருத்து: மென்மை வாய்ந்த நடையையுடைய அன்னங்கள் பெருகி விளையாடு கின்ற திருவில்லிபுத்தூரில் உறைகின்ற கடவுளது பொன்போன்ற திருவடியைக் காண வேண்டுமென்ற ஆசை காரணமாக, என்னுடைய சயல் போன்ற போர் செய்யும் சண்கள் தூங்கமாட்டா. இனிய—அமுது கலந்த பாற்சோறு ஊட்டி வளர்க்கப்பெற்ற என்னுடைய அழகான கிளியை, உன்னோடு நட்புரிமை கொள்ளுமாறு செய்வன், ஏ குயிலே! உலகத்தை அளந்த திருமால் வர நீ கூவுவாயாக!

அரும் சொல் பொருள்: பரந்து: பெருகி, பொருதல்: போர் செய்தல், கயல்: மீன், துஞ்சுதல்: உறங்குதல். 110

குலசேகர ஆழ்வார்

கலி விருத்தம்

கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன் குலமதலாய்?
தங்குபெரும் புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதி!
கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்துஎன் கருமணியே!
எங்கள்குலத்து இன்அமுதே! இராகவனே! தாலேலோ.

கருத்து: மணம் நிறைந்த கரிய கூந்தலையுடைய கோசலையின் சிறந்த மகனே! பெரும் புகழ் தங்கிய மிதிலை வேந்தனின் மருமகனே! தயரதச் சக்கரவர்த்தியின் மைந்தனே! கங்கையைவிடப் புனிதம் வாய்ந்த காவிரி பாயும் திருக்கண்ணபுரத்திலே வாழ்கின்ற என்னுடைக் கரிய மாணிக்கமே! எங்கள் குலத்தின் இனிய அமுதமே! இரகுவம்ச திலகனே! உன்னைத் தாலாட்டுகின்றேன்.

அரும் சொல் பொருள்: கொங்கு: மணம், குலம்: மேன்மை. சனகன்: மிதிலை மன்னன். தாசரதி: தயரதன் மைந்தன். 111

பாராளும் படர்செல்வம் பரதநம்பிக் கேஅருளி,
ஆராஅன்பு இளையவனோடு அருங்கானம் அடைந்தவனே!
சீராளும் வரைமார்பா! திருக்கண்ண புரத்தரசே!
தாராளும் நீள்முடிஎன் தாசரதீ! தாலேலோ.

கருத்து: உலகாளும் நிறைந்த செல்வத்தை, பரதனாகிய சிறந்த தம்பிக்குக் கொடுத்து, நிறைந்த அன்புடைய தம்பியாகிய இலக்குவனோடு செல்லுதற்கு அரிய காட்டுக்குச் சென்றவனே! திருமகளை ஆளும் மலைபோன்ற மார்பை உடையவனே! திருக்கண்ணபுரத்தின் வேந்தனே! மாலையை அணிந்த பெரிய மகுடந்தாங்கிய எனது தசரதன் மகனே! உன்னைத் தாலாட்டுகின்றேன்

அரும் சொல் பொருள்: படர்தல்: நிறைதல், இளையவன்: இலக்குவன், சீர்: திருமகள், வரை: மலை. தார்: மாலை. 112

மலையதனால் அணைகட்டி
மதிள்இலங்கை அழித்தவனே!
அலைகடலைக் கடைந்துஅமரர்க்கு
அமுதுஅருளிச் செய்தவனே!

கலைவலவர் தாம்வாழும்
கணபுரத்துளென் கருமணியே!
சிலைவலவா! சேவகனே!
சீராமா! தாலேலோ.

கருத்து: மலைகளைக் கொண்டு திரு அணை கட்டி, கடலைக் கடந்து கோட்டை சூழ்ந்த இலங்கை நகரைத் தொலைத்தவனே! அலை நிறைந்த கடலைக் கடைந்து, தேவர்கட்கு அமுதத்தை ஈந்தவனே! கலைகளிலே வல்லவர்கள் வாழுகின்ற திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளி இருக்கின்ற என் கரிய மாணிக்கமே! வில்லில் வல்லவனே! வீரனே! இராமபிரானே! உன்னைத் தாலாட்டுகின்றேன். 113

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ,
வான்ஆளும் செல்வமும் மண்அரசும் யான்வேண்டேன்;
தேன்ஆர்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதிஉடையேன் ஆவேனே.

கருத்து: குறையாத செல்வத்தோடு தேவமாதர்கள் தன்னைச் சுற்றியிருக்க, பொன்னுலகத்தை ஆளுகின்ற செல்வம் எனக்குக் கிடைத்தாலும், இம் மண்ணுலகம் முழுதையுமே யான் அடைவதாக இருந்தாலும் அவற்றை யான் விரும்பமாட்டேன். தேன் நிறைந்த மலர்ச் சோலைகளைக்கொண்ட திருப்பதி மலையிலுள்ள நீர்ச் சுனையிலே, மீனாகப் பிறக்கக்கூடிய பேறே யான் விரும்புவது.

அரும் சொல் பொருள்: ஆனாத: குறையாத, அரம்பையர்: தேவமாதர். 114

உம்பர் உலகுஆண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலைஅல்குல் பெற்றாலும் ஆதரியேன்;
செம்பவள வாயான் திருவேங் கடம்என்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே.

கருத்து: தேவலோகத்தையே ஒப்பற்றகுடையின் கீழ் அரசாண்டு ஊர்வசியின் எழில் மேனியை நுகரும் பேறு எனக்குக் கிடைப்பதாயினும் வேண்டுவதில்லை. செம்பவள வாயையுடைய திருமாலாகிய எம்பெருமானின் திருவேங்கடம் என்னும் பொன் மலையிலே ஏதேனும் ஒரு பொருளாக இருக்கும் பேற்றையே யான் விரும்புவன்.

அரும் சொல் பொருள்: உருப்பசி-ஊர்வசி. ஆதரித்தல்-ஏற்றுக்கொள்ளுதல். 115

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்,
விண்தோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டு அம்மா!நீ
கொண்டாளாய் ஆகிலும்உன் குரைகழலே கூறுவனே.

கருத்து: கண்டவர்களெல்லாம் பழிக்கக் கூடிய காரியங்களையே தன் கணவன் செய்தானாலும், தன்னை மணந்துகொண்ட அக்கணவனைத் தவிர, வேறு ஒருத்தனைக் குறியாத மேன்மகளாகிய மனைவியைப்போல, வானத்தைமுட்டும் கோட்டைச் சுவர் சூழ்ந்த வித்துவக் கோடு என்னும் தலத்தில் வாழ்கின்ற தாயனையவனே! நீ என்னை ஏற்றுக்கொண்டு ஆளாவிட்டாலும், உன்னுடைய ஒலிக்கின்ற திருவடிகளையே யான் பாடித்திரிவன். 116

வெங்கண்திண் களிறுஅடர்த்தாய்!
வித்துவக்கோட்டு அம்மானே!
எங்குப்போய் உய்கேன்,நின்
இணைஅடியே அடையல்அல்லால்,
எங்கும்போய்க் கரைகாணாது
எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்புஏறும்
மாப்பறவை போன்றேனே.

கருத்து: கொடிய கண்ணையுடைய வலிய யானையைக் கொன்றவனே! வித்துவக் கோட்டில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே! உன்னுடைய இரண்டு திருவடிகளையும் அடைவதைத் தவிர, வேறு எங்குச்சென்று நான் தப்பிப் பிழைக்கப் போகின்றேன். எல்லா இடத்துக்கும் சென்று, கரையைக் காண முடியாது, அலை வீசும் கடலினிடத்திலே செல்லும் கப்பலின் கொடிமரத்திலே, திரும்பத் திரும்ப ஏறும் சிறந்த பறவையைப் போன்றிருக்கின்றேன் நான்.

கப்பலின் கொடிமரத்தில் ஏறிய பறவை, கப்பல் கடலுக்குள்செல்லச் செல்லக் கரையை அடைய முயன்று, அது முடியாமல் திரும்பக் கப்பலையே சுற்றும் இயற்கையை அறிந்து பாடுகின்றார், கப்பல் பழக்கம் உடைய மன்னனாகிய குலசேகர ஆழ்வார்.

அரும் சொல் பொருள்: வெம்மை: கொடுமை. திண்மை: வலிமை. அடர்த்தல்: கொல்லுதல். உய்தல்: பிழைத்தல். எறிகடல்: அலைவீசும் கடல். மீண்டேயும்: திரும்பவும். வங்கம்: கப்பல். கூம்பு: கொடிமரம். 117

உண்டி யேஉடை யேஉகந்து ஓடும்இம்
மண்ட லத்தொடும் கூடுவது இல்லை,யான்;
அண்ட வாணன் அரங்கன்வன் பேய்முலை
உண்ட வாயன்தன் உன்மத்தன் காண்மினே.

கருத்து: உணவையும் உடையையும் விரும்பி அலைகின்ற, இந்த உலகத்தாரோடு நான் சேரப்போவதில்லை. மேலுலக வாழ்க்கையுடையவனும், திருவரங்கத்திலே பள்ளிகொண்டவனும், வலிய பூதகி என்னும் பேய் முலை யுண்டவனும் ஆகிய திருமாலின்மீது மையல் கொண்டவன் நான்.

அரும் சொல் பொருள் : உன்மத்தன் : பித்தன் 118

பேய ரேஎனக்கு யாவரும்; யானும்ஓர்;
பேய னேஎவர்க் கும்;இது பேசிஎன்?
ஆய னே!அரங் கா!என்று அழைக்கின்றேன்;
பேய னாய்ஒழிந் தேன்,எம் பிரானுக்கே.

கருத்து: எனக்கு இவ் உலகத்திலுள்ள எல்லோரும், பேயர்களாகவே தோன்றுகின்றனர் அவ்வாறே, நானும் மற்றையோர்க்கெல்லாம் பேயனாகவே தோன்றுகின்றேன். இதைப்பேசி என்ன பயன்? கண்ணனே! அரங்க நாயகா! என்று கூப்பிடுகின்றேன். பேய் பிடித்தவன் போலாகி என் தலைவனிடம் அடங்கிவிட்டேன். ''நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப, நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப" என்றார் மணிவாசகப் பெருமான். 119

அறு சீர் விருத்தம்

கொல்அணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
குலமதலாய்! குனிவில் ஏந்தும்
மல்அணைந்த வரைத்தோளா! வல்வினையேன்
மனம்உருக்கும் வகையே கற்றாய்;
மெல்அணைமேல் முன்துயின்றாய்; இன்றுஇனிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்,
கல்அணைமேல் கண்துயிலச் கற்றனையோ?
காகுத்தா! கரிய கோவே!

கருத்து. கொல்லும் தொழிலுடைய வேல்போன்ற, ரேகைகள் படர்ந்த நீண்ட கண்களை யுடைய கோசலையின் குலக் கொழுந்தே! வளைந்த வில்லைக் கையில் தாங்கிய, மல் போர் வல்ல மலை போன்ற தோளை யுடையவனே! வலிய வினையுடையேனாகிய எனது உள்ளத்தை உருக்கும் வித்தையை யெல்லாம் கற்றிருக்கின்றாய்! மெல்லிய படுக்கையிலே முன்னே உறங்கினாய். இப்பொழுது கானகம் சென்று, பெரிய மரத்தின் நிழலிலே கல் படுக்கையிலே படுக்கப் படித்துக்கொண்டாயா? காகுத்தனே! கரிய மாணிக்கமே!

இது குலசேகர ஆள்வார், இராமனைக் காட்டுக்கு அனுப்பிய தயரதன் ஆகத் தான் இருந்து புலம்பும் முறையில் பாடியது.

அரும் சொல் பொருள் : கொல்அணை: கொல்லும் தொழில் உடைய வரி: செவ்வரி, கருவரி. குனி: வளைந்த. வியன்: பெரிய. 120

பொன்பெற்றார் எழில்வேதப் புதல்வனையும்
தம்பியையும் பூவை போலும்
மின்பற்றா நுண்மருங்குல் மெல்லியல்என்
மருகியையும் வனத்தில் போக்கி,
நின்பற்றா நின்மகன்மேல் பழிவிளைத்திட்டு
என்னையும்நீள் வானில் போக்க
என்பெற்றாய் கைகேயி! இருநிலத்தில்
இனிதாக இருக்கின் றாயே.

கருத்து: பொன்னைப் பெற்றதைப் போல் பெற்ற, அழகிய மறைகள் வல்ல மகனாகிய இராமனையும், தம்பி இலக்குவனையும், பூவைப் பறவை போன்ற பேச்சையும், மின்னலைத் தோற்கடிக்கும் மெல்லிய தன்மை வாய்ந்த இடையையும் உடைய என் மருமகள் சீதையையும் காட்டுக்கு அனுப்பி, நீ கொண்ட ஆசை காரணமாக, நின் மகனாகிய பரதன்மீது பழியைச் சுமத்தி, என்னையும் நீண்ட வானுலகத்துக்கு அனுப்பியதால் நீ பெற்ற பயன் என்ன? ஏ கைகேயி! இந்தப் பெரிய உலகத்தில் நீ புகழோடு இருக்கின்றா யல்லவா?

இனிதாக இருக்கின்றாயே என்பது இகழ்ச்சிக் குறிப்பு.
இதுவும் தயரதன் புலம்பலே. "சுடு மயானத்திடை தன் துணை யேகத் தோன்றல் துயர்க் கடலின் ஏகக் கடுமைஆர் கானகத்துக் கருணை ஆர்கலிஏகக் கழற்கால் மாயன், நெடுமையால் அன்று அளந்த உலகெலாம் தன் மனத்தே நினைந்து, செய்யும் கொடுமையால் அளந்தாள்" கைகேயி என்று கூறுவர் கம்பர்

அரும் சொல் பொருள் : பூவை: நாகணவாய்ப்புள். மருங்குல்: இடை. 121

எழு சீர் விருத்தம்

தேட்ட ருந்திறல் தேனி னைத்தென்
அரங்க னைத்திரு மாதுவாழ்
வாட்டம் இல்,வன மாலை மார்வனை
வாழ்த்தி, மால்கொள்சிந் தையராய்,
ஆட்டம் மேவி அலந்துஅ ழைத்துஅயர்வு
எய்தும் மெய்அடி யார்கள்தம்
ஈட்டம் கண்டிடக் கூடு மேல்,அது
காணும் கண்பயன் ஆவதே.

கருத்து: அரிய செல்வமான வலிய தேனும், திருவரங்கநாதனும், திருமகள் தங்கியிருக்கின்ற கெடாத அழகிய மாலையை அணிந்த மார்பை உடையவனும் ஆகிய திருமாலை வாழ்த்தி, அவனிடம் பறிகொடுத்த மனத்தை யுடையவராய். ஆடிப்பாடி வருந்தி விழ்கின்ற உண்மை அன்பர்களின் கூட்டத்தைக் காணப் பெறுவேனானால் அதுவே கண்பெற்ற பயனாம்

அரும் சொல் பொருள் : தேட்டு: செல்வம். வனம் அழகு. மால்: மயக்கம். அலந்து: வருந்தி. ஈட்டம்: கூட்டம். 122

எண் சீர் விருத்தம்

இருள்இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணம்ஆ யிரங்கள் ஆர்ந்த
அரவுஅரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை மேவி,
திருவரங்கப் பெருநகருள் தெண்நீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு,என்
கண்இணைகள் என்றுகொலோ? களிக்கும்நாளே.

கருத்து: இருள்கெட ஒளிவிடுகின்ற மணிகள் விளங்கும் நெற்றியில் புள்ளிகளைக் கூட்டமாகக் கொண்ட அழகிய ஆயிரம் படங்களைத் தாங்கிய பாம்புகளுக்கு அரசனாகிய பேரொளி மயமான அனந்தன்

என்னும் பெயரையுடைய அழகான உயர்ந்த வெள்ளைப் படுக்கையில் பொருந்தி, திருவரங்கப் பெரிய நகரிலே தெளிந்த நீரையுடைய காவிரி ஆருனது, தனது அலைகளாகிய கைகளால் திருவடி வருட அறிதுயில் கொண்டிருக்கின்ற கரிய மாணிக்கத்தை — கோமளத்தைக் கண்ணாரக் கண்டு எனது இரண்டு கண்களும் மகிழ்ச்சியடையும் நாள் என்றோ?

அரும் சொல் பொருள்: இரிய ஓட, துத்தி: புள்ளி, பணம்: பாம்பின்படம், அனந்தன்: ஆதிசேடன். பொன்னி: காவிரி. கோமளம்: அழகு.

123

மறம்திகழும் மனம்ஒழித்து, வஞ்சம் மாற்றி,
ஐம்புலன்கள் அடக்கி,இடர்ப் பாரத் துன்பம்
துறந்து,இருமுப் பொழுதுஏத்தி, எல்லை இல்லாத்
தொல்நெறிக்கண் நிலைநின்ற தொண்டர் ஆன
அறம்திகழும் மனத்தவர்தம் கதியை, பொன்னி
அணிஅரங்கத்து அரவணையில் பள்ளிகொள்ளும்
நிறம்திகழும் மாயோனைக் கண்டுஎன் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ? நிற்கும் நாளே.

கருத்து: பாவ எண்ணங்களை நீக்கி, வஞ்சனையைப் போக்கி, ஐந்து பொறிகளையும் வென்று, இடராகிய பெரிய துன்பத்தைத் தள்ளி, ஆறு பொழுதும் தொழுது, கணக்கற்ற பழைய வழியிலே நிலை நிற்கின்ற அடியார்களான அறம் விளங்குகின்ற உள்ளம் உடையார்க்குப் பற்றுக்கோடாக அமைந்தவனை, காவிரி சூழ்ந்த திருவரங்க நகரிலே பாம்புப் படுக்கையிலே பள்ளிகொண்டிருக்கின்ற நிறம் விளங்குகின்ற திருமாலைக்கண்டு என்னுடைய கண்களில் நீர் மல்க தான் நிற்பது எந்த நாளோ?

அரும் சொல் பொருள்: மறம்: பாவம், கதி: பற்றுக்கோடு. 124

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம்குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி,
ஆராத மனக்களிப்போடு அழுத கண்ணீர்
மழைசோர நினைந்துஉருகி ஏத்தி, நாளும்
சீர்ஆர்ந்த முழவுஓசை பரவை காட்டும்
திருவரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
போர்ஆழி அம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்றுகொலோ? புரளும் நாளே.

கருத்து: தூர்ந்துபோகாத காதல் மனமுடைய அடியார்களின் கூட்டம் கூடி, அரங்கனின் திருப்புகழ் பலவற்றையும் பாடி, குறையாத உள்ள மகிழ்ச்சியோடு அழுகின்ற கண்ணீர் மழையாகச் சொரிய நினைந்து உருக்கமடைந்து தொழுது நாள்தோறும் சிறப்பான மத்தள ஒலியானது கடல்போல் முழங்கும் திருவரங்க நகரிலே, அரவணையிலே பள்ளி கொண்டிருக்கின்ற போர்ச் சக்கரத்தைத் தாங்கிய தலைவனைக் கண்டு களித்துப் பூமியிலே கிடந்து நான் புரள்வது என்று?

அரும் சொல் பொருள்: தூராத: அழிந்து போகாத, குழாம் குழுமி: கூட்டம்கூடி, முழவு: மத்தளம், பரவை: கடல். 125

வன்பெருவா னகம்உய்ய, அமரர் உய்ய,
மண்உய்ய, மண்உலகில் மனிதர் உய்ய,
துன்பமிகு துயர்அகல, அயர்வுஒன்று இல்லாச்
சுகம்வளர, அகமகிழும், தொண்டர் வாழ,
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணிஅரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்,
இசைந்துடனே என்றுகொலோ? இருக்கும் நாளே.

கருத்து: வலிய பெரிய வானுலகம் வாழவும், அங்குவாழ்கின்ற அமரர் கடைத் தேறவும். மண்ணுலகம் பிழைக்கவும், அம் மண்ணுலகிலுள்ள மனிதர்கள் நல் வாழ்வு வாழவும், துன்பம்மிகுந்த துயரங்கள் நீங்கவும், தளர்ச்சியில்லாத இன்பம் பெருகவும், உள்ளம் களிக்கும் தொண்டர்கள் வாழவும், அன்போடு தெற்குத் திக்கைப் பார்த்து அறிதுயில் கொள்கின்ற அழகிய அரங்கநாதனின் திருவாயிலிலே நிற்கும் இன்பம் நிறைந்த பெரிய கூட்டத்தைக் கண்டு அவர்களோடு சேர்ந்து நானும் இருக்கின்ற நாள் என்றோ? 126

முழுதும் வெண்ணெய் அளைந்துதொட்டு உண்ணும்
முகிழ்இ ளம்சிறுத் தாமரைக் கையும்,
எழில்கொள் தாம்புகொண்டு அடிப்பதற்கு எள்கும்
நிலையும், வெண்தயிர் தோய்ந்தசெவ் வாயும்,
அழுகை யும்,அஞ்சி நோக்கும்அந் நோக்கும்,
அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப் பதுவும்,
தொழுகை யும்இவை கண்ட அசோதை
தொல்லை இன்பத்து இறுதிகண் டாளே.

கருத்து: முற்றும் வெண்ணெயைக் குழப்பி எடுத்துச் சாப்பிடும் மூடிய சின்ன இளந்தாமரை போன்ற கையும், அழகிய கயிறு கொண்டு தாய் அடிக்கும்பொழுது அஞ்சுகின்ற தன்மையும், வெண்மையான தயிர் படிந்திருக்கின்ற சிவந்த வாயும், அழுகையும், அஞ்சிப் பார்க்கின்ற அந்தப் பார்வையும், அழகான சிவந்த சின்ன வாயை நெளிக்கும் முறையும், தொழுவதும் ஆகிய இவற்றைக் கண்ட அசோதையானவள் தான் கண்ணனை மகனாகப் பெற்ற பலாழய இன்பத்தின் எல்லையை அடைந்தாள்.

அரும் சொல் பொருள் : தாம்பு: கயிறு எள்குதல்: அஞ்சுதல். 127

வந்துஎதிர்ந்த தாடகைதன் உரத்தைக் கீறி
வருகுருதி பொழிதர,வன் கணைஒன்று ஏவி,
மந்திரம்கொள் மறைமுனிவன் வேள்வி காத்து,
வல்அரக்கர் உயிர்உண்ட மைந்தன் காண்மின்;
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண் சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
அந்தணர்கள் ஒருமூவா யிரவர் ஏத்த
அணிமணிஆ சனத்திருந்த அம்மான் தானே.

கருத்து: வந்து எதிர்த்த தாடகையினது மார்பு பிளந்து இரத்தம் கொட்டுமாறு வலிய அம்பொன்றைச் செலுத்தி மந்திரமறை வல்லவனாகிய விசுவாமித்திரனின் வேள்வியைக் காப்பாற்றி, வலிய அரக்கர்களின் உயிரைக் குடித்த மைந்தனே, சிவந்த தளிர்களின் ஊடே பொருந்திய சிரிக்கும் பூக்களையுடைய செழுமையான குளிர்ந்த சோலைகள் கொண்ட தில்லை நகரிலே, திருச்சித்திர கூடத்திலே, மூவாயிரம் அந்தணர்கள் பரவ, அழகிய அரியாசனத்திலே வீற்றிருக்கின்ற தலைவனாவான்.

அரும் சொல் பொருள் : உரம்: மார்பு. மறைமுனிவன்: விசுவாமித்திரன். திருச்சித்திரகூடம்: கோவிந்தராசப் பெருமாள் பள்ளி கொண்டிருக்கும் இடம். 128

வலிவணக்கு வரைநெடும்தோள் விராதைக் கொன்று,
வண்தமிழ்மா முனிகொடுத்த வரிவில் வாங்கி,
கலைவணக்கு நோக்குஅரக்கி மூக்கை நீக்கி,
கரனோடு தூடணன்தன் உயிரை வாங்கி,
சிலைவணக்கி மான்மரிய எய்தான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
தலைவணக்கிக் கைகூப்பி ஏத்த வல்லார்
திரிதலால், தவம்உடைத்துஇத் தரணி தானே.

கருத்து: எதிரிகளின் பலத்தை வணங்க வைக்கின்ற மலை போன்ற தோள்களையுடைய விராதனைக் கொன்று, வளமையான தமிழ் முனிவனான அகத்தியன் அளித்த வரி வில்லைப் பெற்று, கலைமானை வெல்கின்ற கண் பெற்று வந்த சூர்ப்பணகையின் மூக்கைப் போக்கி, கர தூடணர்கள் உயிரை அழித்து, வில்லை வளைத்து மாரீச மான் மடியுமாறு எய்த இராமபிரானை, தில்லை நகரிலே, திருச்சித்திர கூடத்திலே, தலை வணங்கி கை கூப்பித் தொழவல்ல அடியார்கள் வாழ்வதாலேயே, இவ் உலகம் தவமுடையது ஆகின்றது.

கலைவணக்கு நோக்கரக்கி என்பதை மனத்திற் கொண்டே போலும் "மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்'' என்று கூறுவர் கம்பர்.

அரும் சொல் பொருள் : விராது: விராதன். வரிவில்: சித்திரம் தீட்டப் பெற்ற வில். 129

குரைகடலை அடல்அம்பால் மறுக எய்து,
குலைகட்டி மறுகரையை அதனால் ஏறி,
எரிநெடுவேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன்
இன்உயிர்கொண்டு, அவன்தம்பிக்கு அரசும் ஈந்து,
திருமகளோடு இனிதுஅமர்ந்த செல்வன் தன்னை,
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
அரசுஅ மர்ந்தான் அடிசூடும் அரசை அல்லால்,
அரசாக எண்ணேன்மற்று அரசு தானே.

கருத்து: ஒலிக்கின்ற கடலை வலிய அம்பினால் நிலை குலையுமாறு கலக்கி, அணை கட்டி, அந்த அணையின் மீது ஏறி இலங்கையை அடைந்து, நெருப்பைக் கக்குகின்ற வேலையுடைய அரக்கர் கூட்டத்தையும், அவர்களுடைய தலைவனாகிய இராவணனையும் இனிய உயிர்களைக் கவர்ந்து, இராவணனின் தம்பியாகிய விடணனுக்கு இலங்கை அரசைக் கொடுத்து. சீதையொடு இனிமையாக வீற்றிருந்த இராமபிரானைத் தில்லை நகரிலே திருச் சித்திர கூடத்திலே அரசு வீற்றிருந்த அத் திருமாலின் திருவடிதாங்கும் அரசையல்லாமல், ஏனை அரசை அரசாட்சியாக எண்ணமாட்டேன்.

மலையாளத்தை ஆண்ட மன்னனாகிய குலசேகர ஆழ்வார், தம் அரசைப் பெரிதாக மதியாமையை இப் பாசுரம் புலப்படுத்தும்.

அரும் சொல் பொருள் : குலை: அணை. மறுகரை: இலங்கைப் பகுதி. எரி: நெருப்பு 130

திருமழிசை ஆழ்வார்

வெண்பா

இன்ருக; நாளையே ஆக; இனிச்சிறிதும்
நின்ருக; நின்அருள்என் பாலதே;—நன்ருக
நால்:உன்னை அன்றி இலேன்கண்டாய்; நாரணனே!
நீஎன்னை அன்றி இலை.

கருத்து: இன்று வேண்டுமானலும் ஆகட்டும்; அல்லது நாளையே ஆகட்டும்; அன்றிச் சிறிது நாள் கடந்து வேண்டுமானலும் ஆகட்டும்; எப்படியும் நின் கருணை என் பக்கம் ஆவதுமட்டும் நிச்சயம். யாவும் நன்றேயாக; திருமாலே! உன்னையன்றி நான் இல்லை; என்னையன்றி நீயுமில்லை. 131

வாழ்த்துகவாய், காண்ககண், கேட்க செவி,மகுடம்
தாழ்த்து வணங்குமின்கள் தண்மலரால்;—சூழ்த்த
துழாய்மன்னு நீள்முடிஎன் தொல்லைமால் தன்னை
வழா,வண்கை கூப்பி மதித்து.

கருத்து: துழாய் மாலையால் சூழப்பட்ட நிலைபெற்ற நீண்ட முடியுடைய என்னுடைய பழமையான திருமாலை, தவருமல் வளமை மிக்க கையைக் குவித்துப் பாராட்டி, வாய் வாழ்த்துவதாக! கண்கள் காண்பனவாக! செவிகள் கேட்பனவாக! குளிர்ந்த பூக்களை அவன் திருவடியிலே இட்டு முடிசாய்த்து வணங்குவீர்களாக! 132

வீடாக்கும் பெற்றி அறியாது மெய்வருத்திக்
கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர்!—வீடாக்கும்
மெய்ப்பொருள்தான் வேத முதற்பொருள்தான்
நற்பொருள்தான் நாராய ணன். [விண்ணவர்க்கு

கருத்து: மோட்சத்தைத் தரும் பெருமையை உணராமல், உடம்பை வருத்தப் படுத்தி, பயனற்ற வெறுங்கூடாகச் செய்து அலைந்து தின்று திரிகின்றவர்களே! வீட்டைத் தரும் உண்மையான பொருளும், மறைகளுக்கு முதலான பொருளும் வானவர்க்கு நல்ல பொருளும் ஆவது நாராயணன் என்னும் பொருளே, 133

ஆல நிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு
மேலை யுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன்;—ஞாலம்
அளந்தானை ஆழிக் கிடந்தானை ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கும் ஆறு.

கருத்து: கல்லால மரத்தின் நிழலிலிருந்து, அறத்தின் வழியை சனகாதி நால்வர்க்கு அந்த நாளிலே அருளினன் உண்மைத் தவசியாகிய சிவபெருமான்

உலகத்தை அளந்தவனும், கடலிலே பள்ளி கொண்டவனும், ஆலிலையிலே வளர்ந்தவனும் ஆகிய திருமாலை வணங்குகின்ற வழிதான் அம் மெய்த்தவத்தோன் உரை. 134

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ'' விடைஅடர்த்த
பத்தி உழவன் பழம்புனத்து—மொய்த்தெழுந்த
கார்மேகம் அன்ன கருமால் திருமேனி
நீர்வானம் காட்டும் நிகழ்ந்து.

கருத்து: விதையும் போட வேண்டுமா? விடையை அடக்கிய, பக்தி கொண்டு உழுகின்றவனாகிய திருமாலின் பழைய நிலத்துக்கு! குமுறி எழுந்த கரிய முகிலைப் போன்ற திருமாலின் அழகிய உடலானது நீர் உண்ட மழை படிந்த வானத்தைக் காட்டா நிற்கும்.

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ, விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்" என்ற குறளைத் திருமழிசை ஆழ்வார் மிக நயமாகக் கையாளுகின்றார். 135

தேவராய் நிற்கும்அத் தேவும்அத் தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும்—யாவராய்
நிற்கின்றது எல்லாம் நெடுமால்என்று ஓராதார்
கற்கின்றது எல்லாம் கடை.

கருத்து: அமரர்களாய் நிற்கின்ற அமரர் அனைவரும், அந்த அமரர்களுக்குள்ளே அயன், அரி, அரன் என்று சொல்லக் கூடிய மும் மூர்த்திகளாக இருக்கின்ற அந்தப் பழைய சேர்க்கையும், இன்னும் எவராகவேனும் நிற்கின்ற எல்லா வடிவங்களும் திருமாலே என்று உணரமாட்டாதவர், கற்கின்ற அனைத்தும் கடையாய பொருள்களே! 136

கடைநின்று அமரர் கழல்தொழுது நாளும்
இடைநின்ற இன்பத்தர் ஆவர்—புடைநின்ற
நீர்ஓத மேனி நெடுமாலே! நின்அடியை
யார்ஓத வல்லார் அவர்?

கருத்து: கடைசிப் படியிலே நின்று, ஏனைத் தேவர்களுடைய திருவடிகளை வணங்கி, நாள்தோறும் இடைப்பட்ட இன்பத்தைப் பெறுகின்றவராவார்கள் சிலர். பக்கத்திலே நிற்கின்ற கடல்போன்ற நிறத்தையுடைய திருமாலே! நின் திருவடியைய அன்னுருள் யாரால் பேச முடியும்? (அந்தத் தவம் அவர்களுக்கு இல்லை)

அரும் சொல் பொருள்: புடை: பக்கம் ஓதம்: கடல். 137

அன்பாவாய்; ஆர்அமுதம் ஆவாய்; அடியேனுக்கு
இன்பாவாய்; எல்லாமும் நீஆவாய்;—பொன்பாவை
கேள்வா! கிளர்ஒளிஎன் கேசவனே! கேடின்றி
ஆள்வாய்க்கு அடியேன்நான் ஆள்.

கருத்து: எனக்கு அன்பாக நீ ஆவாய்! நிறைந்த அமுதமுமாவாய்! இன்பமும் ஆவாய்! எல்லாமாகவும் நீ ஆவாய்! திருமகள் தலைவா! விளங்குகின்ற ஒளியை உடைய என் திருமாலே! தீங்கு இல்லாமல் ஆட்கொள்ளுகின்ற உனக்கு நான் அடிமை. 138

செவிக்குஇன்பம் ஆவதும் செங்கண்மால் நாமம்:
புவிக்கும் புவியதுவே கண்டீர்!—கவிக்கு
நிறைபொருளாய் நின்றானை நேர்பட்டேன்; பார்க்கில்
மறைபொருளும் அத்தனையே தான்.

கருத்து: காதுக்கு இனிமையாக இருப்பது திருமால் திருநாமமே; உலகத்துக்கெல்லாம் உள் உலகமாக இருப்பதும் அதுவே; இதனை அறியுங்கள். கவி பாடுதற்கு நிறைந்த பொருளாக நின்ற அவனை நான் அணுகினேன்; ஆராய்ந்து பார்த்தால், மறைகளின் பொருளும் அவனேதான். 139

தொழில்எனக்குத் தொல்லைமால் தன்நாமம் ஏத்தல்;
பொழுதுஎனக்கு மற்றதுவே போதும்;—கழிசினத்த
வல்லாளன் வானரக்கோன் வாலி மதன்அழித்த
வில்லாளன் நெஞ்சத்து உளன்.

கருத்து: எனக்குத் தொழில் பழைய திருமாலின் திருநாமம் ஏத்துதலே; அதற்கே எனக்குக் காலம் போதுமானதாக இருக்கின்றது. மிக்க கோபத்தையுடைய வலிமை வாய்ந்த வானரர்கள் தலைவனான வாலியின் வலிமையைத் தொலைத்த வில்லையுடையோனான இராமன் என் மனத்திலே என்றும் இருக்கின்றான். 'எனக்குத் தொழில் கவிதை' என்றார் பாரதியாரும்.

அரும் சொல் பொருள்: சழிசினத்த: மிக்க கோபத்தையுடைய, மதன்: வலிமை. 140

எழு சீர் விருத்தம்

தன்உ ளேதி ரைத்தெ ழுந்த
ரங்க வெண்த டங்கடல்
தன்உ ளேதி ரைத்தெ ழுந்த
டங்கு கின்ற தன்மைபோல்,
நின்உ ளேபி றந்தி றந்து
நிற்ப வும்தி ரிபவும்
நின்உ ளேஅ டங்கு கின்ற
நீர்மை நின்கண் நின்றதே.

கருத்து: தனக்குள்ளே அலை வீசி எழும் பெரிய வெள்ளிய அலைகளைக் கொண்ட கடலானது. தனக்குள்ளேயே அலை மோதி எழுந்து அடங்குகின்ற இயற்கையைப் போல, உன்னிடத்தே இருந்து பிறந்து நிற்கின்றனவும் திரிகின்றனவுமாகிய அசர சரப் பொருள்களெல்லாம் நினக்குள்ளேயே இறந்து ஒடுங்குகின்ற தன்மை நின்னிடத்தே காணப்படுகின்றது.

அரும் சொல் பொருள்: திரைத்து: அலை வீசி. தரங்கம்: அலை. நிற்ப: அசையாப் பொருள். திரிப: அசையும் பொருள். 141

நின்றது எந்தை ஊரகத்து;இ
ருந்தது எந்தை பாடகத்து;
அன்று வெஃக ணைக்கி டந்தது;
என்இ லாத முன்எலாம்;
அன்று நான்பி றந்தி லேன்;பி
றந்த பின்ம றந்திலேன்;
நின்ற தும்இ ருந்த தும்கி
டந்த தும்என் நெஞ்சுளே,

கருத்து: என் அப்பன் முன்னர் ஊரகம் என்ற தலத்திலே, நின்ற திருக்கோலத்தோடு காட்சியளித்தான். பாடகம் என்ற ஊரிலே இருந்த திருக்கோலம் காட்டினன். வெஃகா என்ற திருப்பதியிலே கிடந்த திருக்கோலம் கொண்டான். இவையெல்லாம் நான் இல்லாத காலத்து அப்பெருமான் அத்தலங்களில் நின்றபோதும், இருந்த போதும், கிடந்தபோதும் நான் பிறக்கவில்லை. நான் பிறந்த பின்னர் அவனை மறக்கவேயில்லை. ஆதலின் நான் பிறந்த பின், அவன் நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் மனத்துக்குள்ளேயே. ஊரகம், பாடகம், வெஃகணை என்ற மூன்று திருப்பதிகளும் காஞ்சிபுரத்து உள்ளன. 142

ஒன்றி நின்று நல்த வம்செய்து
ஊழி ஊழி தோறெலாம்,
நின்று நின்றுஅ வன்கு ணங்கள்
உள்ளி உள்ளம் தூயராய்,
சென்று சென்று தேவ தேவர்
உம்பர் உம்பர் உம்பராய்,
அன்றி எங்கள் செங்கண் மாலை
யாவர் காண வல்லரே.

கருத்து: மனம் ஒருப்பட்டு நின்று, நல்ல தவத்தைச் செய்து, ஊழிக்காலமெல்லாம் அவன் குணங்களைச் சொல்லி நின்று, அவற்றை எண்ணி உள்ளம் பரிசுத்தம் அடைந்து, மேலே போய்ப்போய் தேவதேவராய், உம்பர் உம்பர் உம்பராய் இருந்து கண்டாலன்றி எங்கள் திருமாலை யார் காண வல்லார்! 143

குலங்கள் ஆய ஈர்இ ரண்டில்
ஒன்றி லும்பி றந்திலேன்;
நலங்கள் ஆய நற்க லைகள்
நாவி லும்ந விற்றிலேன்;
புலன்கள் ஐந்தும் வென்றி லேஎன்;
பொறியி லேன்;பு னித!நின்
இலங்கு பாதம் அன்றி மற்றோர்
பற்றி லேன்எம் ஈசனே!

கருத்து: நான்கு குலத்தில் ஒரு குலத்திலும் நான் பிறந்தேன் அல்லேன்; நன்மைதரும் நல்ல நூல்களை நான் நாவினாலும் சொன்னேன் அல்லேன்; ஐம்புலன்களையும் வென்று அறியேன்; அறிவற்றவனாயிருக்

கின்றேன். புனிதமான திருமாலே! நின் விளங்குகின்ற திருவடியை யல்லால் வேறொரு பற்று எனக்கு இல்லை; எம் கடவுளே! 144

ஊனின் மேய ஆவி நீ!உ
றக்க மோடுஉ ணர்ச்சிநீ!
ஆனில் மேய ஐந்தும் நீ!அ
வற்றுள் நின்ற தூய்மை நீ!
வானி னோடு மண்ணும் நீ!வ
ளம்க டற்ப யனும்நீ!
யானும் நீ!அ தன்றி எம்பி
ரானும் நீ!இ ராமனே.

கருத்து: உடம்பிலே பொருந்தி யிருக்கின்ற உயிரும் நீ: உறக்கமும் நீ; உணர்ச்சியும் நீ; பசுவினிடத்து உள்ள, பால் தயிர் நெய் நீர் எரு ஆகிய ஐந்தும் நீயே. அவ் ஐந்துள்ளும் நின்ற புனிதமும் நீயே: விண்ணும் நீ: மண்ணும் நீயே; வளம் மிக்க கடலிலுள்ள பயனும் நீயே; நானும் நீ; அது தவிர எம் தலைவனும் நீயே; இராமனே. 145

தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்

அறு சீர் விருத்தம்

''பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே!'' என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்;
அரங்கமா நகரு ளானே.

கருத்து: பச்சை நிறமான சிறந்த மலைபோன்ற திருவுருவும், பவள நிறமான வாயும், தாமரை யனைய கண்ணும் கொண்ட திருமாலே! தேவர்கள் சிங்கமே! இடையர் குலக் கொழுந்தே! என்று உன்னைப் பாடிப் பெறுகின்ற இந்தச் சுவையைத் தவிர, யான் சென்று அமர லோகத்தை ஆளும் அந்த இன்பத்தைப் பெறுவதாயினும் நான் விரும்பமாட்டேன்; திருவரங்கப் பெருநகரில் பள்ளி கொண்டவனே! 146

வேதநூல் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும்;
நின்றதில் பதினை யாண்டு,
பேதை,பா லகன்,அ தாகும்;
பிணிபசி மூப்புத் துன்பம்;
ஆதலால் பிறவி வேண்டேன்,
அரங்கமா நகரு ளானே.

கருத்து: மனிதர்கள் மறைகளில் விதித்தபடி நூறு ஆண்டுகளைப் பெற்றாலும், அதில் பாதி உறக்கத்தே கழியும். எஞ்சியதில் பதினைந்து ஆண்டுகள் சிறு குழந்தைப் பருவத்திலும், பாலப் பருவத்திலும் வாலிபப் பருவத்திலும் சென்று விடும். மேலும் நோய், பசி, மூப்பு ஆகிய துன்பங்களில் கழியும் ஆண்டுகள் பல. ஆதலினாலே, நான் பிறவியை விரும்பமாட்டேன். அரங்க நகர்த் துயின்றவனே! 147

மறம்சுவர் மதிள்எ டுத்து,
மறுமைக்கே வெறுமை பூண்டு,
புறம்சுவர் ஓட்டை மாடம்
புரளும்போது அறிய மாட்டீர்!
அறம்சுவர் ஆகி நின்ற
அரங்கனார்க்கு ஆட்செய் யாதே,
புறம்சுவர்க் கோலம் செய்து
புள்கவ்வக் கிடக்கின் றீரே.

கருத்து: பாவத்தைக் கொண்டு மதில் சுவரை எழுப்பி, மறு உலக வாழ்வை விலகச் செய்து, உடம்பாகிய சுவர்கொண்டு எழுப்பிய ஓட்டை வீடு நிலைகுலைந்து அழியும் போது உணரமாட்டீர்கள். தருமமே சுவராகி நின்ற திருவரங்கநாதனுக்கு அடிமையாகாமல், உள்ளே அநேகம் குறைகளை வைத்துக்கொண்டு, சுவரின் வெளிப் புறத்தை அழகு செய்வதுபோல, உடம்பை வெளியே அழகு படுத்தி, முடிவில் அவ் உடம்பைக் கழுகுகள் கொத்தத் தக்க நிலையை அடைகின்றீர்களே! 148

மற்றும்ஓர் தெய்வம் உண்டே?
மதியிலா மானி டங்காள்!
உற்றபோது அன்றி நீங்கள்
ஒருவன்என்று உணர மாட்டீர்;
அற்றமேல் ஒன்ற றியீர்;
அவன்அலால் தெய்வம் இல்லை;
கற்றினம் மேய்த்த எந்தை
கழல்இணை பணிமின் நீரே!

கருத்து: அறிவற்ற மானிடர்களே! வேறொரு தெய்வமும் இருக்கின்றதா? ஏதேனும் உங்களுக்கு இடையூறு வந்தாலன்றி திருமால் ஒருவனே கடவுள் என்று நீங்கள் அறியமாட்டீர்கள். சமயம் நேர்ந்தாலன்றி ஒன்றையும் நீங்கள் உணரமாட்டீர்கள். அவனைத் தவிர வேறு தெய்வம் இல்லை. கன்றுக் கூட்டங்களை மேய்த்த எம் தந்தையின் திருவடிகளை வணங்குங்கள்.

அரும் சொல் பொருள்: அற்றம்: சந்தர்ப்பம். கன்று, எதுகை நோக்கி கற்று என்று ஆயது. 149

போதெல்லாம் போது கொண்டுஉன்
பொன்அடி புனைய மாட்டேன்;
தீதிலா மொழிகள் கொண்டுஉன்
திருக்குணம் செப்ப மாட்டேன்;
காதலால் நெஞ்சம் அன்பு
கலந்திலேன்; அதுதன் னாலே
ஏதிலேன்; அரங்கர்க்கு அல்லேன்;
என்செய்வான் தோன்றி னேனே.

கருத்து: நாள் முழுதும் பூக்களையிட்டு, உன் பொன் போன்ற திருவடிகளை என் தலைமேற் சூடமாட்டேன். குற்றமற்ற பேச்சுக்களால் உன்னுடைய அழகிய குணங்களைப் பேச மாட்டேன். உன்னைக் காதலித்து என் நெஞ்சினுள்ளே அன்பைக் கலக்கமாட்டேன். அதனாலே எதுவும் அற்றவனாக நான் ஆகின்றேன். அரங்கநாதனுக்கு நான் ஆட்படமாட்டேன், அந்தோ! எதற்காக நான் இந்த உலகத்திற் பிறந்தேன்!

அரும் சொல் பொருள் : முதற்போது, காலம் இரண்டாவது போது, மலர்.

150

குரங்குகள் மலையை நூக்கக்
குளித்துத்தாம் புரண்டிட் டோடித்
தரங்கநீர் அடைக்கல் உற்ற
சலம்இலா அணிலம் போலேன்;
மரங்கள்போல் வலிய நெஞ்ச
வஞ்சனேன்; நெஞ்சு தன்னால்
அரங்கனார்க்கு ஆட்செய் யாதே
அளிஅத்தேன்; அயர்க்கின் றேனே.

கருத்து: குரங்குகளெல்லாம் திருவணை கட்டும்போது கற்களைத் தள்ள, கடலிலே குளித்துக் கரையிலேயுள்ள மணலிலே புரண்டு, ஓடி அம்மணலை அணையிலே ஏற்றிக் கடலை அடைக்கப் புகுந்த சஞ்சலமில்லாத அணில்களாக நான் இல்லாது போய்விட்டேனே! மரங்கள் போல வலிய நெஞ்சு படைத்து, அந்த வல் நெஞ்சு காரணமாக அரங்க நாதனுக்கு ஆளாகாமல், கருணை யற்று வீணாகக் கிடக்கின்றேன். இராமன் திருவணை கட்டிய காலத்து, கடலை அடைக்க வானரங்கள் மலைகளைக் கொண்டு சேர்த்தன. அணில்கள் கடலில் குளித்து, கரை மண்ணில் புரண்டு அம் மண்ணை உடம்பில்

சுமந்து கொண்டு போய், கடலை அடைக்க உதவி செய்தன; என்ற பழங்கதையை நினைந்து, அந்தச் சிறு தொண்டு கூடத் தன்னால் செய்ய முடியவில்லையே என்று வருந்துகின்றார் தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

அரும் சொல் பொருள் : நூக்கல்: தள்ளுதல். தரங்கம்: கடல். சலம்: சஞ்சலம். அணிலம்: அணில்கள். 151

ஊர்இலேன்; காணி இல்லை;
உறவுமற்று ஒருவர் இல்லை;
பாரில்நின் பாத மூலம்
பற்றிலேன்; பரம மூர்த்தி!
கார்ஒளி வண்ண னே!என்
கண்ணனே! கதறு கின்றேன்;
ஆர்உளர்? களைகண்; அம்மா!
அரங்கமா நகரு ளானே.

கருத்து: எனக்கு ஊர் கிடையாது. காணி நிலங்கூட எனக்குச் சொந்த மில்லை. உன்னைத் தவிர மற்றோர் உறவினர் எனக்கு இல்லை. உலகத்தில் உன்னுடைய திருவடியின் ஆணிவேரைப் பிடித்துக் கொண்டேனில்லை. மேலான கடவுளே! கார்மேகம் போன்ற நிறத்தை யுடையவனே! என் கண்ணபிரானே! நான் அலறு கின்றேன். எனக்குப் பற்றுக்கோடாவார் வேறு யார்? அரங்க நகர் குடிகொண்டவனே!

அரும் சொல் பொருள் : களைகண்: பற்றுக்கோடு. 152

மனத்தில்ஓர் தூய்மை இல்லை;
வாயில்ஓர் இன்சொல் இல்லை;
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா;
புனத்துழாய் மாலை யானே!
பொன்னிசூழ் திருவ ரங்கா!
எனக்குஇனிக் கதிஎன் சொல்லாய்;
என்னைஆள் உடைய கோவே.

கருத்து: என்னுடைய உள்ளத்திலே ஒரு பரிசுத்தமும் இல்லை. என் வாயிலே ஒரு நல்லபேச்சும் வாராது. கோபந்தான் எனக்குக் கண்ட பயன். கோபத்தால் வெறித்துப் பார்த்து வீணாகக் கொடிய

பேச்சுக்கள் பேசி இரைந்து கத்துவதே எனக்குத் தொழிலாகி விட்டது. நந்தனவனத்தில் தோன்றும் துழாய் மாலையை அணிந்தவனே! காவிரி சூழும் அரங்க நகரிலே துயின்றவனே! எனக்கு இனிமேல் கதிதான் என்ன? சொல்ல மாட்டாயா? என்னை அடிமை கொண்ட தலைவனே!

அரும் சொல் பொருள் : செற்றம் நோக்கி: வெறித்துப் பார்த்து, தீவிளி கொடிய பேச்சு. விளிவன்: பேசுவன். வாளா: வீணாக. கதி: ஊன்றுகோல். 153

தவத்துளார் தம்மில் அல்லேன்;
    தனம்படைத் தாரில் அல்லேன்;
உவர்த்தநீர் போல என்தன்
    உற்றவர்க்கு ஒன்றும் அல்லேன்;
துவர்த்தசெவ் வாயி னார்க்கே
    துவக்குஅற, துரிசன் ஆனேன்;
அவத்தமே பிறவி தந்தாய்!
    அரங்கமா நகரு ளானே.

கருத்து: தவம் செய்பவர்களுக்குள்ளே ஒருவனாக நான் ஆகமாட்டேன்; செல்வம் பெற்றவர்களுக்குள்ளே ஒருவனும் அல்லேன்; உப்பு நீரைப் போல இருக்கின்றேன்; என்னைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு உதவியும் செய்ய என்னால் முடியவில்லை. பவளம்அனைய சிவந்த வாயை யுடைய நங்கையரிடத்தே தொடர்பு மிக, தீயவனாக ஆனேன். வீணாக, எனக்கு இப் பிறவியைத் தந்து விட்டாய்! திருவரங்க நகர் ஆள்பவனே!

அரும் சொல் பொருள் : உவர்ப்பு: உப்பு. துவர்த்த: பவளம் போன்ற. துவக்கு: தொடர்பு. அற: மிக. துரிசன்: தீயவன். 154

மெய்எல்லாம் போக விட்டு,
    விரிகுழ லாரில் பட்டு,
பொய்எல்லாம் பொதிந்து கொண்ட
    போட்கனேன், வந்து நின்றேன்;
ஐயனே! அரங்க னே!உன்
    அருள்என்னும் ஆசை தன்னால்
பொய்யனேன் வந்து நின்றேன்!
    பொய்யனேன்! பொய்ய னேனே.

கருத்து: உண்மையை எல்லாம் புறத்தே போகவிட்டு, விரிந்த கூந்தலை யுடைய பெண்களது மையலிலே அகப்பட்டு, பொய்களையே உள்ளடக்கிக் கொண்ட உள்ளீடு அற்றவனாகிய நான், உன் முன்னே வந்து நிற்கின்றேன். தலைவனே! அரங்க நாதனே! உன் அருள் பெறவேண்டும் என்ற ஆசை காரணமாக, பொய்யனாகிய நான் வந்து நிற்கின்றேன்; யான் பொய்யுடையேன்! ஆம், நிச்சயமாகப் பொய்யுடையேன்!

அரும் சொல் பொருள்: விரிகுழலாரில்: விரிந்த கூந்தலை யுடைய பெண்களிடத்து. போட்கன்: பொக்கையானவன்; உள்ளீடற்ற வெறுங் கூடு போன்றவன். 155

உள்ளத்தே உறையும் மாலை
உள்ளுவான் உணர்வுஒன்று இல்லாக்
கள்ளத்தேன்; நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டேன்;
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம்
உடன்இருந்து அறிதி என்று
வெள்கிப்போய் என்உள் ளேநான்
விலவுஅறச் சிரித்திட் டேனே.

கருத்து: மனத்துக்குள்ளே தங்கி யிருக்கின்ற திருமாலை உணர்ந்து அறியக் கூடிய அறிவில்லாத கள்ளமுடையவனாக நான் இருக்கின்றேன். நானும் ஒரு தொண்டன் என்று சொல்லிக்கொண்டு, தொண்டு செய்யும் வேடத்தைப் போட்டுக் கொண்டிருக்கின்றேன். நீயோ எண்ணுவார் எண்ணத்தையெல்லாம் கூட இருந்து அறிகின்றவன்; எனவே, என் எண்ணத்தை நீ அறிகின்றாய் என்று கண்டு, வெட்கப் பட்டு, எனக்குள்ளாகவே என் விலா எலும்பு முறியும் படியாக, என் செயலுக்கு இரங்கி நான் சிரித்துக் கொள்ளுகின்றேன்.

"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கி, தெள்ளியேன் ஆகி நின்று தேடினேன்: நாடிக் கண்டேன்; உள்குவார் உள்கிற்று எல்லாம் உடன்இருந்து அறிதி என்று, வெள்கினேன் வெள்கி நாணும் விலாஇறச் சிரித்திட் டேனே."

என்ற அப்பர் தேவாரம் இப்பாடலோடு பெரிதும் ஒத்தது.

அரும் சொல் பொருள்: உள்ளுதல்: நினைத்தல். கள்ளத்தேன்: ஏமாற் றும் தொழிலுடையேன். கோலம்: வேடம். அறிதி: அறிகின்றாய். வெள்கிப்போய்: வெட்கி நின்று. விலவு அற: விலா எலும்பு தொறுங்க. 156

பழுதுஇலா ஒழுகல் ஆற்றுப்
பலசதுப் பேதி மார்கள்!
இழிகுலத் தவர்க ளேலும்
எம்அடி யார்கள் ஆகில்
தொழுமினீர்; கொடுமின்; கொள்மின்;
என்றுநின் னேடும் ஒக்க
வழிபட அருளி ஞய்,போல்
மதிள்திரு அரங்கத் தானே.

கருத்து: ''குற்ற மற்ற நடைமுறையை யுடைய, பல வற்றையும் அறிந்த நான்கு வேதங்களையும் கற்றவர்களே! தாழ்ந்த குலத்திலே பிறந்த வர்களானாலும் எமக்கு அடியார்களாக இருப்பார்களானல், அவர்களை வணங்குங்கள்; அவர்களுக்கு உங்கள் பெண்களைக்கொடுங்கள்; அவர் களுடைய பெண்களை நீங்கள் மணம் செய்துகொள்ளுங்கள்;'' என நின்னுடைய கொள்கைக்கு ஏற்ப அவர்கள் வழிபடுமாறு அருள் செய்தாய். கோட்டை சூழ்ந்த திருவரங்கத்து வாழும் கடவுளே!

அரும் சொல் பொருள்: ஒழுகல் ஆறு: ஒழுக்க வழி, சதுப்பேதிமார்: நான்கு மறைகளும் வல்லவர்கள், போல், அசை. 157

அமரஓர் அங்கம் ஆறும்
வேதம்ஓர் நான்கும் ஓதித்
தமர்களில் தலைவர் ஆய
சாதிஅந் தணர்க ளேலும்,
நுமர்களைப் பழிப்பர் ஆகில்,
நொடிப்பதோர் அளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்;
அரங்கமா நகரு ளானே.

கருத்து: மேலான ஆறு அங்கத்தையும், நான்கு மறைகளையும் ஓதித் தம்மவர் களுக்குள்ளே தலை சிறந்தவர்களாகிய சாதிப் பார்ப்பனர்ஆனாலும், நும் அடியார்களை இகழ்வார்களானல், இமைப் பொழுதுக்குள்ளே அவர்கள் புலையராகி விடுவர். அரங்க மாநகர் ஆள்வானே!

அரும் சொல் பொருள்: தமர்: தம்மவர். நுமர்: நும்மவர், நொடிப்பதோர் அளவில் ஆங்கே: கையைச் சுண்டும் அளவுக்குள்ளே. அவர்கள் தாம்: அவர்களே, புலையர்: இழிதொழில் உடையார், போலும், அசை.

158

எண் சீர் விருத்தம்

கதிரவன் குணதிசைச் சிகரம்வந்து அடைந்தான்;
கனஇருள் அகன்றது; காலைஅம் பொழுதாய்
மதுவிரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்;
வானவர் அரசர்கள் வந்துவந்து ஈண்டி
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
இரும்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்;
அரங்கத்தம் மா!பள்ளி எழுந்தரு ளாயே.

கருத்து: ஆதவன் கிழ்த்திசை முனையிலே வந்து சேர்ந்தான்: நிறைந்த இருள் நீங்கியது; காலைப்பொழுது தோன்றச் சிறந்த பூக்களிலெல்லாம் தேன் பாய்ந்து ஓடுகின்றது: அமரர்களும், மன்னர்களும் வந்து வந்து நெருங்கி, எல்லாத் திக்குகளிலும நிறைந்து விட்டனர்; இவர்களோடு வந்த பெரிய ஆண் யானைக் கூட்டமும், பெண் யானைகளும் முரச வாத்தியங்களும் ஓசை எழுப்புதலால், யாண்டும் கடல் முழக்கம் போன்றுளது; அரங்கத்திலே துயில்கின்ற தாயே பள்ளி எழுந்தருள்வாயாக!

அரும் சொல் பொருள்: குணம் கிழக்கு கனம்: நிறைந்த. மது: தேன். ஈண்டி; நெருங்கி. இரும்: பெரிய. களிறு: ஆண் யானை. ஈட்டம்: கூட்டம். பிடி: பெண்யானை அதிர்தல்: சத்தமிடுதல். 159

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன; இவையோ!
கதிரவன் கனைகடல் முளைத்தனன்; இவனோ!
துடிஇடை யார்,சுரி குழல்பிழிந்து உதறித்
துகில்உடுத்து ஏறினர்; சூழ்புனல் அரங்கா!
தொடைஒத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்டர் அடிப்பொடி என்னும்
அடியனை அளியன்என்று அருளிஉன் அடியார்க்கு
ஆட்படுத் தாய்!பள்ளி எழுந்தரு ளாயே.

கருத்து: மணம் பொருந்திய தாமரைப் பூக்கள் பூத்தன; இவைகள் தாமோ, அன்றி, சூரியன். கத்து கடலிலே தோன்றி விட்டான்; இவன் தானோ, என்று சொல்லும்படி, உடுக்கை போன்ற இடையை

யுடைய பெண்கள், சுருண்ட கூந்தலைப் பிழிந்து நீரைப் போக்கி, ஆடை உடுத்து. ஆற்றினின்றும் கரையேறினர். காவிரி சூழ் அரங்க நாதா! மாலை தொடுக்கப் பொருந்திய துளசி மல்கிய பூக்குடலை தொங்கி விளங்குந் தோளையுடைய தொண்டரடிப்பொடி என்று சொல்லக் கூடிய அடிமையை, ஆளத்தக்கவன் என்று கருதி, உன் அடியார்க்கு ஆளாக்கியவனே! துயில் உணர்ந்து அருள்க.

காவிரியில் நீராடி, குழல் பிழிந்து கரை ஏறிய பெண்களின் முக மண்டலங்கள். :அப்பொழுது அலர்ந்த தாமரை போலவும் காலைச் சூரியன் போலவும் விளங்கித் தோன்றுகின்றன என்பது கருத்து.

அரும் சொல் பொருள்: கடி: மணம். துடி: உடுக்கு, சுரிகுழல்: முறுக்கேறிய கூந்தல், துகில்: ஆடை.

160

பொய்கை ஆழ்வார்

வெண்பா

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடர்ஆழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை;
இடர்ஆழி நீங்குகவே என்று.

கருத்து: இவ் உலகத்தை வட்டிலாகவும், நீண்ட கடலை நெய்யாகவும், வெப்பத்தைத் தருகின்ற சூரியனை விளக்காகவும் கொண்டு, சிவந்த ஒளிவிடுகின்ற சக்கரத்தை ஏந்திய திருமாலுக்குச் சொல்மாலை தொடுத்தேன், இடர்க்கடலில் நின்றும் கரையேறும் பொருட்டு.

அரும் சொல் பொருள் : தகளி: விளக்கு வட்டில். முதலாவது ஆழி, சக்கரம். இரண்டாவது ஆழி, கடல். சொல்மாலை: பாசுரமாகிய மாலை. இடர்ஆழி: துன்பக்கடல். 161

நெறிவாசல் தானேயாய் நின்றானை, ஐந்து
பொறிவாசல் போர்க்கதவம் சாத்தி,—அறிவாம்நாம்;
ஆலமர நீழல் அறம்நால்வர்க்கு அன்றுரைத்த
ஆலம்அமர் கண்டத்து அரன்.

கருத்து: செல்லுகின்ற வழிக்கு வாயிலாக அமர்ந்தவனை, ஐம்பொறிகளாகிய எப்போதும் போரே தொடுக்கின்ற கதவுகளை மூடிவிட்டு நாம் அறிவோமாக!
அவனே, கல்லால மரத்தின்கீழ் சனகர் முதலிய நால்வர்க்கு அறத்தை அன்று சொன்ன நஞ்சு தங்கிய கழுத்தையுடைய சிவபெருமான். இப்பாசுரம் சிவனுக்குப் பரத்துவம் கூறுவது.

அரும் சொல் பொருள் : நெறி: வழி. ஆலம்: விடம். கண்டம்: கழுத்து. 162

அரன்,நா ரணன்நாமம்; ஆன்விடை,புள் ஊர்தி;
உரைநூல் மறை;உறையும் கோயில்—வரை,நீர்;
கருமம் அழிப்பு,அளிப்பு; கையது,வேல், நேமி;
உருவம்எரி, கார்மேனி ஒன்று.

கருத்து: கடவுளுக்குச் சிவன் திருமால் இரண்டும் பெயர்கள். அவருடைய வாகனம் காளையும் கருடனும். அவரைப் பற்றிக் கூறும் நூல் வேதம். அவர் வாழும் கோயில் மலையும் கடலும். அவர் தொழில் அழித்தலும் காத்தலும். அவருடைய படை திரிசூலமும் சக்கரமும். கடவுளின் வடிவம் நெருப்பு நிறம், அல்லது கரிய நிறம்.

இப் பாசுரம் அரனையும் அரியையும் ஒன்றுபடுத்திக் கூறுவது.

அரும் சொல் பொருள் : புள்: கருடன். ஊர்தி: வாகனம். வரை: கயிலை மலை. நீர்: திருப்பாற் கடல். கருமம்: தொழில் கையது: கையில் கொண்டது. எரி: நெருப்பு. 163

வாய்,அவனை அல்லது வாழ்த்தாது; கை,உலகம்
தாயவனை அல்லது தாம்தொழா;—பேய்முலைநஞ்சு
ஊணாக உண்டான் உருவொடு பேர்அல்லால்
காணாகண்; கேளா செவி.

கருத்து: உலகத்தைத் தாண்டியவனும், தாயாக வந்து பால் கொடுத்த பேயின் நச்சுப் பாலை ஊணாகக் குடித்தவனும் ஆகிய திருமாலின் திருவுருவத்தையும் திருப் பெயரையும் அல்லாத பிறவற்றை என் வாய் வாழ்த்தாது; என் கைகள் தொழா; என் கண்கள் காண மாட்டா; என் செவிகள் கேட்க மாட்டா.

அரும் சொல் பொருள் : தாயவன்: தாவியவன். பேய்: பூதகி. 164

முதலாவார் மூவரே; அம்மூவர் உள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன்;—முதலாய
நல்லான் அருள்அல்லால் நாமநீர் வையகத்துப்
பல்லார் அருளும் பழுது.

கருத்து: யாவருள்ளும் முதன்மையானவர் மும்மூர்த்திகளே; அம் மும்மூர்த்திகளுக்கும் முதலானவன் கடல்நிற வண்ணனாகிய திருமாலே; அத்தகைய முதன்மையான நல்லவனுடைய கருணையல்லது அச்சத்தைத் தருகின்ற கடல் சூழ்ந்த இவ் உலகத்து வேறு பலருடைய அருளும் குற்றமுடையது.

அரும் சொல் பொருள் : மூவர்: அரன், அரி, அயன். மூரிநீர்: கடல். நாமம்: அச்சம். நீர்: கடல். 165

கைய வலம்புரியும் நேமியும்; கார்வண்ணத்து
ஐய! மலர்மகள்நின் ஆகத்தாள்;—செய்ய
மறையான்நின் உந்தியான்; மாமதிள்மூன்று எய்த
இறையான்நின் ஆகத்து இறை.

கருத்து: நீ கையிற் கொண்டன வலம்புரிச் சங்கும் சக்கரமும்; முகில் நிறப் பெரும! திருமகள் நின் மார்பினள்; செவ்விய வேதத் தலைவனாகிய பிரமன் உன் கொப்பூழிற் பிறந்தவன்; சிறந்த மும்மதிலை அழித்த சிவபிரான் நின் உடம்பிலே பகுதி பெற்றவன்.

அரும் சொல் பொருள் : முதல் ஆகம்: மார்பு. உந்தி: கொப்பூழ், இரண்டாவது ஆகம்: உடம்பு. இறை: பகுதி 166

இமையாத கண்ணால் இருள்அகல நோக்கி,
அமையாப் பொறிபுலன்கள் ஐந்தும்—நமையாமல்
ஆகத்து அணைப்பார் அணைவரே, ஆயிரவாய்
நாகத் தணையான் நகர்.

கருத்து: கண்கொட்டாமல், இருள் போகப் பார்த்து, அடங்காத ஐம்புலனையும் அதன்வழி நுகரும் பொருளையும் அவை நச்சரிக்காமல் உடம்பினுள்ளே அவற்றை அணைத்துக் கட்டுகின்றவர், ஆயிரம் வாய்ப் பாம்பணையிலே பள்ளி கொள்ளும் கலங்காப் பெருநகரான வைகுந்தத்தை அடைவர்.

அரும் சொல் பொருள் : அமையா: அடங்காத. பொறி: மெய் வாய் கண் மூக்குச் செவி எனும் ஐந்து. புலன்: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்து நமைதல்: நமுநமு என்று பிடுங்குதல். 167

குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும்;
இன்று முதலாக என்நெஞ்சே!—என்றும்
புறன்உரையே ஆயினும் பொன்ஆழிக் கையான்
திறன்உரையே சிந்தித்து இரு.

கருத்து: என் மனமே! மலையளவு பெரிய குற்றத்தை நீ செய்தாலும், அவற்றையும் குணமாகக் கொள்வான் கடவுள். ஆதலால், இன்றுமுதல் எப்பொழுதும் வேறுபட்ட பேச்சே ஆயினும் பொற் சக்கரத்தைக் கையில் தாங்கிய திருமாலின் குணம் கூறும் பேச்சையே சிந்தனை செய்திருப்பாயாக!

"குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே நீ கொண்டால், என்தான் கெட்டது இரங்கிடாய் எண்தோள் முக்கண் எம்மானே" என்பது திருவாசகம், 168

வாரி சுருக்கி மதக்களிறு ஐந்தினையும்
சேரி திரியாமல் செந்நிறீஇ—கூரிய
மெய்ஞ்ஞானத் தால்உணர்வார் காண்பரே மேல்ஒருநாள்
கைந்நாகம் காத்தான் கழல்.

கருத்து: கயிற்றைப் போட்டுச் சுருக்கி இழுத்துப் பொறிகளாகிய மதயானை ஐந்தையும் வீதி வழியே அலையாமல் செம்மை வழியிலே நிறுத்தி, கூர்மையான உண்மை அறிவால் உணர்கின்றவர், அந்த நாளில் ஆதிமூலமே என்று அழைத்த யானைக்கு அருள் சுரந்த திருமாலின் திருவடிகளைக் காண்பர்.

அரும் சொல் பொருள் : வாரி: யானை கட்டும் கயிறு. சேரி: வீதி. செந்நிறீஇ· செம்மை வழியிலே நிறுத்தி. கைந்நாகம்: யானை: 169

அயல்நின்ற வல்வினையை அஞ்சினேன்; அஞ்சி
உயநின் திருவடியே சேர்வான்,—நயம்நின்ற
நன்மாலை கொண்டு, நமோநாரணாஎன்னும்
சொன்மாலை கற்றேன் தொழுது.

கருத்து: பக்கத்திலே நிற்கின்ற வலிய வினையைக் கண்டு பயப்படுகின்றேன்; அவ்வாறு பயந்து தப்பிப் பிழைக்க நின் திருவடியைச் சேரும் பொருட்டு, நயம் நிறைந்த நல்ல பாமாலையைக் கொண்டு, நாராயணாய நம என்னும் சொல் மாலை தொடுக்க உன்னை வணங்கிக் கற்றுக் கொண்டேன். 170

நயவேன் பிறர்பொருளை; நள்ளேன்கீழ் ழாரோடு;
உயவேன் உயர்ந்தவரோடு அல்லால்;— வியவேன்
திருமாலை அல்லது தெய்வம்என்று ஏத்தேன்;
வருமாறுஎன் நம்மேல் வினை.

கருத்து: பிறருக்கு உரிய பொருளை விரும்பமாட்டேன்; கீழ் மக்களோடு நட்புக்கொள்ள மாட்டேன்; சிறந்த மனிதர்களோடு அல்லாமல் இணங்கமாட்டேன்; திருமாலைத் தவிர வேறு தெய்வங்களைப் பாராட்டிப் பேச மாட்டேன்; தொழவும் மாட்டேன்: எனவே, நம் மீது தீவினை வரும் வழி ஏது!

அரும் சொல் பொருள் : நயத்தல்: விரும்புதல். நள்ளுதல்: நட்புக்கொள்ளுதல். உய்த்தல்: இணங்குதல். வியத்தல்: போற்றிப் பேசுதல். 171

ஏற்றான்,புள் ஊர்ந்தான்; எயில்எரித்தான்,மார்விடந்தான்
நீற்றான், நிழல்மணி வண்ணத்தான்;—கூற்றொருபால்
மங்கையான், பூமகளான்; வார்சடையான், நீள்முடியான்;
கங்கையான், நீள்கழலான்; காப்பு.

கருத்து: விடை வாகனத்தில் ஏறுபவன், கருடன் மீதும் ஏறிச் செலுத்துபவன்; திரிபுரங்களை எரித்தவன், இரணியன் மார்பைப் பிளந்தவன்; திருநீற்றைஅணிந்த மேனியினன், குளிர்ந்த நீல நிறத்தினன்; ஒரு பக்கத்திலே உமையவளை யுடையவன், திருமகளை மார்பிலேந்தியவன்; நீண்ட சடையையுடையவன், நெடிய கொண்டையும் கொண்டவன்; கங்கையை அணிந்தவன், நீண்ட திருவடியை உடையவன் ஆகிய கடவுள் காப்பானாக!

இப்பாடல் சிவனையும் திருமாலையும் ஒன்றாகக் கூறும் அருமை கொண்டது. 172

பூதத்தாழ்வார்

வெண்பா

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா,—நன்புருகி,
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு;
ஞானத் தமிழ்புரிந்த நான்.

கருத்து: அன்பை விளக்கு வட்டிலாகவும், ஆசையை நெய்யாகயும், இன்புற்று உருகுகின்ற மனத்தைத் திரியாகவும் கொண்டு, நன்ருக உருக்கமடைந்து, அறிவு மயமான ஒளி விளக்கைத் திருமாலுக்கு ஏற்றி வைத்தேன்; அறிவுத் தமிழ்ப் பாசுரத்தால் நான். 173

அடிமூன்றில் இவ்உலகம் அன்றுஅளந்தாய் போலும்;
அடிமூன்று இரந்துஅவனி கொண்டாய்;—படிநின்ற
நீர்ஓத மேனி நெடுமாலே! நின்அடியை
யார்ஓத வல்லார் அறிந்து.

கருத்து: மாவலியிடம் மூன்றடி மண் கேட்டு, அந்நாளில் மூன்று அடியால் இவ் உலகத்தையே அளந்து ஏற்றுக்கொண்டாய். உலகத்தைச் சுற்றி நிற்கின்ற கடல் போன்ற நிறத்தையுடைய திருமாலே! நின் திருவடிச் சிறப்பை அறிந்து சொல்ல வல்லார் யார்?

அரும் சொல் பொருள்: படி: உலகம். நீர் ஓதம்; கடல். 174

அறிந்துஐந்தும் உள்அடக்கி ஆய்மலர்கொண்டு ஆர்வம்
செறிந்த மனத்தராய்ச் செவ்வே—அறிந்து,அவன்தன்
பேர்ஓதி ஏத்தும் பெருந்தவத்தோர் காண்பரே
கார்ஓத வண்ணன் கழல்.

கருத்து: தெரிந்து ஐம்புலனையும் உள்ளே ஒடுங்குமாறு அடக்கி, ஆசை நிரம்பிய மனத்தோடு கூட, பொறுக்கிய பூக்களை யிட்டு, அவனுடைய திருப் பெயரைச் செம்மையாக அறிந்து சொல்லி வழிபடுகின்ற பெரிய தவசிகள், கார் நிற வண்ணனின் திருவடிகளைக் காண்பார்கள்.

அரும் சொல் பொருள்: ஆய் மலர்: ஆராய்ந்து எடுத்த மலர். செவ்வே; ஒழுங்காக. 175

கழல்எடுத்து வாய்மடித்துக் கண்கழன்று மாற்ருர்,
அழல்எடுத்த சிந்தையராய் அஞ்ச;—தழல்எடுத்த
போர்ஆழி ஏந்திஞன், பொன்மலர்ச் சேவடியை
ஓர்ஆழி நெஞ்சே! உகந்து.

கருத்து: காலைத் தூக்கி வாயை மடித்துக் கொண்டு கண் சுற்றி எதிரிகள், தீப்பிடித்த மனத்தினராய் அஞ்சி ஓட, நெருப்பைக் கக்கும் போர்ச் சக்கரத்தை ஏந்திய திருமாலின் பொன் போன்ற திருவடித் தாமரையை மகிழ்ந்து ஆராய்ந்து அறிவாயாக; ஆழமான மனமே!

அரும் சொல் பொருள்: கழல்: கால். அழல்: தழல்: நெருப்பு. ஓர்: ஆராய்க ஆழி: ஆழமான 176

மனத்துள்ளான்; வேங்கடத்தான்; மாகடலான்; மற்றும்
நினைப்பரிய நீள்அரங்கத்து உள்ளான்;—எனைப்பலரும்
தேவாதி தேவன் எனப்படுவான்; முன்ஒருநாள்
மாவாய் பிளந்த மகன்.

கருத்து: என் மனத்திலே உள்ளான்; வேங்கட மலையிலே வீற்றிருக்கின்ருன்; பெரிய கடலிலே கிடக்கின்ருன்; தவிர, நினைத்தற்கும் அரிய திருவரங்க நகரிலே துயில்கின்ருன்; எந்த வகையான பலரும் தேவாதி தேவன் என ஏத்தப்படுகின்ருன்; யார் அவன்? முந்திய ஒரு நாளிலே புள்ளின் வாய் பிளந்த சிறுவஞகிய கண்ணனே! 177

யானே தவம்செய்தேன்; ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவம்உடையேன்; எம்பெருமான்;— யானே
இருந்தமிழ்நன் மாலை இணைஅடிக்கே சொன்னேன்;
பெருந்தமிழன்; நல்லேன்; பெரிது.

கருத்து: நானே தவம் செய்தவன்; ஏழு பிறப்பிலும் எந்தக் காலத்திலும் நானே தவம் உடையவன்; எம்பெருமானே! நானே பெரிய நல்ல தமிழ்ப் பாமாலையை நின் இரண்டு அடிகளுக்கும் சேர்த்தினேன்; நான் பெரிய தமிழன்; மிகவும் நல்லவன்;
"நானேயோ தவம் செய்தேன்" என்ற மணிவாசகர் மொழியும், "யானே தவமுடையேன் என்நெஞ்சே நல் நெஞ்சம், யானே பிறப்பு அறுப்பான் எண்ணினேன் - யானே அக் கைம்மா உரி போர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற, அம்மானுக்கு ஆளாயினேன்" என்னும் காரைக்காலம்மையார் பாட்டும் ஒப்புமை உடையன. 178

பெருகு மதவேழம், மாப்பிடிக்கு முன்நின்று,
இருகண் இளமூங்கில் வாங்கி,—அருகுஇருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங் கடம்கண்டீர்!
வான்கலந்த வண்ணன் வரை.

கருத்து: மதம் பெருகுகின்ற ஆண் யானையானது, சிறந்த பெண் யானைக்கு முன்னே நின்று, இரண்டே கண்கள் மட்டும் உள்ள மூங்கில் முளையைப் பிடுங்கி, பக்கத்தே இருந்த தேனோடு கலந்து உண்ணுதற்குக் கொடுக்கின்ற திருப்பதி மலையே, ஆகாயம் போன்ற நீல நிறத்தையுடைய திருமாலின் மலையாகும்.

"உருகு காதலில் தழை கொண்டு மழலை வண்டு ஓச்சி, முருகு நாறு செந்தேனினை முழை நின்றும் வாங்கி, பெருகு சூல் இளம் பிடிக்கு ஒரு பிறை எயிற்று யானை, பருக வாயினில் கையில் நின்று அளிப்பது பாராய்" என்ற கம்பர் பாடல் இதனோடு ஒப்புமை உடையது. 179

அமுதென்றும் தேன்என்றும் ஆழியான் என்றும்
அமுதன்று கொண்டுகந்தான் என்றும்—அமுதன்ன
சொன்மாலை ஏத்தித் தொழுதேன்; சொலப்பட்ட
நன்மாலை ஏத்தி நவின்று.

கருத்து: அமுதாவானென்றும், தேனுவான் என்றும், பாற்கடலான் என்றும், கடலினின்றும் அமுதத்தைக் கொணர்ந்து அந்த நாளில் மகிழ்ந்தான் என்றும், அமுதத்தை ஒத்த பாமாலையால் போற்றி வணங்கினேன்; அப்படிச் சொல்லப்பட்ட நல்ல மாலையைச் சொல்லி ஏத்தினேன். 180

நவின்றுரைத்த நாவலர்கள் நாள்மலர்கொண்டு ஆங்கே
பயின்றதனால் பெற்றபயன் என்கொல்?—பயின்றார்தம்
மெய்த்தவத்தால் காண்பரிய மேகமணி வண்ணனை,யான்
எத்தவத்தால் காண்பன்கொல் இன்று.

கருத்து: சொல்லி ஏத்திய நாவில் வல்லவர்கள், அன்று பூத்த பூவைக் கொண்டு வழுத்தியதால் அடைந்த பயன் என்ன? பழகியவர்கள் உண்மைத் தவத்தால் காண முடியாத அழகிய மேக மேனியனை நான் இன்று எந்தத் தவத்தால் காணப்போகின்றேன்! 181

இன்று அறிகின்றேன்! அல்லேன்; இருநிலத்தைச்
சென்றங்கு அளந்த திருவடியை,—அன்று
கருக்கோட்டி உள்கிடந்து கைதொழுதேன்; கண்டேன்
திருக்கோட்டி எந்தை திறம்.

கருத்து: பெரிய உலகத்தை அளந்த திருவடியை உடைய திருக்கோட்டியூரின் உறைகின்ற என் தந்தையின் தகுதியை, இன்று தான அறிகின்றேன்! அல்லேன்; கருக் கூட்டத்துக்குள் கிடந்து கை தொழுத அந்த நாளிலேயே கண்டேன். 182

மண்உலகம் ஆளேனே; வானவர்க்கும் வானவனாய்
விண்உலகம் தன்அகத்தும் மேவேனே;—நண்ணித்
திருமாலை, செங்கண் நெடியானை, எங்கள்
பெருமானைக் கைதொழுத பின்.

கருத்து: திருமாலை, சிவந்த கண்ணையுடைய நெடுமாலை, எங்கள் பெருமானை அடைந்து கை தொழுத பிறகு, மண்ணுலக ஆட்சி கிடைக்கினும் அதனை ஆள மாட்டேன்; தேவர்க்கெல்லாம் தேவனாக இருந்து விண்ணுலகத்தை ஆளும் உரிமை கிடைக்கினும் அதனை ஏற்க மாட்டேன். 183

பின்னால் அருநரகம் சேராமல், பேதுறுவீர்!
முன்னால் வணங்க முயல்மினோ?—பன்னூல்
அளந்தானைக் கார்க்கடல்சூழ் ஞாலத்தை எல்லாம்
அளந்தான் அவன்சே வடி.

கருத்து: அறியாமை யுடையவர்களே! பின் நாளிலே கொடிய நரகத்தை அடையாமல் இருப்பதற்குப் பல நூல்களாலும் பாராட்டப்பட்டவனும், கரிய கடல் சூழ்ந்த உலகத்தை யெல்லாம் அளந்தவனுமாகிய திருமாலின் திருவடியை முன்னரே வணங்க முயலுங்கள். 184

பேய் ஆழ்வார்

வெண்பா

திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்;—செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன்; புரிசங்கம் கைக்கண்டேன்;
என்ஆழி வண்ணன்பால் இன்று.

கருத்து: என்னுடைய கடல் வண்ணனாகிய திருமாலினிடத்து, இன்று நான், திருமகளைக் கண்டேன்: பொன் நிறமான உடம்பையும் பார்த்தேன்; விளங்குகின்ற சூரியனுடைய அழகிய செந்நிறத்தையும் காண்கின்றேன்; போரிலே பாய்கின்ற அழகிய சக்கரத்தையும் கண்டேன்; வலம்புரிச் சங்கையும் கையிலே பார்த்தேன்.
பொன்மேனியும், அருக்கன் அணிநிறமும் சிவபெருமானைக் 185
குறிப்பன,

மனத்துள்ளான்; மாகடல்நீர் உள்ளான்; மலராள்
தனத்துள்ளான்; தண்துழாய் மார்பன்.—சினத்துச்
செருநர்உகச் செற்றுகந்த தேங்கோத வண்ணன்,
வருநரகம் தீர்க்கும் மருந்து.

கருத்து: என் மனத்திலே இருக்கின்றான்; மிகுந்த நீர் கொண்ட கடலிலே கிடக்கின்றான்; திருமகளின் கொங்கைகளிலும் உள்ளான்; யார்? குளிர்ந்த துழாய் மாலையை மார்பில் அணிந்தவன்; கோபங் கொண்ட மாற்றார் அழிய வென்று மகிழ்ந்த நிறை கடல் நிறத்தனாகிய அன்னான் வரக்கூடிய நரகத்தைத் தீர்க்கத்தக்க மருந்தாக இருக்கின்றான்.
'வரும்துயரந் தீர்க்கும் மருந்து' என்று இரண்டு வெண்பாக்களில்
ஈற்றடி அமைக்கின்றார் மணிவாசகனார். 186
அரும் சொல் பொருள்: செருநர்: பகைவர், உக: அழிய.

தேசும் திறலும் திருவும் உருவமும்
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும்,—பேசில்
வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான்பேர் ஓத
நலம்புரிந்து சென்றடையும் நன்கு.

கருத்து: பேசுமிடத்து, வலம் சுழித்த சிறந்த சங்கு கைக்கொண்ட நாராய ணனின் பெயரைச் சொன்னால், ஒளியும், வலிமையும், செல்வமும், வடிவமும், குற்றமற்ற குடிப்பிறப்பும், ஏனைய யாவும் நன்மை செய்து நன்றாக வந்து அடையும்.

அரும் சொல் பொருள்: தேசு: ஒளி. திறல்: வலி 187

நன்குஓதும் நால்வேதத்து உள்ளான், நறவுஇரியும்
பொங்குஓத அருவிப் புனல்வண்ணன்;—சங்கோதப்
பாற்கடலான்; பாம்பணையின் மேலான்; பயின்றுரைப்பார்
நூற்கடலான்; நுண்அறிவி னான்.

கருத்து: நன்றாகப் பயில்கின்ற நான்மறை யுள்ளும் இருக்கின்றான்; தேனைக் கெடுத்து அடித்துச் செல்கின்ற பொங்கி வருகின்ற ஓசையை யுடைய அருவி நீர் கலந்த கடல் போன்ற நிறத்தை யுடைய திருமால்; சங்குகள் மலிந்த ஒலி செய்யும் பாற்கடலில் துயின்றவன்; பாம்புப் படுக்கையின் மேல் கண் வளர்கின்றவன்; பயின்று சொல்லுகின்றவர் களது கடல் போல் பெருகிய நூலின் பொருளாவான்; நுண் அறிவினனும் ஆவான்.

அரும் சொல் பொருள்: நறவு: தேன். இரியும்: கெடும். 188

சென்றநாள் செல்லாத; செங்கண்மால் எங்கள்மால்
என்றநாள் எந்நாளும் நாளாகும்;—என்றும்
இறவாத எந்தை இணைஅடிக்கே ஆளாய்
மறவாது வாழ்த்துகஎன் வாய்.

கருத்து: செங்கண்மால் எங்கள் திருமால் என்று சொன்ன நாளெல்லாம் நாட்களாகும். அவ்வாறு சொல்லாது சென்ற நாள் செல்லாத நாளே ஆகும். ஒருபோதும் சாவாத எம் தந்தையின் இரு திரு வடிகட்கே ஆளாகி, அவனை மறவாது என்னுடைய வாய் வாழ்த்துவதாக.

"பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்றார் அப்பர் சுவாமிகள்.

189

தானே தனக்குவமன்; தன்உருவே எவ்உருவும்;
தானே தவஉருவும் தாரகையும்;—தானே
எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்து
இருசுடரும் ஆய இறை.

கருத்து: தனக்கு உவமை சொல்லக் கூடியவன் தானே யாவான்; உலகிலுள்ள எல்லா உருவும் அவனது உருவே; தவ உருவாகவும் நட்சத்திரங்களாகவும், எரிகின்ற நெருப்பாகவும் பெரிய மலையாகவும் எட்டுத் திசைகளாகவும் வானத்திலுள்ள சந்திர சூரியர்களாகவும் ஆன இறை அவனே!

அரும் சொல் பொருள் : தாரகை: நட்சத்திரம். 190

நிறம்வெளிது, செய்து,பசிது, கரிதுஎன்று
இறைஉருவம் யாம்அறியோம்; எண்ணில்—நிறைவுடைய
நாமங்கை தானும் நலம்புகழ வல்லளே?
பூமங்கை கேள்வன் பொலிவு.

கருத்து: கடவுளது உருவத்தின் நிறம் வெண்மையான தென்றோ, செம்மையான தென்றோ, பசுமையான தென்றோ, கருமையான தென்றோ நாம் அறிய மாட்டோம். நாமென்ன! கணக்கற்ற நிறைவுடைய நாமகள் கூட, பூமகள் கணவனின் பொலிவு நலத்தைப் புகழ வல்லவளாவாளா?

'அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்' என்னும் காரைக்காலம்மையார் பாடல் இங்கு நோக்கத் தக்கது. 191

வாழும் வகைஅறிந்தேன்; மைபோல் நெடுவரைவாய்
தாழும் அருவிபோல், தார்கிடப்ப,—சூழும்
திருமா மணிவண்ணன் செங்கண்மால் எங்கள்
பெருமான் அடிசேரப் பெற்று.

கருத்து: மைப்போன்ற நீண்ட மலையினிடத்திலே தங்குகின்ற அருவியைப் போல மாலை கிடந்து புரள, திருமகள் தங்கியிருக்கின்ற சிறந்த நீலமேனியானும் செங்கண்மாலும் ஆகிய எங்கள் பெருமான் திருவடியை அணையப் பெற்றமையினாலே, வாழ வேண்டிய முறையை யான் அறிந்தவனாகி விட்டேன்: 192

தாழ்சடையும் நீள்முடியும், ஒண்மழுவும் சக்கரமும்,
சூழ்அறவும் பொன்னாணும், தோன்றுமால்;—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து.

கருத்து: அருவியானது திரண்டு சூழ்ந்து பாயும் திருப்பதிமலையில் வாழும் எம தந்தைக்கு, தாழ்ந்த சடையும், நீண்ட முடியும், ஒளிமிக்க சூலப்

படையும், சக்கரமும், அரவாபரணமும். தங்க அரை ஞாணும் ஒன்று கூடி, அரன் அரி என்ற இரண்டு வடிவும் ஒரு சேர விளங்குகின்றது. தாழ்சடை, ஒள்மழு, சூழ்அரவு சிவனுக்கு உரியன. நீள்முடி, சக்கரம், பொன் நாண் திருமாலுக்கு உரியன. 193

பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா;—விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை, மெய்மலர்தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து.

கருத்து: மலையிலே நின்றும், நீரில் குளித்தும், ஐந்து தீயின் மத்தியில். நின்றும் நீங்கள் தவம் செய்ய வேண்டாம். விருப்பமுடைய வெஃகா என்னும் தலத்தில் அமர்ந்த பெருமானை, உண்மையான பூக்களை யிட்டுக் கைதொழுவீர்களானால் தீவினைகள் ஆராய்ந்து சேரமாட்டா.

'பொருப்படைந்து தங்கள் புலன்ஐந்தும் செற்று,
நெருப்படைந்து நீர் அடைய வேண்டா;-விருப்படைந்து
வைதுந்தம் சிந்தையிலே வைப்பார்க்கு மாதவனும்
வைதும்,தம் சிந்தையிலே வந்து' என்பது பெருந்தேவனார் பாரதம்.

அரும் சொல் பொருள் : ஐந்து நெருப்பு; நாற்புறமும் வளர்க்கின்ற நான்கு நெருப்பு: மேலே சூரியனாகிய நெருப்பு. அஃகா: அடைய மாட்டா. 194

கலந்து மணிஇமைக்கும் கண்ணா! நின் மேனி
மலர்ந்து மரகதமே காட்டும்;—நலம்திகழும்
கொந்தின்வாய் வண்டறையும் தண்துழாய்க் கோமானை
அந்திவான் காட்டும் அது.

கருத்து: கருமணியிலே கலந்து இமைகொட்டும் கண்ணை யுடையவனே! உனது உடம்பானது விளங்கிப் பச்சை நிறத்தையே காடடும். அழகு பொருந்திய பூங்கொத்தினிடத்து வண்டுகள் கத்துகின்ற குளிர்ந்த துழாய் மாலையை அணிந்த தலைவனின் நிறத்தை அந்தி வானமும் காட்டும்.

அரும் சொல் பொருள் : நலம்: அழகு. கொந்து: பூங்கொத்து. 195

வாழ்த்திய வாயராய் வானோர் மணிமகுடம்
தாழ்த்தி வணங்கத் தழும்பாமே;—கேழ்த்த
அடித்தா மரைமலர்மேல் மங்கை மணாளன்
அடித்தா மரையாம் அலர்.

கருத்து: நிறம் விளங்குகின்ற தண்மையுடைய தாமரைப் பூமேல் வாழும் மங்கையாகிய திருமகளின் கணவனான திருமாலின் திருவடித் தாமரையாகிய மலர், வாழ்த்திய வாயை உடையவராய் வானவர்கள் மணிமகுடம் தாழ்த்தி வணங்குதலாலே தழும்பு ஆகி விடுகின்றது.

அருஞ்சொல் பொருள்: தழும்பு: அடையாளம். கேழ்த்த: நிறம் விளங்குகின்ற. 196

திருப்பாண் ஆழ்வார்

கலி விருத்தம்

ஆலமா மரத்தின்இலை மேல்ஒரு பாலகனாய்
ஞாலம்ஏழும்உண்டான், அரங்கத்து அரவணையான்,
கோலமா மணியாரம் முடிவுஇல்ல தோர்எழில்
நீலமேனி,ஐயோ,நிறைகொண்டதென் நெஞ்சினையே.

கருத்து: பெரிய ஆலமரத்தின் இலையின்மீது ஒரு பாலகனாகக் கிடந்து ஏழு உலகத்தையும் உண்டவனும் திருவரங்கப் பெருநகரிலே பாம்பணையிலே பள்ளிகொண்டவனும், ஆகிய திருமாலின் அழகிய சிறந்த மணிமாலை யணிந்த முடிவு இல்லாத அழகிய நீல நிறமானது. என் மனத்தைக் கவர்ந்து விட்டதே! அந்தோ! 197

கொண்டல் வண்ணனை, கோவலனாய்வெண்ணெய்
உண்ட வாயன்,என் உள்ளம் கவர்ந்தானை,
அண்டர் கோன்,அணி அரங்கன்,என் அமுதினைக்
கண்ட கண்கள்,மற்று ஒன்றினைக் காணாவே.

கருத்து: மேகம் போன்ற நிறத்தை யுடையவனும் இடையனாக இருந்து, வெண்ணெயுண்ட திருவாயை யுடையவனும், என் உள்ளம் கவர்ந்த கள்வனும், தேவர்கள் தலைவனும், திருவரங்க நாதனும் ஆகிய என்னுடைய அமுதத்தைக் கண்ட கண்கள் வேறொரு பொருளைக் காணமாட்டா. 198

மதுர கவி ஆழ்வார்

கலி விருத்தம்

நாவி னால்நவிற் றி,இன்பம் எய்தினேன்;
மேவி னேன்அவன் பொன்அடி; மெய்ம்மையே;
தேவு மற்றுஅறி யேன்;குரு கூர்நம்பி
பாவின் இன்இசை பாடித் திரிவனே.

கருத்து: குருகூர் நம்பியாகிய நம்மாழ்வாரை நாவினால் சொல்லி இன்பத்தை அடைந்தேன்; அவனுடைய பொன்ஆர்திருவடியை அடைந்தேன்; இது உண்மை; அவனைத் தவிர வேறு தெய்வம் உண்டென்று அறியமாட்டேன். அவனுடைய பாக்களின் இனிய புகழை நான் பாடித் திரிவேன்.

மதுரகவி ஆழ்வார், திருமாலைக் கூடப்பாடாது, சடகோபர் என்னும் நம்மாழ்வாரையே பாடியவாயினர்.

அரும் சொல் பொருள் : நவிற்றி: சொல்லி. தேவு: கடவுள். 199

நன்மை யால்மிக்க நான்மறை யாளர்கள்
புன்மை யாகக் கருதுவர்; ஆதலின்
அன்னை யாய்,அத்த னாய்என்னை ஆண்டிடும்
தன்மை யான்சட கோபன்,என் நம்பியே.

கருத்து: நன்மையினாலே மிகுந்தவர்களாகிய நான்கு வேதங்களிலும் வல்லவர்கள் என்னை இழிவாகக் கருதுவார்கள். என்றாலும், எனக்கு அன்னையாகவும், அத்தனாகவும் இருந்து என்னை ஆட்கொண்ட தன்மையை உடையான் என் நம்பியாகிய சடகோபனே ஆவான்.

200

திருமங்கை ஆழ்வார்

கலி விருத்தம்

மன்னா இம்மனி சப்பிறவி யைநீக்கித்
தன்னாக்கித் தன்இன் அருள்செய்யும் தலைவன்,
மின்ஆர் முகில்சேர் திருவேங்க டம்மேய
என்னானை, என்அப்பன் என்நெஞ்சி லுளானே.

கருத்து: நிலையில்லாத இம் மனித உடம்பை நீக்கி, என்னைத் தன்னுடைய வனாக்கி, அவனுடைய இனிய அருளை எனக்கு அளித்த தலைவனாகிய, மின்னலை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்ற மேகங்கள் தவழ்கின்ற திருப்பதி மலையிலே பொருந்திய என்னுடையவனை, என் தந்தையை என் மனத்துள்ளே இருத்திக் கொண்டேன்.

அரும் சொல் பொருள்: மன்னா: நிலைபேறு இல்லாத. 201

ஏனத்தின் உருவாகி நிலமங்கை எழில்கொண்டான்
வானத்தில் அவர்முறையால் மகிழ்ந்தேத்திவலம்கொள்ள,
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத்து உறைகின்ற
ஞானத்தின் ஒளிஉருவை நினைவார்என் நாயகரே.

கருத்து: பன்றி வடிவு எடுத்து நிலமகளின் அழகைக் கவர்ந்து கொண்ட திருமாலை, வானுலகத்திலுள்ள தேவர்கள் முறைப்படி களித்துத் தொழுது வலம்வர, இசை பாடும் கடல் சூழ்ந்த மாமல்லபுரத்து எழுந்தருளியிருக்கும் ஒளி மயமான அறிவு வடிவத்தை எண்ணு கின்றவர் எங்கள் தலைவராவர்,

அரும் சொல் பொருள் : ஏனம்: பன்றி. கானம்: இசை. மல்லைத்தல சயனம்: மாமல்லபுரம்; மகாபலிபுரம். 202

பொய்வண்ணம் மனத்துஅகற்றி,
புலன்ஐந்தும் செலவைத்து,
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு
மெய்ந்நின்ற வித்தகனை,
மைவண்ணம் கருமுகில்போல்
திகழ்வண்ணம் மரகதத்தின்
அவ்வண்ண வண்ணனையான்
கண்டது,தென் அரங்கத்தே.

கருத்து: பொய்ச் செயல்களை யெல்லாம் உள்ளத்தைவிட்டு நீக்கி, ஐம்பொறி ஆசைகளையும் புறத்தே போகவிட்டு, உண்மைக் காரியங்களையே என்னுகின்றவருக்கு உண்மையாக நின்ற மேலானவனே, மை போலவும் கரிய மேகம் போலவும் மரகதம் போலவும் விளங்குகின்ற நிறத்தையுடையானை நான் கண்டது திருவரங்கத்திலே. 203

பிறிந்தேன் பெற்றமக்கள் பெண்டிர்;இவர் பின்உதவாது
அறிந்தேன்; நீபணித்த அருள்எனும்ஒள் வாள்உருவி
எறிந்தேன் ஐம்புலன்கள் இடர்தீர; எறிந்துஉவந்து
செறிந்தேன் நின்அடிக்கே; திருவிணகர் மேயவனே!

கருத்து: பெற்ற பிள்ளைகளையும் மனைவியையும் பிரிந்தேன்; இவர்கள் பின்னுக்கு உதவமாட்டார்கள் என்பதை அறிந்து கொண்டேன், ஐம்புலன்கள் செய்யும் துன்பம் ஒழியுமாறு நீ எனக்குத் தந்த கருணை யென்று சொல்லுகின்ற ஒளிபொருந்திய வாளை எடுத்து வீசி எறிந்தேன்; அவ்வாறு வீசி மகிழ்ந்து நின் திருவடியையே சேர்ந்தேன். திருவிண்ணகர் என்னும் தலத்தில் மேயபிரானே!

அரும் சொல் பொருள்: பிரிதல்; எதுகை நோக்கிப் பிறிதல் ஆயிற்று. செறிதல்: அடைதல். 204

துறப்பேன்அல் லேன்இன்பம்; துறவாது நின்உருவம்
மறப்பேன்அல் லேன்;என்றும் மறவாது யான்உலகில்
பிறப்பேனு க,எண்ணேன்; பிறவாமைப் பெற்றதுநின்
திறத்தேன்,ஆ தன்மையால், திருவிண் ணகரானே.

கருத்து: இன்பத்தைத் துறக்கமாட்டேன்: நின் வடிவத்தை துறவாமல் மறக்க மாட்டேன்; எப்பொழுதும் மறவாமல் நான் உலகத்தில் பிறப்பதாக நினைக்கவே மாட்டேன்; யான் அவ்வாறு பிறவாமையைப் பெற்றது நின்னைச் சேர்ந்த காரணத்தாலேயே; திருவின்ணகர் மேய திருமாலே!

அரும் சொல் பொருள்: ஆதன்மையால்: ஆதலினுல். 205

மான்ஏய் நோக்குநல்லார் மதிபோல் முகத்துலவும்
ஊன்ஏய்கண் வாளிக்கு உடைந்து.ஒட்டந்துஉன் அடைந்தேன்;
கோனே! குறுங்குடியுள் குழகா! திருநறையூர்த்
தேனே! வருபுனல்சூழ் திருவிண் ணகரானே.

கருத்து: மானை ஒத்த பார்வையுடைய பெண்களது திங்கள் போன்ற முகத்திலே உலாவுகின்ற ஊன் பொருந்திய கண்ணாகிய அம்புக்குத் தோற்று, ஓட்டம் பிடிக்கத் தொடங்கினேன்; தலைவனே! குறுங்குடி என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற அழகனே! திருநறையூர் வாழும் தேனே! ஓடும் நீர் சூழ்ந்த திருவிண்ணகரில் எழுந்தருளி யிருப்பவனே!

அரும் சொல் பொருள்: ஏய்தல்: ஒத்தல். ஓட்டந்து: ஓடி. 206

மற்றோர்தெய்வம்எண்ணேன்;உன்னைஎன்மனத்துவைத்து
பெற்றேன்; பெற்றதுவும் பிறவாமை; எம்பெருமான்!
வற்றா நீள்கடல்சூழ் இலங்கை இராவணனைச்
செற்றாய்! கொற்றவனே! திருவிண் ணகரானே.

கருத்து: வேறொரு தெய்வத்தை எண்ண மாட்டேன்; உன்னை என் உள்ளத்தே வைத்துப் போற்றப் பெற்றதும் பிறவாமையை அடைந்தேன், எம்பெருமானே! வற்றாத நீண்ட கடல் சூழ்ந்த இலங்கையின் இராவணனைக் கொன்றவனே! அரசனே! திருவிண்ணகர் மேயபிரானே! 207

கல்ஆர் மதில்சூழ் கடிஇலங்கைக் கார்அரக்கன்
வல்ஆகம் கீள, வரிவெம் சரம்துரந்த
வில்லானை, செல்வ விபீடணற்கு வேறாக
நல்லானை, நாடி நறையூரில் கண்டேனே.

கருத்து: கல் அடுக்கிய கோட்டை சூழ்ந்த காவல் கொண்ட இலங்கையை ஆண்ட கரிய அரக்கனாகிய இராவணனின் வலிய உடம்பு பிளக்குமாறு, சித்திரம் தீட்டிய கொடிய அம்பு செலுத்திய வில்லையுடையவனை, இராவணனோடு மாறுபட்ட வீடணச் செல்வனுக்கு நல்லவனை, தேடி நறையூர் என்னும் திருப்பதியில் கண்டேன்.
இராவணனிடத்தும் வீடணனிடத்தும் இராமன் நடந்து கொண்ட வேறுபாடு கருதி வேறாக என்றார்.

அரும் சொல் பொருள்: கடி: காவல். கீள: பிளக்க. சரம்: அம்பு. 208

கட்டேறு நீள்சோலைக் காண்டவத்தைத் தீமூட்டி
விட்டானை, மெய்யம் அமர்ந்த பெருமானை,
மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய் வண்துவரை
நட்டானை, நாடி நறையூரில் கண்டேனே.

கருத்து: கட்டமைந்த நீண்ட சோலை சூழந்த காண்டவ வனத்தை அருச்சுனனைக் கொண்டு எரிக்கச் செய்தவனை, திருமெய்யம் என்னும் தலத்தில் எழுந்தருளி யிருப்பவனை, வானுலகிலுள்ள மணம் பொருந்திய கற்பக மரத்தைச் சத்தியபாமைக்காக வளம் பொருந்திய துவாரகையிலே கொண்டு வந்து நட்டவனைத் தேடி நறையூர் என்னும் தலத்திலே நான் கண்டேன்.

அரும் சொல் பொருள்: மட்டு: மணம்: மாதர், இங்கு சத்தியபாமை. 209

பெடைஅடர்த்த மடஅன்னம் பிரியாது மலர்க்கமலம்
மடல்எடுத்து மதுநுகரும் வயல்உடுத்த திருநறையூர்,
முடைஅடர்த்த சிரம்ஏந்தி மூஉலகும் பலிதிரிவோன்
இடர்கெடுத்த திருவாளன் இணைஅடியே அடைநெஞ்சே!

கருத்து: இளைய அன்னப் பறவையானது, பெட்டை அன்னத்தோடு கூடி, பிரியாமல் தாமரை மலரின் மடலை யெடுத்துத் தேனைக் குடிக்கின்ற வயல்களை ஆடையாக உடுத்திய திருநறையூரில் எழுந்தருளி யிருக்கின்ற, முடை நாற்றமுடைய தலையைக் கையிலே ஏந்திக் கொண்டு, மூன்று உலகங்களிலும் பிச்சை எடுக்கும் சிவபிரானின் துயரத்தைப் போக்கிய, திருவை ஆள்கின்ற மார்பை உடையவனாகிய திருமாலின் திருவடியை அடைவாயாக! ஏ மனமே!

அரும் சொல் பொருள்: பெடை: பெட்டைஅன்னம். முடை: புலால் நாற்றம். 210

வற்றுமுது நீரோடு மால்வரை ஏழும்
துற்றுஆகமுன் துற்றிய தொல்புக ழோனே!
அற்றேன்;அடி யேன்உன்னை யேஅழைக் கின்றேன்;
பெற்றேன்அருள் தந்திடு!என் எந்தை பிரானே.

கருத்து: வற்றாத ஏழு கடலோடு பெரிய மலை ஏழையும் முன்னர் உணவாக உண்ட பழைய புகழ் வாய்ந்தவனே! பிற பற்றுக்களையெல்லாம் அடியேன் அறுத்து விட்டேன்; உன்னையே பற்றாகப் பெற்றேன்: உன்னை அழைக்கின்றேன்; எனக்கு அருள் சுரப்பாயாக, என் தந்தையே! தலைவனே!

அரும் சொல் பொருள்: முதுநீர்: கடல், துற்று: உணவு. 211

எம்மானும் எம்மனையும் என்னைப்பெற்று ஒழிந்ததற்பின்,
அம்மானும் அம்மனையும் அடியேனுக்கு ஆகின்ற
நன்மான ஒண்சுடரே! நறையூர்வாழ் நம்பீ!உன்
மைம்மான வண்ணம்அலால் மகிழ்ந்துஏத்த மாட்டேனே.

கருத்து: எம் தந்தையும் எம் அன்னையும் என்னைப் பெற்று விட்டு நீங்கிய பிறகு, எனக்குத் தந்தையும் தாயும் ஆகி நின்ற நல்ல பெருமை பொருந்திய ஒளி மிக்க சுடர் அனையவனே! திருநறையூரிலே நின்ற நம்பி! உன்னுடைய சிறந்த கரிய திருமேனியை அல்லால் வேறொன்றைக் களித்து நான் போற்ற மாட்டேன்.

அரும் சொல் பொருள்: எம்மான்: எம் தந்தை மானம்: பெருமை 212

மன்அஞ்ச ஆயிரம்தோள் மழுவில் துணித்தமைந்தா!
என்நெஞ்சத் துள்இருந்திங்கு இனிப்போய்ப் பிறர்ஒருவர்
வன்நெஞ்சம் புக்குஇருக்கஒட்டேன்; வளைத்துவைத்தேன்;
நன்நெஞ்ச அன்னமன்னும் நறையூர்வாழ் நம்பீயோ.

கருத்து: அரசர்கள் அஞ்சுமாறு அவர்களின் ஆயிரக்கணக்கான தோள்களை மழுப்படையால் வெட்டியெறிந்த பரசுராமா! என்னுடைய மனத்துக்குள்ளே யிருந்த நீ இனிச் சென்று வேறொருவருடைய வலிய நெஞ்சத்திலே குடியிருக்க விடமாட்டேன்; உன்னை வளைத்து இங்கு வைத்துக்கொண்டு விட்டேன்: நல்ல மனத்தையுடைய அன்னம் பொருந்தியிருக்கின்ற நறையூரிலே வாழ்கின்ற நம்பி! 213

கோவானார் மடியக் கொலைமழுக் கொண்டுஅருளும்
மூவா,வா னவனை, முழுநீர்வண் ணனை,அடியார்க்கு
"ஆவா"என்று இரங்கித்தென் அழுந்தையில் மன்னிநின்ற
தேவாதி தேவனை,யான் கண்டுகொண்டு திளைத்தேனே.

கருத்து: மன்னர்கள் அழியக் கொலை செய்யும் மழுவாயுதத்தைக் கையில் கொண்ட பரசுராம அவதாரம் எடுத்த மூப்பு அடையாத தேவனை, கடல் நிறங்கொண்டவனை, அடியார்களை ஆவா என்று பரிந்து அழைத்து அழகிய திருவழுந்தூரில் பொருந்தி நிற்கின்ற கடவுளர் தலைவனை, நான் கண்டு கொண்டு நுகர்ந்தேன்.

அரும் சொல் பொருள்: கோவானார்: மன்னர், மூவா: மூப்பு அடையாத; முழுநீர் கடல். ஆவா, அழைப்புக் குறிப்பு. 214

கற்ருர் பற்றுஅறுக்கும் பிறவிப் பெருங்கடலே
பற்ரு வந்துஅடியேன் பிறந்தேன்; பிறந்தபின்னே
வற்ரு நீர்வயல்சூழ் வயலாலி அம்மானைப்
பெற்றேன்; பெற்றதும் பிறவாமை பெற்றேனே.

கருத்து: படித்தவர்களது பற்றுக் களையும் பிறவியாகிய பெருங் கடலைப் பற்ருகக் கொண்டு நான் பிறந்தேன். பிறந்த பிறகு, வடியாத நீர் மல்கும் வயல் மேவிய வயலாலி என்னும் தலத்தில் எழுந்தருளிய திருமாலை அடைந்தேன்; அவனை நண்ணியதும் பிறவாமை என்னும் பேற்றைப் பெற்றேன். 215

நாட்டினுய் என்னை உனக்குமுன் தொண்டுஆக;
மாட்டினேன் அத்தனையே கொண்டுஎன் வல்வினையை;
பாட்டினுல் உன்னைஎன் நெஞ்சத்து இருந்தமை
காட்டினுய்; கண்ண புரத்துறை அம்மானே.

கருத்து: திருக்கண்ண புரத்தில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே! முன்னர் என்னை உனக்குத் தொண்டனுகச் செய்தாய்; அதைக் கொண்டு எனது வலிய வினையை நான் அறுத்து விட்டேன்; உன்னையான் பாடியமையினுலே நீ என் உள்ளத்து இருந்ததை அறிவித்தாய்
அரும் சொல் பொருள் : மாட்டினேன்: அறுத்தேன். 216

நீள்நாகம் சுற்றி நெடுவரைநட்டு ஆழ்கடலைப்
பேணுன் கடைந்துஅமுதம் கொண்டுகந்த பெம்மானை,
பூண்ஆர மார்வனை, புள்ஊரும் பொன்மலையை,
காணுதார் கண்என்றும் கண்அல்ல கண்டாமே.

கருத்து: கடலிலே பெரிய மலையை மத்தாக நட்டு, நீண்ட நாகத்தைக் கயிருகச் சுற்றி, ஆழமான கடலைப் பேணுது கடைந்து அமுதம் கொண்டு மகிழ்ந்த பெருமானை, ஆபரணமணிந்த மார்பையுடையவனை, கருடனிலே ஏறிச் செலுத்துகின்ற தங்க மலை போன்றவனை, காணுதவர்களுடைய கண்கள் ஒரு போதும் கண்ணுக மாட்டா: இதனை நாம் கண்டோம்.
அரும் சொல் பொருள் : நாகம்: பாம்பு. 217

மான்அமரும் மென்நோக்கி வைதேவி இன்துணையாக்
கான்அமரும் கல்அதர்போய்க்காடுஉறைந்தான் காண்ஏடி!
கான்அமரும்கல்அதர்போய்க்காடுஉறைந்தபொன்அடிகள்
வானவர்தம் சென்னி மலர்கண்டாய் சாழலே.

கருத்து: மானினது கண் போன்ற மெல்லிய கண்ணினையுடைய சீதா தேவியை இனிய துணையாகக் கொண்டு கானகத்திலே கல் வழியிலே சென்று காட்டிலே தங்கினான். ஏடி! இதைக் காண்பாயாக! கல் வழியிலே சென்று காட்டிலே தங்கிய அந்த அழகிய திருவடிகள், தேவர்களுடைய தலையில் பொருந்திய பூவென்று அறிந்துகொள்.
சாழல், மகளிர் விளையாடும் ஒரு வகை விளையாட்டு.
இப்பாடல் வினாவும் விடையுமாக வருகிறது.
அரும் சொல் பொருள்: வைதேவி: சீதை. அதர்: வழி 218

ஆழ்கடல்சூழ் வையகத்தார் ஏசப்போய் ஆய்ப்பாடித்
தாழ்குழலார் வைத்த தயிர்உண்டான் காண்ஏடி!
தாழ்குழலார் வைத்த தயிர்உண்ட பொன்வயிறு,இவ்
ஏழ்உலகும் உண்டும் இடம்உடைத்தால் சாழலே.

கருத்து: ஆழமான கடல் சூழ்ந்த உலகத்தார் இகழ ஆயர்பாடியுள் சென்று அங்கு நீண்டு தொங்கும் கூந்தலை யுடைய பெண்கள் வைத்த தயிரைச் சாப்பிட்டான். பாரடி!
அந்தத் தாழ்குழலார் வைத்த தயிரை உண்ட பொன் வயிறானது, இந்த ஏழு உலகத்தையும் உண்டும் இன்னும் இடம் பெற்றிருக்கிறது. 219

ஏர்ஆர் மலர்எல்லாம் ஊதிநீ என்பெறுதி;
பார்ஆர் உலகம் பரவப் பெரும்கடலுள்
கார்ஆமை ஆன கண்ணபுரத்து எம்பெருமான்
தார்ஆர் நறும்துழாய் தாழ்ந்துஊதாய் கோல்தும்பீ!

கருத்து: தேனைக் கோலுகின்ற வண்டே! அழகு நிறைந்த பூக்களிலெல்லாம் தாதுக்களை நீ இரைத்து என்ன பயனை அடைந்தாய்? இவ் உலகமானது ஏத்த, பெரிய கடலினுள்ளே கரிய ஆமையாக அவதாரம் கொண்ட திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கின்ற சௌரிராசப் பெருமானின் மாலையிலே பொருந்திய நல்ல துளசியிற் படிந்து ஊதுவாயாக.

"தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே, நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும், அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும், குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!" என்ற திருவாசகத்தின் கருத்தும் இக்கருத்தும் ஒற்றுமையுடையன

திருவாசகம் கோத்தும்பீ என்று முடிகிறது. இங்கு கோல்தும்பீ என்று கூறப்படுகிறது கோத்தும்பீ என்பது அரச வண்டு என்று பொருள்படும். கோல்தும்பீ என்றால் (தேனை) சேகரிக்கின்ற வண்டு என்று பொருள் கொள்ளவேண்டும்.

அரும் சொல் பொருள் : ஏர்: அழகு. பெறுதி: பெறப்போகின்றாய். 220

மன்இலங்கு பாரதத்துத் தேர்ஊர்ந்து, மாவலியைப்
பொன்இலங்கு திண்விலங்கில் வைத்து, பொருகடல்சூழ்
தென்இலங்கை ஈடுஅழித்த தேவர்க்கு இதுகாணீர்!
என்இலங்கு சங்கோடு எழில்தோற்று இருந்தேனே.

கருத்து: மன்னர்கள் மல்கிய பாரதப் போரிலே பார்த்தனின் தேரைச் செலுத்தி, மகாபலிச் சக்கரவர்த்தியைப் பொன்னாலாகிய திண்ணிய விலங்கிட்டு, அலைமோதும் கடல் சூழ்ந்த தென் இலங்கையின் பெருமையை அழித்த திருமாலுக்கு என்னுடைய விளங்குகின்ற வளையல்களையும் கொடுத்து என் அழகையும் தோற்றுவிட்டு இருக்கின்றேன். இதனைப் பாருங்கள்.

இது திருமாலைக் காதலித்த தலைவியின் கூற்று.

அரும் சொல் பொருள் : ஈடு: பெருமை. சங்கு: வளையல். 221

வார்ஆளும் இளம்கொங்கை
நெடும்பணைத்தோள் மடப்பாவை
சீர்ஆளும் வரைமார்வன்,
திருக்கண்ண புரத்துஉறையும்
பேராளன், ஆயிரம்பேர்
ஆயிரவாய் அரவுஅணைமேல்
பேராளர் பெருமானுக்கு
இழந்தேன்என் பெய்வளையே.

கருத்து: கச்சணிந்த இளந்தனங்களையுடைய நீண்ட மூங்கில் போன்ற தோள்களையுடைய இளைய பெண்ணாகிய திருமகளைச் சீராக ஆளுகின்ற மலை போன்ற மார்பை உடையவனும் திருக்கண்ணபுரத்திலே

இருக்கின்ற ஆயிரம் பெயரை யுடையவனும், ஆயிரம் வாயையுடைய பாம்பைப் படுக்கையாகக் கொண்டு அதன்மேல் துயில்கின்ற பேராளரின் பெருமானும் ஆகிய ஒருவனுக்கு நான் அணிந்த வளையல்களை இழந்து விட்டேன்.

தலைவனை நினைந்து வருந்தி இளைத்த தலைவியின் கூற்று இது.

அரும் சொல் பொருள் : வார்: இரவிக்கை. பணை: மூங்கில். படப்பாவை: இலக்குத் திருமகள். பேராளர்: புகழ்வாய்ந்தவர் 222

வில்லால் இலங்கை மலங்கச் சரம்துரந்த
வல்லாளன் பின்போன நெஞ்சம் வரும்அளவும்,
எல்லாரும் என்தன்னை ஏசிலும் பேசிடினும்
புல்லாணி எம்பெருமான் பொய்கேட்டு இருந்தேனே.

கருத்து: வில்லினாலே இலங்கை நிலைகுலையுமாறு அம்பு ஏவிய வல்லாளனாகிய திருப்புல்லாணியில் எழுந்தருளியிருக்கின்ற இராமபிரான் பின்னே சென்ற என் மனம் திரும்பி வரும் வரையும், யாவரும் என்னை இகழ்ந்து தள்ளினும் வைது பேசினும் அவன் என்னிடம் பொய்த்து விட்டதைக் கேட்டுக் கொண்டே நான் இருக்கின்றேன்.

அரும் சொல் பொருள் : மலங்க: கெட. 223

வாள்ஆய கண்பனிப்ப மென்முலைகள் பொன்அரும்ப
நாள்நாளும் நின்நினைந்து நைவேற்கு,ஓ மண்அளந்த
தாள்ஆளா! தண்குடந்தை நகராளா! வரைஎடுத்த
தோள்ஆளா! என்தனக்குஓர் துணையாளன் ஆகாயே.

கருத்து: வாள் போன்ற கண்களினின்றும் நீர்த்துளி வர, மெல்லிய தனங்களில் பொன் போன்ற தேமல் படர, ஒவ்வொரு நாளும் உன்னை நினைந்து வருந்துகின்ற எனக்கு, ஓ! உலகளந்த அடியை யுடையவனே! குளிர்ந்த கும்பகோண நகரை ஆள்கின்றவனே! மலையெடுத்த தோளையுடையவனே! எனக்கு ஒப்பற்ற மணவாளனாக நீ ஆகமாட்டாயா?

இப்பாசுரம் தலைவியின் கூற்று

அரும் சொல் பொருள் : பனிப்ப: நீர் அரும்ப. 224

பிணிஅவிழும் நறுநீல மலர்கிழியப் பெடையோடும்
அணிமலர்மேல் மதுநுகரும் அறுகால சிறுவண்டே!
மணிகழுநீர் மருங்குஅலரும் வயலாலி மணவாளன்
பணிஅறியேன், நீசென்றுஎன் பயலைநோய் உரையாயே.

கருத்து: முறுக்கு விரிகின்ற நல்ல நீலப் பூவானது கிழியுமாறு, பெட்டை வண்டோடு கூடிக்கொண்டு அவ் அழகிய மலரின்மேல் ஏறித் தேனைக் குடிக்கின்ற ஆறு காலையுடைய சின்ன ஆண் வண்டே! அழகிய குவளைப் பூவானது பக்கத்திலே மலர்கின்ற செய்யையுடைய திருவாலி நகரிலே இருக்கின்ற மணவாளப் பெருமாளின் ஆணை என்ன என்று நான் அறிய மாட்டேன். நீ சென்று என் பசலை நோயை அவனுக்குச் சொல்லுவாயாக!

இது காதல் நோயால் நிறம் மாறுபட்ட தலைவி கூறுவது.

அரும் சொல் பொருள்: பிணி: கட்டு அவிழ்தல்: விரிதல். பெடை: பெண் வண்டு. அறுகால: ஆறுகாலையுடைய. கழுநீர்: குவளைப் பூ. பயலை: நிறமாறுபாடு. 225

உண்ணும் நாள்இல்லை; உறக்கமும் தான்இல்லை;
பெண்மை யும்சால நிறைந்திலள் பேதைதான்;
கண்ணன் ஊர்கண்ண புரம்தொழும்; கார்க்கடல்
வண்ணர் மேல்எண்ணம் இவட்குஇது என்கொலோ!

கருத்து. இப் பெண்ணானவள் உண்ணும் நாளே கிடையாது; இவளுக்கு உறக்கம் என்பதே வருவதில்லை; பெண்தன்மை இன்னும் முழுதும் முற்றுப் பெறவில்லை; கண்ணனுடைய ஊராகிய திருக்கண்ண புரத்தை வணங்குவாள்; கரிய கடலனைய நிறத்தை யுடைய திருமாலின் மீது இவள் கொண்ட இந்தக் கருத்துக்குக் காரணம் யாதோ? அறியேனே!

இது நல் தாய் இரங்கல்துறை. இதனைத் தாயார் பாசுரம் என்பது வைணவ மரபு. 226

கலி நிலைத் துறை

கொன்றேன் பல்உயி ரைக்குறிக்
 கோள்ஒன்று இலாமையினால்;
என்றே னும்இரந் தார்க்குஇனி
 தாக உரைத்துஅறியேன்;
குன்றுஏய் மேகம் அதிர்குளிர்
 மாமலை வேங்கடவா!
அன்றே வந்துஅடைந் தேன்,அடி
 யேனை ஆட் கொண்டுஅருளே.

கருத்து: நின்னை அடையும் கொள்கை யொன்றும் இல்லாமையினாலே பல உயிரையும் கொன்று குவித்தேன்; என்னிடம் வந்து எதுவும் கேட்டவர்க்கு ஒரு நாளும் நயமாகப் பேசிக்கூட அறியமாட்டேன்; மலையிலே பொருந்தி மேகங்கள் முழங்குகின்ற குளிர்ந்த திரு வேங்கட முடையானே! அப்பொழுதே உன்னை வந்து நான் அடைந்து விட்டேன். என்னை நீ ஆட்கொண்டு அருளல் வேண்டும். 227

வம்புஉலாம் கூந்தல்மண் டோதரி
காதலன் வான்புக,
அம்புதன் னால்முனிந்த அழகன்
இடம்என் பாரால்;
உம்பர்கோ னும்உலகு ஏழும்வந்து
ஈண்டி வணங்கும்நல்
செம்பொனா ரும்மதிள்சூழ்ந்து அழகுஆர்
தென்அ ரங்கமே.

கருத்து: தேவேந்திரனும் ஏழு உலகமும் வந்து நெருங்கித் தொழும் நல்ல செவ்விய பொன்னால் பொருந்திய கோட்டைச் சுவர் சூழ்ந்த அழகு நிறைந்த தென்னாட்டிலுள்ள திருவரங்க நகரமே, மணம் வீசுகின்ற கூந்தலையுடைய மண்டோதரியின் துணைவனான இராவணன் விண்குடியேற, அம்பு செலுத்தி அனுப்பிய அழகனாகிய இராமன் தங்கும் இடம் என்று சொல்லுவார்கள்.

அரும் சொல் பொருள்: வம்பு: மணம். 228

விலங்கும் கயலும் வேலும்ஒண்
காவியும் வென்றகண்
சலம்கொண்ட சொல்லார் தாங்கள்
சிரித்துஇக ழாதமுன்,
மலங்கும் வராலும் வாளையும்
பாய்வயல் சூழ்தரு
நலங்கொள் நறையூர் நாம்தொழு
தும்,எழு நெஞ்சமே.

கருத்து: மானினது கண்ணையும், கயல் மீனையும், வேலாயுதத்தையும், ஒளி மிக்க நிலப்பூவையும் வெற்றி கொண்ட கண்களையும் மாறுபட்ட பேச்சையும் உடைய பெண்கள் நகைத்துக் கேலி செய்வதற்கு முன்னே, மலங்கு வரால் வாளை என்ற பல வகை

மீன்களும் தாவி விளையாடுகின்ற வயல் சூழ்ந்த அழகிய திரு நறையூரை நாம் தொழுவோம்; மனமே! எழுவாயாக.

அரும் சொல் பொருள்: விலங்கு' இங்கு மானைக் குறிக்கும் காவி: நீலோற் பலம், சலம்: மாறுபடுந்தன்மை. மலங்கு, வரால், வாளை மீன்களின் வகை.

229

வல்லிச் சிறுநுண் இடையார்
இடை,நீர் வைக்கின்ற
அல்லல் சிந்தை தவிர
அடைமின்; அடியீர்காள்!
சொல்லில் திருவே அனையார்
கனிவாய் எயிறுஒப்பான்,
கொல்லை முல்லை மெல்அரும்பு
ஈனும் குறுங்குடியே.

கருத்து: கொடி போன்ற சிறிய நுண்ணிய இடையை யுடைய பெண்களிடம் நீங்கள் வைக்கின்ற மனத்துன்பம் அகல, சொல்லிலே திருமகளை ஒக்கின்றவர்களுடைய கனிந்த வாயிலுள்ள, பற்களைப் போல, கொல்லையிலே உள்ள முல்லைச் செடி மெல்லிய அரும்புகளைப் பிறப்பிக்கின்ற திருக்குறுங்குடியைச் சேருங்கள்; அடியார்களே!

'கொல்லை முல்லை மெல்லரும்பு ஈனும் குற்ருலம்' என்பது திருஞான சம்பந்தர் தேவாரம், குற்ருலம் குறுங்குடி என்ற ஊர்களே வேறு பாடு.

அரும் சொல் பொருள்: வல்லி: கொடி. அல்லல்: துன்பம், எயிறு பல்.

230

குன்றம் எடுத்து மழைத
டுத்துஇளை யாரொடும்
மன்றில் குரவை பிணைந்தமால்
என்னை மால்செய்தான்;
முன்றில் தனிநின்ற பெண்ணை,
மேல்கிடந்து ஈர்கின்ற
அன்றிலின் கூட்டைப் பிரிக்க
கிற்பவர் ஆர்கொலோ.

கருத்து: மலையைத் தூக்கி மழையை நிறுத்தியவனும் பெண்களோடு அவை யேறிக் குரவைக் கூத்து ஆடியவனுமாகிய திருமால் என்னை மயக்கி

விட்டான்; ஒன்றின்மேல் ஒன்ருகப் பொருந்திக் கிடந்து விளையாடு கின்ற இரண்டு அன்றில் பறவையின் சேர்க்கையைப் போல, அவனுடைய வீட்டின் முன் ஒப்பற நின்ற பெண்ணுகிய என்னுடைய சேர்க்கையை பிரிக்க வல்லவர் யார்?

அரும் சொல் பொருள்: குரவை: ஒருவகைக் கூத்து. முதல் மால் திருமால். இரண்டாவது மால் மயக்கம். முன்றில்: வீட்டின் முன். அன்றில்: ஆணும் பெண்ணும் இணைபிரியாப் பறவை, 231

அறு சீர் விருத்தம்

முதுகு பற்றிக் கைத்த
லத்தால் முன்ஒருகோல் ஊன்றி,
விதிர்வி திர்த்துக் கண்சு
ழன்று, மேற்கிளைகொண்டு இருமி,
இதுஎன் அப்பர் மூத்த
வாறுஎன்று இளையவர்ஏ சாமுன்,
மதுஉண் வண்டு பண்கள்
பாடும் வதரிவணங் குதுமே.

கருத்து: முதுகைக் கைபிற் பிடித்துக் கொண்டு, மற்ருெரு கையால் முன்னே ஒரு கோலை ஊன்றிக்கொண்டு ஆடி ஆடிக் கண் சுற்றப் பெற்று, மேலெழும்பி இருமிக் கொண்டு, ஐயா! முதுமை யடைந்த இது என்ன என்று இளைஞர்கள் பழிப்பதற்கு முன்னே, வண்டுகள் தேனைக் குடித்து இசை பாடுகின்ற வதரி என்னும் தலத்தை வணங்குவோமாக 232

கலையும் கரியும் பரிமாவும்
திரியும் கானம் கடந்துபோய்,
சிலையும் கணையும் துணையாகச்
சென்ருன், வென்றிச் செருக்களத்து
மலைகொண்டு அலைநீர் அணைகட்டி
மதிள்நீர் இலங்கை வாள்அரக்கர்
தலைவன் தலைபத்து அறுத்துஉகந்தான்,
சாளக் கிராமம் அடைநெஞ்சே!

கருத்து: கலைமான்களும் யானைகளும் குதிரைகளும் உலாவுகின்ற காட்டைத் தாண்டி, வில்லையும் அம்பையுமே துணையாகக் கொண்டு சென்று, கற்களைக் கொண்டு கடலுக்கு அணை போட்டு, போர்க் களத்திலே கோட்டையும் அகழியும் சூழ்ந்த இலங்கையின் வாளேந்திய அரக்கரின் தலைவனான இராவணனின் தலைகள் பத்தையும் அறுத்து மகிழ்ந்தவனை திருமால் உறைகின்ற சாளக் கிராமம் என்னும் ஊரை அடைவாயாக; மனமே.

அரும் சொல் பொருள்: கலை: மான். கரி: யானை. பரிமா: குதிரை. 233

பாவமும் அறமும் வீடும்
இன்பமும் துன்பம் தானும்
கோவமும் அருளும் அல்லாக்
குணங்களும் ஆய எந்தை,
மூவரில் எங்கள் மூர்த்தி
இவன்என முனிவ ரோடு
தேவர்வந்து இறைஞ்சும் நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே.

கருத்து: பாவமும் தருமமும் மோட்சமும் இன்பமும் துன்பமும் கோபமும் கருணையும் ஏனைக் குணங்களும் ஆகிய எம் தந்தை. பிரமன் சிவன் திருமால் எனும் மும்மூர்த்திகளுள்ளே இவன் எங்கள் மூர்த்தி என்று முனிவர்களோடு அமரர் வந்து தொழுகின்ற நாங்கூர்த் திருமணிக் கூடத்திலே எழுந்தருளியிருப்பவனே! 234

ஆசை வழுவாது ஏத்தும்
எமக்குஇங்கு இழுக்காய்த்து, அடியோர்க்குத்
தேசம் அறிய உமக்கே
ஆளாய்த் திரிகின் றோமுக்கு,
காசின் ஒளியில் திகழும்
வண்ணம் காட்டீர், எம்பெருமான்!
வாசி வல்லீர்! இந்த
ளூரீர்! வாழ்ந்தே போம்நீரே.

கருத்து: விருப்பத்தில் குறையாமல் வழிபடுகின்ற எங்களை இழுத்தடித்து, உலகம் அறிய உமது அடியார்களுக்கும் உமக்குமே ஆளாய்த் திரிகின்ற எமக்கு நிறந்திகழும் உமது வடிவத்தைக் காட்ட மாட்டீர்; எம்பெருமானே! குதிரை ஓட்டுதலில் வல்லவரே! இந்தளூரில் உறைபவரே! நீர் வாழ்ந்தே போவீராக!

"வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே" என்ற சுந்தரர் தேவாரம் இப்பாடலின் கடைசி வரியோடு ஒப்பது. 235

முன்னே வண்ணம் பாலின்
வண்ணம்; முழுதும் நிலைநின்ற
பின்னை வண்ணம் கொண்டல்
வண்ணம்; வண்ணம் எண்ணுங்கால்,
பொன்னின் வண்ணம் மணியின்
வண்ணம் புரையும் திருமேனி,
இன்ன வண்ணம் என்று
காட்டீர்! இந்த ளூரீரே.

கருத்து: முந்திய திருமேனி பால் போன்ற திருநீறணிந்த வெண்மையானது. முழுதும் முற்றிய பிறகு தோன்றிய வண்ணம் மேக நிறம். நிறத்தை ஆராயுமிடத்து, பொன் நிறமும், நீல நிறமும் விளங்குகின்ற திருமேனி, இன்ன நிறந்தான் என்று காட்டுவீராக! இந்தளூர் மேவிய எம்மானே!

பால் நிறமும் பொன் நிறமும் சிவபெருமானையே குறிப்பன. பால் நிறம் திருநீறு பூசிய மேனி. செந்நிறம் இயற்கையான செம்மேனி.
236

வெண்ணெய்தான் அமுது செய்ய,
வெகுண்டு,மத்து ஆய்ச்சி ஓச்சிக்
கண்ணியார் குறுங்க யிற்றால்
கட்ட,வெட் டென்றுஇ ருந்தான்,
திண்ணமா மதிள்கள் சூழ்ந்த
தென்திருப் பேருள் வேலை
வண்ணனார் நாமம் நாளும்
வாய்மொழிந்து உய்ந்த வாறே.

கருத்து: வெண்ணெயை உறியினின்றும் திருடி உண்ண, கோபித்து இடைப் பெண்ணானவள் மத்தை ஓங்கி, முடிச்சு நிறைந்த சின்னக் கயிற்றினால் கட்ட, விழித்துக் கொண்டிருந்தானாகிய வலிமை நிறைந்த கோட்டை சூழ்ந்த தென்திருப்பேரை என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள கடல்நிறக் கடவுளாகிய எந்தையின் திருநாமத்தை நான் சொல்லிப் பிழைத்தேன்.

அரும் சொல் பொருள் : கண்ணி: முடிச்சு.
237

கான எண்கும் குரங்கும்
முசுவும் படையா, அடல்அரக்கர்
மானம் அழித்து நின்ற
வென்றி அம்மான், எனக்குஎன்றும்
தேனும் பாலும் அமுதும்
ஆய திருமால் திருநாமம்
நானும் சொன்னேன் நமரும்
உரைமின்! நமோநா ராயணமே.

கருத்து. காட்டுக் கரடியையும் பெண் குரங்கையும் ஆண் குரங்கையும் படைகளாகக் கொண்டு, வலிமை வாய்ந்த அரக்கர்களின் மானத்தைத் தொலைத்து நின்ற வெற்றி பொருந்திய எம் தலைவனாகிய, எனக்கு எப்பொழுதும் தேனும் பாலும் அமுதும் போல் தித்திக்கும் திருமாலின் திருப்பெயரை நானும் மொழிந்தேன்; நம்மவர் அனைவரும் அதனை ஓதுங்கள். அதுதான் நாராயணாய நம!

அரும் சொல் பொருள் : எண்கு: கரடி. முசு: ஆண் குரங்கு. எனவே குரங்கு இங்குப் பெண் குரங்கு. 238

மீதுஓடி வாள்எயிறு மின்இலக,
முன்விலகும் உருவி னாளை,
காதோடு கொடிமூக்குஅன்று உடன்அறுத்த
கைத்தலத்தாய்! என்று நின்று
தாதோடு வண்டுஅலம்பும் தண்சேறை
எம்பெருமான் தாளை ஏத்தி,
போதோடு புனல்தூவும் புண்ணியரே
விண்ணவரில் பொலிகின் றாரே.

கருத்து· மேலே ஓடி ஒளி பொருந்திய பற்கள் மின்னலைக் கக்க, முன்னே செல்லுகின்ற அழகோடு கூடிவந்த சூர்ப்பணகையை, காதையும் கூரிய மூக்கையும் அந்த நாளில் அறுத்த கையை உடையவனே! என்று சொல்லி, வண்டுகள் பூந்தாதோடு கலக்கின்ற குளிர்ச்சி பொருந்திய சேறை என்னும் தலத்தில் எழுந்தருளி யிருக்கின்ற திருமாலின் திருவடிகளைப் போற்றி பூ இட்டு நீர் தெளிக்கும், புண்ணியர்களே, தேவர்களினும் மேம்பட விளங்குகின்றார்கள். சூர்ப்பணகையைக் கொடிமூக்கும் குழைக்காதும் அறுத்தவன் இலக்குவன் எனினும் அவனும் திருமாலின் அம்சமே ஆதலின் திருமாலாகவே கூறுகின்றார்.

அரும் சொல் பொருள் : எயிறு: பல். உரு: அழகு. கொடிமூக்கு வளைந்த மூக்கு. தாது: மகரந்தப்பொடி. 239

தேர்ஆளும் வாள்அரக்கன் தென்இலங்கை
வெஞ்சமத்துப் பொன்றி வீழ,
போர்ஆளும் சிலையதனால் பொருகணைகள்
போக்குவித்தாய்! என்று, நாளும்
தாராளும் வரைமார்பன் தண்சேறை
எம்பெருமான், உம்பர் ஆளும்
பேராளன் பேர்ஓதும் பெரியோரை
ஒருகாலும் பிரிகிலேனே.

கருத்து: தேரைக் கையாளுகின்ற வாள் கொண்ட இராவணனைத் தென் இலங்கைக் கொடும் போரிலே அழிந்து விழுமாறு, போரில் கைக் கொள்ளும் வில்லினால் கொல்லுகின்ற அம்புகளைச் செலுத்தினாய் என்று, நாள் தோறும் மாலை யணிகின்ற மலை போன்ற மார்பை யுடையவனும் தண்சேறைத் தலத்தின் தலைவனும் விண்ணுலகு ஆளும் பேராளனுமாகிய பெருமானின் பெயரை ஓதும் பெரியவர்களை ஒருபோதும் நான் பிரிய மாட்டேன்.

அரும் சொல் பொருள்: வெஞ்சமம்: கொடும்போர். பொன்றுதல்: அழிதல். 240

நெற்றிமேல் கண்ணானும், நிறைமொழிவாய்
நான்முகனும், நீண்ட நால்வாய்
ஒற்றைக்கை வெண்பகட்டின் ஒருவனையும்,
உள்ளிட்ட அமர ரோடும்
வெற்றிப்போர்க் கடல்அரையன் விழுங்காமல்
தான்விழுங்கி உய்யக் கொண்ட,
கொற்றப்போர் ஆழியான் குணம்பரவாச்
சிறுதொண்டர் கொடிய வாறே.

கருத்து: நெற்றிக் கண் படைத்த சிவபெருமானும், நிறைந்த மொழி பேசும் பிரமதேவனும், நீண்ட தொங்குகின்ற வாயையும் ஒற்றைக் கையையும் உடைய வெள்ளை யானையில் ஏறி வருகின்ற ஒப்பற்ற வனாகிய இந்திரனும் உள்ளிட்ட தேவரையெல்லாம், வெற்றி கொள்ளும் கடலரசன் உண்டு விடாமல், தான் உண்டு அவர்கள் உய்ய ஆட்கொண்ட, வெற்றிப் போர்ச் சக்கரத்தை உடையானாகிய திருமாலின் குணத்தை ஏத்தாத சிறு தொண்டர்கள் கொடிய வழியில் செல்லுகின்றவராவர்.

அரும் சொல் பொருள்: நால்வாய்: தொங்குகின்ற வாய். பகடு: யானை. 241

திருவில் பொலிந்த எழிலார்
ஆயர்தம் பிள்ளைக ளோடு
தெருவில் திளைக்கின்ற நம்பி!
செய்கின்ற தீமைகள் கண்டிட்டு,
உருகிஎன் கொங்கையின் தீம்பால்
ஓட்டந்து பாய்ந்திடு கின்ற;
மருவிக் குடங்கால் இருந்து
வாய்முலை உண்ணநீ வாராய்.

கருத்து: செல்வத்தில் விளங்குகின்ற அழகு நிறைந்த இடையர்களின் குழந்தைகளோடு, வீதியிலே விளையாடுகின்ற. கண்ணா!

நீ செய்கின்ற குறும்புகளைப் பார்த்து உருகி என் தனங்களின் இனிய பால் ஓடிப் பெருகுகின்றது. என்னை அணைந்து என் மடிமீதிருந்து உன் வாயால் பால் பருக வருவாயாக!

அரும் சொல் பொருள்: ஓட்டந்து, ஓடி, குடங்கால்: மடி. 242

தந்தை புகுந்திலன்; நான்இங்கு
இருத்திலேன்; தோழிமார் ஆரும்இல்லை;
சந்த மலர்க்குழ லாள்தனி
யேவிளை யாடும் இடம்குறுகி,
பந்து பறித்துத் துகில்பற்றிக்
கீறிப் படிறன் படிறுசெய்யும்,
நந்தன் மதலைக்குஇங்கு என்கடவோம்;
நங்காய்! என்செய்கேன் என்செய்கேனோ?

கருத்து: அவன் தந்தை வந்தானில்லை; நானும் இங்கிருக்கவில்லை; தோழிமார் எவரும் இல்லை; அழகிய பூவணிந்த கூந்தலையுடையாளாகிய என் மகள் தனியே விளையாடுகின்ற இடத்துக்குச் சென்று, அவள் ஆடிய பந்தைப் பிடுங்கி, ஆடையைப் பிடித்து இழுத்து, உடம்பைக் கீறி வஞ்சிக்கும் குறும்பனாகிய நந்தன் மகனும் கண்ணனை என் செய வல்லேம்! பெண்ணே! இதற்கு நான் என் செய்வேன்! என் செய்வேன்!

இது தாயார் பாசுரம்,

அரும் சொல் பொருள்: சந்தம்: அழகு, படிறு. வஞ்சகம்: குறும்பு. 243

"கலைஆளா அகல்அல்குல்; கனவளையும்
கைஆளா; என்செய் கேன்நான்!
விலையாளா அடியேனை வேண்டுதியோ,
வேண்டாயோ:'' என்னும்; மெய்ய
மலையாளன்; வானவர்தம் தலையாளன்;
மராமரம்ஏழ் எய்த வென்றிச்
சிலையாளன், என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சிந்திக் கேனே.

கருத்து: அகன்ற அல்குல் ஆடையைக் கையாளமாட்டாது. கைகள் கனமான வளையல்களைக் கையாள மாட்டா. நான் என்ன செய்வேன்! 'அடிமையாக என்னை விரும்பி என்னை ஏற்றுக் கொள்வாயா மாட்டாயா' என்று கூறுவாள் என் மகள். திரு மெய்யமலைக்கு உரியவனும் தேவர்கள் தலைவனும் மராமரம் ஏழைத் துளைத்த வெற்றி வில்லாளனுமாகிய திருமால் என் மகளைப் படுத்திய பாட்டை எப்படி நான் நினைத்துப் பார்ப்பேன்! இது தாயார் பாசுரம்.

அரும் சொல் பொருள்: விலையாள்: அடிமை. 244

பூண்முலைமேல் சாந்துஅணியாள்; பொருகயல்கண்
மைஎழுதாள்; பூவை பேணாள்;
ஏண்அறியாள் எத்தனையும்; "எம்பெருமான்
திருவரங்கம் எங்கே'' என்னும்;
நாள்மலராள் நாயகனாய் நாம்அறிய
ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி,
ஆண்மகனாய் என்மகளைச் செய்தனகள்
அம்மனையீர்! அறிகி லேனே.

கருத்து: நகையணிந்த கொங்கைகளின் மேல் சந்தனத்தைப் பூசமாட்டாள்; போர் செய்கின்ற மீனைப் போன்ற கண்களுக்கு மை தீட்ட மாட்டாள்: தான் வளர்த்த பூவையைக் கொஞ்ச மாட்டாள்; தன் நிலைமையைச் சிறிதும் உணர மாட்டாள்;

"எம்பெருமானின் திருவரங்கம் எங்கே" என்று எப்பொழுதும் கேட்டுக் கொண்டிருப்பாள். யார்? என் மகள் தான். அன்று பூத்த தாமரையில் வாழும் திருமகளுக்குக் கணவனாகி நமக்குத் தெரிய ஆயர்பாடியிலே வளர்ந்த சிறு பிள்ளை பெரிய ஆண் பிள்ளையாகி, என் மகளைச் செய்த காரியங்களை நான் தெரிந்து கொண்டேனில்லையே; தாய்மார்களே!

தாயார் பாசுரம்.

'நான் பார்க்கப் பிறந்தவன்' என்று சொல்லும் பழமொழியைப் போல 'நாமறிய ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி' என்று கூறுகிறார் ஆழ்வார்.

அரும் சொல் பொருள்: பூண்: ஆபரணம். சாந்து: சந்தனம். பூவை: மைனாப் பறவை. ஏண்: நிலைமை. எத்தனையும்: சிறிதும். 245

வார்ஆளும் இளங்கொங்கை வண்ணம்வேறு
ஆயினவாறு எண்ணாள்; எண்ணில்
பேராளன் பேர்அல்லால் பேசாள்;இப்
பெண்பெற்றேன்; என்செய் கேன்!நான்;
தாராளன், தண்குடந்தை நகராளன்,
ஐவர்க்காய்ச் சமரில் உய்த்த
தேராளன், என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் செப்பு கேனே.

கருத்து: கச்சணிந்த இளைய தனங்கள் நிறம் வேறுபட்டதை நினைக்க மாட்டாள்; கணக்கற்ற பெயரை யுடையவனாகிய திருமாலின் பெயரைத் தவிர வேறொன்றும் பேசமாட்டாள்: இந்தப் பெண்ணைப் பெற்றேனே; நான் என் செய்வேன்! மாலை அணிந்தவனும் வளம் நிறைந்த குடந்தை நகரை ஆள்பவனும், பாண்டவர்க்காகப் போர்க்களத்தில் தேர் செலுத்தியவனுமாகிய திருமால், என்மகளைச் செய்த காரியத்தை நான் எப்படிச் சொல்லுவேன்!

தாயார் பாசுரம். 246

"தாராய தண்துளப வண்டுஉழுத
வரைமார்பன்'' என்கின் றாளால்;
"போர்ஆனைக் கொம்புஒசித்த புட்பாகன்
என்அம்மான்'' என்கின் றாளால்;
"ஆரானும் காண்மின்கள்! அம்பவளம்
வாய்அவனுக்கு'' என்கின் றாளால்;
கார்வானம் நின்றுஅதிரும் கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொல்லோ.

கருத்து: "மாலையிற் பொருந்திய குளிர்ந்த துளசியிலே வண்டுகள் உழுகின்ற மலை போன்ற மார்பை யுடையவன்'' என்று கூறுகின்றாள் என் மகள். "போர் செய்யும் யானைக் கொம்பை ஒடித்த கருட வாகனன் எம் தலைவன்" என்றும் கூறுகின்றாள் அவள். "எல்லோரும் வந்து பாருங்கள்! அவனுடைய வாய் அழகிய பவளமே'' என்று சொல்லுகின்றாள், அன்னாள். கரிய மேகமானது நின்று முழக்குகின்ற திருக்கண்ணபுரத்திலே இருக்கின்ற கடவுளை அவள் கண்டு விட்டாளா, என்ன?

தாயார் பாசுரம். 247

"செவ்அரத்த உடைஆடை, அதன்மேல்ஓர்
சிவளிகைக்கச்சு'' என்கின் ருளால்;
"அவ்அரத்த அடியிணையும் அங்கைகளும்
பங்கயமே'' என்கின் ருளால்;
"மைவளர்க்கும் மணிஉருவம் மரகதமோ?
மழைமுகிலோ?'' என்கின் ருளால்;
கைவளர்க்கும் அழலாளர் கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொல்லோ.

கருத்து: "செவ்விய இரத்தம் போன்ற உடை அவனுக்கு ஆடை; அவ் ஆடையின் மீது ஒரு கச்சுக்கட்டி யிருக்கின்ருன்" என்று கூறுகின்ருள். "அவனது சிவந்த திருவடிகளும் அழகிய கைகளும் தாமரை மலரே" என்று இயம்புகின்ருள். "கருமையை வளர்க்கும் அவனது நீல மேனி மரகதமோ! மழை பொழியும் மேகமோ" என்று செப்புகின்ருள். கையினால் வேள்வித் தழல் வளர்க்கும் மறையோர் வாழ்கின்ற திருக்கண்ணபுரத்துத் தலைவனை இவள் கண்டு விட்டாளா?
"மையோ மரகதமோ மழைமுகிலோ மறிகடலோ" என்ற கம்பரின் வாக்கு இதனை ஒட்டியது.
தாயார் பாசுரம்.

அரும் சொல் பொருள்: சிவளிகை: கட்டுதல் அழல்: நெருப்பு. 248

"வண்டுஅமரும் வனமாலை மணிமுடிமேல்
மணம்நாறும்'' என்கின் ருளால்;
"உண்டுஇவர்பால் அன்புஎனக்குஎன்று ஒருகாலும்
பிரிகிலேன்'' என்கின் ருளால்;
"பண்டுஇவரைக் கண்டுஅறிவது எவ்ஊரில்
யாம்''என்றே பயில்கின் ருளால்;
கண்டவர்தம் மனம்வழங்கும் கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொல்லோ.

கருத்து: "வண்டுகள் தங்கி யிருக்கின்ற அழகிய மாலையை அணிந்த மணி தாங்கிய முடியின்மீது வாசனை வீசுகின்றது" என்று கூறுகின்ருள். "இவரிடத்திலே எனக்குக் காதல் பிறந்து விட்டது; நான் ஒருநாளும் இவரைப் பிரியமாட்டேன்" என்று கூறுகின்ருள். "முன்னே இவரைக் கண்டு அறிந்தது எந்த ஊரில?" என்று சொல்லிச் சொல்லிப் பார்க்கின்ருள் பார்த்தவர்கள் தங்கள் மனத்தைப் பறிகொடுக்கும் சிறப்பு வாய்ந்த திருக்கண்ணபுரத்துத் தலைவனை இவள் கண்டுவிட்டாளா?
தாயார் பாசுரம். 249

எழு சீர் விருத்தம்

வாடினேன்; வாடி வருந்தினேன் மனத்தால்;
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன்; கூடி, இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன்; ஓடி, உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து,
நாடினேன்; நாடி, நான்கண்டு கொண்டேன்,
"நாராயணா" என்னும் நாமம்.

கருத்து: வாட்டத்தை அடைந்தேன்; வாடி மனத்தினால் வருத்தம் எய்தினேன்; பெரிய துயரமாகிய துன்பத்திலே பிறந்து துன்பத்தையே அடைந்தேன்; பெண்களோடு சேர்ந்து அவர்கள் நல்கும் சேர்க்கையை விரும்பி, அவர்களிடத்து ஓடினேன்; ஓடிய பிறகு கடைத்தேறவேண்டுமென்ற கருத்தால் உணரத்தக்க பெரிய பதவியை அறிந்து அதைத் தேடினேன்; தேடி அதனை அறிந்து விட்டேன்; அதுதான் 'நாராயணா' என்ற நாமம். 250

குலம்தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும்; நீள்விசும்பு அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும்; சொல்லை, நான்கண்டு கொண்டேன்,
"நாராயணா" என்னும் நாமம்.

கருத்து: நல்ல குடிப் பிறப்பை நல்கும்; செல்வத்தை அளிக்கும்; அடியவர்களுக்கு ஏற்படும் இடுக்கண் எல்லாவற்றையும் முழுதும் அழிக்கும்; நெடிய வானுலக வாழ்வைத் தரும்; கருணையோடுகூடப் பெரிய உலக வாழ்வை நல்கும்; வெற்றியை ஈயும்; இன்னும் எல்லா நலன்களையும் கொடுக்கும்; பெற்ற தாய் செய்வதைவிட அதிகமான இனிமையை அளிக்கும்; அத்தகைய நன்மையைத் தருகின்ற சொல் என்ன என்பதை நான் தெரிந்து கொண்டு விட்டேன்; அதுதான் நாராயணன் என்ற திருப் பெயர்.

அரும் சொல் பொருள்: நிலந்தரம் செய்தல்: முழுதும் தொலைத்தல். வலம்: வெற்றி. 251

ஏனம்முன் ஆகி இருநிலம் இடந்துஅன்று
இணைஅடி இமையவர் வணங்கத்
தானவன் ஆகம் தரணியில் புரளத்
தடம்சிலை குனித்தஎம் தலைவன்,
தேன்அமர் சோலைக் கற்பகம் பயந்த
தெய்வநன் நறுமலர் கொணர்ந்து
வானவர் வணங்கும் கங்கையின் கரைமேல்
வதரியாச் சிராமத்துஉள் ளானே.

கருத்து: அந்த நாளில், பன்றியாக அவதரித்து, உலகத்தைப் பிளந்து தேவர்கள் திருவடி வணங்க, அசுரனுடைய உடலானது பூமியில் புரண்டு விழப்பெரிய வில்லை வளைத்தவனாகிய எமது தலைவன் தங்குமிடம் எது?
வண்டுகள் தங்குகின்ற பொழிலிலே உள்ள கற்பக மரத்தில் பூத்த கடவுள்தன்மை வாய்ந்த நல்ல மணம் வீசும் பூக்களைக் கொண்டு, தேவர்கள் வழிபடுகின்ற கங்கைக் கரையிலே பொருந்தியிருக்கின்ற வதரி ஆச்சிரமம் என்னும் தலம்.

அரும் சொல் பொருள்: ஏனம்: பன்றி. இடந்து: பிளந்து. தானவன்: அசுரன். தேன்: வண்டு. பயந்த: பெற்ற. 252

வம்புஉலாம் கூந்தல் மனைவியைத் துறந்து,
பிறர்பொருள் தாரம்என்று இவற்றை,
நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி,
ஏற்றிவைத்து எரிஎழு கின்ற
செம்பினால் இயன்ற பாவையை, "பாவி!
தழுவு" என மொழிவதற்கு அஞ்சி,
நம்பனே! வந்துஉன் திருவடி அடைந்தேன்;
நைமிசா ரணியத்துள் எந்தாய்.

கருத்து: மணம் வீசுகின்ற கூந்தலையுடைய மனையாளை விட்டுவிட்டு, மற்றவருக்குச் சொந்தமான பொருளையும் பிறர் மனையாளையும் நம்பி வாழ்கின்றவர், இறந்த பின்பு அவர்களை யமதூதர்கள் இழுத்துச் சென்று, செம்பினால் செய்யப்பட்டு நெருப்பில் பழுக்கக் காய்ச்சப்பட்டு அனல் வீசிக் கொண்டிருக்கின்ற பெண் வடிவத்தை "பாவிகாள் கட்டித் தழுவுங்கள்" என்று யமபடர்கள் சொல்லுவார்களே, என்பதற்குப் பயந்து, கடவுளே! உன் திருவடியை வந்து நான் அடைந்திருக்கின்றேன்; நைமிசாரணியம் என்னும் தலத்தில் மேவிய என் தந்தையே!

அரும் சொல் பொருள்: வம்புஉலாம் கூந்தல்; மணம் பரப்பிய குழல். எரி: நெருப்பு. 253

பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
வாயில்ஓர் ஆயிரம் நாமம்
ஒள்ளிய ஆகிப் போதஆங்கு அதனுக்கு
ஒன்றும்ஓர் பொறுப்பிலன் ஆகி.
பிள்ளையைச் சீறி, வெகுண்டுதூண் புடைப்ப,
பிறைஎயிற்று அனல்விழிப் பேழ்வாய்த்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை,
திருவல்லிக் கேணிக்கண் டேனே.

கருத்து: பள்ளியிலே படித்து வந்த தன் மகனின் வாயினின்றும் ஒப்பற்ற ஆயிரம் திருப்பெயர் புனிதமாகப் புறப்பட, அதுகண்டு ஒரு சிறிதும் பொருளுகி, தன் பிள்ளையாகிய பிரகலாதனைப் பெரிதும் கோபித்துத் தூணை உதைக்க, அத்தூணினின்றும் புறப்பட்ட கோரப் பற்களையும் நெருப்பைக் கக்கும் கண்களையும் பிளந்த வாயையும் உடைய, தெளிந்த நரசிங்க வடிவமெடுத்த கடவுளை, திருவல்லிக்கேணி என்னும் தலத்திலே கண்டேன்.

அரும் சொல் பொருள் : ஒள்ளிய: புனிதமான. பொறுப்பிலன் ஆகி: பொருதவனுகி. பிறைஎயிறு: வளைந்த பல். அனல்விழி: தீக்கண். பேழ்வாய்: பிளந்த வாய். 254

மீன்அமர் பொய்கை நாள்மலர் கொய்வான்
வேட்கையி னேடுசென்று இழிந்த
கான்அமர் வேழம் கைஎடுத்து அலற,
கரா,அதன் காலினைக் கதுவ,
ஆனையின் துயரம் தீரப்புள் ஊர்ந்து,
சென்று,நின்று, ஆழிதொட் டானை,
தேன்அமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே.

கருத்து: மீன் தங்கியிருக்கின்ற தடாகத்திலே கடவுளை வழிபடும் பொருட்டு, அன்று பூத்த பூவைப் பறிக்க வேண்டுமென்ற ஆசையோடு இறங்கிய காட்டுயானையை, முதலை கவ்விக்கொள்ள, அதனல் அந்த யானையானது துதிக்கையைத் தூக்கிக் கொண்டு ஆதிமூலமே என்று ஓலமிட, அந்த யானையின் துன்பம் துடைக்கும் பொருட்டு, கருடப் பறவையில் ஏறிச் சென்று, அத்தடாகக் கரையிலே நின்று, சக்கரத்தைத் தொடுத்தவனுகிய கடவுளை, வண்டுகள் தங்கிய சோலைகள் சூழ்ந்த மாளிகைகள் மல்கிய சிறந்த திருமயிலாபுரிக்கு அணித்தேயுள்ள திருவல்லிக்கேணி என்னும் தலத்திலே கண்டேன்.

அரும் சொல் பொருள் : வேட்கை: ஆசை. இழிந்த: இறங்கிய. கான் அமர் வேழம்: காட்டில் தங்கிய யானை. கரா: முதலை. கதுவ: பிடிக்க. 255

திண்படைக் கோளரி யின்உருவாய்த் திறலோன்
அகலம் செருவில் முனம்நாள்
புண்படப் போழ்ந்த பிரானதுஇடம், பொருமா
டங்கள்சூழ்ந்து அழகாய கச்சி
வெண்குடை நீழல்செங் கோல்நடப்ப, விடைவெல்
கொடிவேல் படைமுன் உயர்த்த
பண்புடைப் பல்லவர் கோன்பணிந்த பரமேச்
சுரவிண் ணகரம் அதுவே.

கருத்து: வலிய படைபோன்ற நரசிங்க அவதார மெடுத்து, வலி மிக்கவனாகிய இரணியனது மார்பைப் போரிலே அந்த நாளில் புண்படுமாறு பிளந்து எறிந்த தலைவனது இடம் எது? ஒப்பற்ற மாளிகைகள் சூழ்ந்த அழகான காஞ்சிபுரத்தை ஆண்ட, வெண்மையான குடை நிழலில் செங்கோல் நடாத்திய வெற்றி இடபக் கொடியையும் வேற் படையும் முன்னாக உயர்த்திய நற் குணம் வாய்ந்தவனான பல்லவ அரசன் பரவிய பரமேச்சுர விண்ணகரமே அது. 256

''தீமனத்து அரக்கர் திறல்அழித் தவனே''
என்றுசென்று அடைந்தவர் தமக்கு,
தாய்மனத்து இரங்கி அருளினைக் கொடுக்கும்
தயரதன் மதலையை, சயமே
தேமலர்ப் பொழில்சூழ் நாங்கைநன் நடுவுள்
செம்பொன்செய் கோயிலின் உள்ளே,
காமனைப் பயந்தான் தன்னைநான் அடியேன்
கண்டுகொண்டு உய்ந்துஒழிந் தேனே.

கருத்து: "கொடிய உள்ளம் கொண்ட அரக்கரின் வலியைத் தொலைத்தவனே!" என்று கூறி, சென்று அவனை அடைந்தவர்களுக்கு, தாய் உள்ளத்தோடு இரங்கிக் கருணை செய்யும் தயரதன் மைந்தனாகிய இராமனும், மன்மதனைப் பெற்ற திருமாலுமாகிய கடவுளை, தேன் மிளிற்றும் பூஞ்சோலைகளைக் கொண்ட திருநாங்கூரிலே பொருந்திய செம்பொன்செய்கோயில் என்னும் தலத்திலே, தொண்டனாகிய நான் கண்டு, துயரொழிந்து வெற்றி கொண்டு கடைத்தேறினேன்.

அரும் சொல் பொருள்: திறல்: வலிமை. உய்ந்து ஒழிந்தேன்; துயரம் நீங்கிக் கடைத்தேறினேன். 257

பண்டைநான் மறையும், வேள்வியும், கேள்விப்
பதங்களும், பதங்களின் பொருளும்,
பிண்டமாய் விரிந்த பிறங்குஒளி அனலும்,
பெருகிய புனலொடு நிலனும்,
கொண்டல்மா ருதமும், குரைகடல் ஏழும்,
ஏழுமா மலைகளும், விசும்பும்,
அண்டமும் தானாய் நின்றஎம் பெருமான்
அரங்கமா நகர்அமர்ந் தானே.

கருத்து: பழைய நான்கு வேதங்களும், அவற்றில் சொல்லப்பட்ட யாகங்களும்; கேள்விச் சொற்களும், அச் சொற்களின் பொருளும், பரவி விரிந்து நின்ற விளங்குகின்ற ஒளியை உடைய நெருப்பும், நிறைந்த நீரும், மண்ணும், மேகமும், காற்றும், கத்துகின்ற ஏழு கடலும், பெரிய மலை ஏழும், வானுலகும், மண்ணுலகும் ஆகிய எல்லாமாய் நின்ற எம் தலைவன் திருவரங்கப் பெருநகரிலே இருக்கின்றான். 258

முந்துற உரைக்கேன்! விரைக்குழல் மடவார்
கலவியை விடு! தடு மாறல்;
அந்தரம் ஏழும், அலைகடல் ஏழும்
ஆயஎம் அடிகள்தம் கோயில்,
சந்தொடு மணியும் அணிமயில் தழையும்
தழுவிவந்து அருவிகள் நிரந்து
வந்துஇழி சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வா,மட நெஞ்சே!

கருத்து: அறியாமைகொண்ட மனமே! விரைந்து சொல்லுகின்றேன் கேள். மணம் கொண்ட கூந்தலையுடைய பெண்களது கூட்டுறவை விட்டுவிடு. தடுமாறாதே மேலுலகம் ஏழும், அலை வீசும் கடல் ஏழும் ஆகிய எம்முடைய தலைவனின் உறைவிடமாகிய, சந்தனக் கட்டைகளையும், இரத்தினங்களையும், அழகிய மயில் தோகைகளையும் வாரிக் கொண்டு வந்து அருவிகள் வரிசையாக விழ்கின்ற சாரலையுடைய திருமாலிருஞ் சோலையை வணங்குவோம்; வருவாயாக!

அரும்சொல் பொருள்: முந்துற: விரைவாக. விரை: மணம். தடுமாறல்: தடுமாறாதே. அந்தரம்: வானுலகம். சந்து: சந்தனக்கட்டை. மயில்தழை: மயிலினது தோகை. 259

எண் சீர் விருத்தம்

பெண்ஆகி இன்அமுதம் வஞ்சித் தானை,
பிறைஎயிற்றுஅன்று அடல்அரியாய்ப் பெருகி னானை,
தண்ஆர்ந்த வார்புனல்சூழ் மெய்யம் என்னும்
தடவரைமேல் கிடந்தானை, பணங்கள் மேவி
என்னானை, எண்இறந்த புகழி னானை,
இலங்குஒளிசேர் அரவிந்தம் போன்று நீண்ட
கண்ணானை, கண்ணாரக் கண்டு கொண்டேன்;
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசய னத்தே.

கருத்து: மோகினிப் பெண்ணாக வடிவெடுத்து இனிய அமுதத்தை வஞ்சகமாக வழங்கியவனை, வளைந்த பற்களைக் கொண்ட வலிய நரசிங்க அவதாரம் எடுத்தவனை, குளிர்ச்சி நிறைந்த நீண்ட நீர்வளமுடைய திருமெய்யத் தலத்திலுள்ள பெரிய மலையின் மீது பள்ளி கொண்டவனை, படங்கள் கொண்ட பாம்பின்மேல்துயிலும் சிறப்புடையவனை, கணக்கற்ற புகழ் வாய்ந்தவனை. விளங்குகின்ற ஒளியை உடைய தாமரைப் பூப்போன்ற நெடிய கண்களை உடையவனை, கடல் மல்லைத் தலசயனம் என்ற மாமல்லபுரத்திலே கண்குளிரக் கண்டு கொண்டேன்.

அரும் சொல் பொருள் ; பணம்: படம். என்: சிறப்பு. அரவிந்தம்: தாமரை. 250

கொந்துஅலர்ந்த நறும்துழாய், சாந்தம், தூபம்,
தீபம்கொண்டு அமரர்தொழப் பணம்கொள் பாம்பில்,
சந்துஅணிமென் முலைமலராள், தரணி மங்கை
தாம்இருவர் அடிவருடும் தன்மை யானை,
வந்தனைசெய்து இசைஏழுஆறு அங்கம் ஐந்து
வளர்வேள்வி நான்மறைகள் மூன்று தீயும்
சிந்தனைசெய்து, இருபொழுதும் ஒன்றும் செல்வத்
திருக்கோவ லூர்அதனுள் கண்டேன் நானே.

கருத்து: கொத்துக்களில் பூத்த நல்ல துளசியையும், சந்தனத்தையும், சாம்பிராணியையும், சுடனையும் கொண்டு தேவர்கள் வணங்க, படமெடுத்த பாம்பின் மீது. கலவை அணிந்த மெல்லிய கொங்கைகளையுடைய திருமகளும் நிலமகளுமாகிய இரு தேவிமார்களும் அடி வருடப் பள்ளி கொண்டிருக்கும் சிறப்பு வாய்ந்த திருமாலை, ஏழு இசையும் ஆறு அங்கமும் ஐந்து வேள்வியும் நான்கு வேதமும் மூன்று தீயும் நினைத்துப் பயின்று, இரண்டு காலங்களிலும் அடியார்கள் பொருந்தி வழிபடுகின்ற திருக்கோவலூரில் நான் கண்டேன்.

ஏழு, ஆறு, ஐந்து நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்னும் தொடை அழகு நோக்கத்தக்கது.

அரும் சொல் பொருள் : கொந்து: கொத்து. சாந்தம்: சந்தனம். ஒன்றும்: பொருந்தும். 261

தாங்கஅரும்போர் மாலிபடப் பறவை ஊர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மை யானை,
ஆங்குஅரும்பிக் கண்ணீர்சோர்ந்து அன்பு கூரும்
அடியவர்கட்கு ஆர்அமுதம் ஆனான் தன்னை,
கோங்குஅரும்பு சுரபுன்னை குரவுஆர் சோலைக்
குழாவரிவண்டு இசைபாடும் பாடல் கேட்டுத்
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவ லூர்அதனுள் கண்டேன் நானே.

கருத்து: தாங்கமுடியாத போராற்றல் வாய்ந்த மாலிஎன்னும் அரக்கனை கருடனிலே ஏறிச் சென்று அழித்து உலகத்தார் துயரத்தைப் போக்கிய சிறப்பு உடையவனை, உடல் புளகாங்கித மடைந்து கண்ணீர்பெருக்கி அன்புமிகுந்து தொழும் அடியார்களுக்கு நிறைந்த அமுதமாக ஆனவனை, கோங்கு சுரபுன்னை குரவு என்னும் பூமரங்கள் மல்கிய சோலையிலே வண்டுக் கூட்டங்கள் ரீங்காரம் செய்கின்ற பாடல் ஓசையைக் கேட்டு, இனிய கரும்புகள் உறங்கு கின்ற வயல் பொருந்திய திருக்கோவலூரிலே நான் கண்டேன்.

அரும் சொல் பொருள் : தராதலம்: உலகம். குழாம்: கூட்டம் கழனி: வயல். 262

காயோடு நீடு கனியுண்டு வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவம்செய்ய வேண்டா;
திருமார்ப னைச்சிந்தை யுள்வைத்தும் என்பீர்!
வாய்ஓது வேதம் மல்கின்ற தொல்சீர்
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீஓங்க ஓங்கப் புகழ்ஓங்கு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே.

கருத்து: காய்களையும் நீண்ட பழங்களையும் சாப்பிட்டு, பெருங் காற்றைக் குடித்து, நீண்ட நாட்கள் நாற்புறமும் மேலும் நெருப்புச் சூழ அதனிடையே நின்று வருந்தித் தவம் செய்ய வேண்டாம்; திருவாழ் மார்பனாகிய நாராயணனை மனத்திலே குடிவைத்தோம் என்று சொல்கின்ற பக்தர்களே! மறைபயில் வாயினராகிய சிறந்த பழம் பெருமையுடைய அந்தணர் நாள்தோறும் முறைப்படி வளர்க்கின்ற வேள்வித் தீ ஓங்கி உயர, அதனால் புகழ் வளர்கின்ற தில்லை நகரிலே திருமால் பள்ளிகொண்டிருக்கின்ற திருச்சித்திர கூடத்தைச் சென்று அடையுங்கள்.

அரும் சொல் பொருள் : கடுங்கால்: பெருங் காற்று. மல்குதல்: நிறைதல். 263

துளையார் கருமென் குழல்ஆய்ச் சியர்தம்
துகில்வாரி யும்சிற்றில் சிதைத்தும் முற்று
விளையார் விளையாட் டொடுகாதல் வெள்ளம்
விளைவித்த அம்மான்இடம், வேல்நெ டுங்கண்
முளைவாள் எயிற்று மடவார் பயிற்றும்
மொழிகேட் டிருந்து முதிராத இன்சொல்
வளைவாய கிள்ளை மறைபாடு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்குஎன் மனனே.

கருத்து: என்னுடைய மனமே! சுருண்ட பெரிய மெல்லிய கூந்தலையுடைய இடைப்பெண்களது ஆடைகளை அள்ளிக்கொண்டும், அவர்கள் கட்டிய சிறுவீட்டை அழித்தும், முற்றி விளையாத இளம் பெண்களிடம் விளையாட்டாகப் பெருங்காதலை உண்டாக்கிய தலைவனது இருப்பிடம், வேலனைய நீண்ட கண்களையும் அரும்புபோன்ற ஒளிப் பற்களையும் பெற்ற மகளிர் பயில்கின்ற மறைமொழியைக் கேட்டுக்கொண்டு, அதனைப் பாடுகின்ற முற்றாத இனிய சொல்லையுடைய வளைந்த வாயைக் கொண்ட கிளிகள் நிறைந்த திருநாங்கூர் மணிமாடக் கோயிலை வணங்கு.

அருஞ்சொற்பொருள்: துளை: சுருள். கரு: பெரிய. 254

வங்கம்மலி தடங்கடலுள் வானவர்க ளோடு
மாமுனிவர் பலர்கூடி மாமலர்கள் தூவி
எங்கள்தனி நாயகனே! எமக்குஅருளாய் என்னும்
ஈசன்அவன் மகிழ்ந்துஇனிது மருவிஉறை கோயில்,
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக் குதிப்பச்
சேல்உகளும் செழும்பணைசூழ் வீதிதொறும்மிடைந்து,
மங்குல்மதி அகடுஉறிஞ்சு மணிமாட நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே!

கருத்து: கப்பல்கள் நிறைந்திருக்கின்ற விசாலமான பாற்கடலினுள்ளே தேவர்களோடு சிறந்த முனிவர் பலர் ஒன்று சேர்ந்து நல்ல பூக்களை இட்டு எங்களுடைய ஒப்பற்ற தலைவனே! எமக்கு அருள் செய்யவேண்டும் என்று வணங்கும் ஈசனாகிய திருமால், களித்து இனிமையாகத் தங்கியிருக்கின்ற கோவில் எது? சிவந்த கெண்டை மீன்களும் வாளை மீன்களும் செந்நெல்லிலே தாவ, சேல் மீன்கள் துள்ளி விளையாடுகின்ற செழுமையான வயல் நெருங்கிய வீதிகள் தோறும் பொருந்தி, வானத்தின் சந்திரனுடைய நடு இடத்தைத் தடவுகின்ற இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மாடமாளிகைகளையுடைய திருநாங்கூரின் வைகுந்த விண்ணகரம் என்னும் கோயிலே. அதனை வணங்குவாயாக; அறியாத மனமே!

அருஞ்சொற்பொருள்: வங்கம்: கப்பல். பணை: வயல். பண்ணை என்பதின் இடைக்குறை. மங்குல்: வானம். அகடு: நடுஇடம். 255

திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ,
தீவினைகள் போய்அகல, அடியவர்கட்கு என்றும்
அருள்நடந்துஇவ் ஏழ்உலகத் தவர்பணிய, வானோர்
அமர்ந்துஏத்தஇருந்தஇடம்,பெரும்புகழ்வேதியர்வாழ்
தரும்இடங்கள் மலர்கள்மிகு கைதைகள்செங் கழுநீர்
தாமரைகள்தடங்கள்தொறும்இடங்கள்தொறும்,திகழ
அருவிடங்கள் பொழில்தழுவி எழில்திகழும் நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே!

கருத்து: திருமகளும் நிலமகளும் இருபுறமும் வீற்றிருக்க, தீய வினைகள் எல்லாம் சென்று நீங்க, அடியார்கட்கு எப்பொழுதும் அருள் சுரந்து இந்த ஏழு உலகத்தவரும் வணங்க, தேவர்கள் இருந்து தொழ, திருமால் இருந்த இடம் எது?

புகழ் மிக்க அந்தணர் தங்கி வாழ ஆங்காங்கு தாழம்பூக்களும் செங் கழுநீர் மலர்களும் தாமரை மலர்களும் தடாகங்களிலும், தரைகளி லும் பூத்துச் சொரிய, சோலைகளையும் பிற இடங்களையும் தழுவி அருவி வீழ்கின்ற அழகு கொண்ட நாங்கூர் அரிமேய விண்ணகரம் என்னும் கோயிலே அது. மட நெஞ்சே! அதனை வணங்குவாயாக!

அரும் சொல் பொருள் : இருபாலும்: இரண்டு புறமும். கைதை: தாழை 266

சீர்அணிந்த மணிமாடம் திகழும் நாங்கூர்த்
திருத்தெற்றி அம்பலத்துஎன் செங்கண் மாலை
கூர்அணிந்த வேல்வலவன், ஆலி நாடன்,
கொடிமாட மங்கையர்கோன், குறைய லாளி,
பார்அணிந்த தொல்புகழான், கலியன் சொன்ன
பாமாலை இவைஐந்தும் ஐந்தும் வல்லார்
சீர்அணிந்த உலகத்து மன்னர் ஆகிச்
சேண்விசும்பில் வானவராய்த் திகழ்வர் தாமே.

கருத்து: சிறப்புப் பொருந்திய அழகிய மாளிகைகள் விளங்குகின்ற, திருநாங் கூர்த் தலத்தில் திருத்தெற்றி அம்பலம் என்னும் கோவிலில் குடி கொண்ட என் திருமாலை, கூர்மையான வேலில் வல்லவனும், ஆலி நாடனும், கொடிக் கட்டிய மாடங்களையுடைய மங்கையர் கோனும், குறையலாளியும். உலகில் பழம்புகழ் பரப்பியவனும் ஆகிய கலியன் சொல்லிய பாமாலையாகிய பத்துப் பாடல்களும் வல்லவர்கள் சிறப் புடைய உலகத்துக்கு அரசராகி. உயர்ந்த உச்சியிலுள்ள தேவராய் வாழ்வார்கள். 267

கொல்லை யானாள்; பரிசழிந்தாள்;
கோல்வளையார் தம்மு கப்பே,
மல்லை முந்நீர் தட்டி லங்கை
கட்டழித்த மாயன் என்றும்
செல்வம் மல்கு மறையோர் நாங்கைத்
தேவ தேவன் என்றுஎன்று ஓதிப்
பல்வ ளையாள் என்ம டந்தை
பார்த்தன் பள்ளி பாடு வாளே.

கருத்து: வளையணிந்த என் மகள் வரம்பு கடந்து விட்டாள்; தகுதியை இழந்து விட்டாள்; வளையணிந்த பெண்கள் முன்னிலையிலே, வளம் மிக்க கடலை அணைகட்டி இலங்கையைக் கட்டோடு அழித்த இராமனே என்றும், செல்வம் நிறைந்த மறையோர் வாழும் திருநாங்கைத் தேவ தேவனே என்றும் கூறி அவள் பார்த்தன் பள்ளியையே பாடுவாளாயினள். இது தாயார் பாசுரம்.

அருஞ்சொல் பொருள்: கொல்லையானாள்: எல்லை கடந்து நின்றாள். 268

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவற்கு இன்அருள் சுரந்து,
"மாழை மான்மட நோக்கிஉன் தோழி,
உம்பி எம்பி" என்று ஒழிந்திலை; உகந்து
"தோழன் நீஎனக்கு இங்கொழி" என்ற
சொற்கள் வந்துஅடி யேன்மனத்து இருந்திட,
ஆழி வண்ண!நின் அடியிணை அடைந்தேன்;
அணிபொ ழில்திரு அரங்கத்துஅம் மானே.

கருத்து: இழிந்தவன் எதுவும் அற்றவன் தாழ்ந்தவன் என்று எண்ணாமல் குகனுக்குப் பரிந்து அவனுக்கு அருள் செய்து "அழகிய மான் கண் போன்ற இளம் பார்வையுடைய இந்தச் சீதை உனக்குத் தோழி, என் தம்பி உனக்குத் தம்பி' என்று சொன்னதோடு அமையாமல் மேலும் மகிழ்ந்து "நீ எனக்குத் தோழன். நீ இங்கேயே இருக்கக் கடவாய்" என்று குகனைப் பார்த்து நீ கூறிய சொற்கள் வந்து என்னுடைய மனத்திலே தங்கிவிட்டபடியால் உன்னுடைய திருவடிகளை நான் போற்றினேன்; கடல் நிற வண்ணனே! அழகிய சோலை சூழ்ந்த திருவரங்கத்துத் தலைவனே!

"அன்னவன் உரைகேளா அமலனும் உரைநேர்வான்;
என்னுயிர் அனையாய்நீ; இளவல்உன் இளையான்;இந்
நன்னுதல் அவள்நின்கேள்; நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யதுநான்உன் தொழில்உரி மையின்உள்ளேன்"
"ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பிநின் தம்பி;நான்
தோழன்; மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்" என்ற கலிச்சக்கரவர்த்தியின் பாடல்கள் இப்பாசுரத்தைத் தழுவியன. 269

வாத மாமகன் மற்கடம் விலங்கு
மற்றோர் சாதிஎன்று ஒழிந்திலை; உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்
செய்,த கவினுக்கு இல்லைகைம் மாறுஎன்று
கோதில் வாய்மையி னுயொடும் உடனே
உண்பன் நான்என்ற ஒண்பொருள் எனக்கும்
ஆதல் வேண்டும்என்று அடியிணை அடைந்தேன்
அணிபொ ழில்திரு அரங்கத்துஅம் மானே.

கருத்து: காற்றின் மைந்தனுகிய அநுமனைக் குரங்கு என்றும் விலங்கினம் என்றும் வேறு சாதி யெனவும் கொண்டு நீக்கினையல்லை; மகிழ்ந்து காதல் ஆசையைக் கடலைவிடப் பெரிதாகப் பெருக்கெடுத்து ஓடச் செய்த உன் தகுதிக்குக் கைம்மாறும் உண்டோ? குற்றமற்ற உன்னோடும் நான் உடனுண்ணுவேன் என்று அந்த அநுமானிடம் நீ கூறிய சிறந்த பொருளை எனக்கும் அளித்தல் வேண்டும் என்று நின் திருவடியை நான் அடைந்தேன்; அழகிய சோலை சூழ்ந்த திருவரங்கத்துத் தலைவனே!

அரும் சொல பொருள்: வாதம்: காற்று. மற்கடம்: குரங்கு. ஆதரம்: ஆசை. 270

மன்னும் நான்மறை மாமுனி பெற்ற
மைந்த னைமதி யாதவெம் கூற்றம்
தன்னை அஞ்சிநின் சரண்எனச் சரணாய்,
தகவில் காலனை உகமுனிந்து ஒழியா,
பின்னை என்றும்நின் திருவடிப் பிரியா
வண்ணம் எண்ணிய பேர்அருள் எனக்கும்
அன்னது ஆகும்என்று அடியிணை அடைந்தேன்
அணிபொ ழில்திரு அரங்கத்துஅம் மானே.

கருத்து: நிலைபெற்ற நான்கு வேதம் வல்ல சிறந்த முனிவனால் பெறப்பட்ட மகனை மதியாது அவனைமீது சென்ற கொடிய யமனுக்குப் பயந்து நீ சரண் எனக் கூற, அவனுக்கு அடைக்கலங் கொடுத்துக் தகுதி யற்ற யமன் அழிந்து ஒழியக் கோபித்து, பிறகு ஒரு நாளும் நின் திருவடியினின்றும் பிரியாத நிலையை அவனுக்கு அளித்த பெரிய கருணையை என் என்பேன். எனக்கும் அவ்வாறு அருள் சுரப்பாய் என்று உன் திருவடியை அடைந்தேன். அழகிய சோலை சூழ் திருவரங்கத்து அம்மானே!

இங்கு மார்க்கண்டன் கதையே கூறப்படுகிறது. திருமாலும் சிவனும் ஒன்று என்னும் கருத்திலேயே இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது போலும்.

அரும் சொல் பொருள்: கூற்றம்: யமன். சரண்: அடைக்கலம். தகவுஇல்: தகுதியற்ற உக: அழிய. 271

தன்னுலே தன்உருவம் பயந்த தானுய்த்
　　தயங்குஒளிசேர் மூஉலகும் தானுய் வானுய்,
தன்னுலே தன்உருவில் மூர்த்தி மூன்ருய்,
　　தான்ஆயன் ஆயினுன் சரண்என்று உய்வீர்!
மின்நாடு வேல்ஏந்து விளைந்த வேளை,
　　விண்ஏறத் தனிவேல்உய்த்து உலகம் ஆண்ட
தென்னுடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த
　　திருநறையூர் மணிமாடம் சேர்மின் களேஎ

சருத்து: தானே தன் உருவத்தைப் பெற்றவனுய், விளங்குகின்ற ஒளி கொண்ட மூவுலகும் தானுய், தேவலோகமுமாய், தானே தன் வடிவில் மும்மூர்த்தியுமாய், தான் இடையனுக ஆனவனே பற்றுக் கோடு என்று எண்ணிக் கடைத்தேறுங்கள். மின்னல் விரும்புகின்ற வேலேந்திய வயவர்களோடு போர்விளைந்த காலத்து, அவர்க ளெல்லாம் விண்குடியேற ஒப்பற்ற வேலைச் செலுத்தி உலகத்தை ஆண்ட பாண்டியன், சேரன், சோழன் அடைந்த திரு நறையூர் மணிமாடக் கோயிலை அடையுங்கள். 272

முருக்குஇலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்
　　மன்னெல்லாம் முன்அவியச் சென்று வென்றிச்
செருக்களத்துத் திறல்அழியச் செற்ற வேந்தன்
　　சிரம்துணித்தான் திருவடிநும் சென்னி வைப்பீர்;
இருக்குஇலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
　　எழில்மாடம் எழுபதுசெய்து உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
　　திருநறையூர் மணிமாடம் சேர்மின் களேஎ.

கருத்து: முருக்கம் பூப்போல் விளங்குகின்ற கனிந்த சிவந்த வாயையுடைய பின்னைப் பிராட்டியின் நாயகன், மன்னவர்களெல்லாம் முன்னுளில் அழியப் புகுந்து வெற்றிப் போர்க் களத்திலே, அம் மன்னர் வலி அழிய அழித்த அரசனது தலையை அறுத்த திருமாலின் திருவடியை உங்கள் தலையில் சுமப்பீராக!

இருக்கு மறை விளங்குகின்ற திருமொழி வாயையுடைய எட்டுத் தோள் கொண்ட சிவபெருமானுக்கு அழகிய எழுபது மாடக் கோயில் செய்து உலகத்தை ஆண்ட நற்குலத்து உதித்த கோச் செங்கட்சோழன் அணுகிய கோயிலாகிய திருநறையூர் மணி மாடத்தை அடையுங்கள்.

அரும் சொல் பொருள்: முருக்கு: முருக்கம்பூ. பின்னை: கண்ணன் மனைவி. 273

வந்தநாள் வந்துஎன் நெஞ்சுஇடம் கொண்டான்;
மற்றோர் நெஞ்சுஅறி யான்;அடி யேனுடைச்
சிந்தை யாய்வந்து தென்புலர்க்கு என்னைச்
சேர்கொ டான்;இது சிக்கெனப் பெற்றேன்;
கொந்து லாம்பொழில் சூழ்குடந் தைத்தலைக்
கோவி னைக்குடம் ஆடிய கூத்தனை,
எந்தை யை,எந்தை தந்தை,தம் மானை,
எம்பி ரானைஎத் தால்மறக் கேனே.

கருத்து: வந்த நாளிலே வந்து என் மனத்தை இடமாகப் பிடித்துக் கொண்டான்; அதுமுதல் வேறோர் உள்ளத்தை அவன் அறிய மாட்டான்; எனது உள்ளமாகவே வந்து பொருந்திய அவன், யமதூதுவர்க்கு என்னைக் கொடுக்கமாட்டான்; இதை உறுதியாக நான் பெற்றேன்; கொத்துக் கொத்தாகப் பூக்கள் தொங்குகின்ற சோலை சூழ்ந்த கும்பகோணத்துக்கிடந்த இனிய தலைவர் பிரானை, குடக் கூத்தாடிய அவனை, எம் தந்தையை, எம் தந்தைக்கும் தந்தையை, அவனுக்கும் ஐயனை, எம்தலைவனை எதற்காக நான் மறக்கப் போகின்றேன்?

அரும் சொல் பொருள் : தென்புலர்: தெற்குப் பகுதியிலுள்ள யமதூதர்கள்.
சேர்கொடான்: சேர்த்துக்கொடுக்கமாட்டான். 274

ஆங்கு வெந்நர கத்துஅழுந் தும்போது
அஞ்சேல் என்றுஅடி யேனைஅங் கேவந்து
தாங்கு தாமரை அன்னபொன் ஆர்அடி
எம்பி ரானை,உம் பர்க்கணி யாய்நின்ற
வேங்க டத்துஅரி யை,பரி கீறியை,
வெண்ணெய் உண்டுஉரல் தன்னிடை யாப்புண்ட,
தீங்க ரும்பினை, தேனை,நன் பாலினை
அன்றி என்மனம் சிந்தைசெய் யாதே.

கருத்து: அவ்விடத்துக் கொடிய நரகத்திலே நான் வீழும்போது, ஆங்குப் போந்து என்னைப் பார்த்து 'நீ பயப்படாதே' என்று கூறி நரகத்தில் நான் வீழாமல் தடுக்கின்ற தாமரைப் பூவை ஒத்த பொன் போன்ற திருவடியையுடைய எம் தலைவனை, தேவர்கட்கெல்லாம் ஆபரண மாய் நின்ற திருவேங்கடத்துத் திருமாலை, குதிரை வடிவாக வந்த அசுரனைக் கிழித்து எறிந்தவனை, வெண்ணெயை உண்டு அது காரணமாக உரலோடு கட்டுண்ட இனிய கரும்பை, தேனை, நல்ல பாலைத் தவிர என் உள்ளம் வேறொன்றைச் சிந்தியாது. 275

இனிஎப் பாவம்வந்து எய்தும்சொல் லீர்!எமக்கு
இம்மை யேஅருள் பெற்றமை யால்;அடும்
துனியைத் தீர்த்துஇன்ப மேதரு கின்றதோர்
தோற்றத்தொல் நெறியை, வையம் தொழப்படும்
முனியை, வானவ ரால்வணங் கப்படும்
முத்தினை, பத்தர் தாம்நுகர் கின்றதோர்
கனியை, காதல்செய்து என்உள்ளங் கொண்ட
கள்வ னைஇன்று கண்டுகொண் டேனே.

கருத்து: கொல்லுகின்ற துன்பத்தைப் போக்கி இன்பத்தையே அளிக்கவல்ல ஒப்பற்ற தோற்றத்தை யுடைய பழைய வழியாகவும், உலகம் வணங்க வல்ல முனியாகவும், தேவர்களால் தொழப்படும் முத்தாக வும், பக்தர்கள் நுகர்கின்ற ஒப்பற்ற பழமாகவும் காதலித்து என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட கள்வனைவும் உள்ள திருமாலை இன்று நான் கண்டுவிட்டேன். இனி என்னை எந்தப் பாவம் வந்து அணுகும்? சொல்லுங்கள் பார்க்கலாம். நான்தான் இப்பிறப்பி லேயே அருள்பெற்று விட்டேனே!
'என் உள்ளங்கவர் கள்வன்' என்றார் ஞானசம்பந்தர்.

அரும் சொல் பொருள் : அடும்: கொல்லுகின்ற. துனி: துன்பம் தொல் நெறி: பழைய வழி. 276

நெய்ஆர் ஆழியும் சங்கமும் ஏந்தும்
நீண்ட தோள்உடை யாய்!அடி யேனைச்
செய்யா தஉல கத்திடைச் செய்தாய்;
சிறுமைக் கும்பெரு மைக்கும்உள் புகுந்து
பொய்யால் ஐவர்என் மெய்குடி ஏறிப்
போற்றி வாழ்வதற்கு அஞ்சிநின் அடைந்தேன்;
ஐயா! நின்அடி அன்றிமற்று அறியேன்;
அழுந்தூர் மேல்திசை நின்றஅம் மானே.

கருத்து: கொழுப்புப் பூசிய சக்கரத்தையும், சங்கையும் ஏந்திய பெரிய தோளை யுடையவனே! என்னை, உண்டாக்காது தானே உண்டான நின் உலகம் குடியேறச் செய்தாய். எனக்குச் சிறுமை தருதற்கும் பெருமை உண்டாக்குதற்கும் காரணமான நின்னுள்ளே யான் நுழைந்து பொய்மையினாலே என் உடம்பிலே குடியேறிய ஐவரை வணங்கி வாழ்வதற்குப் பயந்து நின் திருவடியை அடைந்தேன்; தலைவனே! உன்னுடைய திருவடியை யன்றி மற்றொன்றை நான் அறியேன். திருவழுந்தூர் மேற்குத் திக்கிலே நின்ற பெருமானே!

அரும் சொல் பொருள் : நெய்: கொழுப்பு. ஐவர்: மெய், வாய், கண், மூக்கு, செவி யென்ற ஐம்பொறி. 277

நெடியா னே!கடி ஆர்கலி நம்பீ!
நின்னை யேநினைந்து இங்கிருப் பேனை,
கடிஆர் காளையர் ஐவர் புகுந்து,
காவல் செய்தஅக் காவலைப் பிழைத்து,
குடிபோந்து உன்அடிக் கீழ்வந்து புகுந்தேன்;
கூறை சோறுஇவை தந்துஎனக்கு அருளி,
அடியே னைப்பணி ஆண்டுகொள்; எந்தாய்!
அழுந்தூர் மேல்திசை நின்றஅம் மானே.

கருத்து: நீண்ட திருமாலே! காவலாக அமைந்த கடலிற் கிடந்த நம்பீ உன்னையே நினைந்து இங்கிருக்கின்ற என்னை, அச்சந்தரத்தக்க காளை போன்ற ஐவர் என்னுள்ளே நுழைந்து, என்னைக் காவல் செய்து நின்ற அச் சிறையினின்றும் விடுபட்டு, உன் திருவடியின் கீழ் வந்து குடி புகுந்து கொண்டேன். எனக்கு உடையும் உணவும் அளித்து, என்னைப் பணியாளாக ஏற்றுக்கொள் என் தந்தையே! திருவழுந்தூர் மேல் திசையில் நின்ற எம்பெருமானே!

அரும் சொல் பொருள் : (முதல்) கடி: காவல். (இரண்டாவது) கடி: அச்சம். கூறை: ஆடை. 278

செங்கமலத் திருமகளும், புவியும் செம்பொன்
திருவடியின் இணைவருட, முனிவர் ஏத்த,
வங்க,மலி தடம்கடலுள் அனந்தன் என்னும்
வரிஅரவின் அணைத்துயின்ற மாயோன் காண்மின்;
எங்குமலி நிறைபுகழ்நால் வேதம் ஐந்து
வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை
அங்கமலத்து அயன்அனையார் பயிலும் செல்வத்து
அணிஅழுந்தூர் நின்றுஉகந்த அமரர் கோவே.

கருத்து: செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியும், பூமாதும் செவ்விய பொன் போன்ற இரண்டு திருவடிகளையும் தடவவும், முனிவர்கள் தொழவும், கப்பல் நிறைந்த பெரிய கடலிலே ஆதிசேடன் என்னும் கோடுகளையுடைய பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்ட திருமாலே, எங்கும் நிறைந்த புகழைப் பரப்பும் நான்கு மறைகளும் ஐந்து வேள்விகளும் கேள்விகளும் விளங்குந் தன்மை கொண்ட, அழகிய தாமரையிலிருக்கும் பிரமனை ஒத்த அறிஞர்கள் வாழ்கின்ற செல்வம் பொருந்திய திருவழுந்தூரிலே நின்று மகிழ்ந்த தேவர் தலைவனுவான். 279

பந்துஅணைந்த மெல்விரலாள் சீதைக்கு ஆகி,
பகலவன்மீது இயங்காத இலங்கை வேந்தன்
அந்தம்இல்திண் கரம்சிரங்கள் புரண்டு வீழ
அடுகணையால் எய்துஉகந்த அம்மான் காண்மின்!
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்,
திசைமுகனே அனையவர்கள், செம்மை மிக்க
அந்தணர்தம் ஆகுதியின் புகைஆர் செல்வத்து
அணிஅழுந்தூர் நின்றுஉகந்த அமரர் கோவே.

கருத்து: பந்து பொருந்திய மெல்லிய விரலையுடையாளாகிய சீதையின் பொருட்டு, ஆதவனும் மேலே செல்ல முடியாத இலங்கைத் தலைவன் இராவணனுடைய முடிவில்லாத வலிமை வாய்ந்த கைகளும் தலைகளும் உருண்டு வீழுமாறு கொல்லும் அம்பு தொடுத்து மகிழ்ந்து நின்ற தலைவனாகிய இராமபிரானே, செந்தமிழும் வடநூற்கலையும் விளங்குகின்ற நாவுடையாரும் பிரம தேவனை ஒத்தவரும் ஆகிய ஒழுங்கில் மிகுந்த அந்தணரின் வேள்விப் புகை மல்கிய செல்வம் நிறை திருவழுந்தூரில் மகிழ்ந்து வாழும் தேவர்கள் தலைவனாவான்.

அரும் சொல் பொருள் : பகலவன்: சூரியன். அந்தம்: முடிவு. ஆகுதி: வேள்வியிற் சொரியும் பொருள். 280

பண்ணினை, பண்ணில் நின்றதோர் பான்மையை,
பாலுள் நெய்யினை, மால்உரு வாய்நின்ற
விண்ணினை,விளங் கும்சுடர்ச் சோதியை,
வேள்வி யை,விளக் கின்ஒளி தன்னை,
மண்ணினை,மலை யை,அலை நீரினை,
மாலை மாமதி யை,மறை யோர்தங்கள்
கண்ணினை,கண்கள் ஆரவும் நின்று
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே.

கருத்து. இசையானவனை, அவ் இசைக்குள் பொருந்தி நின்ற ஒப்பற்ற சிறப்பானவனை, பாலுக்குள் நெய்யாக மறைந்திருப்பவனை, திருமால் உருவாக நின்ற ஆகாய வெளியை, விளங்குகின்ற சுடரொளியை, மறையை, விளக்கின் பிரகாசத்தை, மண்ணை, மலையை, கடலை, மாலைத் திங்களை, மறையவர்களுடைய கண்ணை, என்னுடைய கண்கள் நிறைய நின்று திருக்கண்ண மங்கையுள்ளே நான் கண்டு கொண்டேன், 281

வெந்திறல் வீரரில் வீரர் ஒப்பார்
வேதம் உரைத்துஇமை யோர்வ ணங்கும்
செந்தமிழ் பாடுவார் தாம்வ ணங்கும்
தேவர் இவர்கொல் தெரிக்க மாட்டேன்;
வந்து குறள்உரு வாய்நி மிர்ந்து
மாவலி வேள்வியில் மண்அ ளந்த
அந்தணர் போன்றுஇவர் ஆர்கொல் என்ன,
“அட்ட புயகரத் தேன்”என் றுரே.

கருத்து: கொடிய வலிமை வாய்ந்த வீரர்களுக்குள்ளே வீரர் ஒப்பாரும், வேதங்களைச் சொல்லித் தேவர்களும் வணங்குகின்ற தகுதிபெற்ற செந்தமிழைப் பாடுகின்றவரும், தொழுகின்ற இந்தத் தேவர் யார்? தெரியவில்லையே! குள்ள உருவெடுத்து வந்து அண்டமுற நிமிர்ந்து மாவலிச் சக்கரவர்த்தியின் வேள்வியிலே உலகத்தை மூன்று அடியால் அளந்துகொண்ட அந்தணர் போன்றிருக்கின்ற இவர் யார்? என்று நான் கேட்க ‘‘நான் அட்டபுயகரத்தேன்” என்று விடையிருக்கின்றார் அவர். 282

வஞ்சித் துறை

கூவாய் பூங்குயிலே! குளிர்மாரி தடுத்துகந்த
மாவாய் கீண்ட மணிவண்ண னைவரக்
கூவாய் பூங்குயிலே!

கருத்து: அழகிய குயிலே, கூவுவாயாக! குளிர்ந்த மழையைத் தடுத்து மகிழ்ந்தவனும், பறவையின் வாயைக் கிழித்தவனுமாகிய நீலமேனி நெடியோன் வருமாறு நீ கூவுவாயாக, ஏ அழகிய குயிலே! 283

கொட்டாய் பல்லிக்குட்டி! குடம்ஆடி உலகுஅளந்த
மட்குஆர் பூங்குழல் மாதவ னைவரக்
கொட்டாய் பல்லிக்குட்டி!

கருத்து: கூப்பிடுவாயாக, ஏ பல்லிக்குட்டி! குடக் கூத்து ஆடி உலகத்தை அளந்த மணம் வீசும் அழகிய சிகையை உடைய மாதவன் வருமாறு சொல்லுவாயாக, ஏ பல்லிக்குட்டியே! 284

கலித் தாழிசை

புள்ளினை வாய்பிளந்து பூங்குருந்தம் சாய்த்து,
துள்ளி விளையாடி, தூங்குஉறி வெண்ணெயை
அள்ளிய கையால் அடியேன் முலைநெருடும்
பிள்ளைப் பிரான்கொட்டாய் சப்பாணி!
பேய்முலை உண்டானே சப்பாணி!

கருத்து: பறவை வாயைக் கிழித்து, அழகிய குருந்த மரத்தை ஒடித்துத் தள்ளி, குதித்து விளையாடி, உறியில் தொங்கிய வெண்ணெயை அள்ளிய கையால் எனது கொங்கையை வருடும் பிள்ளைப் பெருமானே! சப்பாணி கொட்டுக! பேயாகிய பூதனை முலையுண்டவனே சப்பாணி கொட்டுக. 285

திருக் குறுந் தாண்டகம்

இம்மையை, மறுமை தன்னை,
எமக்குவீடு ஆகி நின்ற
மெய்ம்மையை, விரிந்த சோலை
வியன்திரு அரங்கம் மேய
செம்மையை, கருமை தன்னை,
திருமலை ஒருமை யானை,
தன்மையை நினைவார் என்தன்
தலைமிசை மன்னு வாரே.

கருத்து: இப்பிறப்பாக அமைந்தவனை, மறுமையாகவும் நின்றவனை, எங்கட்கு மோட்சமாகி நின்ற உண்மையானவனை, விரிந்த சோலை சூழ்ந்த பெரிய திருவரங்க நகரத்திலே மேவிய செம்மையானவனை, கரிய நிறமுடையவனை. திருப்பதி மலையிலே நிற்கும் ஒரே தன்மை உடையானை, தகுதியுடையானாகிய அவனை நினைக்கின்ற அடியார் என் தலை மீது வீற்றிருப்பவராவார். 286

வான்இடைப் புயலை, மாலை,
வரைஇடைப் பிரசம் ஈன்ற
தேன்இடைக் கரும்பின் சாற்றை,
திருவினை, மருவி வாழார்,
மானிடப் பிறவி அந்தோ
மதிக்கிலர்; கொள்க! தந்தம்
ஊன்இடைக் குரம்பை வாழ்க்கைக்கு
உறுதியே வேண்டி னாரே.

கருத்து: விண்ணில் தோன்றும் மேகம் போன்ற நிறமுடைய திருமாலையும், மலையில் தோன்றிய பூந்தாதினின்றும் வந்த தேனையும் கருப்பஞ் சாற்றையும் ஒத்த திருமகளையும், பொருந்தி வாழமாட்டாதார், ஐயோ. மானிடப் பிறவியை மதிக்காதவர் ஆவர். இதனை மனத்திற் கொள்க! இவர்கள் தங்கள் தங்களுடைய தசைகளோடு கூடிய உடம்பின் வாழ்வுக்கே உறுதியை வேண்டி நின்றவராவார்

அரும் சொல் பொருள்: புயல்: மேகம். பிரசம்: பூந்தாது. திரு: திருமகள். ஊன்: தசை. குரம்பை: உடம்பு. 287

காவியை வென்ற கண்ணார்
கலவியே கருதி, நாளும்
பாவியே னாக எண்ணி,
அதனுள்ளே பழுத்தொ ழிந்தே,
தூவிசேர் அன்னம் மன்னும்
சூழ்புனல் குடந்தை யானைப்
பாவியேன்; பாவி யாது
பாவியேன் ஆயி னேனே.

கருத்து: நீலப் பூவை வென்ற கண்ணையுடைய பெண்களது சேர்க்கையை விரும்பி நாள்தோறும், பாவியாக ஆவான் கருதி, அப்பாவத்துள்ளே பழுத்துப் போய், இறகுகளை யுடைய அன்னப் பறவை பொருந்தியிருக்கின்ற நீர் சூழ்ந்த கும்பகோணம் உடையானைப் பாவியாகிய நான் வழிபடாது பாவியாகவே ஆய்விட்டேன்.

அரும் சொல் பொருள் : காவி: நீலோற்பலம். தூவி: சிறகு. 288

முன்பொலா இராவ ணன்தன்
முதுமதிள் இலங்கை வேவித்து,
அன்பினால் அநுமன் வந்தாங்கு
அடியிணை பணிய நின்றார்க்கு,
என்பெலாம் உருகி உக்கிட்டு
என்னுடை நெஞ்சம் என்னும்
அன்பினால் ஞான நீர்கொண்டு
ஆட்டுவன் அடிய னேனே.

கருத்து: முன்னாளிலே, பொல்லாத இராவணனது முழுதும் கோட்டைகள் சூழ்ந்த இலங்கை நகரைத் தீக் கொளுத்தி அன்போடு கூட அநுமன் வந்து திருவடிகளை வணங்கி நிற்கப் பெற்றவர்களாகிய இராம இலக்குவர்க்கு, என் என்பெல்லாம் உருகி ஒடிய என்னுடைய மனம் என்னும் அன்பினாலே, அறிவாகிய நீர் கொண்டு முழுக்காட்டுவேன். அடியனாகிய நான்

அரும் சொல் பொருள் : வேவித்து: தீக்கொளுத்தி, வேகவைத்து. உக்குதல்: ஒடிதல். 289

இளைப்பினை இயக்கம் நீக்கி,
இருந்துமுன் இமையைக் கூட்டி,
அளப்பில்ஐம் புலன்அ டக்கி,
அன்புஅவர் கண்ணே வைத்து,
துளக்கம்இல் சிந்தை செய்து,
தோன்றலும் சுடர்விட்டு ஆங்கே
விளக்கினை விதியில் காண்பார்
மெய்ம்மையே காண்கிற் பாரே.

கருத்து: தளர்ச்சியையும் இயங்குந் தன்மையையும் அகற்றி, அமைதியாக இருந்து கண்ணிமையை மூடி அளவிடமுடியாத ஆற்றல் வாய்ந்த ஐம்புலனையும் அடக்கி, இறைவரிடத்திலே அன்பு வைத்து, உள்ளத்தை அசைவு அற்றதாக்கி, தோன்றலை அங்கே ஒளிவிடச் செய்து, அந்தச் சோதியை முறையாகக் காண்கின்றவர் உண்மையைக் கண்டவராவர். 290

திரு நெடுந் தாண்டகம்

வங்கத்தால் மாமணிவந்து உந்தும் முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி ஊராய்! பேராய்!
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்,
குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்,
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையின் உச்சியாய்! பவள வண்ணா!
எங்குற்றாய்? எம்பெருமான் உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே.

கருத்து: கப்பல்கள் ஓடுதலினாலே வீசும் அலைகளின்மூலம் சிறந்த இரத்தினங்களைக் கரையிலே தள்ளுகின்ற கடல்சூழ்ந்த மாமல்லபுரத்துக்கு உரியவனே! கோட்டை சூழ்ந்த காஞ்சி நகரை ஆளுபவனே! எங்கும் பேர் பெற்றவனே! மணம் பரப்புகின்ற வளமான கொன்றை மாலையை மார்பில் அணிந்தவனாகிய மலையரையன் இளமகளை இடது பக்கத்திலே கொண்ட சிவபெருமானை உன் உடம்பில் ஒரு கூறாக உடையவனே! பாற்கடலில் பள்ளிகொண்டவனே! உலகத்திலேயே மேலானவனே! குளிர்ந்த மலையின் சிகரத்திலே இருப்பவனே! பவளம்போன்ற செம்மேனியனே! எங்குச் சென்றாய் நீ? எம்பெருமானே! உன்னைத்தேடி ஒன்றும் அற்றவனாகிய நான் இவ்வாறு அலைகின்றேனே!

இப் பாடல் சிவ வடிவத்தையும் திருமால் வடிவத்தையும் இணைத்துக் கூறும் அருமை கொண்டது.

அரும் சொல் பொருள்: கொங்கத்தார்: மணம் பரப்பும் மாலை அலங்கலும் மாலையாம். பங்கு: பக்கம். உழிதர்தல்: அலைதல், 291

உள்ஊரும் சிந்தைநோய் எனக்கே தந்து,என்
ஒளிவளையும் மாநிறமும் கொண்டார் இங்கே,
“தெள்ஊரும் இளம்தெங்கின் தேறல் மாந்திச்
சேல்உகளும் திருவரங்கம் நம்ஊர்” என்ன,
கள்ஊரும் பைந்துழாய் மாலை யானைக்
கனவிடத்தில் யான்காண்பன்; கண்ட போது,
புள்ஊரும் கள்வா!நீ போகேல் என்பன்;
என்றாலும் இதுநமக்குஓர் புலவி தானே,

கருத்து: உள்ளே அரிக்கின்ற மனநோயை எனக்குத் தந்து என்னுடைய ஒளி பொருந்திய வளைகளையும் மாந்தளிர் போன்ற மேனியையும் கவர்ந்து கொண்டாராகிய திருமால் இங்கே வந்து ''தேறை படிந்த தென்னையின் இளநீரைக் குடித்து, சேல் மீன்கள் துள்ளி விளையாடுகின்ற திருவரங்கம் நம்முடைய ஊர்" என்று சொன்னார். அப்படி அவர் சொல்ல, அந்தத் தேன் வடியும் பசியதுழாய் மாலையை அணிந்த அவரை. கனவிலே நான் காண்குவன்; அப்படிக் கண்ட காலத்து ''கருடனில் ஏறிவரும் திருடா நீ போகாதே" என்று யான் கூறுவன்: அப்படி யான் சொன்னாலும் இது நமக்கு ஒரு ஊடலாகத் தானே ஆகின்றது. தலைவி கூற்று.

அரும் சொல் பொருள்: ஊருதம்: (1) தினவெடுத்தல், (2) படுதல். (3) வடிதல், (4) செலுத்துதல், தெள்: தேறை. தெங்கின் இளம்தேறல் என மாற்றவேண்டும். தெங்கு: தென்னை. இளந்தேறல்: இளநீர்' மாந்தி, குடித்து புலவி: ஊடல். 292

மின்இலங்கு திருஉருவும், பெரிய தோளும்,
கரிமுனிந்த கைத்தலமும், கண்ணும், வாயும்,
தன்அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்திலங்கும் மகரம்சேர் குழையும் காட்டி,
என்நலனும், என்நிறைவும், என்சிந் தையும்
என்வளையும், கொண்டுஎன்னை ஆளும் கொண்டு,
பொன்அலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலின் ஊடே
"புனல்அரங்கம் ஊர்''என்று போயி னாரே.

கருத்து: மின் விளங்குகின்ற அழகிய வடிவத்தையும், பெரிய தோள்களையும், யானையை அடக்கிய கைகளையும். கண்ணையும், வாயையும், தானாக மலர்ந்த நல்ல துளசிப் பூவின் கீழே தாழ்ந்து தொங்குகின்ற மீன் வடிவில் அமைந்த காதுத் தோட்டையும் என்னிடம் காட்டி, என்னுடைய அழகையும், என்னுடைய கற்பையும் என் உள்ளத்தையும் என் வளையல்களையும் கொள்ளை கொண்டதோடு அமையாது, என்னையும் தனக்கு அடிமைப்படுத்திவிட்டு, பொன்போல் பூந்த நல்ல செருந்திச் சோலையினூடே நுழைந்து 'நீர் சூழ்ந்த திருவரங்கம் நமது ஊர்' என்ற சொல்லிவிட்டுப் போய் விட்டார். தலைவி கூற்று. 'புறம்பயம் நம் ஊர் என்று போயினாரே' என்ற அப்பர் தேவாரம் இதனோடு ஒத்தது

அரும்சொல் பொருள்: மகரம்: மீன். குழை: காதணி. நலன்: அழகு. நிறைவு: கற்பு. செருந்தி: ஒரு பூமரம். 293

தேமருவு பொழில்இடத்து மலர்ந்த போதைத்
தேன்அதனை வாய்மடுத்துஉன் பெடையும் நீயும்
பூமருவி இனிது அமர்ந்து பொறியில் ஆர்ந்த
அறுகால சிறுவண்டே! தொழுதேன் உன்னை;
ஆமருவி நிரைமேய்த்த அமரர் கோமான்
அணிஅழுந்தூர் நின்றானுக்கு இன்றே சென்று,
நீமருவி, அஞ்சாதே நின்று,ஓர் மாது
நின்நயந்தாள் என்றுஇறையே இயம்பிக் காணே.

கருத்து: தேன் பொருந்திய சோலையிலே மலர்ந்த பூக்களில் வடியும் மயக்கத்தைத் தரும் கள்ளைக் குடித்து, உன் மனைவியோடு கூடி அப் பூவிலே உல்லாசமாக இருக்கின்ற புள்ளிகள் நிறைந்த ஆறு காலையுடைய சின்ன ஆண் வண்டே! உன்னை வணங்குகின்றேன். பசுக்களோடு சேர்ந்து அப் பசுக்கூட்டங்களை மேய்த்தவனும் தேவர் தலைவனுமாகிய திருவழுந்தூரில் நின்ற திருமாலிடம் இன்றே நீ சென்று, பயமின்றி அவன் முன் சேர்ந்து நின்று, 'ஒரு பெண்ணானவள் உன்னை விரும்பினாள்' என்று கொஞ்சம் சொல்லி அவனைப் பார்க்க மாட்டாயா?

இது வண்டுவிடு தூது என்னும் துறை.

அரும் சொல் பொருள் : தேம்: தேன். போதைத் தேன்: மயக்கத்தைத் தரும் கள். பெடை: பெட்டை. பொறி: வண்டின் புள்ளி. 294

செங்கால மடநாராய்! இன்றே சென்று,
திருக்கண்ண புரம்புக்கு,என் செங்கண் மாலுக்கு
என்காதல் என்துணைவர்க்கு உரைத்தி யாகில்
இதுஒப்பது எனக்குஇன்பம் இல்லை;நாளும்
பைங்கான மீதுஎல்லாம் உனதே ஆகப்
பழனமீன் கவர்ந்துஉண்ணத் தருவன்; தந்தால்
இங்கேவந்து இனிதுஇருந்துஉன் பெடையும் நீயும்
இருநிலத்தில் இனிதுஇன்பம் எய்த லாமே.

கருத்து: சிவந்த காலையுடைய இளைய நாரையே! இன்று தினமே சென்று திருக்கண்ணபுரத்துக்குள் புகுந்து என்னுடைய திருமாலாகிய என் துணைவருக்கு, என் காதலை எடுத்துச் சொல்வாயானால், இதைப் போன்ற இன்பம் எனக்கு வேறு இல்லை; நாள்தோறும் இந்தப் பசிய காடெல்லாம் உன்னுடையதே ஆகுமாறு வயல் மீனைப் பிடித்து நீ அருந்த உனக்குத் தருவேன்; அப்படி நான் தரும்பொழுது, இவ்விடத்தே வந்து இனிமையாக இருந்து உன் மனைவியும் நீயும் இப் பெரிய நிலத்திலே நல்ல இன்பத்தை யடையலாம்.

இது நாரை விடுதூது 295

தென்இலங்கை அரண்சிதறி அவுணன் மாள,
சென்றுஉலகம் மூன்றினையும் திரிந்தோர் தேரால்
மன்இலங்கு பாரதத்தை மாள ஊர்ந்த
வரைஉருவின் மாகளிற்றைத் தோழி! என்தன்
பொன்இலங்கு முலைக்குவட்டில் பூட்டிக் கொண்டு,
போகாமை வல்லேனாய்ப் புலவி எய்தி,
என்னில்அங்கம் எல்லாம்வந்து இன்பம் எய்த,
எப்பொழுதும் நினைந்துஉருகி இருப்பன் நானே.

கருத்து: தென் இலங்கைக் கோட்டையைச் சிதறடித்து, அதனை ஆண்ட இராவணனை அழித்ததோடு அன்றி மூன்று உலகினிலும் சென்று திரிந்து, பாரதப் போரில் விளங்கித் தோன்றிய மன்னர் பலரும் மாளுமாறு ஒப்பற்ற தேரைச் செலுத்திய மலை போன்ற மேனியை யுடைய சிறந்த யானையை என்னுடைய தேமல் படர்ந்த கொங்கை உச்சியில் கட்டிக்கொண்டு, அதனைப் போகவிடாமல் ஊடல் பெற்று, என்னுடைய உடம்பிலுள்ள ஒவ்வொரு பகுதியும் இன்பத்தை யடைய எந்தக் காலத்தும் எண்ணி உருகி நான் இருப்பேன் தோழி! 'தோழியோடு சொல்லல்' என்னும் துறை.

அரும் சொல் பொருள்: அவுணன்: இங்கு இராவணன். பொன்: அழகு தேமல்.

296

பட்டுஉடுக்கும்; அயர்த்துஇரங்கும்; பாவை பேணாள்;
பனிநெடுங்கண் நீர்ததும்பப் பள்ளி கொள்ளாள்;
எள்தனைப்போது என்குடங்கால் இருக்க கில்லாள்;
"எம்பெருமான் திருவரங்கம் எங்கே?'' என்னும்;
மட்டுவிக்கி மணிவண்டு முரலும் கூந்தல்
மடமானை இதுசெய்தார் தம்மை மெய்யே
கட்டுவிச்சி சொல்என்னச் சொன்னாள் நங்காய்!
கடல்வண்ணர் இதுசெய்தார்; காப்பார் ஆரே.

கருத்து: உடல் மெலிவினாலே பட்டைத் திரும்பத் திரும்ப உடுத்துவாள்; சோர்ந்து வருத்துவாள்; விளையாட்டுப் பொம்மைகளை எப்போதும் போல் விரும்ப மாட்டாள்; குளிர்ந்த நீண்ட கண்களில் கண்ணீர் வடிதலால் உறங்க மாட்டாள்; சிறிது பொழுதும் என் மடியிலே இருக்க மாட்டாள்; ''எம்பெருமான் குடியிருக்கின்ற திருவரங்க நகர் எங்கே இருக்கின்றது" என்று கேட்பாள். தேனை உண்ணும் பொழுது அது விக்க அதனால் அழகிய வண்டு கத்துகின்ற கூந்தலை யுடைய என் இளம் பெண்ணை இப்படிச் செய்தவர் யார்? அதனை ஏ கட்டுவிச்சீ உண்மையாகச் சொல் என்று நான் கேட்க, "அம்மா, கடல் வண்ணர்தான் இப்படிச் செய்தார்" என்று சொன்னாள் குறி சொல்பவள். அவரே இப்படிச் செய்தால் பிறகு காக்கின்றவர் யார்? துறை, தாயார் பாசுரம்.

உடல் மெலிவால் அடிக்கடி ஆடை உடுத்த நேர்வதை அசோக வனத்திலிருந்த சீதையைப் பற்றிச் சொல்லும்போது.

"ஆவி அம் துகில் புனைவதொன்றுஅன்றி வேறு அறியாள்'' என்று கூறுவர் கம்பர்.

அரும் சொல் பொருள்: எள்தனைப்போது: சிறுபொழுது. குடங்கால்: மடி. மட்டு: தேன்: கட்டுவிச்சி. குறிகாரி.

297

நெஞ்சுஉருகிக் கண்பனிப்ப நிற்கும்; சோரும்;
நெடிதுஉயிர்க்கும்;உண்டுஅறியாள்;உறக்கம்பேணுள்;
"நஞ்சுஅரவில் துயில்அமர்ந்த நம்பீ!'' என்னும்;
"வம்பார்பூம் வயலாலி மைந்தா!'' என்னும்;
அஞ்சிறைய புட்கொடியே ஆடும்; பாடும்;
"அணிஅரங்கம் ஆடுதுமோ தோழீ'' என்னும்
என்சிறகின் கீழ்அடங்காப் பெண்ணைப் பெற்றேன்;
இருநிலத்தோர் பழிபடைத்தேன்; ஏபா வம்மே.

கருத்து: மனம் உருகிக் கண்ணீர் மல்க நிற்பாள்; சோர்ந்து விழ்வாள்; பெருமூச்சு விடுவாள்; உணவையே அறிய மாட்டாள்; தூக்கத்தை விரும்பமாட்டாள்; "விடப் பாம்பில் தூங்கும் சிறந்தவனே!" என்பாள். "மணம் பரப்பும் மலர் மல்கிய வயல் சூழ்ந்த திருவாலி நகரில் மேவிய மைந்தனே'' என்று கூறுவாள். அழகிய சிறகுகளையுடைய கருடக் கொடியைத் தூக்கிக் கொண்டு ஆடுவாள்; பாடுவாள்; ''திருவரங்கத்துக்குச் சென்று கூத்தாடுவோம் வருகின்ருயா தோழீ" என்று கூப்பிடுவாள். என்னுடைய இறக்கைகளுக்குக் கீழே அடங்காத மகளைப் பெற்றேன். அதனால் இந்தப் பெரிய உலகத்திலே ஒரு பழியையும் பெற்றேன். ஐயோ பாவமே!
இது தாயார் பாசுரம். 298

முளைக்கதிரை, குறுங்குடியுள் முகிலை, மூவா
மூஉலகும் கடந்துஅப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை, அரங்கம் மேய
அந்தணனை, அந்தணர்தம் சிந்தை யானை,
விளக்கொளியை, மரகதத்தை, திருத்தண் காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு
''வளர்த்ததனுல் பயன்பெற்றேன்'' வருக என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி ஞளே.

கருத்து: இளஞ்சூரியனை, குறுங்குடியில் எழுந்தருளியிருக்கின்ற மகழ வண்ணனை, முதிராத மூன்று உலகங்களையும் தாண்டி அதற்கு மேல் முதல்வனுய் நின்ற கணக்கிட முடியாத நிறைந்த அமுதமானவனை, திருவரங்கத்திலே பொருந்திய அழகிய தண்ணளியை உடையயானை, அவ் அந்தணருடைய உள்ளத்து உறைபவனை, விளக்கின் பிரகாசம் போன்றவனை, பச்சை நிறமுடையானை, திருத்தண்காத் தலத்திலும் வெஃகாப்பதியிலும் உறைகின்ற திருமாலைக் கிளி பாடுவதை யான் கேட்டு. உன்னை வளர்த்தமையினுலே அடைய வேண்டிய பயனை யான் அடைந்து விட்டேன். இங்கே வருவாயாக என்று இளைய கிளியைக் கையெடுத்துத் தொழுதாள் ஒரு பெண்.
இது தலைவி கிளியை வணங்கித் தொழுது சொல்லல். 299

"கல்உயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி மேய
களிறு''என்றும், "கடல்கிடந்த கனியே'' என்றும்,
"அல்லிஅம்பூ மலர்ப்பொய்கைப் பழனவேலி
அணிஅழுந்தூர் நின்றுஉகந்த அம்மான் என்றும்
சொல்உயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கி,
தூமுறுவல் நகைஇறையே தோன்ற நக்கு,
மெல்விரல்கள் சிவப்புஎய்தத் தடவி, ஆங்கே,
மென்கிளிபோல் மிகமிழற்றும் என்பே தையே.

கருத்து: 'கற்களால் உயர்த்திக் கட்டப் பெற்ற நீண்ட மதிள் சூழ்ந்த காஞ்சி நகரத்திற் பொருந்திய யானையே' என்றும், 'கடலிற் பள்ளி கொண்டிருச்கும் பழமே' என்றும், 'அழகிய அல்லிப் பூக்கள் நிறைந்த பொய்கை சூழ்ந்த வயல்களை வேலியாக உடைய திருவழுந்தூர் நகரிலே நின்று மகிழ்ந்த அம்மானே' என்றும் கூறி, இசையிலே உயர்ந்த நீண்ட வீணையைக் கொங்கையின் மேலே, தாங்கிக் கொண்டு, சுத்தமான பற்களில் சிறிது ஒளி தோன்றுமாறு சிரித்து, தனது மென்மை வாய்ந்த விரல்கள் சிவப்பு ஏறுமாறு வீணையின் தந்தியைத் தடவி, மெல்லிய கிளியைப் போல இனிமையாகப் பாடுவாள் என் மகள்.

இது தாயார் பாசுரம்.

"மிக நல்ல வீணை தடவி" என்றார் ஞானசம்பந்தப் பெருமான். இங்கு மிக்க நயம்பட 'மெல் விரல்கள் சிவப்பெய்தத் தடவி' என்றார் திருமங்கை மன்னன்.

அரும் சொல் பொருள்: பழனம்: வயல். சொல்: இசை தூ: சுத்தம். நகை: ஒளி. இறை: சிறிது. மிழற்றுதல்: சொல்லுதல். 300

நம் ஆழ்வார்

கலி விருத்தம்

உயர்வுஅற உயர்நலம் உடையவன் யவன்,அவன்
மயர்வுஅற மதிநலம் அருளினன்; யவன்,அவன்?
அயர்வுஅறும் அமரர்கள் அதிபதி; யவன்அவன்
துயர்அறு சுடர்அடி தொழுதுஎழு,என் மனனே!

கருத்து: தனக்கு மேல் உயர்ந்தவர் எவரும் இலர் என்னுமாறு சிறந்த நன்மை உடையவன் எவனே. அவனே என் மயக்கம் போக நல்ல அறிவைத் தந்தான்; அவன் யாவன்? அவனே, மறதியில்லாத தேவர்கள் தலைவன்; அத்தலைவனுடைய, துன்பம் தொலைக்கும் ஒளி மயமான திருவடிகளைத் தொழுது எழுவாயாக! எனது மனமே.

அரும் சொல் பொருள்: அற: நீங்க. யவன்: யாவன். மயர்வு: மயக்கம். அயர்வு: மறதி. 301

அவர்அவர் தமதமது அறிவுஅறி வகைவகை,
அவர்அவர் இறையவர் எனஅடி அடைவர்கள்;
அவர்அவர் இறையவர் குறைவுஇலர்; இறையவர்
அவர்அவர் விதிவழி அடையநின் றனரே.

கருத்து: ஒவ்வொருவரும், தாம்தாம் கண்டறிந்த வகையில் தாங்கள் தாங்கள் இறையவர் என நினைத்து, அவ் இறையவருடைய திருவடிகளை அடைவார்கள்; அவரவரும் கொண்ட இறையவர் யாவரும் குறைவு இல்லாதவர்களே; அந்த இறையவர் அவரவரும் விதியின் வழியைப் பெற உயிருக்கு உயிராக நிற்கின்றனர். 302

எம்பி ரானை,எந் தைதந்தை தந்தைக்கும்
தம்பி ரானை,தண் தாமரைக் கண்ணனை,
கொம்புஅ ராவுநுண் ஏர்இடை மார்வனை,
எம்பி ரானைத்தொ ழாய்மட நெஞ்சமே!

கருத்து: ஏ அறியாமையுடைய மனமே! எம் தலைவனை, எந்தைக்கும் அவர் தந்தைக்கும் அவர் தாதைக்கும் தலைவனை, குளிர்ந்த தாமரைக் கண்ணனை, பூங்கொம்பைச் செதுக்கிவிட்டது போன்ற மெல்லிய அழகிய இடையை உடையாளாகிய திருமகளை மார்பில் ஏந்தியவனை எம்பெருமானை வணங்குவாயாக!

அரும் சொல் பொருள் : கொம்பு: பூங்கொம்பு. அராவுதல்: செதுக்கி ஒழுங்குப் படுத்துதல். நுண்மை: மென்மை. ஏர்: அழகு. இடை, இடையை யுடையாளாகிய திருமகளைக் குறிக்கும். 303

ஊனில்வாழ் உயிரே! நல்லை,போ உனைப்பெற்று
வான்உளார் பெருமான் மதுசூதன் என்அம்மான்
தானும்யா னும்எல்லாம் தன்உள்ளே கலந்துஒழிந்தோம்;
தேனும்பா லும்நெய்யும் கன்னலும் அமுதும்ஒத்தே.

கருத்து: என் உடம்பில் வாழ்கின்ற உயிரே! நீ நல்லவன்தான். இருந்தாலும் இனி உனக்கு இங்கு வேலையில்லை; போவாயாக! உன்னை நான் பெற்றுக்கொண்டு வானிலுள்ளவர்கள் தலைவனும் மதசூதனுமாகிய எம்பெருமானும் நானுமாக எல்லாவற்றிலும் உட்கலந்து, தேனையும் பாலையும், நெய்யையும் கரும்பையும் அமுதத்தையும் ஒத்து இருவராக இன்றி ஒன்றாகி விட்டோம். 304

பாம்புஅணைமேல் பாற்கடலுள் பள்ளி அமர்ந்ததுவும்
காம்புஅனைதோள்பின்னைக்கா ஏறுஉடனேழ் செற்றதுவும்
தேம்பணைய சோலை மராமரம்ஏழ் எய்ததுவும்
பூம்பிணைய தண்துழாய்ப் பொன்முடிஅம் போர்ஏறே.

கருத்து: பாம்புப் படுக்கையின் மீது திருப்பாற் கடலிலே பள்ளி கொண்டதும், மூங்கில் போன்ற தோள்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக ஏழு காளைகளை அடக்கியதும், தேன் பொருந்திய பருத்த சோலையிலே உள்ள மராமரம் ஏழையும் துளைத்ததுவும், அழகிய குளிர்ந்த துழாய் மாலையை யணிந்த பொன் முடியையுடைய போர்ச்சிங்கமாகிய திருமாலே ஆவான்.

நாராயணனும், கண்ணனும், இராமனும் ஒருவனே என்பது கருத்து

அரும் சொல் பொருள் : காம்பு: மூங்கில். அனை: ஒத்த. ஏறு காளை. புணைய: பருத்த. 305

அணைவது அரவணைமேல்; பூம்பாவை ஆகம்
புணர்வது; இருவர் அவர்முதலும் தானே;
இணைவனும் எப்பொருட்டும்; வீடு முதலாம்,
புணை,வன் பிறவிக் கடல்நீந்து வார்க்கே.

கருத்து: பொருந்துவது பாம்புப் படுக்கையின் மீது; சேர்வது திருமகளின் உடம்போடு; சிவன் பிரமன் என்ற இருவர்க்கும் முதல்வனுவான் திருமாலே; எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்பவனுவான் வலிய பிறவிக் கடலை நீந்துகின்றவர்க்குத் தெப்பமாக இருந்து வீட்டைத் தரும் முதல்வனும் ஆவான்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' என்றார் வள்ளுவர்.

அரும் சொல் பொருள் : புணை: தெப்பம். வன்பிறவிக் கடல்: வலிய பிறவியாகிய கடல். 306

புலன்ஐந்தும் மேயும் பொறிஐந்தும் நீக்கி,
நலம்அந்தம் இல்லதுஓர் நாடு புகுவீர்;
அலமந்து வீய அசுரரைச் செற்றான்,
பலம்உந்து சீரில் படிமின்!ஓ வாதே.

கருத்து: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்து புலன்களையும் மேய்கின்ற வாய் கண் மெய் செவி மூக்கு என்ற ஐம்பொறிகட்கும் ஆட்பட்டிருத்தலினின்றும் விடுபட்டு, நலம் மிக்க முடிவில்லாத ஒப்பற்ற வீட்டை நீங்கள் அடையலாம்; அதற்கு, வருந்தி அழிய அசுரர்களைத் தொலைத்தவனுடைய பலம் பொருந்திய சிறந்த தன்மையில் இடைவிடாமல் அழுந்துங்கள்.

அரும் சொல் பொருள் : அலமருதல்: வருந்துதல். வீய: சாக. ஓவாது: இடைவிடாமல். 307

ஓவாத் துயர்ப்பிறவி உட்படமற்று எவ்எவையும்
மூவாத் தனிமுதலாய் மூஉலகும் காவலோன்;
மாவாகி, ஆமையாய், மீனாகி, மானிடமாம்
தேவாதி தேவ பெருமான்என் தீர்த்தனே.

கருத்து: விலங்காகி ஆமையாய் மீனாகி இராமன் கண்ணன் முதலிய மனிதனுமாகி அவதரித்த தேவாதி தேவனாகிய புனிதமான எம்பெருமானே, இடைவிடாத துன்பத்தைத் தருகின்ற பிறவியுள்ளிட்ட எல்லாவற்றுக்கும் மூப்பில்லாத முதற்காரணனாகி மூன்று உலகங்களையும் பாதுகாக்கின்றவனுவான். 308

தீர்த்தன் உலகுஅளந்த சேவடிமேல் பூந்தாமம்
சேர்த்தி, அவையே சிவன்முடிமேல் தான்கண்டு,
பார்த்தன் தெளிந்துஒழிந்த பைந்துழா யான்பெருமை,
பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே.

கருத்து: அருச்சுனனானவன் பரிசுத்தமான திருமாலுடைய உலகத்தை அளந்த செம்மையான திருவடிமீது மாலையைச் சாத்தி, அம் மாலையே சிவனது முடிமீது இருக்கத் தான் பார்த்து, மயக்கம் ஒழிந்து தெளிவடைந்த பசிய துழாய் மாலையை உடையானது பெருமையானது, இன்று திரும்பவும் ஒருவரால் பேச வேண்டிய நிலைமையிலா இருக்கின்றது? 9

எங்கும்உளன் கண்ணன் என்றமகனைக்காய்ந்து,
இங்குஇல்லை யால்என்று இரணியன் தூண்புடைப்ப,
அங்குஅப் பொழுதே அவன்வீயத் தோன்றியஎன்
சிங்கப் பிரான்பெருமை ஆராயும் சீர்மைத்தே.

கருத்து: எங்கும் இருக்கின்றான் கண்ணன் என்று கூறிய மகனாகிய பிரகலாதனைக் கோபித்து, இவ்விடத்து அவன் இல்லையென்று கூறி இரணியன் ஒரு தூணை அடிக்க, அந்தத் தூணினின்றும் அந்தக் கணமே அந்த இரணியன் அழியப் புறப்பட்ட என்னுடைய நரசிங்கப் பெருமானின் பெருமை ஆராயும் தரத்ததோ! 310

யானே என்னை அறியகி லாதே
யானே என்தன தேஎன்று இருந்தேன்;
யானே நீஎன் உடைமையும் நீயே!
வானே ஏத்தும்எம் வானவர் ஏறே.

கருத்து: யானே என்னை யறிய முடியாமல், நான் என்றும் என்னுடைய தென்றும் எண்ணி இறுமாந்திருந்தேன்; அது தவறு: யானும் நீயே. என்னுடைய பொருள்களும் நீயே ஆவாய்! வானுலகமும் தொழுகின்ற எம் வானவர்களின் தலைவனே! 311

கிளர்ஒளி இளமை கெடுவதன் முன்னம்
வளர்ஒளி மாயோன் மருவிய கோயில்,
வளர்இளம் பொழில்சூழ் மாலிருஞ் சோலை
தளர்வுஇலர் ஆகில் சார்வது சதிரே.

கருத்து: விளங்குகின்ற ஒளியை யுடைய இளமைப் பருவம் நீங்குவதற்கு முன்னே, ஒளிவளரும் மாயவன் தங்கிக் கோயில் கொண்ட ஓங்கி வளர்ந்த செழுமையான சோலைகள் மல்கிய திருமாலிருஞ் சோலை மலையைச் சோர்வில்லாது சென்று அடைவது பெருமையாகும். 312

சதிர்இள மடவார் தாழ்ச்சியை மதியாது
அதிர்குரல் சங்கத்து அழகர்தம் கோயில்,
மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலை,
பதியது ஏத்தி எழுவது பயனே.

கருத்து: நடனமாடுகின்ற இளம் பெண்களது தாழ்ந்த தன்மையை மேலாக எண்ணுமல், சங்குகள் ஒலிக்கின்ற அழகர் வாழ்கின்ற கோயிலை யுடைய திங்கள் உலாவுகின்ற சிகரத்தை யுடைய திருமாலிருஞ் சோலைமலையைப் பாராட்டிப் புகழ்வது பயனுடையதாகும். 313

முடிச்சோதி யாய்உனது முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும் பலகலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ? திருமாலே கட்டுரையே.

கருத்து: உனது திருமுகத்தின் ஒளியானது திருமுடியின் ஒளியாக மலர்ந்ததா? உனது திருவடியின் ஒளியானது நீ நின்ற தாமரையாக மலர்ந்ததா? உனது திருமேனியின் ஒளி நீ அணிந்த ஆடையோடு கூடப் பல ஆபரணங்களாய் நினது பசிய மிக்க ஒளியிலே கலந்து விட்டதோ? திருமாலே இதை எடுத்துச் சொல்வாயாக!

அரும் சொல் பொருள்: படி: திருமேனி. அடி: மிகுதி. 314

முந்நீர்ஞா லம்படைத்த வெம்முகில் வண்ணனே!
அந்நாள்நீ தந்த ஆக்கையின் வழிஉழல்வேன்;
வெந்நாள்நோய் வீய வினைகளைவேர் அறப்பாய்ந்து
எந்நாள்யான் உன்னை இனிவந்து கூடுவனே.

கருத்து: கடல் உலகத்தை யெல்லாம் படைத்த விரும்பத்தக்க மழை போன்ற நிறத்தை யுடையவனே! அந்த நாளிலே நீ தந்த உடம்பின் வழியிலே நின்று நான் அலைகின்றேன்; நாள்தோறும் வருத்தும் கொடிய நோயானது அழிய என் வினைகளின் வேர் அற்றுப் போகுமாறு சாடி இனிமேல் எந்த நாள் யான் உன்னை வந்து கூடப் போகின்றேன்.

அரும் சொல் பொருள்: வெம்மை: (1) விருப்பம், (2) கொடுமை. 315

ஒழிவுஇல் காலம்எல் லாம்உட னாய்மன்னி
வழுவுஇ லாஅடி மைசெய்ய வேண்டும் நாம்,
தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து
எழில்கொள் சோதிஎந் தைதந்தை தந்தைக்கே.

கருத்து: ஒய்வில்லாத நாள் முழுதும் உடனாகி இருந்து குற்றமற்ற அடிமைத் தொழிலை, ஆரவாரமாக ஒசையிட்டு வருகின்ற அருவியையுடைய திருவேங்கடத்திலே அழகிய ஒளி வடிவு கொண்ட எம் தந்தையின் தாதையின் தகப்பனாகிய திருமாலுக்கு நாம் செய்ய வேண்டும். 316

அரும் சொல் பொருள்: மன்னி: பொருந்தி. தெழி: ஆரவாரம்.

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்,
அன்று ஞாலம் அளந்தபி ரான்,பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே.

கருத்து: மலையெடுத்துக் குளிர்ந்த மழையைக் காத்தவனும் அந்த நாளில் உலகத்தை அளந்த தலைவனும் மேலானவனும் ஆகிய திருமாலின் திருவேங்கடமலை ஒன்றையே சென்று அடைந்து தொழுவோமானால் நம்முடைய வினைகளெல்லாம் அற்றுவிடும். 317

கண்டுகேட்டு உற்றுமோந்து உண்டுஉழலும் ஐங்கருவி,
கண்டஇன்பம் தெரிவரிய அளவுஇல்லாச் சிற்றின்பம்;
ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக்
கண்டசதிர்கண்டுஒழிந்தேன்அடைந்தேன்உன் திருவடியே

கருத்து: கண்டும் கேட்டும் தழுவியும் முகர்ந்தும் உண்டும் அலைகின்ற ஐம் புலன்களும் கண்ட இன்பம், அறிய முடியாத அளவு கடந்த சிறிய இன்பமாகும். ஒளியுடைய வளையலை அணிந்தாளாகிய திருமகளும் நீயும் பொருந்தி நிற்கக் கண்ட பேற்றைக் கண்டு, அச்சிற்றின்பத்தை ஒழித்தேன்: உன் திருவடியை அடைந்தேன்.

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒண்தொடி கண்ணே உள" என்ற திருக்குறள் இப் பாசுரத்தில் எடுத்தாளப்பட்டிருக்கிறது. 318

அரும் சொல் பொருள்: சதிர்: பேறு.

என்றைக்கும் என்னைஉய் யக்கொண்டு போகிய
அன்றைக்குஅன்று என்னைத்தன் ஆக்கி,என் னால்தன்னை
இன்தமிழ் பாடிய ஈசனை ஆதியாய்
நின்றஎன் சோதியை என்சொல்லி நிற்பனோ?

கருத்து: என்றைக்கோ என்னைக் கடைத்தேறுமாறு கொண்டு சென்ற அன்றைக்கு என்னைத் தன்னுடையவனாக்கி, என்னைக் கொண்டு தன்னை இனிய தமிழ் பாடச் செய்த கடவுளை, உலகுக்கு முதல்வனாய் நின்ற என் ஒளி வடிவத்தை யான் என் சொல்லி நிற்பேன். 319

ஆம்முதல் வன்இவன் என்றுதன் தேற்றி,என்
நாமுதல் வந்து புகுந்துநல் இன்கவி,
தூமுதல் பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்னஎன்
வாய்முதல் அப்பனை என்றும் மறப்பனோ.

கருத்து: உலகுக்கு இவன் முதலாவான் என்று நான் உணருமாறு தன்னை எனக்குத் தெளிவித்து. என் நாக்கின் நுனியிலே வந்து நுழைந்து, நல்ல இனிய கவிகளை, தூய்மையான முதலடியார்கட்குத் தன்னைச் சொல்லச் செய்த என் வாய்ந்த முதலாக அமைந்த தந்தையை என்றைக்கேனும் நான் மறப்பேனோ?

அரும் சொல் பொருள் : தன்தேற்றி: தன்னைத் தெளிவித்து. 320

தேவர்முனி வர்க்குஎன்றும் காண்டற்கு அரியன்,
மூவர் முதல்வன்,ஒரு மூஉலகு ஆளி,
தேவன் விரும்பி உறையும் திருநாவாய்
யாவர் அணுகப் பெறுவார் இனிஅந்தோ.

கருத்து: அமரர்கட்கும் முனிவர்கட்கும் எப்பொழுதும் காண்பதற்கு அருமையாக அமைந்தவனும். மும்மூர்த்திகட்கும் முதல்வனும், ஒரு மூன்று உலகத்தை ஆள்பவனும் ஆகிய கடவுள் விரும்பித் தங்கியிருக்கின்ற திருநாவாய் என்னும் திருப்பதியை இனி எவர் அடையும் பாக்கியம் பெறப்போகின்றனரோ, அந்தோ! 321

சரணமா கும்தன தாள்அடைந் தார்க்கெலாம்;
மரணமா னல்வைகுந் தம்கொடுக் கும்பிரான்;
அரண்அமைந் தமதிள் சூழ்திருக் கணபுரத்து
அரணியா னன்தனது அன்பர்க்குஅன் பாகுமே.

கருத்து: தனது திருவடியை யடைந்தவர்க்கெல்லாம் அடைக்கலமாவான். இறந்தவர்களுக்கு வைகுந்தப் பதவியைக் கொடுக்கும் தலைவன்; காவல் அமைந்த மதில் சூழ்ந்த திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கும் பற்றுக்கோடு ஆனவன். தன்னுடைய அடியார்கள் மீது அன்பு செலுத்துவான்.

அரும் சொல் பொருள் : அரண்: பாதுகாவல். அரணியாளன்: காப்பவன். 322

புண்ணியம் செய்துநல்ல
புனலொடு மலர்கள்தூவி
எண்ணுமின் எந்தைநாமம்;
இப்பிறப்பு அறுக்கும்;அப்பால்
திண்ணம்நாம் அறியச்சொன்னோம்;
செறிபொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம்
அணுகுவார் அமரர்ஆவார்.

கருத்து: புண்ணியத்தைச் செய்து நல்ல நீரோடு பூக்களைத் தூவி எந்தையின் திருநாமத்தை எண்ணுங்கள்; அவ்வாறு எண்ணினால் இந்தப் பிறவியை அவன் வேரறுப்பான்; அதுதவிர நிச்சயமாக நீங்கள் அறிய நாம் சொல்லுகின்றோம்; சோலைகள் நெருங்கிய திருவனந்தபுரத்துக் கடவுளுடைய தாமரை போன்ற திருவடியை அடைகின்றவர்கள் தேவலோக வாழ்வை அடைவார்கள். 323

நாகத்து அணையானை, நாள்தோறும் ஞானத்தால்
ஆகத்து அணைப்பார்க்கு அருள்செய்யும் அம்மானை,
மாகத்து இளமதியம் சேரும் சடையானைப்
பாகத்து வைத்தான்தன் பாதம் பணிந்தேனே.

கருத்து பாம்புப் படுக்கையிலே பள்ளிகொண்டவனும், நாள்தோறும் அறிவு கொண்டு உடம்போடு அணைக்கின்றவர்களுக்குக் கருணை செய்யும் பெருமானும் வானத்திலே உள்ள இளம் சந்திரன் தங்கிய சடையையுடையானைப் பகுதியிலே வைத்தவனும் ஆகிய திருமாலின் பாதத்தை நான் வணங்கினேன்.

அரும் சொல் பொருள் : மாகம்: வானம். 324

ஆழியான்; ஆழி அமரர்க்கும் அப்பாலான்;
ஊழியான்; ஊழி படைத்தான்; நிரைமேய்த்தான்;
பாழிஅம் தோளால் வரைஎடுத்தான், பாதங்கள்
வாழி!என் நெஞ்சே மறவாது வாழ்கண்டாய்!

கருத்து: சக்கரத்தைக் கையிலேந்தியவனும், கடலனைய தேவர்க்கும் அப்பாற்பட்டவனும், ஊழிக்காலத்தும் தனித்து நிற்பவனும், ஊழிக்குப் பின் உலகத்தைப் படைத்தவனும், பசுக்களை மேய்த்தவனும், பருத்த அழகிய தோள்களால் மலையை எடுத்தவனும், ஆகிய திருமாலின் திருவடிகள் வாழ்க! என் மனமே அவனை மறவாது நீ வாழ்வாயாக!

அரும் சொல் பொருள்: பாழி: பெரிய. வரை: கோவர்த்தனம். 325

அருள்பெறுவார் அடியார்;தம் அடியனேற்கு ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான்; அதுநமது விதிவகையே!
இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான்வேண்டேன்;
மருள்ஒழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே.

கருத்து: அடியவர்கள் அவன் அருளைப் பெறுவார்கள்; அவர்தம் அடியவனாகிய எனக்கு, ஆழியானாகிய திருமால் அருள் தருவதற்காக அமைந்திருக்கின்றான். அது நமது விதியின் பயனேயாகும். இருளை உண்டாக்குகின்ற இப்பெரிய உலகத்திலே இனிமேல் பிறவியை யான் விரும்பமாட்டேன். நீ மயக்கத்தை விட்டு ஒழிவாயாக! அறியாமை கொண்ட நெஞ்சமே! வாட்டாறு என்னும் திருப்பதியையுடைய திருமாலின் அடியை வணங்குவாயாக! 326

திருமால் இருஞ்சோலை மலைஎன்றேன்; என்னத்
திருமால்வந்து என்நெஞ்சு நிறையப் புகுந்தான்;
குருமா மணிஉந்து புனல்பொன்னித் தென்பால்
திருமால் சென்றுசேர் விடம்தென் திருப்பேரே.

கருத்து: திருமாலிருஞ் சோலைமலை என்று சொன்னேன்; அப்படிச் சொல்லவே, திருமாலானவன் வந்து என் உள்ளம் நிறையுமாறு குடி புகுந்தான். நிறம் விளங்குகின்ற சிறந்த மணிகளைத் தள்ளிக் கொண்டு நீர்ப்பெருக்கெடுத்து ஓடுகின்ற பொன்னி நதியின் தெற்குப் பக்கத்திலேயுள்ள தென்திருப்பேரை என்னும் நகரே திருமால் சென்று பொருந்துமிடம். 327

கண்உள்நின்று அகலான்; கருத்தின்கண் பெரியன்;
எண்ணில்நுண் பொருள்!ஏழ் இசையின் சுவைதானே;
வண்ண நன் மணிமா டங்கள்சூழ் திருப்பேரான்;
திண்ணம்என் மனத்துப் புகுந்தான்; செறிந்தின்றே.

கருத்து: கண்ணை விட்டு நீங்கமாட்டான்; உள்ளத்துள்ளே பெரியனாக விற்றிருக்கின்றான்; ஆராய்ந்து பார்த்தால் நுண்பொருளாவான்; ஏழு இசைகளின் சுவையாவான் அவனே; அழகிய நல்ல இரத்தினங்கள் அழுத்திய மாளிகைகள் சூழ்ந்த திருப்பேரை நகரையுடையான், நிச்சயமாக அவன் என் மனத்துள்ளே இன்று நெருங்கிப் புகுந்தான். 328

குடிஅடி யார்இவர் கோவிந்தன் தனக்கென்று
முடிஉடை. வானவர் முறைமுறை எதிர்கொள்ள,
கொடிஅணி நெடுமதிள் கோபுரம் குறுகினர்
வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே.

கருத்து: திருமாலுக்கு இவர்கள் வழிவழி அடியார் என்று முடியணிந்த தேவர்கள் முறையாக எதிர்கொண்டு அழைக்க. அழகு அமைந்த நாராயணனின் வைகுந்தம் புகுவதற்காகக் கொடி அணிந்திருக்கின்ற நீண்ட மதிள் சூழ்ந்த கோபுரத்தை அடைந்தனர். 329

ஏறுஆளும் இறையோனும் திசைமுகனும் திருமகளும்
கூறுஆளும் தனிஉடம்பன்; குலம்குலமா அசுரர்களை
நீறுஆகும் படியாக நிருமித்துப் படைதொட்ட
மாறாளன் கவராத மணிமாமை குறைவுஇலமே.

கருத்து: விடையேறுகின்ற சிவபெருமானும் பிரமனும் திருமகளும் பங்கிட்டுக் கொள்ளும் ஒப்பற்ற உடலை உடையவனும், கூட்டம் கூட்டமாக அசுரர்களை வெந்து நீறாகும்படி எண்ணிப் படை தொடுத்த அவ் அசுரர்களுக்கு மாறானவனும் ஆகிய திருமால் என்னிடம் பிடுங்கிக் கொள்ளாத பேரழகுக்குக் குறைவே இல்லை.

அரும் சொல் பொருள் : குலம்குலமா: கூட்டம் கூட்டமாக. மணிமாமை இரண்டும் அழகைக் குறிக்கும் சொற்களே. 330

பெண்பிறந்தார் எய்தும் பெருந்துயர்காண் கிலேன்என்று
ஒண்சுடரோன் வாராது ஒளித்தான்;இம் மண்அளந்த
கண்பெரிய செவ்வாய்எம் கார்ஏறு வாராஞல்,
எண்பெரிய சிந்தைநோய் தீர்ப்பார்ஆர் என்னையே.

கருத்து: பெண்ணுகப் பிறந்தவர்கள் அடைகின்ற பெரிய துயரத்தை நான் காணமாட்டேன் என்று, ஒளிமிக்க சூரியன் வாராமலேயே இருந்து விட்டான்; இவ் உலகத்தை அளந்த பெரிய கண்களையும் சிவந்த வாயையும் உடைய கரிய காளை போன்ற திருமாலும் வந்தானில்லை; எண்ணத்தில் தோன்றிய பெரிய மன நோயை எனக்குத் தீர்க்கின்றவர் யார் இருக்கின்ருர்?
இது தலைவி கூற்று
தலைவனை நினைந்து வருந்தும் தலைவி 'தலைவன் வரவுமில்லை; பொழுது விடியவுமில்லையே' என்று புலம்புகின்ருள். 331

திருவருள் செய்பவன் போலஎன் உள்புகுந்து
உருவமும் ஆர்உயிரும் உடனே உண்டான்;
திருவளர் சோலைத்தென் காட்கரை என்அப்பன்,
கருவளர் மேனிஎன் கண்ணன்,கள் வங்களே.

கருத்து: எனக்கு அருள் செய்பவன் போல என்னுள்ளே நுழைந்து என்னுடைய வடிவத்தையும் கூடச் சேர்த்து உடனே உண்டு விட்டான்; அழகு விளங்கும் சோலை சூழ்ந்த தென் காட்கரை என்னும் திருப்பதியிலெழுந்தருளியிருக்கும் என் தலைவனுகிய கருமை நிறம் வளர்கின்ற உடம்பையுடையவனுகிய எமது கண்ணனின் திருட்டுத்தனங்கள் இவை.
இது தலைவி கூற்று. 332

என்பிழைகோப் பதுபோலப்
பனிவாடை ஈர்கின்ற;
என்பிழையே நினைந்துஅருளி
அருளாத திருமாலார்க்கு,
என்பிழைத்தான் திருவடியின்
தகவினுக்கென்று ஒருவாய்ச்சொல்
என்பிழைக்கும்? இளங்கிளியே!
யான்வளர்த்த நீஅலையே,

கருத்து: எனது பிழையைக் கோத்து வைப்பதுபோலப் பனியாகிய வாடை இழுக்கின்றது. என்னுடைய குறைகளையே எண்ணி எனக்கு அருள் செய்யாத திருமாலுக்கு, உன்னுடைய பெருமை தங்கிய திருவடிகளுக்கு என்ன தவறு இழைத்தாள் இந்தப் பெண். என்று ஒரு வாய்ப்பேச்சு நீ சொல்வாயானால், அதிலே என்ன குற்றம் வந்துவிடும்? ஏ இளைய கிளியே! உன்னை நான் பாடுபட்டு வளர்க்கவில்லையா?

இது தலைவி கிளியோடு சொல்லல்.

அரும் சொல் பொருள்: ஈர்தல்: இழுத்தல். தகவு: பெருமை 333

வாயும் திரைஉகளும் கானல் மடநாராய்!
ஆயும் அமர்உலகும் துஞ்சிலும்நீ துஞ்சாயால்;
நோயும் பயலைமையும் மீதூர, எம்மேபோல்
நீயும் திருமாலால் நெஞ்சம்கோட் பட்டாயே?

கருத்து: இடங்கள் தோறும் அலைகளைத் தள்ளுகின்ற கடல் கரைச் சோலையிலே உலாவும் இள நாரையே! ஆராயும் பெருமைவாய்ந்த தேவலோகம் உறங்கினாலும் நீ உறங்கமாட்டாய் போலிருக்கின்றதே; பிணியும் நிற வேறுபாடும் மேலோங்கிய எங்களைப்போல, நீயும் நாராயணனால் மனம் கவரப்பட்டாயோ? இது தலைவி நாரையிடம் கூறுவது. 334

பூந்துழாய் முடியார்க்கு,
பொன்ஆழிக் கையார்க்கு,
ஏந்துநீர் இளங்குருகே!
திருமூழிக் களத்தார்க்கு,
ஏந்துபூண் முலைபயந்து,என்
இணைமலர்க்கண் நீர்ததும்ப,
தாம்தம்மைக் கொண்டகல்தல்
தகவுஅன்றுஎன்று உரையீரே.

கருத்து: நீரில் வாழும் இளைய பறவையே! அழகிய துழாய் மாலையை முடியில் தரித்தவரும், பொன்ஆழியைக் கையில் தாங்கியவரும் திருமூழிக் களம் என்னும் தலத்தில் எழுந்தருளியவரும் ஆகிய திருமாலிடம் ஓங்கிய நகையணிந்த என் கொங்கைகளை நிறம் மாறச் செய்து, என் இரு கண்களிலும் நீர் பெருகச்செய்து, அவர் தம்மை ஒளித்துக் கொண்டு நீங்குதல் தகுதியாக மாட்டாது என்று அவரிடம் சொல்லுக!

பறவையைத் தலைவி தூது அனுப்புதல். 335

நங்கையிர்! நிரும்ஓர் பெண்பெற்று நல்கினீர்;
எங்ஙனே சொல்லுகேன் யான்பெற்ற ஏழையை?
சங்குஎன்னும் சக்கரம் என்னும்,துழாய்என்னும்
இங்ஙனே சொல்லும் இராப்பகல்; என்செய்கேன்.

கருத்து: தாய்மார்களே! நீங்களும் ஓர் பெண்ணைப் பெற்றுத்தான் கொடுத்தீர்கள் நான்பெற்ற பெண்ணின் செயல்களை எவ்வாறு நான் சொல்லுவேன்? சங்கு என்பாள், சக்கரம் என்று சொல்லுவாள், துழாய்மாலை என்று கூறுவாள், இவ்வாறாக இரவும் பகலும் பேசிக்கொண்டே இருப்பாள்; இதற்கு நான் என் செய்வேன்?

இது தாயார் பாசுரம். 336

பண்புடை வேதம் பயந்த பரனுக்கு,
மண்புரை வையம் இடந்த வராகற்கு,
தெண்புனல் பள்ளிஎம் தேவப்பி ரானுக்கு, என்
கண்புனை கோதை இழந்தது கற்பே.

கருத்து: பண்பு நிறைந்த மறைகளைச் சொல்லிய பரமனுக்கு, மண்ணுலகத்தைத்தோண்டிய வராக மூர்த்திக்கு, தெளிந்த பாற்கடலிலே பள்ளிகொண்ட எம்முடைய தேவர்கள் தலைவனுக்கு, என்னுடைய கண்ணை அழகு படுத்துகின்ற பெண்ணானவள், அவள் கற்பை இழந்துவிட்டாள்
இது தாயார் பாசுரம்.

அரும் சொல் பொருள்: இடந்த: பிளந்த. வராகன்: பன்றி வடிவெடுத்த திருமால். 337

கவி நிலைத் துறை

வண்ண மாமணிச் சோதியை,
அமரர் தலைமகனை,
கண்ண னை,நெடு மாலைத்தென்
குருகூர்ச் சடகோபன்,
பண்ணிய தமிழ்மாலை ஆயிரத்
துள் இவை பன்னிரண்டும்
பண்ணில் பன்னிரு நாமப்பாட்டு
அண்ணல்தாள் அணைவிக்குமே.

கருத்து: அழகிய சிறந்த நீலநிற வடிவழகனை, தேவர்களின் முதல்வனை, கண்ணபிரானை, நீண்ட திருமாலை, தென் தமிழ் நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரி என்னும் ஊரில் பிறந்த சடகோபன் செய்த திருவாய்மொழி ஆயிரத்துள் அடங்கிய இந்தப் பன்னிரண்டும், இசையிற் பொருந்திய பன்னிரு நாமங்கொண்ட பாட்டுடைத் தலைவனாகிய திருமாலின் திருவடியில் சேர்ப்பிக்கும். 338

குலந்தாங்கு சாதிகள் நாலிலும்
கீழ்இழிந்து, எத்தனை
நலந்தான் இலாத,சண் டாளசண்
டாளர்கள் ஆகிலும்
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல்
மணிவண்ணற்கு ஆள்என்றுஉள்
கலந்தார் அடியார் தம்அடி
யார்எம் அடிகளே.

கருத்து: மேன்மை கொண்ட நான்கு வகுப்புக்களுக்கும் கீழாக இறங்கி, எவ்வளவுதான் நன்மையில்லாத புலையர்களுக்குள்ளே புலையரானாலும், வெற்றி கொண்ட சக்கரம் ஏந்திய திருமாலாகிய நீல நிறத்தானுக்கு ஆளென்றுசொல்லி, அவனுள் சேர்ந்தவரின் அடியார்க்கு அடியார், எமக்குத் தலைவராவார். 339

சொன்னால் விரோதம்இது; ஆகிலும்
சொல்லுவன் கேள்மினோ!
என்நாவில் இன்கவி யான்ஒரு
வர்க்கும் கொடுக்கிலேன்;
தென்னா தெனாஎன்று வண்டு
முரல்திரு வேங்கடத்து
என்னானை என்அப்பன் எம்பெரு
மான்உளன் ஆகவே.

கருத்து: சொல்லுவேனானால் இது விரோதமாக முடியும்; ஆனாலும் சொல்லுகின்றேன் கேளுங்கள். தென்னா தெனா என்ற ஒலிக் குறிப்போடு வண்டுகள் இசை பாடுகின்ற திருவேங்கட மலையிலுள்ள என்னுடையவனும் என் அப்பனும் எம் பெருமானும் ஆகிய திருமால் இருக்கும்பொழுது, என் நாவில் நின்றும் எழும் இனிய கவிகளை யான் வேறு ஒருவருக்கும் கொடுக்கமாட்டேன். 340

என்ஆவது எத்தனை நாளைக்குப்
போதும்? புலவீர்காள்!
மன்னு மனிசரைப் பாடிப்
படைக்கும் பெரும்பொருள்;
மின்னார் மணிமுடி விண்ணவர்
தாதையைப் பாடினால்,
தன்னாக வேகொண்டு சன்மம்செய்
யாமையும் கொள்ளுமே.

கருத்து: புலவர்களே! நிலைபேறில்லாத மனிதர்களைப் பாடி அதனால் அடையும் பெரிய செல்வத்தால் என்ன பயன் உங்களுக்கு உண்டாகி விடும்? எத்தனை நாளைக்கு அந்தப் பொருள் உங்களுக்குக் காணும்? மின்னலை ஒத்த இரத்தினங்கள் பதித்த முடியணிந்த வானவர் தந்தையாகிய திருமாலைப் பாடுவீர்களானால் அவன் உங்களைத் தன்னுடையவனாகவே கொண்டு, இனிப் பிறப்பு அற்றவர்களாக ஆக்கிவிடுவான்.

'மிடுக்கு இலாதனை' என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பதிகம் இப்பாசுரத்தோடு ஒத்தது.

அரும் சொல் பொருள்: என் ஆவது: என்ன பயனைத் தருவது. மன்னு; நிலையில்லாத. சன்மம் செய்யாமை: பிறவாப் பெருநிலை. 341

வம்மின் புலவீர்!நும் மெய்வருத்
திக்கை செய்துய்ம்மினோ?
இம்மன் உலகினில் செல்வர்இப்
போதுஇல் லை,நோக்கினோம்;
நும்இன் கவிகொண்டு நும்நும்இட்
டாதெய்வ மேத்தினால்
செம்மின் சுடர்முடி என்திரு
மாலுக்குச் சேருமே.

கருத்து: வாருங்கள் புலவர்களே! உங்கள் உடம்பை வருத்திக் கைத்தொழில் செய்து பிழையுங்கள். இந்த நிலையான உலகத்தில் இப்பொழுது செல்வர் இல்லையென்று காண்கின்றோம்; உங்களுடைய இனிய கவிகளைக் கொண்டு, நீங்கள் விரும்பும் தெய்வங்களைப் பாடுவீர்களானால் அக்கவிகள் சிவந்த ஒளிவிடுகின்ற முடியணிந்த என் திருமாலை அடையா நிற்கும்.
342

அடிசேர் முடியினர் ஆகி
அரசர்கள் தாம்தொழ,
இடிசேர் முரசங்கள் முற்றத்து
இயம்ப இருந்தவர்,
பொடிசேர் துகளாய்ப் போவர்கள்;
ஆதலில் நொக்கெனக்
கடிசேர் துழாய்முடிக் கண்ணன்
கழல்கள் நினைமினோ!

கருத்து: மன்னர்கள் திருவடியில் சேர்த்திய முடியை உடையராகி வணங்க இடிபோல் முழக்குகின்ற முரச வாத்தியங்கள் திருவாயிலிலே ஒலிக்க இருந்து அரசாண்ட மன்னர் மன்னர்களும் திடீரெனப் பொடி சேர்ந்த தூள் தூளாக ஆகிவிடுவார்கள்; ஆதலினாலே மணம் நிறைந்த துழாயை முடியில் சூடிய கண்ணபிரானின் திருவடிகளை விரைந்து நினையுங்கள்! 343

வாழ்ந்தார்கள் வாழ்ந்ததும் மாமழை
மொக்குளில் மாய்ந்துமாய்ந்து
ஆழ்ந்தார்என்று அல்லால், அன்று
முதல்இன்று அறுதியா
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர்
என்பதி லை;நிற்குறில்
ஆழ்ந்தார் கடல்பள்ளி அண்ணல்
அடியவர் ஆமினோ!

கருத்து: முன்னே வாழ்ந்தார்கள் வாழ்ந்த தெல்லாம் பெரிய மழையில் தோன்றிய நீர்க்குமிழிபோல மாண்டு மாண்டு அழிந்தார்கள் என்று சொல்வதல்லால் அன்று முதல் இன்று வரை வாழ்ந்தவர்கள் வாழ்ந்தே நிற்பர் என்பது கிடையாது. நிலைபெறு அடைய வேண்டு மானால், கடலிற் பள்ளிகொண்ட அண்ணலாகிய கடவுளிடத்து அழுந்திய அடியார்க்கு அடியவர்களாக ஆவீராக!

அரும் சொல் பொருள் : நிற்க உறில் என்பது நிற்குறில் என ஆயிற்று. நிற்க உறில், நிலைபெற்ற பேற்றை அடைய வேண்டுமானால் என்று பொருள்படும். 344

கரிய மேனிமிசை வெளிய
நீறுசிறி தேஇடும்
பெரியகோ லத்தடங் கண்ணன்,விண்
ணோர்பெரு மான்தன்னை,
உரியசொல் லால்இசை மாலைகள்
ஏத்தி,உள் ளப்பெற்றேற்கு
அரியதுண் டோ?எனக்கு இன்றுதொட்
டும்இனி என்றுமே.

கருத்து: கரிய திருமேனியின் மீது வெண்மையான திருநீற்றைச் சிறிது பூசியிருக்கின்ற பெரிய அழகிய விசாலமான கண்ணை யுடையவனும், அமரர்கள் தலைவனும் ஆகியவனை, அவனுக்குப் பொருந்தும் சொற்களால் புகழ்ப் பாமாலை பாடித் தொழுது, நினைக்கப் பெற்றவனாகிய எனக்கு, இன்று முதல் எத்தக் காலத்திலும் அருமையானது எதுவும் உண்டா? 345

ஆவி திகைக்க ஐவர்
குமைக்கும் சிற்றின்பம்
பாவி யேனை, பலநீ
காட்டிப் படுப்பாயோ?
தாவி வையம் கொண்ட
தடம்தா மரைகட்கே
கூவிக் கொள்ளும் காலம்
இன்னம் குறுகாதோ?

கருத்து: உயிர் திகைக்குமாறு உடலுக்குள்ளே உள்ள புலன்களாகிய ஐவரும் வருத்துகின்ற சிற்றின்பத்தில் நிற்கும் பாவியாகிய என்னை, பல காரணங்களையும் எடுத்துக் காட்டி, நீ உனக்கு ஆட்படுத்த மாட்டாயா? உலகத்தைத் தாண்டி அளந்து கொண்ட பெரிய தாமரை போன்ற திருவடிகட்கு என்னை அழைத்துக் கொள்ளும் காலம் இன்னும் வரவில்லையா? 346

கற்பார் இராம பிரானையல்
லால்மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்,எறும்பு
ஆதிஒன்று இன்றியே
நற்பால் அயோத்தியில் வாழும்
சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன்; நான்முக
னார்பெற்ற நாட்டுளே.

கருத்து: படிக்கின்றவர் இராமபிரானைத் தவிர வேறு யாரையும் படிப்பார்களா? பிரமதேவனால் படைக்கப்பெற்ற நாட்டினுள்ளே புல் பகுதி முதலாக அற்பமான எறும்பு முதலிய உயிர் இனங்களில் ஒன்று தவறாமல் நல்ல பண்புடைய அயோத்தியில் வாழும் அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய எல்லாவற்றையும் நன்னெறிக்குட் செலுத்தியவன் அந்த இராமபிரானே. 347

தொண்டீர்! வம்மின்;நம் சுடர்ஒளி
ஒருதனி முதல்வன்
அண்ட மூஉலகு அளந்தவன்
அணிதிரு மோகூர்
எண்தி சையும்ஈன் கரும்பொடு
பெருஞ்செந்நெல் விளைய,
கொண்ட கோயிலை வலஞ்செய்துஇங்கு
ஆடுதும் கூத்தே.

கருத்து: தொண்டர்களே! வாருங்கள்; நம்முடைய மிக்க ஒளிவாய்ந்த ஒப்பற்ற தனி முதல்வனும், மூன்று உலகங்களையும் சேர அளந்தவனும் ஆகிய திருமால் உறையும், எட்டுத் திக்குகளிலும் கரும்போடு பெரிய செந்நெல் விளையும் அழகிய திருமோகூர் என்னும் தலத்தில் இருக்கும் கோயிலை வலம் செய்து கூத்தாடுவோம். 318

துயர்கெ டும்;கடிது அடைந்துவந்து
அடியவர் தொழுமின்!
உயர்கொள் சோலைஒண் தடமணி
ஒளிதிரு மோகூர்,
பெயர்கள் ஆயிரம் உடையவல்
அரக்கர்புக்கு அழுந்த,
தயர தன்பெற்ற மரகத
மணித்தடத் தினையே.

கருத்து: உயர்ந்து ஓங்கிய சோலையையுடைய ஒளிகொண்ட பெரிய மணி அழுத்திய திருமோகூர்த் தலத்தில் எழுந்தருளியிருக்கும் வலிய அரக்கர்களைப் புகுந்து அழித்த ஆயிரம் பெயரையுடைய தயரதன் பெற்ற பெரிய மரகத மணியாகிய இராமனை, விரைந்து சென்று தொழுங்கள்; அடியார்களே! அதனால் உங்கள் துயர் கெடும். 349

முனியே! நான்முகனே! முக்கண்
அப்பா! என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமா
ணிக்கமே! என்கள்வா!
தனியேன் ஆர்உயி ரே!என்
தலைமிசையாய் வந்திட்டு
இனிநான்போ கல்ஒட்டேன்; ஒன்றும்
மாயம்செய் யேல்எனையே.

கருத்து: முனிவனே! பிரமதேவனே! மூன்று கண் படைத்த சிவனே! என்னுடைய பொல்லாத கனி போன்ற வாயாகிய தாமரையிலே வீற்றிருக்கும் கரிய மாணிக்கமே! என் உள்ளம் கவர்ந்த கள்வனே! என்னுடைய நிறைந்த உயிரே! என் தலை மீது திருவடிவைத்து வந்திட்ட உன்னை இனிச் செல்ல நான் விடமாட்டேன்; ஒரு மாயமும் இனி என்னிடம் நீ செய்யாதே. 350

ஊரவர் கவ்வை எருவிட்டு,
அன்னைசொல் நீர்மடுத்து,
ஈரநெல் வித்தி, முளைத்த
நெஞ்சப் பெருஞ்செய்யுள்,
பேர்அமர் காதல் கடல்,பு
ரைய விளைவித்த
கார்அமர் மேனிநம் கண்ணன்
தோழீ! கடியனே.

கருத்து: ஊரிலுள்ளார்கள் சொல்லும் பழிச்சொல்லாகிய உரத்தைப் போட்டு, தாயின் கடிந்த பேச்சாகிய நீரை வார்த்து, ஈரமான நெல்லை விதைத்து, அது முளைத்து எழுந்த மனமாகிய பெரிய வயலினுள்ளே, பெரும் போராட்டத்தைத் தரும் காதல் என்ற பயிரை, கடலைப்போல் பெருகுமாறு விளையச் செய்தவனாகிய மேகத்தை ஒத்த திருமேனியை உடைய நம் கண்ணபிரான் வலிமையுள்ளவனாவான்; தோழீ!
இது தலைவி தோழியொடு சொல்லல்.
'ஊரவர் கவ்வை எருவாக, அன்னை சொல், நீராக நீளும் இந்நோய்' என்ற திருக்குறளைக் காண்க.

அரும் சொல் பொருள் : கவ்வை: பழிச்சொல் புரைதல்: ஒத்தல். 351

உண்ணும்சோறு, பருகும்நீர், தின்னும்
வெற்றிலை யும்எல்லாம்
கண்ணன்எம் பெருமான் என்றுஎன்றே
கண்கள் நீர்மல்கி,
மண்ணின்உள், அவன்சீர் வளமிக்
கவன்ஊர் வினவி,
திண்ணம் என்இளமான் புகும்ஊர்
திருக்கோ ளூரே.

கருத்து: உட்கொள்ளும் சோறும், குடிக்கின்ற நீரும், மெல்லுகின்ற வெற்றிலையும் ஆகிய எல்லாம் கண்ணனாகிய எம்பெருமானே என்று சொல்லி, கண்களில் நீரைப் பெருக்கி, பூவுலகிலுள்ள மிக்க சிறப்பு வாய்ந்த வளம் மிகுந்த அவனுடைய ஊர் எது என்று கேட்டுக் கொண்டு, நிச்சயமாக என்னுடைய இள மகள் செல்லுகின்ற ஊர், திருக்கோளூரே யாகும். 352

அறு சீர் விருத்தம்

நாவினுள் நின்று மலரும்
ஞானக் கலைகளுக்கு எல்லாம்
ஆவியும் ஆக்கையும் தானே;
அழிப்போடு அளிப்பவன் தானே;
பூவியல் நால்தடம் தோளன்,
பொருபடை ஆழிசங்கு ஏந்தும்
காவிநல் மேனிக் கமலக்
கண்ணன்என் கண்ணின்உ ளானே.

கருத்து: நாவினுள்ளே நின்று பூக்கின்ற அறிவுக் கலைகளுக்கெல்லாம் உயிரும் உடம்புமாய் அமைபவன் அவனே; எல்லாவற்றையும் அழிக்கின்றவனும் காக்கின்றவனும் அவனே; அத்தகைய பூமாலை புரளும் நான்கு பெரிய தோள்களும். கொல்லும் தொழில் உடைய சக்கரமும் சங்கும் கொண்ட நீலப்பூப் போன்ற நல்ல திருமேனியையுடைய தாமரைக் கண்ணனாகிய திருமால், என் கண்ணினுள்ளே எப்பொழுதும் இருக்கின்றான். 353

பங்கயக் கண்ணன் என்கோ?
பவளச்செவ் வாயன் என்கோ?
அங்குஅதிர் அடியன் என்கோ?
அஞ்சன வண்ணன் என்கோ?
செங்கதிர் முடியன் என்கோ?
திருமறு மார்வன் என்கோ?
சங்குசங் கரத்தன் என்கோ?
சாதிமா ணிக்கத் தையே.

கருத்து: சாதி மாணிக்கமாகிய திருமாலை, தாமரைக் கண்ணனென்று சொல்லவா? பவளம் போன்ற சிவந்த வாயை உடையான் என்று பகரவா? ஒலிக்கின்ற திருவடியை உடையவன் என்று உரைக்கவா? மை அனைய மேனியன் என்று வாழ்த்தவா? சிவந்த ஒளிவிடுகின்ற முடியை உடையவன் என்று செப்பவா? இலக்குமி வாழ்கின்ற மார்பை உடையவன் என்று இயம்பவா? சங்கு சக்கரத்தை ஏந்தியவன் என்று சாற்றவா? 354

ஒளிமணி வண்ணன் என்கோ?
ஒருவன்என்று ஏத்த நின்ற
நளிர்மதிச் சடையன் என்கோ?
நான்முகக் கடவுள் என்கோ?
அளிமகிழ்ந்து உலகம் எல்லாம்
படைத்து,அவை ஏத்த நின்ற
களிமலர்த் துளவன் எம்மான்
கண்ணனை மாய னையே.

கருத்து: ஒளி பொருந்திய நீல மணி நிறத்தினன் என்று சொல்லட்டுமா? ஒப்பற்றவன் என்று யாவரும் பரவநின்ற விளங்குகின்ற சந்திரனைச் சடையிலணிந்தவன் என்று சாற்றட்டுமா? பிரமதேவன் என்று பேசட்டுமா? கருணையோடு களித்து உலகத்தை யெல்லாம் உண் டாக்கி, அந்த உலகம் தன்னை ஏத்த நின்ற களிப்பூட்டும் துளவ மாலையை யணிந்த கண்ணனும் மாயனே. 355

யாவையும் யவரும் தானாய்
அவர்அவர் சமயம் தோறும்
தோய்வுஇலன் புலன்ஐந் துக்கும்
சொலப்படான், உணர்வின் மூர்த்தி;
ஆவிசேர் உயிரின் உள்ளால்
ஆதும்ஓர் பற்றி லாத
பாவனை அதனைக் கூடில்
அவனையும் கூட லாமே.

கருத்து: எல்லாப் பொருள்களும், அப்பொருள்களை நுகரும் எல்லாருமாகி, அவரவர் சமயம் தோறும் அடங்கி விடாதவனாகி, ஐம்புலனாலும் அறிய முடியாதவனாவான் அறிவின் வடிவமான இறைவன். உயிரோடு கூடிய உடம்பில் பொருந்தியுள்ள பொருள்களில் எந்த விதமான பிடிப்பும் இல்லாத தன்மையை அடைந்தால், அவ் இறை வனையும் அடையலாம் 356

மனிசரும் மற்றும் முற்றுமாய்
மாயப் பிறவி பிறந்த
தனியன் பிறப்புஇலி தன்னை,
தடம்கடல் சேர்ந்த பிரானை,
கனியை, கரும்பின்இன் சாற்றை,
கட்டியை, தேனை, அமுதை,
முனிவுஇன்றி ஏத்திக் குனிப்பார்,
முழுதுஉணர் நீர்மையி னாரே.

கருத்து: மனிதர்களும் மற்றும் உலகத்தில் பிறந்த எல்லாமுமாகிய மாயப் பிறப்பாய்ப் பிறந்தவனும், தனிப் பிறப்பு ஒன்று இல்லாதவனை, பெரிய கடலிலே துயில்கொண்ட பெருமானை, பழத்தை, கரும்பின் இனிய ரசத்தை, கருப்புக்கட்டியை, தேனை, அமுதத்தை, வெறுப்பின்றி வணங்கி வளைத்துப் பிடிப்பார் முழுதும் அறிந்த தகுதி உடையவராவர். 357

யானும் ஏத்தி ஏழ்உலகும்
முற்றும் ஏத்திப் பின்னையும்
தானும் ஏத்தி லும்தன்னை
ஏத்த ஏத்த எங்குஎய்தும்?
தேனும், பாலும், கன்னலும்,
அமுதும், ஆகித் தித்திப்ப
யானும் எம்பி ரானையே
ஏத்தி னேன்யான் உய்வானே.

கருத்து: நானும் தொழ, உலகுஏழும் முற்றும் தொழ, பிறகுதானும் தன்னைத் தொழ, அவனை ஏத்திய புகழ் எங்கு போய் முடியும்? எனினும் நான் கடைத்தேறும் பொருட்டு, தேனும், பாலும், கரும்பும், அமுதுமாகி இனிக்கும் அந்த எம்பிரானை நானும் திரும்பப் போற்றினேன். 358

கொன்றுஉயிர் உண்ணும் விசாதி,
பகை,பசி, தீயன எல்லாம்
நின்றுஇவ் உலகில் கடிவான்
நேமிப் பிரான்தமர் போந்தார்;
நன்றுஇசை பாடியும், துள்ளி
ஆடியும், ஞாலம் பரந்தார்;
சென்று தொழுதுஉய்ம்மின் தொண்டீர்!
சிந்தையைச் செந்நிறுத் தியே,

கருத்து: கொலை செய்து உயிர் நீக்கி அவ் ஊனைத் தின்னும் வியாதியும் பகையும், பசி முதலிய தீயவையும் இவ் உலகினின்றும் விடை பெற்று ஒழிய அழிக்கும் பொருட்டுச் சக்கரத்தண்ணலின் அடியார் இவ் உலகில் தோன்றினர்: நன்றாக இசையோடு பாடியும் துள்ளிக் கூத்தாடியும் இந்த உலகத்திலே அவர்கள் பரவி இருக்கின்றனர். மனத்தைச் செம்மை வழியிலே நிறுத்தி, அவ் அடியார்களிடம் சென்று அவர்களை வணங்கிக் கடைத்தேறுங்கள் தொண்டர்களே!
359

களைவாய் துன்பம்? களையாது
　　ஒழிவாய்? களைகண் மற்றுஇலேன்;
வளைவாய் நேமிப் படையாய்!
　　குடந்தைக் கிடந்த மாமாயா!
தளரா உடலம் என்னது,
　　ஆவி சரிந்து போம்போது,
இளையாது உனதாள் ஒருங்கப்
　　பிடித்துப் போத இசைநீயே.

கருத்து என் துயரத்தை நீ களைவாயா? அன்றிக் களையாது விட்டு விடுவாயா? எனக்கு உன்னைத் தவிர வேறு பற்றுக்கோடு இல்லை; வளைந்திருக்கின்ற சக்கரப்படையைக் கையிற் கொண்டவனே! கும்பகோண நகரில் பள்ளி கொண்ட சாரங்கபாணிப் பெருமானே! தளராத எனது உடலினின்றும் உயிர் பிரிந்து செல்லும்போது, இளைத்து விடாமல் உன்னுடைய திருவடிகளை ஒரு சேரப் பற்றிக் கொண்டு உன்னை நான் அடைய நீ அருள வேண்டும் 360

உலகம் உண்ட பெருவாயா!
　　உலப்புஇல் கீர்த்தி அம்மானே!
நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி!
　　நெடியாய்! அடியேன் ஆர்உயிரே!
திலதம் உலகுக்கு ஆய்நின்ற
　　திருவேங் கடத்துஎம் பெருமானே!
குல!தொல் அடியேன் உன்பாதம்
　　கூடும் ஆறு கூறுயே.

கருத்து: உலகத்தை உண்டருளிய பெரியவாயை உடையவனே! கெடுதல் இல்லாத புகழையுடைய தலைவனே! சுடர் சூழ்ந்து விளங்கும் ஒளி வடிவமான மூர்த்தியே! நீண்டவனே! என்னுடைய நிறைந்த உயிரே! உலகத்துக்கு ஒரு திலகமாக நின்ற திருவேங்கடமுடையானே! மேம்பட்டவனே! பழைய அடியேனாகிய யான் உன்னுடைய பாதத்தை அடைவதற்கு உரிய வழியைக் கூறுவாயாக! 361

கண்கள் சிவந்த பெரியவாய்,
வாயும் சிவந்து கனிந்துஉள்ளே.
வெண்பல் இலகு சுடர்இலகு
விலகும் மகர குண்டலத்தன்,
கொண்டல் வண்ணன், சுடர்முடியன்,
நான்கு தோளன், குனிசார்ங்கன்,
ஒண்சங் கதைவாள் ஆழியான்,
ஒருவன் அடியேன் உள்ளானே.

கருத்து: கண்கள் சிவக்கப் பெற்றுப் பெரியனவாகி, வாயும் சிவந்து கனிந்து அதனுள்ளே உள்ள வெள்ளிய பற்கள் விளங்குகின்ற ஒளிவிட்டு நிற்க. பிரகாசமான மகர குண்டலத்தைக் காதுகளில் அணிந்தவனும், மேக மேனியனும், ஒளி முடி தரித்தவனும், நான்கு தோள்களைக் கொண்டவனும், வளைந்த சாரங்கம் என்னும் வில்லைக் கையிலேந்தியவனும், ஒளி மிக்க சங்கு தண்டு வாள் சக்கரம் உடையவனும் ஆகிய ஒருவனாகிய திருமால் என்னுள்ளே வீற்றிருக்கின்றான்.

அரும் சொல் பொருள் : சார்ங்கம்: திருமால் கொண்ட வில்லின் பெயர். சங்கு கதை என்ற சொல்தொடர் சங்கில் கடை குறைந்து சங்கதை என ஆயது. 362

யானும் தானாய் ஒழிந்தானை,
யாதும் யவர்க்கும் முன்னோனை,
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலை,
தேனும் பாலும் கன்னலும்
அமுதும் ஆகித் தித்தித்துஎன்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே.

கருத்து: என்னையும் அவனாகக் கொண்டு, என்னை நீக்கியவனை, எல்லாவற்றுக்கும் எவர்க்கும் முன் தோன்றியவனை, திருமாலாகிய தானும் சிவனும் பிரமனும் அவனேயாகிப் பகுத்த ஒப்பற்ற முதல்வனை, தேனும் பாலும் கரும்பும் அமுதமுமாகி இனித்து என்னுடைய உடம்பிலும் உயிரிலும் அறிவிலும் கலந்து நின்ற ஒரு பொருளை நான் உணர்ந்து கொண்டேன். 363

நெடுமாற்கு அடிமை செய்வேன்போல்
அவனைக் கருத வஞ்சித்து,
தடுமாற் றத்த தீக்கதிகள்
முற்றும் தவிர்ந்த சதிர்நினைந்தால்,
கொடுமா வினையேன் அவன்அடியார்,
அடியே கூடும் இதுவல்லால்,
விடுமாறு என்பது என்அந்தோ?
வியன்மூ உலகு பெறினுமே.

கருத்து: நீண்ட மாலுக்கு அடிமை செய்பவன் போல வஞ்சித்து நான் அவனை எண்ண, அப்படியிருந்தும் தடுமாற்றத்தை எனக்குச் செய்கின்ற தீய செயல்கள் எல்லாவற்றையும் நீக்கிய அவனது பெருமையை நான் நினைப்பேனாகில், கொடிய பெரிய வினையுடையேனாகிய யான், அவனுடைய அடியார்களின் திருவடியே கூடுகின்ற இதைந் தவிர பெரிய மூன்று உலகங்களையுமே யான் அடைவதாயினும் அத்திருவடியை விடுவதென்பது எப்படி? அந்தோ! 364

வியன்மூ உலகு பெறினும்,போய்த்
தானே தானே ஆனாலும்,
புயல்மே கம்போல் திருமேனி
அம்மான் புனைபூங் கழல்அடிக்கீழ்
சயமே அடிமை தலைநின்றார்
திருத்தாள் வணங்கி, இம்மையே
பயனே இன்பம் யாம்பெற்றது
உறுமோ? பாவி யேனுக்கே.

கருத்து: பெரிய மூன்று உலகங்களை அடைவதாயினும், பெரிய பதவிக்குச் சென்று தானே தனக்கு நிகர் என்னும் தன்மையை அடைந்தாலும், கொழுகொழுத்த மேகம் போன்ற திருமேனியையுடைய திருமாலின் வீரக்கழல் அணிந்த அழகிய திருவடியின்கீழ், அடிமையில் வெற்றி கொண்டு நின்றவர்களது திருப்பாதத்தைத் துதித்து, இப்பிறவியின் பயனாகிய இன்பத்தை யாம் பெறுவதற்குச் சமம் ஆகுமோ பாவியாகிய எனக்கு? 365

தானே ஆகி நிறைந்துஎல்லா
உலகும் உயிரும் தானேயாய்,
தானே யான்என் பான்ஆகித்
தன்னைத் தானே துதித்து,எனக்குத்
தேனே பாலே கன்னலே
அமுதே திருமால் இருஞ்சோலைக்
கோனே ஆகி நின்றுஒழிந்தான்,
என்னை முற்றும் உயிர்உண்டே.

கருத்து: எல்லா உலகமும் தானாக நிறைந்து உலகுயிர் அனைத்தும் தானேயாகி அவனே நான் எனக் கூறுமாப்போல அவனை அவனே வணங்கி, எனக்குத் தேனாகிப் பாலாகிக் கருப்பஞ்சாறாய் அமுதமுமாகித் திருமால் இருஞ் சோலைத் தலைவனுமாகி நின்று, என் உயிரை முழுதும் கொண்டு நீங்கிவிட்டான் திருமால். 366

திருமால் இருஞ்சோ லைமலையே,
திருப்பாற் கடலே, என்தலையே
திருமால் வைகுந் தமேதண்
திருவேங் கடமே எனதுஉடலே
அருமா மாயத்து எனதுஉயிரே
மனமே வாக்கே கருமமே;
ஒருமா நொடியும் பிரியான்என்
ஊழி முதல்வன் ஒருவனே.

கருத்து: திருமால் இருஞ் சோலை மலையும் திருப்பாற் கடலும் திருமாலின் வைகுந்தமும் குளிர்ந்த திருப்பதி மலையும் ஆகியவை, எனது தலையும் உடலும் அரிய பெரிய மாயமான எனது ஆவியும் உளம் மொழி செயலும் ஆகும். என்னை ஒரு சிறு பொழுதும் பிரியாதிருப்பவன் என்றுடைய ஊழிக் காலத்தும் அழியாத முதல்வன் ஒருவனே ஆவான். 367

இடைஇல்லை யான்வளர்த்த கிளிகாள்!
பூவைகாள்! குயில்காள்! மயில்காள்!
உடையநம் மாமையும் சங்கும்நெஞ்சும்
ஒன்றும் ஒழியஒட் டாதுகொண்டான்;
அடையும்,வை குந்தமும் பாற்கடலும்
அஞ்சன வெற்பும் அவைநணிய,
கடைஅறப் பாசங்கள் விட்டபின்னை,
அன்றி அவன்அவை காண்கொடானே.

கருத்து: தவறாமல் என்னால் வளர்க்கப்பட்ட கிளிகளே! நாகணவாய்ப் பறவைகளே! குயில்களே! மயில்களே! நம்முடைய அழகையும் வளைகளையும் உள்ளத்தையும் ஒன்றும் பாக்கி யில்லாமல் பறித்துக் கொண்டு விட்டான். அடைய வேண்டிய வைகுந்த உலகமும் திருப்பாற்கடலும் அஞ்சன மலைபோன்ற நீலமேனியுமாகிய அவை நெருங்கி வருவனவாம்; எப்போது? பந்தங்களை முழுதும் இல்லாது விட்ட பின்னரே: அவ்வாறு பாசத்தை விட்டால் அன்றி அத் திருமால் அவற்றைத் தரமாட்டான். 368

கோமள ஆன்கன்றைப் புல்கிக்
கோவிந்தன் மேய்த்தன என்னும்;
போம்இள நாகத்தின் பின்னே
போய்அவன் கிடக்கைஈது என்னும்;
ஆம்அளவு ஒன்றும் அறியேன்,
அருவினை யாட்டியேன் பெற்ற
கோமள வல்லியை மாயோன்
மால்செய்து செய்கின்ற கூத்தே.

கருத்து: அழகிய பசுவின் கன்றை அணைத்துக்கொண்டு இது கோவிந்தனால் மேய்க்கப்பெற்றதல்லவா என்பாள்; செல்லுகின்ற இளம் பாம்பின் பின்னே ஓடி, அத்திருமால் கிடக்கும் படுக்கையல்லவா இது எனப பகருவாள்; ஆகும் முறை எதையும் நான் அறியமாட்டேன்; அரிய வினையுடையேனாகிய நான் பெற்ற எழிற்கொடியை மாயவன் மயக்கிப் பண்ணுகின்ற திருக்கூத்தை நான் என்னென்று எடுத்து இயம்புவன்.

இது தாயார் பாசுரம். 369

ஏறிய பித்தினோடு எல்லா
உலகுகண் ணன்படைப்பு என்னும்;
நீறுசெவ் வேஇடக் காணில்
நெடுமால் அடியார்என்று ஓடும்;
நாறுது ழாய்மலர் காணில்
நாரணன் கண்ணிஈது என்னும்;
தேறியும் தேருது மாயோன்
திறத்தன ளேஇத் திருவே.

கருத்து: பித்துத் தலைக்கேறப் பெற்று எல்லா உலகத்தையும் கண்ணனே படைத்தான் என்று கூறுவாள்.
திருநீற்றைச் செவ்வையாக அணிந்து கொண்டு ஒருவர் வருவாரானால் அவரைக்கண்டு இவர் திருமாலின் அடியவர் என்று வணங்க ஓடுவாள்.
மணம் பரப்பும் துழாய் அலங்கலை எங்கேனும் கண்டாளானால் இது நாராயணனுடைய மாலை என நவில்வாள்;
தேறுதல் அடைந்தும் தேறுதிருக்கும் திருமாலின் வயப்பட்டு விட்டாள் இந்தத் திருமகளனைய என் பெண்.
இது தாயார் பாசுரம். 370

எழு சீர் விருத்தம்

மூவர் ஆகிய மூர்த்தி யை,முதல்
மூவர்க் கும்முதல் வன்தனை,
சாபம் உள்ளன நீக்கு வானை,
தடங்க டல்கிடந் தான்தனை,
தேவ தேவனை, தென்இ லங்கை
எரிஎ ழச்செற்ற வில்லியை,
பாவ நாசனை, பங்க யத்தடங்
கண்ண னைப்பர வும்மினோ.

கருத்து: மூவரும் ஆன மூர்த்தியை. அந்த முதலாவார் மூவர்க்கும் முதல்வனை. உண்டான சாபங்களை யெல்லாம் போக்க வல்லவனை. பெரிய கடலிலே பள்ளி கொண்டவனை, அமரர்க்கெல்லாம் அமரனானவனை, தென் இலங்கை நகர் தீப்பிடிக்கச் செய்த வில்லாளனை, பாவங்களை யெல்லாம் தொலைப்பவனை, பெரிய தாமரைக் கண்ணனைத் தொழுவீர்களாக 371

துயர மேதரு துன்ப இன்ப
வினைக ளாய்,அவை அல்லனாய்,
உயர நின்றதோர் சோதி யாய்,உலகு
ஏழும் உண்டுஉமிழ்ந் தான்தனை,
அயர வாங்கு நமன்த மர்க்குஅரு
நஞ்சினை, அச்சு தன்தனை,
தயர தற்கு மகன்த னைஅன்றி
மற்றி லேன்,தஞ்ச மாகவே.

கருத்து: இடுக்கண்ணையே நல்குகின்ற தீவினை நல்வினையாகி, அவை தான் அல்லாதவனாகி, மேலே நிற்கின்றதாகிய ஒப்பற்ற ஒளியாகி, ஏழு உலகத்தையும் உண்டு கக்கிய மாயனை, தளருமாறு வளைத்துச் செல்லும் எம தூதர்கட்குக் கொடிய விடமாக ஆனவனை, தயரதனுக்குப் பிள்ளையாகப் பிறந்தவனாகிய திருமாலைத் தவிர வேறு புகலிடம் எனக்கு இல்லை. 372

"காணுமாறு அருளாய்" என்றுஎன்றே கலங்கிக்
கண்ணின் நீர் அலமர வினையேன்
பேணுமாறு எல்லாம் பேணிநின் பெயரே
பிதற்றுமாறு அருள், எனக்கு அந்தோ!
காணுமாறு அருளாய், காகுத்தா! கண்ணா!
தொண்டனேன் கற்பகக் கனியே!
பேணுவார் அமுதே! பெரியதண் புனல்சூழ்
பெருநிலம் எடுத்தபே ராளா!

கருத்து: உன்னைக் காணும் பேற்றை எனக்கு அருள்வாயாக, இட்சுவாகு குலத்தில் தோன்றியவனே! கண்ணா! அடியனேனுடைய கற்பகப் பழமே! பேணித் தொழுகின்றவர்க்கு அமுதமே! மிகுந்த குளிர்ந்த நீர் சூழ்ந்த பெரிய தரையைத் தோண்டி எடுத்த பெருமை கொண்டவனே! உன்னைக் 'காணும் வழியை எனக்குச் சொல்க' என்று மயங்கி கண்களினின்றும் நீர் விட்டுத் துயரடைந்து வினையேனாகிய யான் உன்னைப் போற்றும் முறையை எல்லாம் பேணி, நின் பெயரையே கிறுக்கனைப் போலப் பிதற்ற எனக்கு வரம் தா, ஐயோ! 373

எனக்குநல் அரணை, எனதுஆர் உயிரை,
இமையவர் தந்தைதாய் தன்னை,
தனக்கும்தன் தன்மை அறிவுஅரி யானை,
தடங்கடல் பள்ளிஅம் மானை,
மனக்கொள்சீர் மூவா யிரவர்வண் சிவனும்
அயனும் தானும்ஒப் பார்வாழ்
கனக்கொள்திண் மாடத் திருச்செங்குன் றூரில்
திருச்சிற்றாறு அதனுள்கண் டேனே.

கருத்து: எனக்கு நல்ல பாதுகாவலராக அமைந்தவனும் எனது நிறைந்த உயிரானவனும் அமரர்க்குத் தகப்பனும் தாயுமானவனும் தானும் தன் பெருமை அறிய முடியாதவனும பெரிய கடலிலே துயில் கொண்டவனும் ஆகிய பெருமானை, உள்ளம் சீரியராகிய மூவாயிரம் பேரும் வளமை வாய்ந்த சிவனும் பிரமனும் தானும் அனையவர் வாழ்கின்ற கனம் வாய்ந்த வலிய மாளிகைகள் கொண்ட திருச் செங்குன்றூர் என்னும் தலத்தில் திருச்சிற்றாறிலே கண்டு கொண்டேன்: 374

கண்டது வேகொண்டுஎல் லாரும் கூடி,
கார்க்கடல் வண்ணனோடு என்திறத்துக்
கொண்டுஅலர் தூற்றிற் றதுமுதலாக் கொண்டஎன்
காதல் உரைக்கில் தோழி!
மண்திணி ஞாலமும் ஏழ்கட லும்நீள்
விசும்பும் கழியப் பெரிதால்;
தெண்திரை சூழ்ந்தவன் வீற்றிருந்த தென்திருப்
பேரையில் சேர்வன் சென்றே.

கருத்து: கண்டதைக் கொண்டு அனைவரும் ஒன்று சேர்ந்து கரிய கடல் மேனியனோடு என்னைச் சம்பந்தப்படுத்திப் பழி சொல்லிய நாள் முதற்கொண்டு, நான் அவன் மீது கொண்ட என்னுடைக் காதல் இன்ன அளவினது எனக் கூற வேண்டுமானால், ஏ தோழி! என் காதல், மண்ணுலகத்தையும் ஏழு கடலையும் பெரிய வானையும் விடப் பெரியதாகும். ஆதலால் தெளிந்த அலைகடலான் குடியிருக்கும் தென் திருப்பேரை என்னும் திருப்பதியைச் சென்று அடைவன், நான் என் காதல் நோய் தீர. இது தலைவி கூற்று! 375

கங்குலும் பகலும் கண்துயில் அறியாள்;
கண்ணநீர் கைகளால் இறைக்கும்;
சங்குசக் கரங்கள் என்றுகை கூப்பும்;
தாமரைக் கண்என்றே தளரும்;
எங்ஙனே தரிக்கேன்! உன்னைவிட்டு என்றும்;
இருநிலம் கைதுழா இருக்கும்;
செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தாய்!
இவள்திறத்து என்செய்கின் றாயே?

கருத்து: இராப் பகலாக உறங்கி அறியமாட்டாள்; கண்களினின்றும் வடியும் நீரைக் கைகளாலே அள்ளி இறைப்பாள்; சங்கும் சக்கரமும் காண்கின்றன எனக் கையெடுத்துக் கும்பிடுவாள்; தாமரைக் கண்கள் அதோ தெரிகின்றனவே என்று தள்ளாடுவாள்; உன்னையில்லாமல் நான் எப்படி வாழ்வேன் என்பாள்; பெரிய தரையைக் கையால் தடவி அவனைத் தேடுவாள். சிவந்த கெண்டை தாவும் நீர் மல்கும் திருவரங்கம் துயின்றவனே! இவள் விஷயத்தில் நீ என்னதான் செய்கின்றாயோ?
இது தாயார் பாசுரம். 376

மையல்செய்து என்னை மனம்கவர்ந் தானே!
என்னும்;மா மாயனே! என்னும்;
செய்யவாய் மணியே! என்னும்;தண் புனல்சூழ்
திருவரங் கத்துஉள்ளாய்! என்னும்;
வெய்யவாள் தண்டு சங்குசக் கரம்வில்
ஏந்தும்விண் ணோர்முதல் என்னும்;
பைகொள்பாம்பு அணையாய்! இவள்திறத்து அருளாய்,
பாவியேன் செய்யற்பா லதுவே.

கருத்து: என் மகள், மயக்கத்தைத் தந்து என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவளே என்பாள்; பெரிய மாயம் வல்லவனே என்பாள்; சிவந்த வாயை யுடைய இரத்தினமே என்பாள்; குளிர் நீர் கொண்ட அரங்கமா நகருளாய் என்பாள்; கொடிய வாளையும் கதையையும் சங்கையும் சக்கரத்தையும் வில்லையும் கொண்ட வானவர்க்கெல்லாம் முதல்வன் என்று மொழிவாள். படங் கொண்ட பாம்புப் பள்ளியானே! இவள் சம்பந்தமாக பாவியாகிய நான் செய்யத்தக்கது இன்னது என இயம்புவாயாக.
இது தாயார் பாசுரம். 377

எண் சீர் விருத்தம்

யாம்உடை நெஞ்சமும் துணையன்று ஆலோ;
ஆபுகு மாலையும் ஆகின்று ஆலோ;
யாம்உடை ஆயன்தன் மனம்கல் ஆலோ;
அவன்உடைத் தீங்குழல் ஈரும் ஆலோ;
யாம்உடைத் துணைஎன்னும் தோழி மாரும்
எம்மில்முன் அவனுக்கு மாய்வர்ஆலோ;
யாம்உடை ஆர்உயிர் காக்கும் ஆறுஎன்?
அவனுடை அருள்பெ றும்போது அரிதே.

கருத்து எம்முடைய மனம் எமக்குத் துணையாக இல்லை; பசுக்கள் விடு திரும்பும் மாலைப் பொழுதும் வந்துவிட்டது; எம்மையாளுடைய கண்ணனின் உளம் கல்லோ? அந்தக் கண்ணனுடைய இனிய குழலோசை என்னைப் பிளக்கின்றது; எமக்குத் துணையாக அமைந்த தோழிப் பெண்களோ எனில் எமக்கு முன்னரே அவனிடம் மாண்டுவிடுகின்றனர்; இந் நிலையில் எம்முடைய நிறைந்த உயிரைக் காப்பாற்றும் வழிதான் என்ன? அவனுடைய கருணையைப் பெறும் நாள் அருமையே.
இது தலைவி கூற்று. ஆல், ஓ எல்லாவிடத்தும் அசைகள். 378

மாலையும் வந்தது; மாயவன் வாரான்;
மாமணி புலம்ப,வல் ஏறுஅணைந்த
கோலநன் நாகுகள் உகளும் ஆலோ;
கொடியன குழல்களும் குழறும் ஆலோ;
வால்ஒளி வளர்முல்லைக் கருமு கைகள்
மல்லிகை அலம்பிவண்டு ஆலும் ஆலோ;
வேலையும் விசும்பில்விண்டு அலறும்ஆலோ;
என்சொல்லி உய்வன்இங்கு அவனை விட்டே.

கருத்து: மாலைப் போதும் வந்துவிட்டது; ஆனால் மாயன் இன்னும் வந்தான் அல்லன்; சிறந்த மணிகள் ஒலிக்க வலிய மாடுகளை நெருங்கிய அழகிய நல்ல சிறு கன்றுகள் துள்ளிக் குதிக்கின்றன; எனக்குக் கொடுமை செய்யும் குழல்கள் வாய் குழறுகின்றன; சிறந்த ஒளி கொண்ட வளர்கின்ற முல்லைக் கொடியிலே பூத்த பெரிய மொட்டு களையும் மல்லிகைப் பூக்களையும் வட்டமிட்டுக் கத்தி வண்டுகள் ஆடு கின்றன;கடலும் வானத்தைக்கிழித்து அலறுகின்றது;அத் திருமாலை விட்டு விட்டு என்னத்தைச் சொல்லி நான் பிழைக்கப் போகிறேன்? இது தலைவி கூற்று.

அரும் சொல் பொருள் : ஏறு இங்குப் பசு. நாகு: இளங்கன்று. உகளுதல்: குதித்தல். வால்: சிறந்த. ஆல், ஓ அசைகள். 379

வஞ்சித் துறை

நீர்நுமது என்றுஇவை
வேர்முதல் மாய்த்து,இறை
சேர்மின்; உயிர்க்குஅதன்
நேர்நிறை இல்லே.

கருத்து: நீர் என்றும் உம்முடையது என்றும் கூறும் இவற்றின் ஆணி வேரைப் பிடுங்கி எறிந்துவிட்டுக் கடவுளை அடையுங்கள்; உயிர்க்கு உறுதி பயப்பதில் அதற்கு ஒப்பதும் மேம்பட்டதும் வேறு இல்லை. "யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்றார் வள்ளுவனார், யான் எனது என்றால் எங்கே பற்றிக்கொண்டு விடுகிறதோ எனப் பயந்து ''நீர் நுமது"; என்கின்றார் நம்மாழ்வார்.

அரும் சொல் பொருள் : வேர் முதல்: வேருக்கும் ஆதியான ஆணி, நேர்: ஒப்பது. நிறை: மிக்கது. 380

அற்றது பற்றுஎனில்
உற்றது வீடு;உயிர்
செற்றுஅது மன்னுறில்
அற்றுஇறை பற்றே.

கருத்து: உலகப் பற்று அற்றுவிடுமானல் உயிர்க்கு வீடு கிடைக்கும்; நிலை பெற்ற அவ் வீட்டை அடைய விரும்பினல் அப் பற்றையெல்லாம் அழித்து ஒழித்து இறைவனைப் பற்றுவாயாக.

''பற்றுக பற்றற்ருன் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்ற வள்ளுவர் கருத்து இங்கு அப்படியே காணப்படுகிறது.

''ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!
ஈசனே டாயினும் ஆசை அறுமின்கள்!''

என்று இக்கொள்கையை மறுப்பதுபோலக் கூறுவர் திருமூலர்.

அரும் சொல் பொருள் : செற்று: அழித்து. அது: அப்பற்று. மன்: நிலை பெற்ற. உறுதல்: பொருந்துதல். 381

கண்ஆவான் என்றும்;
மண்ணோர்விண் ணோர்க்கு,
தண்ஆர் வேங்கட
விண்ணோர் வெற்பனே.

கருத்து: மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் குளிர் நிறை வானை அளக்கும் திருவேங்கட மலையுடையான் எப்போதும் கண்ணாக ஆவான். 382

கண்ணன் கழல்இணை
நண்ணும் மனம்உடையீர்!
எண்ணும் திருநாமம்;
திண்ணம் நாரணமே.

கருத்து: கண்ணபிரானுடைய இரண்டு திருவடிகளையும் அடையும் உள்ளம் பெற்றவர்களே! அவனுடைய திருப் பெயரை நினைவீராக! அப் பெயர்தான் நாராயணன் என்பது. அப் பெயரை எண்ணினல் அவன் கழலை நீங்கள் சேர்வது திண்ணம். 383

வஞ்சி விருத்தம்

ஈடும் எடுப்பும்இல் ஈசன்
மாடு விடாதென் மனனே;
பாடும்என் நாஅவன் பாடல்;
ஆடும்என் அங்கம் அணங்கே!

கருத்து: சமமும் மேலும் இல்லாத இறைவனை விடாது என் உள்ளம்; என் நா அவனைப் பற்றிய பாடலையே பாடும்; என் உடல் அவனை நினைந்து தெய்வம் ஏறிய பெண்ணைப்போல ஆடும்.

அரும் சொல் பொருள் : மாடு: பக்கம் அணங்கு: தெய்வப் பெண். 384

ஓர்ஆயிர மாய்உலகு ஏழ்அளிக்கும்
பேர்ஆயிரங் கொண்டதோர் பீடுஉடையன்,
காராயின காளநன் மேனியினன்,
நாராயணன், நங்கள் பிரான்அவனே.

கருத்து: ஓராயிரமாய்ப் பரந்திருக்கின்ற ஏழு உலகங்களையும் காக்கின்ற ஆயிரம் பெயரைக் கொண்ட ஒப்பற்ற பெருமையுடையவனும் கரு நிறம் பெற்ற மேகத்தை ஒத்த நன்மேனி உடையவனுமாகிய நாராயணனே நமது தலைவன் ஆவான்.

அரும் சொல் பொருள் : பீடு: பெருமை. கார்: மேகம். காளம்: கறுப்பு. 385

பெரிய திரு அந்தாதி

வெண்பா

என்னின் மிகுபுகழார் யாவரே? பின்னையும்மற்று
எண்ணில் மிகுபுகழேன் யான்அல்லால்;—என்ன
கருஞ்சோதிக் கண்ணன் கடல்புரையும் சீலப்
பெருஞ்சோதிக்கு என்நெஞ்சுஆட் பெற்று.

கருத்து: என்னைவிட மேம்பட்ட கீர்த்தி பெற்றவர் யார் இருக்கின்றார்? திரும்பத் திரும்ப ஆராய்ந்து பார்த்தாலும் மிக்க புகழ் உடையேன் யானே, என்னைத் தவிர யாரும் இல்லை; என்று கரிய கடலை ஒத்த செவ்விய பெரிய சோதியாகிய கண்ணபிரானுக்கு என் உள்ளம் அடிமைபெற்று விட்டது. 386

யானும்என் நெஞ்சும் இசைந்துஒழிந்தோம்;வல்வினையைக்
கானும் மலையும் புகக்கடிவான்,—தான்ஓர்
இருள்அன்ன மாமேனி எம்இறையார் தந்த
அருள்என்னும் தண்டால் அடித்து.

கருத்து: என் வலிய வினைகளைக் காட்டுக்கும் மலைக்கும் ஓடுமாறு விரட்டியடிக்கும் பொருட்டு, ஒப்பற்ற இருட்டு நிகர்த்த சிறந்த உடல் கொண்ட எம் கடவுளார் எனக்கு அளித்த கருணை என்ற தடியால் அடித்து, நானும் என் மனமும் எங்கள் வசம் இன்றி ஒழிந்து
387 அவனிடம் சேர்ந்து விட்டோம்.

அவயம் என நினைந்து வந்தசுரர் பாலே
நவையை நளிர்விப்பான் தன்னை,—கவையில்
மனத்துஉயர வைத்திருந்து வாழ்த்தாதார்க்கு உண்டோ?
மனத்துயரை மாய்க்கும் வகை.

கருத்து: சரணம் என்று நினைத்து வந்தடைந்த தேவர்களிடத்துள்ள தாழ்ச்சியை நடுங்கச் செய்தவனாகிய திருமாலை, ஒன்றிய உள்ளத்திலே உயருமாறு கொண்டு வாழ்த்த மாட்டாதார்க்கு மனத்துயரை அழிக்கும் செயல் உண்டா? இல்லை என்பது கருத்து.

அரும் சொல் பொருள்:: அவயம்: அடைக்கலம், சுரர்பால்: அமரர் இடத்து. நவை: இழிவு, நளிர்வித்தல்: நடுங்கச் செய்தல், கவையில்; பிளவு அற்ற; ஒருமித்த. கவை: பிளவு. 388

மனம்ஆளும் ஓர்ஐவர் வன்குறும்பர் தம்மைச்
சினம்மாள்வித்து, ஓர்இடத்தே சேர்த்து,—புனம்மேய
தண்துழா யான்அடியே தான்காணும் அஃதன்றே,
வண்டுஉழாம் சீரார்க்கு மாண்பு.

கருத்து: நம் மனத்தை அரசாட்சி செய்கின்ற ஒப்பற்ற புலன் என்ற பெயரையுடைய வலிய குறும்பராகிய ஐவரை, அவர்கள் கோபத்தைத் தொலைத்து, ஒரே இடத்தில் அவர்களைச் சேர்த்துக் கட்டிவிட்டு, வனத்திலுள்ள குளிர்ந்த துழாய் அலங்கல் அணிந்தவன் திருவடியைக் காணும் அதுவே, வண்டு உழுகின்ற மாலையை அணிந்தவன் திருவடியைக் காணும் அதுவே வண்டு உழுகின்ற மாலையை அணிந்த சிறப்புடையார்க்குப் பெருமை தருவதாகும். 389

பேர்ந்துஒன்றும் நோக்காது பின்நிற்பாய்; நில்ஆப்பாய்!
ஈன்துழாய் மாயனையே என்நெஞ்சே!—பேர்ந்துஎங்கும்
தொல்லைமா வெந்நரகில் சேராமல் காப்பதற்கு
இல்லைகாண் மற்றோர் இறை.

கருத்து: என் மனமே! எழுந்து வந்து ஒன்றையும் பாராமல் பின்னே நிற்பாய்! எல்லாவற்றையும் பெற்ற துழாய்மாலை மாயனையே பற்றி அடித்த முளையைப்போல நில். எங்கும்போய் பழைய பெரியகொடியநரகத்தில் வீழாமல் காப்பாற்றுதற்குத் திருமாலைத் தவிர வேறு கடவுள் இல்லை. இதை அறிந்துகொள்,

அரும் சொல் பொருள்: நில் ஆப்பு ஆய்: முளையாகி நில், வெம் நரகு: கொடிய நரகம், 390

கலந்து நலியும் கடுந்துயரை நெஞ்சே!
மலங்க அடித்து மடிப்பான்;—விலங்கல்போல்
தொல்மாலைக் கேசவனை நாரணனை மாதவனைச்
சொல்மாலை எப்பொழுதும் சூட்டு.

கருத்து: மனமே! மலையனைய பழமை வாய்ந்த திருமாலுக்கு, கேசவன், மாதவன், நாராயணன் என்ற திருப்பெயர் பெற்ற பெருமானுக்குப் பாமாலை தொடுத்து எப்போதும் அணிவாயாக! அப்பெருமான் உனக்குள்ளே சேர்ந்து உன்னை வருத்தும் கொடுமையான துன்பத்தைக் கெடுமாறு அடித்துக் கொல்லுவான்.

அரும் சொல் பொருள்: நலிதல்; வருத்துதல், மலங்க: அழிய. விலங்கல்: மலை. 391

கல்லும் கனைகடலும் வைகுந்த வான்நாடும்
புல்என்று ஒழிந்தனகொல்! ஏ!பாவம்;—வெல்ல
நெடியான்; நிறம்கரியான்; உள்புகுந்து நீங்கான்;
அடியேனது உள்ளத்து அகம்.

கருத்து: மாவலியை வெல்லுவதற்காக நெடிய வடிவு எடுத்தனும் கரிய நிறத்தவனுமாகிய திருமால் என் உள்ளே புகுந்து நீங்கமாட்டான்; என்னுடைய மனத்தகத்தே எப்போதும் இருக்கின்றான். ஆதலால் அவனுக்கு வேறு போக்கிடம் இல்லைப் போலும்! அவன் முன்னே வாழ்ந்த மலையும் கனைகடலும் வைகுந்த வான் உலகும் தாழ்ந்து ஒழிந்து விட்டனவோ? ஐயோ! பாவம்! 392

அடர்பொன் முடியானை, ஆயிரம் பேரானை,
சுடர்கொள் சுடர்ஆழி யானை,—இடர்கடியும்
மாதா பிதுவாக வைத்தேன் எனதுள்ளே;
யாதுஆகில் யாதே இனி.

கருத்து: நிறைந்த பொன் முடியுடையானும் ஆயிரம் திருப் பெயர் பெற்றவனும் ஆகிய சுடர்விடும் சக்கரம் ஏந்திய தோன்றலை, துயர் போக்கும் தாய் தந்தையாக என் மனத்தே வைத்துக் கொண்டேன். இனி என்ன வந்தாலும் என்னை என்ன செய்து விடும்? எதுவும் ஒன்றும் செய்யாது என்பது கருத்து.

அரும் சொல் பொருள்: அடர்: நிறைந்த, பிது: தாதை. 393

புவியும் இருவிசும்பும் நின்அகத்த; நீஎன்
செவியின் வழிபுகுந்துஎன் உள்ளாய்—அவிவுஇன்றி;
யான்பெரியன் நீபெரியை என்பதனை யார்அறிவார்?
ஊன்பருகு நேமியாய்! உள்ளு.

கருத்து: பூ உலகும் பெரிய விண்ணுலகும் நின்உள் அடங்குவன; நீயோ, என் காதுகளின் வழியே நுழைந்து எனக்குள்ளே நீங்காமல் இருக்கின்றாய்; ஆதலால் நான் பெரியனா நீ பெரியவனா என்பது யாருக்குத் தெரியும்? ஊனைக் குடிக்கும் சக்கரத் தண்ணலே! நினைத்துப் பார்த்துச் சொல்.

புவியையும் விசும்பையும் தன் உள் அடக்கிய திருமாலைவிட அவற்றையெல்லாம் உள் அடக்கிய அச்கடவுளையே அகத்துள் அடக்கிய தானே பெரியவன் என்று பேசுகின்றார் ஆழ்வார். ஆம் தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே அன்றோ!

அரும் சொல் பொருள்: அவிவு இன்றி: ஒழிவு இல்லாமல். ஊன்; இரத்தம். உள்ளுதல்: நினைத்தல். 394

திரு விருத்தம்

கட்டளைக் கலித்துறை

வணங்கும் துறைகள் பலபல
ஆக்கி, மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல
ஆக்கி, அவைஅவைதோறு
அணங்கும் பலபல ஆக்கி,நின்
மூர்த்தி பரப்பிவைத்தாய்;
இணங்கும்நின் னோரைஇல் லாய்!நின்கண்
வேட்கை எழுவிப்பனே.

கருத்து: தொழத்தக்க வழிகள் பலப்பலவாகச் செய்து, புத்தி வேறுபாட்டால் மாறுபடும் மதங்களையும் பலவாக்கி, அவ் அச் சமயங்கட்குத் தெய்வங்களையும் பலபலவாக அமைத்து, உன் சானித்தியத்தை எங்கும்பரவச் செய்தாய். உன்னோடு இணங்கும் உன்னுடையாரைத் தவிர, வேறு இல்லாதவனே! உன்னிடம் யான் ஆசையைத் தோற்றுவிப்பேன்.

அரும் சொல் பொருள்: துறை: வழி விகற்பம்: வேறுபாடு. பிணங்குதல்: மாறுபடுதல், அணங்கு: தெய்வம், வேட்கை: விருப்பம். 395

வார்ஆ யினமுலை யாள்இவள்,
வா னோர் தலைமகனும்
சீர்ஆ யினதெய்வ நல்நோய்
இது!தெய்வத் தண்ணந்துழாய்த்
தார்ஆ யினும்தழை ஆயினும்
தண்கொம்பது ஆயினும்கீழ்
வேர்ஆ யினும் நின்ற மண்ஆயி
னுங்கொண்டு வீசுமினே!

கருத்து: கச்சு அணிந்த கொங்கையாளாகிய இவளை விண்ணவர் தலைமகனான நாராயணனுடைய சிறப்பான நல்ல தெய்வக் காதல் நோய் பற்றிக் கொண்டு விட்டது: இந்தப் பிணி அகல வேண்டுமானால், கடவுள் தன்மை வாய்ந்த குளிர்ந்த அழகிய துழாய் மாலையைக் கொண்டாவது அல்லது துளசிக் குழையைக் கொண்டாயினும் அன்றித் துளசிச் செடியின் குச்சியை எடுத்தேனும் அதுவும் இல்லாவிட்டால் அச் செடியின் கீழ் உள்ள வேரைக் கொண்டேனும் அது கூட முடியாவிட்டால் அச் செடி நின்ற மண்ணை எடுத்தேனும் வீசுங்கள். அப்போதுதான் இந்நோய் தணியும்.

இது குறி சொல்லும் கட்டுவிச்சியின் கூற்று. 396

முலையோ முழுமுற்றும் போந்தில;
மொய்பூங் குழல்குறிய;
கலையோ அரைஇல்லை; நாவோ
குழறும்; கடல்மண்எல்லாம்
விலையோ எனமிளி ரும்கண்
ணிவள்,பர மேபெருமான்
மலையோ திருவேங் கடம்என்று
கற்கின்ற வாசகமே.

கருத்து: கொங்கைகள் இன்னும் முற்ற முடிய முளைத்தில; அடர்ந்த பூங் கூந்தல் இன்னும் குட்டையாகவே இருக்கின்றது; உடையோ இடையில் தங்கமாட்டேன் என்கிறது; பேசுங்கால் நாக்குக் குழறுகின்றது; கடல் மணல் அவ்வளவு பொருள் விலையாகக் கொடுக்கத் தக்க ஒளி பெற்ற கண்களைப் பெற்ற இச் சிறு பெண். படிக்கின்ற வாசகம், பரத்தைத் தரும் பெருமானுடைய மலை திரு வேங்கடம் என்பதே.

இது தாயார் பாசுரம். 397

அன்னம்செல் வீரும்வண் டானம்செல்
வீரும் தொழுதுஇரந்தேன்;
முன்னம்செல் வீர்கள், மறவேல்மி
னோ,கண்ணன் வைகுந்தனோடு
என்நெஞ்சி னாரைக்கண் டால்,என்னைச்
சொல்லி, அவரிடைநீர்
இன்னஞ்செல் லீரோ! இதுவோ
தகவு!என்று இசைமின்களே,

கருத்து. பறந்து செல்லுகின்ற அன்னங்களே! நாரைகளே! உங்களைக் கும்பிட்டுக் கெஞ்சுகின்றேன்; விரைந்து செல்லக் கூடிய நீங்கள் என் காரியத்தை மறக்க மாட்டீர்களல்லவா? என் நெஞ்சு குடி கொண்ட கண்ணனாகிய வைகுந்தப் பெருமானைக் காண்பீர்களானால் என்னை அவருக்கு நினைவுப் படுத்தி, 'அப்பெண்ணிடம் இன்னும் நீர் செல்லவில்லையா, இதுதானா உமக்குத் தகுதி' எனச் சொல்லுங்கள்.

இது பறவை விடு தூது.

அரும் சொல் பொருள் : வண்டானம்: நாரை. முன்னம்: விரைந்து. 398

மேகங்க ளே!உரை யீர், திரு
மால்திரு மேனிஒக்கும்
யோகங்கள் உங்களுக்கு எவ்வாறு
பெற்றீர்? உயிர்அளிப்பான்
மாகங்கள் எல்லாம் திரிந்துநல்
நீர்கள் சுமந்துநுந்தம்
ஆகங்கள் நோவ வருத்தும்
தவமாம் அருள்பெற்றதே.

கருத்து: முகில்களே! சொல்லுங்கள்; திருமாலின் திருமேனியை நிகர்க்கும் யோகங்கள் உங்கட்கு எப்படிக் கிடைத்தன? உலகு உயிர்களை யெல்லாம் காக்கும் பொருட்டு ஆகாயமெல்லாம் சுற்றி அலைந்து நல் நீரைச் சுமந்து கொண்டு உங்கள் உடம்பு முழுதும் வலியெடுக்க வருந்துகின்ற தவம் செய்யும் அருளை நீங்கள் பெற்றமையாலேயே திருமாலின் உடல் நிறம் உங்கட்கு ஆனது போலும். 399

திரு ஆசிரியம்

நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்
தளிர்ஒளி இமையவர் தலைவனும் முதலா
யாவகை உலகமும் யாவரும் அகப்பட
நிலம்நீர் தீகால் சுடர்இரு விசும்பும்

மலர்சுடர் பிறவும் சிறிதுஉடன் மயங்க,
ஒருபொருள் புறப்பாடு இன்றி, முழுவதும்
அகப்படக் கரந்துஓர் ஆல்இலைச் சேர்ந்த,எம்
பெருமா மாயனை, அல்லது
ஒருமா தெய்வம்மற்று உடையமோ? யாமே.

கருத்து: சந்திரன் விளங்கும் சடையை யுடைய சிவபெருமானும் பிரமதேவனும் கற்பக நிழல் வைகும் தேவேந்திரனும் உள்ளிட்ட எல்லாருடைய உலகத்தையும் அவ்உலகங்களிலுள்ள எல்லாரும் உள்ளே அடங்க, மண் புனல் நெருப்பு காற்று சந்திர சூரியர் வானம் அதில் மலரும் நட்சத்திரங்கள் ஆகியவையும் மற்றவையும் சிறிது பொருள்கள்கூட உடன்சேர எந்த ஒரு பொருளும் வெளித்தோற்றமின்றி எல்லாம் தன்னுள் அடங்கிக் கிடக்க ஒளித்து ஒப்பற்ற ஆலிலையிலே கிடந்த எங்கள் பெரிய மா மாயனைத் தவிர வேறொரு சிறந்த கடவுளை நாம் பெறுவோமோ? பெறமாட்டோம் என்பது உறுதி.

அரும் சொல் பொருள்: நளிர்: விளங்குகின்ற. தளிர்: இங்குக் கற்பக மரத்தின் இலை கால்: காற்று. சுடர் இரு, என்பதை இரு சுடர் என மாற்றல் வேண்டும். இரு சுடர்: சூரிய சந்திரர். மலர் சுடர்: தோன்றும் நட்சத்திரம். சிறிது: சிறிய பொருள்கள். கரத்தல்: ஒளித்தல். 400

ஆழ்வார் அமுது முற்றும்

பாட்டு முதற்குறிப்பு அகராதி

[எண், பாட்டு எண்]